E3432

தமிழ் நாடு
சட்ட மன்ற பேரவை
நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

வெளியீடு 1.2.91

Vol 20 No 2.
1990.

வெளியீடு 1-2-1991

Issued 1-2-19

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 11, 1990 - தொகுதி 27 - எண் 2

Wednesday, the 11th April, 1990-Volume 27-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00]

143805

# உள்ளடக்கம்

## 11-4-1990


பக்கங்கள்.

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 157—184

2. தகவல் கோரல்—

வால்பாறைத் தொகுதியில் சோலையாறு அணையருகில் லாரி விபத்துக்குள்ளான தால் உயிரிழந்தோர் மற்றும் காயமுற் றோருக்கு நிவாரணம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து .. .. .. 184—186

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

சாத்தூரில் சில வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலையொட்டிச் சிலர் உயிரிழந்ததால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை .. .. .. .. .. 186—202

4. விதி 109-இன்கீழ் உறுப்பினரின் விளக்கம்—

தாம் அவையில் 22-3-1990-ஆம் நாளன்று பேசிய ஒரு கருத்து குறித்து .. .. 202—203

5 விதி 110-இன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப்பட்டினம் மற்றும் ஜகதாப் பட்டினத்திலிருந்து சென்ற மீனவர் களை விடுதலைப் புலிகள் என்று சொல் லப்படுகின்றவர்கள் கடத்திச் சென்றது மற்றும் அவர்கள் விடுவிக்கப்பட்டது குறித்துக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சரின் அறிக்கை .. 203—206 207—209

(ஆ) டாக்டர் அம்பேத்கார் மற்றும் பாரதி தாசன் நூற்றாண்டு விழாக்களையொட்டி கைதிகளுக்குத் தண்டனைக் காலத்தை குறைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை .. .. .. .. 206—207


டி2 53-91—1

| | பக்கங்கள் |
|---|---|
| 6. கவன ஈர்ப்பு— | |
| (அ) மயிலாடுதுறை, நன்னிலம், குடவாசல் வட்டங்களில் நெற்பயிர்கள் நோயால் தாக்கப் பெற்றுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து .. ... .. | 209—211 |
| (ஆ) சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப் பெறாதது குறித்து .. | 211—216 |
| 7. அறிக்கை அளித்தல்— | |
| பொது நிறுவனங்கள் குழு .. .. | 216 |
| 8. ஒழுங்குப் பிரச்சினை— | |
| தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக் கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டமுன்வடிவிற்குக் குடியரசுத் தலை வரின் முன்அனுமதி பெற வேண்டியது குறித்து .. .. .. .. .. | 216—217 |
| 9. சட்டமுன்வடிவு—ஆய்வுசெய்தல்— | |
| தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக் கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டமுன்வடிவு, 1990.— .. ... | 217—232 |
| திரு. எல். கணேசன் .. .. | 218, 228—230 |
| பேராசிரியர் க. பொன்னுசாமி .. | 217—220 230—231 |
| திரு. மா. சுந்தரதாஸ் .. .. | 220—222 |
| திரு. செ. நூர்முகமது .. .. .. | 222—224 |
| திரு. எஸ். டி. உகம்சந்த் .. .. | 224—226 |
| திரு. எம். இராமச்சந்திரன் .. .. | 226—228 |
| 10. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)— | |
| கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்— | 232—333 |
| மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி .. | 232—235 310—318 321—332 |
| திரு. எம். தங்கவேல் .. .. | 235—243 |
| திரு. எஸ். சிவலோகம் .. .. | 244—250 |





| | பக்கங்கள் |
|---|---|
| திரு. ஆ. பாலையா ... .. .. | 251—258 |
| திரு. பெ. சீனிவாசன் .. .. | 259—262 264—265 |
| திரு. என். பழனிவேல் .. .. .. | 270—277 |
| திரு. கே. ஆர். ஜி. தனபாலன் .. .. | 277—280 |
| திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் .. | 281—291 |
| திரு. செ. இராமலிங்கம் .. .. .. | 291—296 |
| திரு. எம். அப்துல் லத்தீப் .. .. | 297—303 |
| திரு. ஆர். நடேசன் .. .. .. | 303—304 |
| திரு. ரெ. பிச்சைமுத்து .. ... .. | 304—306 |
| திரு. வே. பெரியசாமி .. .. ... | 306—310 |
| 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— .. | 333 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 28, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021,

1990 ஏப்ரல் 11, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.''

பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் தொடர்ந்து அறம் செய்ய வேண்டும். அதுவே அழியும் காலத்தில் அழியாத் துணையாக நிற்கவல்லதாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### கள்ளர் நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

*731. திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம் கள்ளர் நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

#### புதிய காவல் நிலையங்கள்

*2212. திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாநகரின் எல்லைப் பகுதியில் பெருகிவரும் புறநகர்களின் தேவையைக் கருதியும் மக்கள் தொகை பெருக்கத்தினை உத்தேசித்தும் புதிய காவல் நிலையங்கள் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, மதுரை மாநகரின் எல்லைப் பகுதியில் பெருகி வரும் புறநகர்களின் தேவையைக் கருதியும் மக்கள் தொகை பெருக்கத்தினை உத்தேசித்தும் புதிய காவல் நிலையங்கள் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகிவரும் மக்கள் தொகையைக் கருத்திற் கொண்டும், குடியிருப்புகள் அதிகரித்து வருவதாலும், அண்மைக் காலமாக மதுரை நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் சமூக விரோதிகளினால் கொள்ளைகள், திருட்டு அதிகமாக ஏற்படுவதாலும் புதிய காவல் நிலையங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தினுடைய மக்கள் தொகை 10 இலட்சத்திற்கு மேற்பட்டதாகும். அங்கே உள்ள காவல் நிலையங்களுடைய எண்ணிக்கையே இப்போது 12 தான். ஆனால், மதுரை புறநகர்ப் பகுதிகளாகக் கருதப்படும் இடங்களில் மக்கள் தொகை 2,76,800 தான். அங்கே உள்ள காவல் நிலையங்களுடைய எண்ணிக்கை 8. ஆகவே, அகம் 12, புறம் 8. (சிரிப்பு).

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணமாக, மதுரை சுப்பிரமணியபுரம் காவல் நிலையம் அந்தப் பகுதியில் இல்லாமல் மற்றொரு பகுதியான வசந்த நகர் பகுதியில் இருக்கிறது. 48 முதல் 54 வட்டங்கள், எட்டு வட்டங்களில் 70,000-க்கு மேற்பட்ட ஜனங்கள் இருப்பதால்—அந்தப் பகுதி சுப்பிரமணியபுரத்தில் ஆர். எஸ். நாயுடு பூங்கா என்ற பார்க் இருக்கிறது. அது இப்போது நடைமுறையில் அழிந்துவிட்ட காரணத்தால், அங்கு ஒரு அவுட் போஸ்ட் ஆவது தற்சமயம் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வருகிற 14 ஆம் தேதி, சித்திரை முதல் நாள், மதுரை, கோவை ஆகிய நகரங்களில் போலீஸ் கமிஷனரேட், அதாவது காவல்துறை ஆணையாளர் அலுவலகங்கள் அமையவிருக்கின்றன. அந்த அலுவலகங்கள் இத்தகைய ஆலோசனைகளைப் பெற்று தக்கது செய்ய முன் வரும் என்று நம்புகின்றேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மதுரை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 20 காவல் நிலையங்கள் இருப்பதாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த 20 காவல் நிலையங்களில் பணி





புரியக்கூடிய காவலர்கள் எத்தனை பேர்? சில காவல் நிலையங்கள் புதிதாகத் திறந்தும் அங்கே காவலர்கள் தேவையான அளவு இல்லை என்று சொல்லப்படுகிறதே, ஆகவே. அதனுடைய எண்ணிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது புறநகரைப் பற்றிய கேள்வி என்ற காரணத்தினாலும் மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியுள்ள கேள்விக்கான விவரங்கள் என்னிடத்திலே இல்லையென்பதாலும் அவர்கள் தனிக் கேள்வி எழுப்ப வேண்டுகிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோவை, சென்னை ஆகிய மூன்றிலேயும் இப்போது காவல்துறை ஆணையாளர் அலுவலகங்கள் அமைந்திருக்கின்றன. புறநகர்ப் பகுதிகளிலே மக்கள் தொகை பெருகியிருக்கக்கூடிய காரணத்தினாலே, இந்த மூன்று மாநகரங்களையும் சுற்றியிருக்கக்கூடிய புறநகர்ப் பகுதிகளையும் அங்கே இருக்கக்கூடிய காவல்நிலையங்களையும் காவல்துறை ஆணையர் அலுவலகங்களுடைய பொறுப்பின் கீழ் கொண்டு வருவதற்கான உத்தேசம் அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே 10 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட அந்த மாநகரங்களில் கமிஷனர் அலுவலகங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. மேலும், அங்கே மக்கள் தொகையை இணைப்பதால், அவர்களுடைய அதிகார வரம்பு போதுமானதாக இருக்குமா என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, இந்த அலுவலகங்கள் அமைந்த பிறகு, உருவாகின்ற நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் தற்போது மதுவிலக்கு அமல் பிரிவு கலைக்கப்பட்டிருப்பதால், தேவையான இடங்களில் கூடுதல் காவல் நிலையங்களை ஏற்படுத்தவும் உபரியாக இருக்கின்ற காவலர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், அரசு புதிய முடிவு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு யோசனை, பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கிராமப்புறங்களிலே, மலைப் பகுதிகளிலே திறக்கப்பட்டிருக்கின்ற காவல் நிலையங்களையொட்டி குடியிருப்பு வசதி இல்லாத காரணத்தினால், அங்கே காவலர்கள் தங்க முடியாத ஒரு மிகப் பெரிய சோதனை ஏற்படுகிறது. அவர்கள் வெகுதூரம் சென்று தங்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதோடு, திறக்கப்பட்ட காவல் நிலையங்களில் கூட, போதுமான காவலர்கள் இல்லையென்ற ஒரு நிலைமையும் இருந்து வருகிற காரணத்தினாலே, புதிதாக காவலர்களை எடுக்கின்ற வாய்ப்பு இருக்குமா எனவும் அப்படித் திறக்கப்பட இருக்கின்ற புதிய காவல் நிலையங்களை கிராமப்புறங்களில் இருக்கின்ற காவல் நிலையங்களுக்கும், மலைப் பகுதிகளிலே இருக்கின்ற காவல் நிலையங்களுக்கும், திறக்கப்படுகிற நேரத்திலேயும் அவர்களுக்குக் கட்டிட வசதி செய்து தரப்படுமா எனவும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்களுக்கு எதுவுமே புரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளங்கியது எல்லாம், மீசைக்கும் ஆசை; கூழுக்கும் ஆசை என்பதுதான். மீசையை ஒதுக்கி விட்டுக்கொண்டு, கூழ் சாப்பிட வேண்டும். (சிரிப்பு).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நீங்கள் காவல் நிலையங்களைக் கிராமப்புறங்களிலே திறந்திருக்கிறீர்கள். திரு. சின்னசாமி அவர்கள் சொன்னதுபோல, அந்தக் காவல் நிலையங்களில் பணியாற்றக்கூடிய எஸ்.ஐ. மற்றும் போலீஸ்காரர்களுக்குக் குடியிருப்பதற்கு இடம் இல்லை; போலீஸ் நிலையம் வைப்பதற்கும் இடம் இல்லாமல் கஷ்டப்படுகிறீர்களே, அதை முதலில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்கள், அதிகாரிகள், இவர்களெல்லாம் குடியிருப்பதற்கான இடங்களைத் தேடி, அதற்குப் பிறகு காவல் நிலையங்களை அமைக்க வேண்டிய நிலைமை இருப்பதால்தான், காவல் நிலையங்கள் அமைப்பதிலே தாமதம் ஆகிறது. இதிலே, எதை முதலிலே செய்யலாம் என்பதை அம்மையார் அவர்கள் சொன்னால் அதுபற்றி யோசிக்கப்படும்.



பல்கலைக் கழக உணவு விடுதி ஊழியர்கள்.

*7180—திரு. சி. கோவிந்தராஜன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அனைத்துப் பல்கலைக் கழகங்களின் உணவுவிடுதி ஊழியர்களின் கோரிக்கைகள் குறித்து அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு அனைத்துப் பல்கலைக் கழகங்களின் உணவு விடுதி ஊழியர்களின் கோரிக்கைகள் குறித்து பல்கலைக் கழகங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். பல்கலைக் கழகங்கள் தன்னாட்சி பெற்ற அமைப்பாதலால் இதில் அரசின் தலையீடு தேவையில்லை. எனினும் எல்லாப் பல்கலைக் கழகங்களும் கோரிக்கைகளின்மீது நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. சில பல்கலைக் கழகங்கள் ஊதியங்களை மாற்றியமைத்துள்ளன. பிற சலுகைகளையும் அளித்துள்ளன.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்களிலும், தன்னாட்சி கல்லூரிகளிலும் உள்ள மாணவர்கள் உணவு விடுதிகளில், சுமார் 15 ஆயிரம் பேருக்கு மேல் உள்ள ஊழியர்கள், பல்லாண்டு காலம் பணிபுரிந்தும் நிரந்தரமற்ற நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கக் கோரியும், அவர்களுக்குச் சில சலுகைகளைக் கொடுக்கும்படி கேட்டும், இந்த அரசு வந்ததற்குப் பிறகு, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், மாறி மாறி விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள். அண்மையில், 2–11–1989 -ல் ஒரு பேரணி நடத்தி, மகஜரும் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை பரிவுடன் ஆலோசித்து, பல்கலைக் கழகங்களுக்குத் தன்னாட்சி உரிமை இருந்தபோதிலும் கூட, அரசே பரிந்துரைகளைச் செய்து அவர்களுக்காக அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற ஏற்பாடு செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக துணை வேந்தர்களுக்கு, அந்தக் கோரிக்கைகளை, கவனத்தில் கொண்டு பரிசீலிக்க வேண்டுமென்று, அரசாங்கத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகங்களில் உள்ள உணவு விடுதிகளில் பணியாற்றுகிறவர்கள், வெவ்வேறு நிலையில் பணியாற்றுகிறார்கள். இதிலே, மாணவர்களுடைய கூட்டுறவு அமைப்புகளும் இருக்கின்றன. எனவே, கூட்டுறவு அமைப்புகள் எல்லாம் இருக்கிற காரணத்தால், அந்தந்த அமைப்புகளுக்கு ஏற்ற முறையில்தான், ஊதிய உயர்வும், பணியை உறுதிப்படுத்துகிற ஒரு முறையும் இன்றைக்கு இருக்கிறது. முழுப் பொறுப்பையும், அந்தப் பல்கலைக் கழகங்கள் நேரடியாக ஏற்றுக் கொள்வதற்கு முழு அளவிற்கு இயலவில்லை என்று தெரிவிக்கிறார்கள். எந்தெந்த வகையில் உதவ வேண்டுமோ அப்படி உதவிட வேண்டுமென்று மறுபடியும் கேட்டுக் கொள்ளப்படும்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு முறையில் மாணவர்கள் விடுதி இருப்பது என்பது புதிதாக இருக்கிறது. ஏதோ ஒன்றிரண்டு இருக்கலாம். ஆனால், பெருவாரியான உணவு விடுதிகள் அவர்கள் பொறுப்பிலேதான் இருக்கின்றன. ஐந்தாவது ஊதியக் குழு, மலைஜாதி மாணவர்களுடைய நல உணவு விடுதி, அரிசன மாணவர்களுடைய நல உணவு விடுதிகளில் இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. அந்த அடிப்படையிலேயாவது அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்துவதற்கும் அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கும் துணை வேந்தர்களுக்குப் பரிந்துரை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**9-10 மணி**

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுத் துறையிலேயுள்ள ஆதி திராவிடர் நல விடுதிகளிலேயும் அதைப்போல பிற்பட்டோர் நல விடுதிகளிலேயும் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கையின் அடிப்படையில் அந்த ஊதியங்களெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பல்கலைக்கழகங்களில் அவர்களுக்கு நிரந்தரமான பணி என்பது, நடைமுறையிலே நிரந்தரமாகத் தருவது என்ற அளவிற்குதான் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அரசு அவர்களுடைய ஊதியங்களையெல்லாம் உயர்த்துவதற்கு, நடவடிக்கை எடுக்காத பல்கலைக்கழகங்களை நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக்கொள்ளும்.

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகங்களில் உணவு விடுதிகளைச் சார்ந்த விடுதி ஊழியர்கள் 15 ஆயிரம் பேர் பல





ஆண்டுக்காலமாக 90 ரூபாய், 100 ரூபாய் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். பலமுறை வந்து கேட்டிருக்கிறார்கள். அது தொழிலாளர் நல இலாகாவில் வருகிறதா அல்லது கல்வி இலாகாவில் வருகிறதா என்று நீண்டகாலமாகப் பிரச்சினை இருந்தது. மதிப்பிற்குரிய நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இன்றைக்கு அவர்களை ஏற்றுக்கொண்டு இருப்பதற்கு நன்றி. ஆனால் குறைந்தபட்சம் ஆதிதிராவிடர் நல மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு விடுதிகளிலே தரக்கூடிய அந்த ஊதியத்தையாவது அவர்களுக்குத் தந்து, இந்த 15 ஆயிரம் பேர் வாழ்க்கையிலே ஒரு நிம்மதி ஏற்படுத்த, துரிதமான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முன்னமே அளித்த விடையின் அடிப்படையில் ஒவ்வொரு விதிமுறையைப் பின்பற்றி வெவ்வேறு நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். அந்தந்தப் பல்கலைக் கழகமும் அவர்களுடைய தன்னாட்சி நிர்வாகத்தில், அங்கேயுள்ள நிலைமைக்கேற்ப ஊதிய உயர்வு வழங்க, அதற்கேற்ப சில சலுகைகளை வழங்க முன்வந்து இருக்கிறார்கள். எல்லோருக்கும் வழங்கவேண்டுமென்று மட்டும் கேட்டுக் கொள்ள முடியும். ஒரே விகிதம் என்பதை நம்மால் தீர்மானிக்க முடியாது.

**திரு கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், தமிழகத்திலேயுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் உள்ள உணவு விடுதிகளிலே பணியாற்றக் கூடியவர்கள் 15 ஆயிரம் பேர்கள் என்று. அந்த ஊழியர்களுக்கு, ஊதியம் மட்டுமல்ல, பணிப் பாதுகாப்பும் இல்லை; பணி வரன்முறை இல்லை; ஊதிய நிர்ணயம் இல்லை; எந்தவிதமான பாதுகாப்புமற்ற நிலையிலே நாங்கள் இருக்கிறோம் என்று தொடர்ந்து கூறி வருகிறார்கள். இந்த ஊதியத்தை எவ்வளவு தீர்மானிக்கிறார்கள் என்பது ஒருபக்கம் இருந்தாலும், என்ன தீர்மானித்தாலும், தீர்மானிக்கப்பட்ட ஊதியம், பணிப் பாதுகாப்பு, பணி வரன்முறை முழுவதும் அவர்களுக்குக் கிடைப்பதற்கு இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபோது சொன்னார்கள், சில பல்கலைக் கழகங்கள் வழங்கியிருக்கின்றன என்று. அப்படி வழங்கி இருக்கக்கூடிய பல்கலைக் கழகங்கள்? எவையெவை வழங்காதவை எவையெவை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? இல்லையென்று சொன்னால், அவர்களுடைய பணிப் பாதுகாப்புக்கும், பணி வரன்முறைக்கும், ஊதியம் என்ன என்பது போன்றவற்றுக்கு வரன்முறை செய்வதற்கான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 11

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஊழியர்களுடைய சங்கங்கள் ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலேயும் இருக்கின்றன. அந்தச் சங்கங்களோடு அந்தந்தப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம், கூடுமான வரையில் அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குவதற்கு, பல்கலைக் கழக துணை வேந்தர்களுக்கு ஆலோசனை வழங்க முடியு மே தவிர எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் மொத்தமாக ஒரு விதிமுறை வகுப்பது என்பது இன்றைய சூழ்நிலையில் உடனடியாக இயல்வது அல்ல. தொடர்ந்து நடைபெறுகிற முயற்சியின் காரணமாக அப்படி ஒரு கால கட்டம் வரலாம்

## எழுத்துச் சீர்த்திருத்தம்

* 7774 திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பேராசிரியர் குழந்தைசாமி குழு அளித்த அறிக்கையில். எழுத்துச் சீர்திருத்தம் பற்றி தந்துள்ள கருத்துக்களை அரசு ஏற்றுள்ளதா?

(ஆ) அதைச் செயல்படுத்தும் வகையில் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,—

(அ) மற்றும் (ஆ) அப்படிப்பட்ட ஒரு குழு இப்போது இல்லாததால் இந்தக் கேள்வி எழவில்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பேராசிரியர் குழந்தைசாமி அவர்களுடைய தலைமையில் உள்ள குழுவிடம் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி கருத்துக்கள் கேட்டு அர சாங்கம் ஒரு வேண்டுகோளை விடுத்ததோடு அவர்களை அதற்கு நியமிக்கவும் செய்தது. சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதமே குழு வினுடைய அறிக்கை தயாராகி விட்டது என்று கருதுகிறேன், அதிகார பூர்வமாக. அரசிடம் கொடுக்கப்பட்டதோ இல்லையோ, ஆனால் நாளேடுகளிலேயெல்லாம் இந்தச் செய்திகள் வந்திருப் பதை வைத்து இந்தக் கேள்வி இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்பது பெரியார் காலத்திலே யிருந்து கொண்டு வரப்படுகிற ஒன்று என்ற காரணத்திற்காக இப்போது இருக்கின்ற. உயிர் எழுத்துக்களிலே இ, ஈ, உ, ஊ



1990 ஏப்ரல் 11 ]

என்று சொல்லுகின்ற 4 எழுத்துக்களால் ஏற்படுகிற சில சிரமங் களை எடுத்துச் சொல்கிறார்கள், 12 உயிர் எழுத்துக்களும் 18 மெய் எழுத்துக்களோடு சேர்ந்து உயிர்மெய் எழுத்தாகிற போது, இந்த 4 உயிர் எழுத்துக்களுக்காக மட்டும் 6 குறியீடு களை இப்போது (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குத் தெரியாதது அல்ல. இது எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய விரிவுரை ஆகாது. அமைச்சர் என்ன பதில் அளித்தாரோ அதன் அடிப்படையில் வினா எழுந்தால் இது கூட ஒரு சீர்திருத்தமான வினாவாக இருக்கும்.

9-15 மணி

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்களை இழுத்து விட்டு விடலாம் என்பதுதான் என்னுடைய நோக்கம். 76 குறியீடுகளை அவர்கள் அதிகமாகப் படிக்க வேண்டியிருப்பதால், இந்த எழுத்துச் சீர்திருத்தம் என் பது திரு. குழந்தைசாமி அவர்களுடைய கருத்தோ அல்லது மற்றவர்களுடைய கருத்தோ, தமிழக அரசு முழு வீச்சோடும், மூச்சோடும் இதனை எடுத்துச் செயல்படுத்த முன்வருமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த காலத் தில் பத்திரிகைகளில் வந்த குறிப்புகளை வைத்து திரு. குழந்தைசாமி அவர்களுடைய தலைமையில் ஒரு குழு இருப்ப தாகவும் அந்தக் குழு கருத்து தெரிவித்ததாகவும் ஒரு எண்ணத் தின் அடிப்படையில் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். 1979-ஆம் ஆண்டில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. தொடர்ந்து 1982-ஆம் ஆண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டது. 1985-ஆம் ஆண் டிலே அந்தக் குழு முடிவடைந்து விட்டது. நாங்கள் இந்தப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னால் அப்படி ஒரு குழு இல்லை. எனவே குழுவே நியமிக்கப்படவில்லை. தனிப்பட்ட முறையில் அறிஞர் திரு. குழந்தைசாமி அவர்கள் தமது கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள். அதேபோல் தனிப்பட்ட முறையில் கருத்துக்களை வழங்கியவர்கள் வேறு சிலரும் இருக்கிறார்கள். இந்த அரசு அதைப் பரிசீலிப்பதற்கு உரிய காலம் வந்துள்ள தாக இப்போது எண்ண முடியவில்லை.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, டெலிபிரிண்டர், தந்தி போன்றவற்றில் இந்தி கூட வந்துவிட் டது. ஆனால் தொன்மையான இந்தத் தமிழ் மொழியில் எழுத்துச் சீர்திருத்தம் வருமேயானால் நல்ல வளர்ச்சி ஏற்படும். தட்டச்சிலே கூட இப்போது இருக்கின்ற எழுத்து வடிவத்தை வைத்துக்கொண்டு ஏறத்தாழ 26 'கீ' என்று சொல்லப்படுகின்ற அமைப்புக்களைப் பயன்படுத்த வேண்டி இருக்கிறது. எனவே இப்போது நான் சொன்ன இந்த 4 எழுத்துக்களையும் சீர்திருத்து

கிறபோது இப்போது 'க்' போட்டு 'இ' போட்டால் ஒரு கொம்பை விட்டு விடலாம். அதே போல் இடது பக்கமோ வலது பக்கமோ சில குறியீடுகளைப் போடுவதாலேயே இந்த 4 எழுத்துக்களுக்கு மட்டும் சில குறியீடுகளை அதாவது இடது பக்கம், வலது பக்கம் என்று மாற்றி எழுத்துக்களுக்குப் போடுவதன் மூலம் தட்டச்சிலே கூட ஏறத்தாழ 26 -'கீ' களைக் குறைத்துவிடலாம். அது மட்டுமல்ல. இப்போது வந்திருக்கின்ற கருவிகளான டெலிபிரிண்டர், தந்தி இவற்றை எல்லாம் பயன் படுத்துகிற அளவுக்கு நமது தமிழ் எழுத்து நாளும், நாளும் புதுமையாக வளர்ந்து வர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த எண்ணத்தை வெளிப்படுத்துகிறேன். இலக்கியம் மட்டுமே தேவை என்பதல்ல. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல துறைகளில் கல்வியைக் கற்க வேண்டி இருக்கின்ற காரணத் தால் இந்த எழுத்துச் சீர்திருத்தத்திற்கான குழு அமைக்கப்பட்டு இருந்தாலும், அமைக்கப்படாவிட்டாலும்—அழகாகச் சொல்லி இருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுத்துச் சீர்திருத்தம் என்பதைப் பற்றி, நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். பெரியார் கொடுத்த ஒளி விளக்கை எடுத்து நாங்கள் விரை வில் செயல்படுத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே—நீங்களே, அதாவது அரசே முன் வந்து இந்தக் காரியத் தைச் செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே மிக விவர மாக, விளக்கமாக எடுத்துச் சொன்னதைப்போல் இந்தக் கருத் துக்கள் முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையிலும், என் னுடைய ஆலோசனையிலும் இருந்து வருவது என்பது உண்மை. ஆனால் இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் ஒரு முடிவுக்கு வருவதற்கான அளவுக்குத் தகுந்த ஆய்வுகள் நடத்தப்படவில்லை. எனவே தொடர்ந்து அதுபற்றி ஆலோசிக்கப்படும். மற்றும் ஒன்று. எழுத்துச் சீர்திருத்தம் என்றவுடன் இரண்டுவிதமான கண்ணோட்டத்தில் தமிழக அறிஞர்கள் நோக்குகிறார்கள். ஒரு சாரார் இந்த எழுத்துச் சீர்திருத்தத்தால் பழைய சுவடிகளுடைய அமைப்பே மாறிவிடும் என்று கவலைப்படுகிறார்கள். ஒரு சாரார் எழுத்துச் சீர்திருத்தம் வராவிட்டால் வளர்ச்சியே இருக் காது என்று கவலைப்படுகிறார்கள். அது தொடர்ந்து அரசி னுடைய ஆய்வில் இருந்து வருவதால் தகுந்த நேரத்தில் உரிய முடிவுகளை மேற்கொள்ள முயற்சிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 3818, 4890 மற்றும் 6981 ஆகியவை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப் படுகின்றன.**



## உள்ளாட்சித் தேர்தல்.

*3703—திரு. எஸ். ஆர். முனிரத்தினம் :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த முறை உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்ற போது விடுபட்ட ஒன்றியங்களுக்கும், இடையில் ஏற்பட்ட காலி யிடங்களுக்கும் இடைத் தேர்தல் நடத்த அரசு முயற்சிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அடுத்த ஊராட்சி தேர்தல் நடை பெற ஓராண்டுகூட இல்லாத நிலையிலும் தேர்தல் நடத்த ஆயத்த ஏற்பாடுகள் செய்ய போதிய காலம் தேவைப்படுவதால் தற்போது மேற்படி காலியிடங்களுக்கு இடைத் தேர்தல் நடத்த கருத்துரு இல்லை.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில நகராட்சிகளில் தலைவர்கள் இறந்துவிட்டால் தேர்தல் நடத்தப்படாமல், தலைவர் பொறுப்பு' என்று அங்கே இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் கள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்கு அழைக்கப்படு வதில்லை. உதாரணமாக துறையூர், மணப்பாறை போன்ற இடங்களில் அப்படி இருக்கிறது. எனவே இதைப்பற்றி அரசு சரியான ஒரு முடிவை எடுத்து அவர்களும் கலந்து கொள்வதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி தனியாகக் குறிப்பிட்டு, எந்த நக ராட்சி என்றவிவரத்தைத் தெரிவித்தால் அதுபற்றிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆதி திராவிடர்களுக்கு இட ஒதுக்கீடு.

*5475—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சட்ட மன்றம், பாராளுமன்றங்களுக்கு இட ஒதுக் கீடு செய்துள்ளது போல பேரூராட்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன் றியங்களில் போட்டியிட ஆதி திராவிடர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், இதேபோன்று கார்ப்பரேசனிலும் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) மாநகராட்சிகளில் ஏற்கனவே இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9-20 மணி

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம், பாராளுமன்றங்களுக்கு இட ஒதுக்கீடு செய்துள்ளதுபோன்று பேரூராட்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சிகள் போன்றவற்றில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இட ஒதுக்கீட்டை கடந்த காலத்தில் செய்துள்ளார்கள். ஆனால் இடையிலே நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால் தடை ஏற்பட்டுவிட்டது. இந்த அரசு புதிதாக பதவி ஏற்றதற்குப் பின்னால் அதை மறு பரிசீலனை செய்து மீண்டும் தாழத்தப்பட்ட மக்களும் தரணியிலே மேம்பாடுஅடைய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டம், பிரிவு எண் 12/1-ன்கீழ் பெண் மற்றும் பட்டியல் சாதியினர் பழங்குடியினரில் மூவருக்குக் குறையாமல் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு ஒத்து தேர்வு செய்யலாம் என சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று, சட்டங்கள் இயற்றினாலும் இந்த ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவி, வருகின்ற இன்னும் 6 மாத காலத்தில் நடக்க இருக்கின்ற தேர்தலின்போது விரைவாக ஆணை பிறப்பித்து தாழ்த்தப்பட்ட மக்களும் இதிலே தலைவர்களாக ஆவதற்கு விரைவிலே நடவடிக்கை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி தேர்தல் நடைபெறும் போது ஆலோசிக்கலாம்.

திரு. செங்கைசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது மாநகராட்சிக்கு இடம் ஒதுக்கீடு என்று சொன்னார்கள். ஆகவே மாநகராட்சிக்கு இடம் ஒதுக்கீடுகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு





1981-லேகணக்கெடுப்பு நடந்து, அந்தக் கணக்கெடுப்புப்பிரகாரம் 13.5 சதவிகிதம் இன்றைய தினம் இடம் ஒதுக்கப்படும் என்று கூறப்படுகிறது. இன்னும் ஓராண்டு போனால் அடுத்த கணக்கெடுப்பு நடக்க இருக்கிறது. இன்றைக்கு 13 சதவிகிதத்திற்கு மேலே சென்னை மாநகரில் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அதை மனதிலே கொண்டு இன்னும் அதிகமான இடம் ஒதுக்கீடு செய்துதர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுக்கிறோமோ அதைத் தொடர்ந்து நடைபெறுகிற தேர்தலில் அந்த கணக்கில்தான் இந்தத் தேர்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்பு அனுமதி. திருமதி பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது அரிஜன மக்களுக்கு 3 பேர்களை நாம் நியமனம் செய்து கொள்வோம் என்று சொன்னார்கள். அதற்குச் சட்டம் இருக்கிறது. அந்த நியமனம் என்று இருந்தாலே பவர்லெஸ்தான். அதிலே பிரயோஜனம் இல்லை. அதனாலே இந்த ஆதிதிராவிடர்களைச் சேர்ந்த பெண்களும் அதிலே அங்கம் வகித்தால்தான் பலன் இருக்கும். எம்.எல்.ஏ. எல்லாம் சும்மாதான். இங்கே ஏதோ உட்கார்ந்திருக்கிறோம். கை தூக்கிவிட்டு போகிறோம். விஷயத்தைப் பேசுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிலக்கோட்டைக்கு நிறையச் செய்யப்பட்டிருக்கிறது. வெறுமனே கை தூக்கிவிட்டுப் போகிறோம் என்று சொல்கிறீர்களே.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகத் துறையில், நிர்வாகத்தை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், பெண்களுக்கும் அரிஜன மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்வதற்கான சட்டம் மீண்டும் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தின் முதலமைச்சரின் எண்ணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன். அவர்தான் இதை அழுத்தந்திருத்தமாக எந்த முறையிலேயாவது திணிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கின்றார். ஆனால் வார்டுகளில் 500, 300, 250

வாக்குகள் உள்ள வார்டுகள்கூட இருக்கின்றன. அதிலே தேர்வு செய்வதற்குச் சங்கடமான சூழ்நிலை நாமினேஷன் போடுகிற காலத்திலே ஏற்படுவதையொட்டித்தான் அதைப் பரிசீலிக்கிறோம். கூடுமான வரையில் அதுதான் தேவை என்று எல்லோரும் ஏகோபித்து ஒத்துக் கொள்கிற சூழ்நிலை வருமானால், அதைப்பற்றி நிச்சயமாகப் பரிசீலிக்கலாம்.

### அணுகு சாலைகள் அமைக்க நிலம் கையகப்படுத்துதல்.

*3197—திரு. ஆர். சாமிநாதன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா ;

(அ) மதுரை, சமயநல்லூர் இருப்புப் பாதைக் கடவின் மீது மேம்பாலம் கட்டும் பணி நிறைவு பெற்றும் அணுகு சாலைகள் அமைக்க நிலம் கையகப்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நிலம் எப்போது கையகப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிலம் கையகப்படுத்த வேண்டிய பணி முன்னேற்றத்தில் உள்ளது.

திரு. ஆர். சாமிநாதன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சமீபத்தில் உள்ள இருப்புப் பாதை கடவின் மீது மேம்பாலம் கட்டி ஏறத்தாழ 2, 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே அதற்கு அருகிலுள்ள, 7வது தேசிய நெடுஞ்சாலையில் ரெயில்வே லெவல் கிராசிங்கிலே புகைவண்டி வரும்போதெல்லாம் அடிக்கடி கதவுகள் மூடப்படுகின்றன. எனவே போக்குவரத்துக்கு இடையூறுகளும் கால தாமதமும் ஏற்படுவதால் விரைவில் நிலங்களைக் கையகப்படுத்தி அணுகுசாலை அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

9–25 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணுகுசாலையை அமைப்பதிலே நிலம் எடுப்பதிலேதான் சற்று காலதாமதம் ஆகிவிட்டது. 1984–ல் இருந்து நிலம் எடுப்பதிலே தகராறுகள் ஏற்பட்டு நின்றுவிட்டது. இருந்தாலும் அரசு 17–7–1989 அன்று நிலம் எடுக்க ஆணை பிறப்பித்திருக்கிறது. அதையொட்டி டெண்டர் கோரப்பட்டது. இப்போது டெண்டர் மத்திய அரசின் பரிசிலனையில் இருக்கிறது. அந்தப் பரிசீலனைகள் முடிந்தவுடன் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.



திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணுகு சாலையை அமைக்க மத்திய அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள மதிப்பீட்டுத் தொகையைச் செலவிடுவதிலே இன்னும் காலதாமதம் ஆனால் மாநில அரசே அந்தத் தொகையை ஏற்க வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே, மத்திய அரசு விரைவில் அந்த டெண்டர் மூலம் அதை விரைவில் எடுக்கச் சொல்லி, நிலத்தைக் கையகப்படுத்தி, அணுகு சாலையை அமைக்க விரைவில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தை உடனே எடுப்பதில் அரசுக்கு ஒன்றும் தயக்கம் இல்லை. ஆனால் நீதிமன்றம் என்ற ஒன்று இடையிலே இருக்கிறது. அவர்கள் எதற்கும் ஸ்டே கொடுத்து விடுகிறார்கள். மறுபடியும் ஸ்டேயை வெக்கேட் பண்ண வேண்டும். அதற்குள் சிறிது கால தாமதம் ஆகிவிடுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இருந்தாலும் அந்த நிலைமை ஏற்படாது. ஏற்பட்டாலும் அரசு அதை பார்த்துக் கொள்ளும்.

### மதுரை-கொச்சி தேசிய நெடுஞ்சாலை.

*5961—திரு. நா. இராமகிருஷ்ணன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை-கொச்சி தேசிய நெடுஞ்சாலைப் பாதையை கம்பம்-கம்பம்மெட்டு வழியாக அமைக்க மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொண்டி-மதுரை-தேனி-கம்பம்- கோட்டம்-கொச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்துமாறு 26–12–1989 அன்று மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அந்தச் சாலை வழியாக வரும்போது, அந்தச்சாலையின் நிலைமையை நன்றாகப் பார்த்து உணர்ந்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல்,

இச்சாலை கேரளா மாநிலத்தை இணைக்கின்ற முக்கிய சாலை என்பதாலும், கம்பம்—கூடலூர் போன்ற பெரு நகரங்களை இணைக்கின்ற முக்கிய சாலை என்பதாலும், இந்திய நாட்டுக்கு 50 கோடி ரூபாய்க்கு மேல் அந்நியச் செலவாணியை ஈட்டித் தருகின்ற ஏலம், மிளகு, இஞ்சி போன்றவற்றை உற்பத்தி செய்கின்ற விவசாய மக்கள் பயன்பெறும் வகையிலும், அந்தப் பகுதியிலே சுற்றுலா மையங்களான சுருளி நீர் வீழ்ச்சி, மேகமலை, கண்ணகி கோட்டம் போன்றவை இருப்பதாலும், வருகின்ற ஆண்டிலே மத்திய அரசுக்கு நினைவூட்டுகின்ற வகையில் கடிதம் எழுதி அந்த நெடுஞ்சாலையை அமைக்க அரசு வழிவகை வகுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் இப்படிப்பட்ட கேள்வி ஒன்றைக் கேட்பார்கள் என்றுதான் அரசு ஏற்கெனவே 26-12-1989 அன்றுமத்திய அரசுக்கு இந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நானே நேரிலே சென்று மத்திய அமைச்சரைப் பார்த்துக் கடிதத்தைக் கொடுத்திருக்கிறேன். அந்தச் சாலை மட்டுமல்லாமல், நாகப்பட்டினத்திலிருந்து கூடலூர் வரை தஞ்சை திருச்சி வழியாக சாலை. கடலூரிலிருந்து சேலம் வழி உளுந் தூர்ப்பேட்டை, திருச்சியிலிருந்து மதுரை வழி விராலிமலை. திருச்சியிலிருந்து இராமநாதபுரம் வழி புதுக்கோட்டை காரைக்குடி, திண்டுக்கல்லில் இருந்து கோயம்புத் தூர் வழி உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி. கடலூரிலிருந்து சித்தூர் வழி வேலூர். மதுரையிலிருந்து தூத்துக்குடி வழி அருப்புக்கோட்டை, கிழக்குக் கடற்கரைச் சாலை. அதையடுத்து, பெரம்பலூரிலிருந்து மானாமதுரை, தொண்டி, மதுரை, தேனி, கம்பத்திலிருந்து கொச்சி வரையில். மதுரை, தென்காசி, கொல்லம் சாலை. திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி சாலை. திருநெல்வேலியிலிருந்து செங்கோட்டை சாலை. மதுரை, அம்மை நாயக்கனூர், கங்குவார்ப்பட்டி, கொடைக்கானல் சாலை. தோப்பூர், மேட்டூர், பவானி சாலை. வாணியம்பாடி, திருப்பத் தூர், தர்மபுரி சாலை ஆகிய இந்தச் சாலைகளை எல்லாம் தேசிய நெடுஞ்சாலைகளாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அமைச்சர் திரு. உன்னிகிருஷ்ணன் அவர்களைப் பார்த்து, கடிதத்தைக் கொடுத்து, நான் விரிவாகப் பேசியிருக்கிறேன். திரு. உன்னிகிருஷ்ணன் அவர்கள் இங்கே வந்திருந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அவர்களிடத்தில் இது குறித்து பேசியிருக்கிறார்கள். எனவே, மத்திய அரசின் ஆய்வில் இது இருக்கிறது. மத்திய அரசு விரைவில் சாதகமான பதில் தரும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதிக்கப்பட்ட மதுரை-கொச்சி சாலை தற்சமயம் போடி வழியாக செல்கிறது. போடி மக்கள் அதிர்ஷ்டம்



வாய்ந்தவர்கள். ஆகவே, அந்த அதிர்ஷ்டம் கம்பம் தொகுதிக்கும் வர வேண்டும் என்ற காரணத்தினாலே போடியிலிருந்து தற்சமயம் குமுளி வரையாவது இந்தத் தேசிய நெடுஞ்சாலையைப் போட அரசு மீண்டும் கடிதத் தொடர்பு கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, போடி வரையில்லை. மதுரையிலிருந்து தேனி-கம்பம்-கோட்டயம் சாலையையும் போடுவதற்குத்தான் அரசுவழியாக முழுமுயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை-கொச்சி தேசிய நெடுஞ்சாலை போடி வழியாகச் செல்வதா, கம்பம் வழியாகச் செல்வதா என்ற ஆய்வில் போடி வழியாகச் சென்றால் சுமார் 71 கிலோ மீட்டர் தூரம் மலைப் பாதையில் குறைவாக இருப்பது தெரிந்து, போடி வழியாகச் செல்ல மத்திய அரசு அனுமதி வழங்கி, தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு, போடி வழியாகச் செல்வதற்கு தேசிய நெடுஞ்சாலைத் துறையால் வேலைகள் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருவதாகத் தெரிய வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் கம்பம் வழியாக அதை மாற்றுவதற்கு அரசிடம் பரிசீலனை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இருப்பது, அது அப்படியே இருக்கும். அது ரைட்டிலே போவது. திரு. இராமகிருஷ்ணன் சொல்வது லெப்டிலே போவது. அந்தச் சாலையை எடுக்கச் சொல்லிக் கேட்டிருக்கிறோம்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்திய சாலைகளில் நாகப்பட்டினம்-கூடலூர் சாலையும் ஒன்று. அங்கே ஓ.என்.ஜி.சி. பணிகள் காரணத்தாலும், தஞ்சை மாவட்டத்திலே மத்திய அரசினுடைய சாலை எதுவும் இல்லாத காரணத்தாலும் நாகப்பட்டினம்-கூடலூர் சாலைக்கு முன்னுரிமை வழங்க மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவரவர்களே, நாங்கள் மத்திய அரசினுடைய அமைச்சர் அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்துள்ள 16 சாலைகளில், முதல் பிரையாரிட்டி—நெம்பர் 1—நாகை-கூடலூர் சாலைதான்.

[1990 ஏப்ரல் 11

இலவச மின்சாரம்

*7075—திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் மின்சார வாரியத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் பயன்படுத்தும் மின்சாரத்தை ஏற்கெனவே தனியார் துறை மின் நிறுவனங்கள் இலவசமாக விநியோகம் செய்து வந்ததை அரசு மீண்டும் அனுமதிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கே இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'கேள்விக்கே இடமில்லை' என்ற பிறகு திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஓட்டல்களில் வேலை செய்பவர்கள் காலையில் காப்பி, டிபன், மத்தியானம் சாப்பாடு எல்லாம் சாப்பிடுகிறார்கள். போக்குவரத்துத் துறையிலே அவர்கள் மட்டுமல்ல, அவர்கள் குடும்பமே ஏறிப் போகிறது. இரயில்வேயில் வேலை செய்பவர்களுக்குப் பாஸ் தருகிறார்கள். மின் வாரிய ஊழியர்களுக்கு மட்டும் சலுகை கிடையாது. அவர்களுக்கு இன்ஸ்டரீசுக்குத் தர வேண்டாம், விவசாயத்திற்குத் தர வேண்டும் டொமஸ்டிக் பர்ப்பசுக்கு மட்டும் கேட்கிறார்கள். ஏற்கெனவே பிரைவேட் அன்டர்டேங்கிங்-ஆக இருந்தபோது கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்தச் சலுகையைக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவரவர்களே, தனிப்பட்டவர்களிடமிருந்து நாம் அவற்றை எடுத்த நேரத்தில், அந்தக் கம்பெனிகளில் உள்ள சலுகைப்படி அவர்கள் 31-3-1981 வரையில் அதை அனுபவித்தார்கள் 1-4-1981-லிருந்து அரசினுடைய விதிமுறைகளுக்கு ஏற்பத்தான் செயல்பட



1990 ஏப்ரல் 11]

வேண்டியிருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் ஓட்டலில் வேலை செய்பவர்கள் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் தான் சாப்பிட முடியும், வீட்டிலே யாரும் சாப்பிட முடியாது. ஆகையால் அதே போன்று இப்போது கொடுக்க ஆரம்பித்தால், மின்சார இலாக்காவில் ஒரு இலட்சம் பேர் வேலை செய்கிறார்கள் என்ற நிலையில், ஆண்டு ஒன்றுக்கு இதனால் 6 கோடியிலிருந்து 9 கோடி ரூபாய் வரை செலவாகும். ஆகவே, நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு அரசு அதைச் செய்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, எல்லாத் துறைகளிலும் ஆயிரக் கணக்கிலே இலட்சக் கணக்கிலே தான் வேலை செய்கிறார்கள். சர்க்கார் துறையிலே வேலை செய்கிறார்கள், அன்டர்டேக்கிங்கில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகைகள் இருக்கும் போது, மின்சார வாரியத்தில் உள்ள ஊழியர்கள் என்ன பாவம் செய்தார்கள் ? வீட்டில் எரியும் விளக்குக்குத்தான் கேட்கிறார்கள். ஏர்கண்டிஷனுக்கு வேண்டியதில்லை. அதை மட்டும் அரசு கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, முதலில் மின்சார இலாக்காவிற்கு வந்து, அரசு ஊழியர்களுக்கு வேண்டுமென்ற நிலைமை, கோரிக்கைகள் வளர்ந்து கொண்டே போகும். ஆகவே, இருக்கின்ற நிதி நிலைமையில் இப்போது அரசு இந்த முடிவில் இல்லை.

திரு. கே. ரமணி : தலைவரவர்களே, நமது அமைச்சரவர்கள், அவர்கள் இந்தச் சலுகையை அனுபவித்துக்கொண்டிருந்தார்கள் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அது நல்லது. ஆனால், அரசு அதை அதனுடைய சொத்தாக ஆக்கியதற்குப் பிறகு—மக்களுடைய கோரிக்கையின் பேரில் தான்—அந்தச் சலுகை கொடுப்பது சரியல்ல, ஒரு இலட்சம் பேருக்குக் கொடுக்க வேண்டி வரும் என்று சொல்கிறார்கள். இதனால் தனியார் துறையிலே இருக்கிற சில தொழில்கள் தேசியமயமாக்கப்பட்டால், அரசுச் சொத்தாக்கினால்தான் சில சலுகைகளை இழக்கும்படி வருமென்ற ஒரு இடத்திற்குக் கொண்டு போய்விடக்கூடாது என்பதை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு மின்சார வாரிய ஊழியர்களுடைய ஒரு கோரிக்கை அரசின் முன்னால் இருக்கிறது. அவர்கள் உபயோகப்படுத்தக் கூடிய மின்சாரம் முழுவதையும் இலவசமாகக் கொடுக்காவிட்டாலும், ஒரு பகுதியை அவர்களுக்குச் சலுகையாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு உள்ளாட்சித் துறையில் வரி கட்டுவதைக் கூட அரசு ஏற்றுக்கொண்டு

[1990 ஏப்ரல் 11

9–35 மணி.

செய்யக் கூடிய நடவடிக்கைகளை அரசு எடுக்கிறது. ஆகவே, இது ஒரு சோஷியல் வெல்பேர் என்ற முறையில் இதற்கு அரசு முன்வர வேண்டும் என்பதை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, திரு. ரமணி அவர்களுக்கு மின்சார இலாகாவினுடைய நிதிநிலை அறிக்கையைப் பற்றி நன்கு தெரியும். ஆக, நிலைமைகள் முதலில் நன்கு சீர்படட்டும்; மின்சார இலாகா கடனிலிருந்து மீண்டு தன் காலில் நிற்கட்டும்; அரசினுடைய நிதிநிலையை எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிற நிலை மாறட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி சொன்ன கருத்துக்களை அரசு அப்போது பரிசீலிக்கும்.

## வவ்வால் துறை அணைக்கட்டு கட்டும் திட்டம்.

*9309 திரு. எல். மூக்கையா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியகுளம் தொகுதியில், கும்பக்கரை அருவிக்கு மேல் வவ்வால் துறை அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(அ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டம் கும்பக்கரைக்கு மேல் பாம் ஆற்றில் வவ்வால்துறை அணைக்கட்டு கட்டுவதற்காக திட்டம் தற்சமயம் பொதுப்பணித் துறையின் ஆய்வில் உள்ளது. ஆய்வுக்குப் பின் திட்ட அறிக்கை கிடைத்து அரசு அதுபற்றி முடிவெடுக்கும்.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, கொடைக்கானல் மலையிலிருந்து வற்றாத ஜீவநதியாக பாம்பாறு நதி, கும்பக்கரை அருவி வழியாக ஓடி வீணாகிக் கொண்டிருக்கிறது. பெரியகுளம் தொகுதி மக்களினுடைய நீண்டநாள் கோரிக்கை வவ்வால்துறை அணைத்திட்டம். அந்தப் பகுதி விவசாயத்தையே நம்பிக்கொண்டு இருக்கிற பகுதி. கிணற்றுப் பாசனம் அதிகமாக இருக்கின்ற பகுதி. ஆகவே, அரசு அந்த கும்பக்கரைக்கு மேல் வவ்வால் துறை அணைத் திட்டத்தைத் துரிதமாகக் கட்டிக் கொடுக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அந்த அணையைக் கட்டுவதற்கு அரய நினைத்துத்தான் அதை ஆய்வு செய்யச் சொல்லி இருக்கிறது. ஆய்வினுடைய முதல் அறிக்கையிலே அணை கட்டுவதற்கு ஏதுவான இடம் என்று தெரிய வந்து இருக்கிறது. மேற்கொண்டும் அந்த அணை குறித்து பல்வேறு ஆய்வுகள். நடத்த வேண்டி இருக்கிறது. அந்த ஆய்வு அறிக்கை கிடைத்த பிறகு, திட்ட மதிப்பீடு தயாரிக்கப் பட்டு, அதற்குப் பிறகு அரசு அந்த அணையை எடுத்துக்கொள் வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

## ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டப் பணியாளர்களை நிரந்தரப்படுத்துதல்.

*8012—திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டப் பணியாளர்களை நிரந்தரப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் தற்காலிகமான திட்டம். எனவே, பணியாளர்களை நிரந்தரப் படுத்த இயலாது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டப் பணியாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்ற இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் ' இல்லை ' என்று கூறுகிறார்கள். இது கிராமப்புறங்களில் பெண்கள், ஊட்டச்சத்தை ஏழை எளிய மக்களுக்கு முறையாக விநியோகித்துக்கொண்டு வருகிற துறை. அவர்களை நிரந்தரப்படுத்தினால்தான் அவர்கள் வாழ்வும் சிறப்பாக அமையும். ஆகவே பெண்களுக்கு எத்தனையோ சலுகைகளைச் செய்துகொண்டு இருக்கக்கூடிய அரசு அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு இனிமேலாவது யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

டி2 53-91—4

[1990 ஏப்ரல் 11

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, நிரந்தரப்
படுத்தும் திட்டம் என்று இல்லை என்று அமைச்சர் அவர்கள்
மீண்டும் கூறுகிறார்கள். நான் கேட்டுக்கொள்வது அவர்களுக்கு
இன்றைக்கு 195 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுவதாகச் சொல்
கிறார்கள். அதையாவது உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு
முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஒருங்கிணைந்த
ஊட்டச்சத்துத் திட்டம் 1980-ல் தொடங்கி 1989-ல் முதல்
திட்டம் முடிவடைந்து இருக்கிறது. டினிப்-2 என்று சொல்லப்
படுகிற இரண்டாவது ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்
மத்திய அரசின் நிதி உதவியோடு மாநில அரசின் உதவியையும்
பெற்று இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில்
பணியாற்றுகிற ஊழியர்களுக்கு எவ்வளவு ஊதியம் தரப்பட
வேண்டும் என்பதை மைய அரசு நிர்ணயம் செய்து இருக்கிறது.
எனவே இதில் மாநில அரசு தலையிடுவதற்கில்லை.

பட்டா வழங்குதல்.

*6565—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்
கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவா ஒன்றியம், சத்திரம்
கொள்ளுக்காடு ஆதி திராவிடர்களுக்குக் குடியிருக்கும் கோவில்
இடத்தைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு
தலைவர் அவர்களே,

கொள்ளுக்காடு கிராமத்தில் சுமார் 55 குடும்பங்கள் அருள்
மிகு ஆத்மநாத சுவாமி கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில்
புல எண் 141-1ஏ மற்றும் 140-10-ல் குடியிருந்து வருகிறார்கள்.
இந்த 55 குடும்பங்களில் 47 குடும்பங்களுக்கு புல எண். 136-ஏ
நத்தம் புறம்போக்கு நிலத்தில் ஏற்கனவே மனைப்பட்டா வழங்
கப்பட்டுள்ளது. இந்நிலையில் கோவில் பட்டா நிலத்தில்
மீண்டும் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே,
இங்கு இருக்கிற ஆதிதிராவிடர்களுக்கும் அதே பகுதியில் இருக்
கிற கிறித்தவர்களுக்கும் மிகப் பெரிய கலவரங்கள் ஏற்பட்டு
அதன் பிறகு அந்த அரிசன மக்களுக்கு நிச்சயமாகக் காலனி
கட்டிக்கொடுக்கப்படும் என்ற முயற்சியை அரசு எடுத்துக்கொண்



1990 ஏப்ரல் 11]

டது. அந்த முயற்சிக்கு உதவியாக அவர்களுக்குப் பட்டா
வழங்கப்படாத காரணத்தினால் அவர்களுக்கு காலனி கட்டித்தர
முடியவில்லை. மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்
களுக்கு நன்றாகவே அதுபற்றித் தெரியும். அந்த அமைச்சர்
அவர்களுக்கு மீனவர்களைப் பற்றியும் தெரியும். அமைச்சர்
அவர்களுக்கு இரண்டு தகுதியும் இருக்கிற காரணத்தால் அந்த
அரிசனங்களுக்கு அந்த இடத்தில் பட்டா வழங்கி வீடு கட்டிக்
கொடுப்பதற்கு ஆவன செய்ய அரசு முயற்சி செய்யுமா என்று
அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு
தலைவர் அவர்களே, மனைப்பட்டா பெற்ற எவரும் பட்டா
பெற்றுக்கொண்ட இடங்களில் குடியேறவில்லை. வீட்டுமனை
இல்லாமல் 8 உபரிக் குடும்பங்கள் மட்டுமே உள்ளன. தற்
சமயம் பரம்பரையாக அவர்கள் குடியிருக்கும் கோயில் நிலத்தில்
அனுபவப்பட்டா வழங்கி, அங்கே கான்கிரீட் வீடுகள் கட்டிக்
கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்
கள். 47 குடும்பங்கள் புல எண். 136-ஏ நத்தம் புறம்போக்கு
மனைப்பட்டா பெற்றுள்ளன. உபரியாக இருக்கிற 8 குடும்பங்
களுக்கு மட்டும் நில எடுப்பின் மூலம் பட்டா வழங்க அரசு நட
வடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அதே
நேரத்தில் மொத்த நபர்களுக்கும் விரைவாகப் பட்டா வழங்கி,
அங்கே பக்கத்தில் கூட காலி இடங்கள் இருக்கின்றன, அங்கே
பட்டா வழங்கி, காலனிபோல வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு
முயற்சி எடுக்க வேண்டும். இதில் நீண்ட விளக்கம் தேவை
யென்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் திரு. சந்திரசேகரன்
அவர்களைக் கேட்டால் தெரியும். ஆகவே, காலனி கட்டிக்
கொடுக்க தீவிர முயற்சி எடுத்து, அரிசன மீனவர்களுக்கு வீடுகள்
கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேட்டுக்கொண்டு
இருக்கிறார். அவ்வளவுதான்.

திருப்பூர் மருத்துவமனையில் எமர்ஜென்சி பிரிவு
ஏற்படுத்துதல்

*3338—திரு. சி. கோவிந்தசாமி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்
கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோவை மாவட்டம், திருப்பூரில் பேருந்து நிலையத்
துக்கு எதிரில் உள்ள பழைய மருத்துவமனையில் 24 மணி
நேரமும் செயல்படக்கூடிய எமர்ஜென்சி பிரிவு ஏற்படுத்த அரசு
முன்வருமா?

[1990 ஏப்ரல் 11

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மருத்துவமனையில் தற்சமயம் 10 படுக்கைகளுடன் கூடிய விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு செயல்பட்டு வருவதால், 24 மணி நேர எமர்ஜென்சி பிரிவு ஒன்றை அங்கே அமைக்கும் அவசியம் எழவில்லை.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது மாவட்ட மருத்துவமனை பற்றி. இந்தப் புதிய மருத்துவமனை நகரத்தி லிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிற காரணத்தால் நகரத்தின் மையப் பகுதியில் ஏற்கெனவே இருக்கிற பழைய மருத்துவமனையை, அது இப்போது கூட வெளி நோயாளிகளுக் கான பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. அந்தப் பழைய கட்டிடத்திலேயே 24 மணி நேர அவசர சிகிச்சைப் பிரிவாக இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகரத்தின் வளர்ச்சியில் 4 கிலோ மீட்டர் தூரம் என்பது அதிகமான ஒரு தூரமல்ல. அங்கே இருப்பதை வேண்டுமானால் மாற்றலாம். அதை உறுப் பினர் அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்று கருதுகிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி ; பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே புதிய கட்டிடம் கட்ட வேண்டிய நிலையில் இல்லை ஏற்கெனவே கட்டிடம் இருக்கிறது. ஆகவே நகரத்தின் மையத் தில், நான்கு லட்சம் மக்கள் வசிக்கிற அந்த நகரத்தில், போக்கு வரத்து மிகவும் நெருக்கடியாக இருப்பதால், அடிக்கடி விபத்து ஏற்படுகின்ற அந்தப் பெருநகரத்தின் மத்தியில், இந்த அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். மருத்துவ மனையை மாற்ற வேண்டுமென்று இல்லை. புதிதாக 24 மணி நேரம் செயல்படக் கூடியதாக அதைத் தொடங்க வேண்டும். ஏற்கெனவே இந்த ஆண்டு அங்கே அப்படிப்பட்ட மருத்துவ மனை தொடங்கப்படும் என்று மருத்துவத் துறையிலிருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. அதையும் அமைச்சர் அவர் கள் கவனத்தில் கொண்டு, அந்தக் கட்டிடத்திலேயே தொடங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : கட்டிடம் மட்டும் இதற்குப் பிரச்சினை அல்ல. இப்போது புதிய மருத்துவமனையில், 3 உதவி மருத்துவர்கள், 3 செவிலியர்கள், 2 இயல் முறை வைத்தியர்கள், 2 டெக்னிசியன் கள், 3 உதவி செவிலியர்கள், நுண்கதிர் படம் எடுப்பவர் 3 பேர், உதவியாளர் ஒருவர் ஆகிய அனைவருமே 24 மணி நேரப் பணியாளர்கள்தான். ஆகவே ஒவ்வொரு மருத்துவமனையிலும்



1990 ஏப்ரல் 11]

அவசர சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்று கேட்டால் இந்த அரசின் நிதிநிலை அதற்கு இடம் கொடுக்காது. ஆகவே இருக்கின்ற வசதியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச் சர் அவர்கள் சொல்வது புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்ட மருத்துவமனை பற்றி. மாவட்ட மருத்துவமனை ஐ.சி. யூனிட் இல்லாமல் இயங்க முடியாது 10 படுக்கைகளும் இதற்கான ஏற்பாடுகளும் இருக்க வேண்டும். ஆனால் நான்கில் ஒரு பங்கு கூட அங்கே இல்லை. அதுவும் நான்கு மைல் தொலைவில். அந்த இடம் அந்த நகரத்தின் இதயத்தைப் போன்ற நடுப்பகுதி. அதில் ஆக்சிடெண்ட் கேஸ் ஏராளமாக ஏற்படுகிறது. ஆகவே அந்த இடத்தில் ஒரு ஐ.சி. யூனிட் ஏற்படுத்துவதால் அரசுக்குப் பணச் செலவு ஏற்படும் என்பது உண்மைதான். ஆனால் மிக மிகத் தேவையான நடவடிக்கை என்ற முறையில் அரசு கவனிக்குமா? மக்களுடைய கோரிக்கை என்ற அளவில் அதைக் கவனிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளேயே இதுபோன்ற அவசர சிகிச்சைப் பிரிவை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அது எந்த அரசாலும் செயல்படுத்த முடியாத ஒன்றாகத்தான் இருக்கும்.

9-45 மணி

ஆகவேதான், மாவட்ட மருத்துவமனை இருக்கின்ற அதே ஊரிலே மற்றொரு ஐ.சி. யூனிட்டும் கேட்பது எந்த அளவிற்கு நியாயமானது என்பதை உறுப்பினரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் அந்த மருத்துவமனையிலேயே இரண்டு உடனடியாகச் செல்லக் கூடிய ஊர்திகளும் கொடுக்கப்பட்டிருக் கின்றன. ஆம்புலன்ஸ் வசதிகளும் இருக்கின்றன. ஆகவே, மாவட்ட மருத்துவமனையினுடைய வசதிகளை அவர்கள் பயன் படுத்திக் கொள்ளவேண்டுமே தவிர, நான்கு கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிற நகர மருத்துவமனைக்கும் இதைக் கேட்பது சரியாக இருக்காது என்றே கருதுகிறேன்.

## குடி தண்ணீர் வழங்கும் திட்டம்

*3832—திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, அபிராமம் ஆகிய இரண்டு பேரூராட்சிகளுக்கும் உலக வங்கித்திட்டத்தின் மூலம் குடி தண்ணீர் வழங்கும் திட்டம் முடிவு பெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கமுதி-அபிராமம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் தேவையான குடிநீர் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மூன்று ஆழ்குழாய்க் கிணறுகளிலிருந்தும் மற்றும் புதிதாக அமைக்கப்படவிருக்கும் நான்கு ஆழ்குழாய்க் கிணறுகளிலிருந்தும் விநியோகிக்கப்படவுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நான்கு ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கப்படவிருப்பதில் அங்கே தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. பொது மக்கள் அதற்கான எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்றார்கள். எனினும் அங்கேயிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் வருவாய் அதிகாரிகள் ஆகியோருடைய ஒத்துழைப்போடு பொதுமக்களுடன் பேசி இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கின்றது. ள

தஞ்சை ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனை.

*7063—திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் பணியாற்றும் ஏழு பணியாளர்களுக்கு 7 மாத காலமாக ஊதியம் வழங்கப்படவில்லை என்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): இப்பொருள் பற்றி அரசு ஆணை மற்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கோ. வீரையன் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் பணியாற்றிய ஏழு பணியாளர்களுக்கு, அவர்கள் நியமிக்கப்பட்டதற்கு பிறகு, உரிய ஆணைகள் வழங்கப்படாததனாலே ஏழு மாதம் அவர்களுக்கு ஊதியம் கிடைக்காமலே இருந்தது. இந்தக் கேள்வி எழுப்பப்பட்டு



ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. இப்பொழுது அந்த ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆணை அவர்கள் நியமிக்கப்பட்ட காலத்திலிருந்து வழங்கப்பட்டு அந்தக் காலத்திலேயிருந்து அவர்களுக்கு நிலுவையில் இருந்த ஊதிய பாக்கிகளும் வழங்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இவர்களெல்லாம் 9-4-1988-லேயே சில சலுகைகள் கொடுக்கப்பட்டு நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். 20-2-1990-லேயிருந்து அந்தப் பழைய ஆணைக்கு உயிரூட்டி அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டிருக் கிறது. அந்த ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து அவர் களுடைய பணிகள் வரைமுறை செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஊதியம் வழங்கப்படு வதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே அவர்கள் பணியாற்றிய காலத்திற்குள்ள ஊதியத்தைக் கொடுக்க அரசு கருணையோடு பரிசீலித்து கொடுப்பதற்கு முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இதை அரசு கருத்திற் கொள்ளும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையிலே பிரசவ வார்டில் பல இலட்ச ரூபாய் செலவிலே வாங்கப்பட்ட சோனோகிராம் என்று சொல்லுகின்ற கருவி, ஏ.சி. செய்யப்படாத அறையில்— ஏ. சி. செய்யப்பட்ட அறை அங்கு இல்லாத காரணத்தினாலே— பயனற்று இருப்பது அமைச்சருடைய கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஊழியர்களைப்பற்றிய கேள்வி. இந்த உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிற காரணத்தினால் உடனடியாக இதுபற்றி விசாரித்து அவருக்குப் பதிலைச் சொல்கிறேன்.

[1990 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 4952 மற்றும் 5645 மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கத் தள்ளி வைக்கப் பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

வால்பாறைத் தொகுதியில் சோலையாறு அணையருகில் லாரி விபத்துக்குள்ளானதால் உயிரிழந்தோர் மற்றும் காயமுற்றோருக்கு நிவாரணம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திருமதி பி. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையை அடுத்துள்ள சோலையார் அணை அருகில் கடந்த மாதம் 27–3–1990 ஆம் தேதியன்று அதிகாலை ஒரு லாரி விபத்திற்குள்ளாகி, விபத்தில் அதேயிடத்தில் பத்து பேர் இறந்தும், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தும் உள்ளனர். அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வேலையில் நிரந்தரம் இல்லாமல் தற்காலிகமாக வேலை செய்கின்ற அந்தத் தொழிலாளர்களின் நிலை கருதி மாண்புமிகு முதல்வரவர்கள் நிதியிலிருந்தும் அந்தத் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தவர்களிடமிருந்தும் மாண்புமிகு முதல்வரவர்கள் அந்த இறந்த குடும்பங்களுக்கு 20,000 ரூபாய் நிதியினையும் அந்தக் குடும்பத்தில், மேலும் அந்த லாரியில் பயணம் செய்தவர்களில் காயமுற்றவர்களுக்குத் தலா இரண்டாயிரம் ரூபாயும் நிவாரண நிதியாகத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, வால்பாறை நகரில் அடிக்கடி இப்படி விபத்துக்கள் நடக்கின்றன. அந்த விபத்துக்கள் நடப்பதற்கு அங்கு சாலைப் பராமரிப்பு சரியான முறையில் இல்லாத காரணத்தினால் அடிக்கடி இப்படிப்பட்ட விபத்துக்குள்ளாகி இறக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது.

9-50 மணி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வால்பாறை தொகுதியை மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்து, போக்குவரத்து மலைப் பாதைகளை விரைவில் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 11]

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதியில் சி. டபிள்யூ. எஸ். இண்டியா லிமிடெட் கம்பெனிக்குச் சொந்தமான சேக்கல்முடி லோயர் டிவிஷன் எஸ்டேட் என்ற ஒரு தனியார் டீ எஸ்டேட் இயங்கி வருகிறது. அந்த எஸ்டேட்டில் சுமார் 800 நிரந்தரத் தொழிலாளர்களும், 200 தற்காலிகத் தொழிலாளர்களும் வேலைசெய்து வருகிறார்கள். பெரும்பாலான தற்காலிகத் தொழிலாளர்கள் இலங்கை அகதிகள் ஆவார்கள். அவர்கள் சடல்காம் அருகில் உள்ள பெரியார் நகர் குடியிருப்பு என்னும் இடத்தில் வாழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு நாளும் இலங்கை அகதிகளான அந்த தற்காலிகத் தொழிலாளர்களை எஸ்டேட் நிர்வாகம் தங்களது லாரியில் பெரியார் நகரிலிருந்து அவர்கள் வேலை செய்யும் இடத்திற்குக் கொண்டு செல்வார்கள். வழக்கம்போல் 27–3–1990 அன்று சிவல்முத்துவின் மகனான முனுசாமி என்பவர் லாரி டி.டி.ஐ. 9305 என்ற வாகனத்தை ஓட்டிக்கொண்டு பெரியார் நகருக்குத் தொழிலாளர்களை ஏற்றிவர காலை 7.00 மணிக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கேயிருந்து 29 ஆண் மற்றும் 70 பெண் தொழிலாளர்களை மேற்படி லாரியில் ஏற்றிக் கொண்டு காலை 7-30 மணிக்கு பெரியார் நகரை விட்டு புறப்பட்டு எஸ்டேட் நோக்கிச் சென்றார், காலை 7-40 மணிக்கு மேற்படி வாகன ஓட்டுநர் முனுசாமி சோலையாறு அணைக்கு அருகில் கொச்சின் ரோடு சந்திப்பு வளைவில் செல்லும்போது மிக அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் லாரியை ஓட்டிச்சென்று வளைவிலே திருப்பியபோது கட்டுப்பாட்டை இழந்து வாகனத்தின் பின்புற வலது சக்கரத்தை ரோட்டின் அருகில் இருந்த பாறை மீது ஏற்றி விட்டார். அவ்வாறு வாகனம் பாறை மீது ஏறியதால் வாகனத்தில் இருந்த அளவிற்கு அதிகமான தொழிலாளர்கள் இடது பக்கம் சாய்ந்ததால் லாரியும் இடது பக்கமாக சாய்ந்து அருகில் உள்ள ஆழமான குழியில் உருண்டது. உருண்டு சென்ற லாரி சுமார் 15 அடி ஆழத்தில் இருந்த தொலைபேசி கம்பத்தில் மோதி, அதற்குப் பிறகுதான் தடைபட்டு நின்றது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல அந்த இடத்திலேயே 10 பேர் மாள நேரிட்டது. காயமுற்றவர்களுக்கு எல்லாம் வால்பாறை, சேக்கல்முடி, கோவை மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இறந்த 10 பேர்—மைனா என்ற கணேசன் 28 வயது, திருமதி ராமாயி 40 வயது; சொக்காயி என்ற பத்மாவதி 36 வயது, கோவிந்தம்மாள் 38 வயது, பாக்கியம் 34 வயது, செல்லத்தாயி 40 வயது, பூவாயி 40 வயது, வெள்ளையம்மாள் 40 வயது, ராஜம்மாள் 44 வயது, வண்ணமலர் 27 வயது. இறந்த இந்த 10 பேர்கள் தவிர 89 பேர்கள் சிறு காயங்கள் அடைந்தார்கள். அவர்களில் நான்கு பேர் மாத்திரம் கோவை மருத்துவமனையில் உள்நோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இறந்த 10 பேர்களுடைய குடும்பத்திற்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக தலா 1,000 ரூபாய் வீதம் மாவட்ட ஆட்சித் தலைவர்

அவர்களால் வழங்கப்பட்டது. இதுதவிர இறந்தவர்கள் பணி புரிந்த சி. டபிள்யூ. எஸ். இண்டியா கம்பெனி லிமிடெட் நிறுவனமும் இறந்தவர்களின் குடும்பத்திற்கு குழு பாதுகாப்பு—குரூப் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் திட்டத்தின் கீழ் தலா சுமார் 10,000 ரூபாய் அளவில் பெற்று வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. எனினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க ஏற்கனவே. முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தந்துள்ள 1,000 ரூபாய் போக இறந்தவர்களின் குடும்பங்களுக்கு மேலும் தலா 4,000 ரூபாய் வீதம் 5,000 ரூபாய் வழங்கப்படும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**சாத்தூரில் சில வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலையொட்டிச் சிலர் உயிரிழந்ததால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் குமரி அனந்தன், சோ அழகர்சாமி, ஜி. பழனிச்சாமி, ரெ. பிச்சைமுத்து, எஸ். டி. உகம்சந்த், கே. ரமணி, கோ. வீரையன், ஆர். சிங்காரம், ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர், எம். அப்துல் லத்தீப் ஆகியோர் ''சாத்தூரில் சில வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலால் சிலர் உயிர் இழந்ததால் அந்தப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களை கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. குமரி அனந்தன்.

மணி 9–55

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இருக்கன்குடி மாரியம்மன் கோயில் திருவிழா மிகப் பிரசித்தி பெற்ற விழா. பதினெட்டுப்பட்டி என்று பல்வேறு கிராமங்களிலே உள்ள மக்கள் மட்டுமல்லாது. அந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் சென்று வழிபடுகின்ற ஒரு பெரிய திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிற இடத்தில், விதை போடப்பட்டு இன்று அது ஒரு விஷவிருட்சமாக மாறி, பலருடைய உயிரைக் குடித்திருப்பது நமது நெஞ்சையெல்லாம் அதிரச் செய்திருக்கிறது. ஆண்டவன் சன்னிதானத்திலே அனைவரும் சமம் என்று சில நாட்களாவது கருத வேண்டும் என்பதற்காக நடைபெறுகிற விழாவிலே இது ஆரம்பமாகி இருக்கிறது. மொட்டை அடித்துக் கொண்டவர்கள் தொப்பிக் கடையிலே போய் தொப்பி வாங்கி தலையைப் பாதுகாப்பதற்கு என்று ஆரம்பித்த இந்தப்



பிரச்சினை தலையைக் கொய்கின்ற அளவிற்குச் சென்றிருக்கிறது. பக்கத்தில் இருக்கிற ஊர்க்காரர்களிடம் சென்று, அந்தப்பணத்தை அதாவது யார் தொப்பியை தலையிலே வாங்கி வைத்துவிட்டு பணம் கொடுக்காமல் போய்விட்டார்களோ, அந்த ஊர்க்காரர்களிடம் சென்று, அந்தப் பணத்தை வசூல் செய்வதற்கு அந்தக் கடைக்காரர் முயன்றிருக்கிறார். எனவே அந்தக் கடைக்காரருக்கும் அந்த ஊரில் இருக்கின்ற சிலருக்கும் மட்டுமே உள்ள பிரச்சினை. அது சிறுக சிறுக வளர்ந்து அந்த ஊருக்கும் இந்த ஊருக்கும் சண்டை என்ற அளவிற்குச் சென்ற பிறகு ஒரு ஜாதிக்கும் இன்னொரு ஜாதிக்கும் சண்டை என்று சொல்கிற அளவிற்கு அது பெருகியிருக்கிறது என்று சொன்னால், நமக்கு எல்லாம் மிகுந்த வேதனையைத் தருகிறது. அதிலே சிறிது கூட சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் வெட்டிக் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். தொழிலாளர்கள், சிறு விறகுக் கடை வைத்திருந்த பெண்மணி—அவர்கள் எல்லாம் வெட்டி கொலைகள் செய்யப்பட்டு, கண்டந்துண்டமாக வீசப்பட்டு கட்டிலோடு சேர்த்து எரிக்கப்பட்டு இருக்கிறாாகள். நான் இங்கே அரசிடம் வினவுவது, 6-ஆம் தேதி தொடங்கி நேற்று முன் தினம் வரை தொடர்ந்து இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிற போது, முதலிலே போலீசார் சென்று, கடைகளுக்கு தீ வைப்பு சில பொருட்கள் சேதம் என்ற அளவிலே அதனை தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். அந்த அளவோடு. அது மேலும் பரவாமல் இருப்பதற்கு இந்தத் தொண்டு நிறுவனங்களிலே பலர் குன்றக்குடி அடிகளார் போன்றவர்கள், அனைத்து மதத்தையும் சேர்ந்தவர்களாக இருக்கின்ற ஒரு குழுவை அமைத்துக் கொண்டு, எது ஜாதிக் கலவரமாக வெடிக்குமோ, எது மதக் கலவரமாக வந்துவிடுமோ, அவைகளை அங்கேயே, அப்போதே, தடுத்து நிறுத்துவதற்குரிய தொண்டு நிறுவனங்களை எல்லாம் வைத்திருக்கிறார்கள். அந்த தொண்டு நிறுவனங்களுடைய உதவியோடு போலீசார் முன்னெச்சரிக்கையாக இருந்து, அதை, அந்த இடத்தை விட்டு கொஞ்சம் கூட பரவாமலும், ஏற்கனவே பரவியஇடத்திலே அமைதியை ஏற்படுத்துவதற்கும் சமாதானக் குழுக்களைப் போடாதிருந்த காரணத்தால்தான் அது இவ்வளவு பெரியதாக வந்துவிட்டது என்று எங்களுக்கு எண்ணத் தோன்றுகிறது.

நேற்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய பதிலுரையை பேசிக்கொண்டிருக்கிற நேரத்திலே நாம் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயத்திலே ஒடுங்கி இருப்பவர்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அங்கே இப்படி ஒரு இடத்திலே துயரம் நடந்துவிட்டதோ என்று தன்னுடைய உள்ளத்திலே எழுந்த வேதனையை இங்கே சுட்டிக் காட்டினார்கள். சிறிது நேரத்திலே எனக்குக்கூட அலுவலகத்திலிருந்து 5 பேர்கள் சாவு என்று செய்தி வந்தது. அந்த நிகழ்ச்சி முடிந்தவுடனே நான் முதலமைச்சர்

அவர்களிடத்திலே சொன்னேன், 5 பேர்கள் செத்துவிட்டார்களாமே என்று. ஆமாம், அங்கே பல செய்திகள் நடந்திருக்கின்றன, நானே வேண்டிய நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டு இருக்கிறேன் என்று சொல்லி, இன்று நான் அதற்கு பதில் சொல்வேன் என்று சொன்னார்.

நான் இங்கே வைக்க விரும்புவது, நமது சமுதாயத்தில்—எல்லோரும் சமமாக வாழவேண்டும் என்று சொல்கிற சமுதாயத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் தொடர்ந்து நடைபெறாமல் இருப்பதற்கு நீங்கள் ஏதாவது ஒரு நிரந்தரமான ஏற்பாட்டைச் செய்வதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கொண்ட கூட்டத்தைக் கூட்டி நீங்கள் பேசலாம். இரண்டாவது உயிரிழந்த குடும்பத்திற்கு நீங்கள் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். பொருட்களை இழந்த குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். உள்ளே புகுந்து இதிலே குளிர் காய்கின்றவர்கள் அல்லது ரத்தம் குடிக்கத் துடிக்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, மற்ற இடங்களில் இது பரவாமல் தடுக்க வேண்டும். அதற்காக, இதைப்பற்றி முழுமையாக விவாதிப்பதற்கு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூரிலே நேற்று நடந்த சம்பவம் மிகப் பயங்கரமான எல்லோருக்கும் கவலை அளிக்கக்கூடிய ஒரு சம்பவமாக இருக்கிறது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் கூறியது மாதிரி ஏற்கெனவே வெள்ளிக்கிழமை 6-ஆம் தேதி இது லேசாகத் தொடங்கி, 2, 3 நாட்களுக்குப் பின்னால், நேற்று ஒரு பெரிய கோஷ்டிச் சண்டையாக உருவெடுத்திருக்கிறது. அதிலே உயிரிழந்தவர்களைப் பற்றிய செய்திகள் எல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கின்றன. நெல்லையிலிருந்து பிழைப்புத் தேடி தஞ்சம் புகுந்து பிழைக்க வந்த ஒருவர் இறந்திருக்கிறார். அதே மாதிரி கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து பிழைப்பதற்காகச் சாத்தூருக்கு வந்தவர்களிலே ஒருவர் உயிரிழந்திருக்கிறார். விறகுக் கடை வைத்திருக்கக்கூடிய அந்தப் பெண் இறந்திருக்கிறார். இப்படி பிழைப்புத் தேடி வந்தவர்கள் எல்லாம் இந்த கோஷ்டிச் சண்டையிலே, இந்தக் கலவரத்திலே இறந்திருக்கிறார்கள். ஆகவே, இதுசம்பந்தமாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், சிறுசிறு தனிப்பட்ட விவகாரமாகத் தோன்றுவது, மிகப் பெரிய வகுப்புக் கலவரமாக அல்லது ஒரு மோதலாக உருவெடுக்கக்கூடிய ஒரு நிலைக்கு வரக்கூடிய ஒரு அபாயகரமான நிலை சமீபகாலத்திலே தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. ஏற்கெனவே இதுசம்பந்



மாக மண்ணடக்காட்டிலே நடந்த அந்தக் கலவரத்திலே அப்போது ஒரு கமிஷன் போட்டு, அதுசம்பந்தமாக அந்தக் கமிஷனே சில பரிந்துரைகளை அரசாங்கத்திற்குச் செய்திருப்பதாக நான் அறிகிறேன்.

10-00 மணி

அது சம்பந்தமாக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் அதற்குப் பின்னாலே எடுத்ததாகவும் தெரியவில்லை. ஆகவே இந்த வகுப்பு துவேஷங்கள் இந்த மாதிரி மோதல்கள் வருவதற்கு அப்போது நடக்கிற ஒரு சம்பவம் மட்டும் காரணமாக இருக்காமல், தொடர்ந்து அதற்கு முன்னாலே நடந்த பல்வேறு சம்பவங்களையும் அதற்கு ஒரு ஆதாரமாக வைத்து, அந்த மாதிரி நிலைகளை எல்லாம் சேர்த்து வைத்து இதில் மோதிக்கொள்கிறார்கள். ஆகவே இதிலே காவல்துறையானது உடனடியாக இப்படி சம்பவம் நடந்த உடனே உரியவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுத்து, அதை தடுத்து நிறுத்தியிருக்கக்கூடிய ஏற்பாடு செய்வதிலே சில சுணக்கங்கள், அதிலே சில விருப்பு வெறுப்புக்கள் எல்லாம் இருக்குமோ என்று சொல்லக்கூடிய நிலை இருக்குமென்று நான் கருதினேன். அதேபோல் இந்தச் சம்பவம் கூட வெள்ளிக்கிழமை, நடந்த அன்றேகூட, அப்போதே மோதல் நடைபெற்ற வேளையில், குறிப்பிட்டவர்கள் சரியான, கடுமையான நடவடிக்கை எடுத்து, இரு பிரிவைச் சார்ந்தவர்கள் அல்லது சம்பந்தப்பட்டவர்கள் மீது உடனடியாக தீவிரமான நடவடிக்கை எடுத்திருந்தால், இவ்வளவாக பரவியிருக்காது என்று நான் நினைக்கிறேன். இது 3, 4 நாட்களுக்குப் பின்னால் பரவியிருக்கிறது. இதற்கு மேலாக இது மேலும் இந்த மாதிரி ஜாதீய, குரோதமான எண்ணங்கள் வளராமல் இருப்பதற்கும் இதை வளர்க்கக் கூடிய சில ஏற்பாடுகள் நாட்டிலே நடப்பதைத் தடுப்பதற்கும் இப்போது ஜாதீய சங்கங்கள் மற்ற சங்கங்கள் இப்படியெல்லாம் வேறு ஒரு வகுப்பின்மீது குரோதம் ஏற்படக்கூடிய காரியங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும். அது சம்பந்தமாக கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களையொட்டி போடப்பட்ட கமிஷன் மூலமாக, நீதிபதிகளால் சொல்லப்பட்ட தீர்ப்புகளின் அடிப்படையில் யோசனைகள் என்ன என்பதைப் பற்றி எல்லாம் ஆராய்ந்து அந்த மாதிரி சம்பவங்கள் நாட்டில் நடக்காமல், எல்லோரும் ஒற்றுமையாக இருக்கக்கூடிய காரியத்தை அரசியல் கட்சிகள் அதனுடைய பங்காக என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி யோசிப்பதற்கும் சகல கட்சிகளையும் கூட்டி, முதலமைச்சர் அவர்கள் ஆலோசிக்கலாம். மேலும் இந்தமாதிரி சம்பவங்கள் பரவாமல் இருப்பதற்கு எனக்குத் தெரிந்த யோசனை, காவல்துறையினர் விருப்பு வெறுப்பு இல்லாமல் உதவவேண்டும் யாராவது ஒரு பெட்டிஷன் கொடுத்தால், ஒரு புகாரைச் செய்தால் உடனடியாக இப்

போது நடவடிக்கை எடுப்பதில்லை என்று சொல்கிறார்கள். ஏனென்றால் அதிலே பல்வேறு விதமான தலையீடுகள், சமுதாயத்திலே செல்வாக்கு உள்ளவர்கள் தலையீடுகள், அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் தலையீடுகள் ஜாதியிலே செல்வாக்கு உள்ளவர்கள் தலையீடுகள், இப்படியெல்லாம் தலையீடுகள் இருப்பதன் காரணமாக சாதாரண ஒரு ஆள் பெட்டிஷன் கொடுத்தால் காவல்துறையினர் சீராக, வேகமாக, துரிதமாக நடவடிக்கை எடுப்பதில்லை. ஆகவே, இப்படி ஒரு மோசமான நிலைமை நாட்டில் ஏற்படுகிறது. இந்த மாதிரி நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி எல்லாம் தீவிரமாக விவாதிக்க வேண்டிய காரணத்திற்காக அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் நகரத்தில் நடைபெற்றிருக்கின்ற இந்த துயரமான சம்பவத்தை எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலே காவல்துறையைச் சார்ந்திருக்கின்ற அதிகாரிகளுடைய மெத்தனமான போக்கின் காரணமாகத்தான் அவர்கள் சரியான முறையில் முன்கூட்டியே எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்காத காரணத்தால் இன்றைக்கு 7 உயிர்கள் அங்கே மாண்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் அந்தத் திருவிழா நடைபெறுகின்ற காலத்திலே காவல்துறையானது முன்பு எல்லாம் நல்ல முறையில் செயல்பட்டிருக்கிறது என்பதை நான் அறிகிறேன். ஆனால் 6 ஆம் தேதி ஒரு சிறிய சண்டையாக ஆரம்பிக்கப்பட்டு, அதற்கு பிறகு நேற்றைய முன்தினம் காவல்துறையானது அங்கே பாதுகாப்பு நடவடிக்கை எடுத்திருக்கின்ற அந்தச் சூழ்நிலையில் அவர்கள் அந்தப் பகுதியில் பாதுகாப்பாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் 50 பேரைக் கொண்ட ஒரு கூட்டமானது, ஒரு வன்முறைக் கூட்டம், அங்கேயிருந்து 4 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்ற சாத்தூர் நகரத்திற்குச் சென்று, ஒரு வன்முறைச் செயலைச் செய்கிறார்கள் என்று சொன்னால், காவல்துறையானது எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்காத நிலைமையைத்தான் அது காட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இந்த மாரியம்மன் கோவிலைச் சுற்றியுள்ள பகுதியிலே இன்றைக்கு கள்ளச்சாராயம் அதிகமாக விற்பனையாகின்றது. அந்தக் கள்ளச் சாராயம் அதிகமாக விற்பதன் காரணமாக அவர்களுக்குள்ளே ஒரு கோஷ்டி சண்டையின் காரணமாக இந்தக் கலவரம் அதிகமாகியிருக்கின்றது என்று எனக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்தக் கோவிலைச் சுற்றி இருபுறமும் ஆறு செல்





கிறது. ஆற்றுப் பகுதியில் கள்ளச் சாராயம் இருக்கிறது. மக்களுக்கு செல்வாக்கு உள்ளவர்கள், பண பலத்திலேயும் சரி, அரசியலிலேயும் சரி, செல்வாக்கு உள்ளவர்கள் தலையீட்டின் காரணமாகத்தான் அந்தக் கள்ளச் சாராயம் விற்கப்படுகின்றது. அவர்களுக்குள்ளே இருந்த கோஷ்டி சண்டையானது, மோதலாக உருவாகி, 7 பேர் மாண்டு, பலருடைய உடைமைகள் நாசமாகியிருக்கின்றன. பலர் இன்றைக்கு காயம் அடைந்திருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது என்று சொன்னால் காவல்துறையானது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நாம் விவாதிக்க வேண்டிய நிலையில் இருந்துகொண்டு வருகிறோம்.

10-05 மணி

இதேபோன்று பல்வேறு சம்பவங்கள் தமிழகத்திலே அவ்வப்போது நிகழ்ந்துக்கொண்டு வருகின்றன. அமைதிப் பூங்காவாக விளங்கக்கூடிய தமிழகத்திலே இதுபோன்று கோஷ்டி சண்டைகள், ஜாதி சண்டைகள், ஒருவருக்கொருவர் வியாபார போட்டியின் காரணமாக, கள்ளச் சாராய வியாபார போட்டியின் காரணமாக தமிழகத்தினுடைய அமைதி கெடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் இந்த அவையை ஒத்தி வைத்து — இது மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. தமிழகத்தை கலவர நிலைக்கு கொண்டு செல்லுகிற நிலைமை இருப்பதன் காரணமாக இந்த அவையை ஒத்தி வைத்து நாமெல்லாம் இது பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. பழனிவேல் அவர்களும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் சார்பில் திரு. கே. ரமணி.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, சாத்தூர் நகரத்திற்கு அருகாமையில் நடந்துள்ள இந்த பயங்கரமான நிகழ்ச்சி நம் எல்லோரையும் மிகுந்த வேதனையில் ஆழ்த்தியிருக்கிறது. இரண்டு சமூகத்தார்களும்சகோதரர்களாக இருந்து வாழவேண்டியவர்களுக்கு மத்தியில் இப்படிப்பட்ட கொடுமையான நடவடிக்கைகள் நடந்து 7 பேர்கள் ; ஒரு பெண் உள்பட 7 பேர்களுடைய உயிர் போயிருக்கிறது. அந்தக் பகுதியில் நடைபெற்ற ஒரு கோவில் திருவிழாவில் அதனுடைய ஆரம்பம் என்று சொல்லப்படுகிறது. அந்த இடத்திலே வியாபாரம் செய்யக்கூடியவர்களுடைய கடைகளிலே திடீரென்று சிலர் புகுந்து சில பொருள்களை எடுத்துக்கொண்டு பணம் கொடுக்காமல் போய்விட்டதிலிருந்து இது முளைத்ததாகவும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே சமூக விரோதிகள் இதில் உட்புகுந்து இதைக் கலவரங்களாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கிறார்கள் என்று பல இடத்திலே நமக்கு அனுபவம் ஏற்பட்டு வருகிறது. இது பின்னால் வகுப்பு கலவரங்களாக வளர்ந்து கொண்டே போவ

தற்கும் நடவடிக்கை அதன்மூலம் எடுக்கப்படுகிறது. அப்படிப் பட்ட சூழ்நிலை அந்தப் பகுதியிலே ஏற்பட்டதா என்பதை மிகுந்த கவனத்தோடு நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. காரணம் இந்த இரண்டு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் ஏழை மக்கள். எங்கோ வேலை செய்து பிழைக்கக்கூடிய சாதாரண மக்கள், தொழிலாள மக்கள், உழைப்பாளி மக்கள், விவசாய மக்கள் இப்படிப்பட்ட வர்கள். இவர்களுக்கு மத்தியிலே ஒரு பரம்பரை பகைமை என்பது ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. அந்த நிலைமை யில் அது உருவாக்கப்பட்டிருக்கிறது. இரண்டு சமூகத் தார்களுக்கும் இடையே சண்டை என்ற நிலைமையை ஒரு உணர்வை தூண்டி விட்டு இது தகராறாக வளர்ந்திருக்கிறது. அந்த இடத்திலே தான் காவல் துறை தன்னுடைய திறமையை முழுவதும் காட்ட வேண்டிய இடம்.

இந்தக் கோவில் தகராறு ஏற்பட்டு 2, 3 நாட்களுக்குப் பிறகு தான் அந்த சாத்தூர் நகரத்திற்குள்ளே இந்த விஷயம் பரவி இது பெரிய கலவரங்களில் போய் முடிந்து இருக்கிறது. அந்த கோவில் விழாவிற்கு போலீஸ் பந்தோபஸ்து ஏற்கெனவே செய் திருப்பார்கள். அதனால் இது நடந்த உடனேயே அந்த நிகழ்ச்சி யின் மீது தகுந்த நடவடிக்கை எடுத்திருந்தால் — காரணம் சமூக விரோதிகள் சிலர் காவல் துறையினைச் சேர்ந்தவர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டிருப்பார்கள். அப்படி பல இடத்தில் இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அப்படி இல்லை என்று சொன்னால் அவர்களுக்கே அந்த தைரியம் வராது. ஆகவே, அன்றைக்கு தகுந்த நடவடிக்கை அங்கேயே ஆரம்பித் திருந்தால் இந்தப் பிரச்சினை பரவி இருக்குமா என்று பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

விறகு கடைவைத்து பிழைத்துக் கொண்டிருந்த ஒரு பெண் இரவிலே கொலை செய்யப்பட்டது மாத்திரம் அல்லாமல் அந்த விறகு கடையும் எரிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட நிலைமை. ஆகவே அந்த நிலைமையிலே சமுதாயத்தில் இருக்கும்படியான மக்கள் மத்தியிலே வகுப்பு கலவரங்களையும் சாதி கலவரங்களையும் வளர்க்கக் கூடிய முறையிலேயேயும் சமூக விரோதிகளாலும் அல்லது ஒன்றுக்கொன்று போட்டா போட்டியான தகராறு சண்டைகளை வளர்க்கும்படியாகவும்தான் இது இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாவதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். இதற்கு சமாதான கமிட்டி என்று ஒன்றை மாவட்டம் தோறும் உருவாக்கப்பட வேண்டியிருக்கிறது. தற்போது கோவையிலே கூட நாங்கள் இந்த வகுப்பு கலவரங்கள் பரவாமல் தடுக்க ஒரு நிரந்தர கமிட்டியை மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே எல்லோரும் சேர்ந்து நடத்திக் கொண்டு வருகிறோம். அதிலே பல சந்தர்ப்பங்களிலே அந்தக் கலவரங்கள் கிளம்புகிற இடத்தி



திற்கே அந்தச் செய்தி கேட்ட உடனேயே இந்தக் கமிட்டி சென்று பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதனால் எல்லாச் சண்டைகளும் நின்றுபோய் விடுகின்றன என்று அர்த்தம் அல்ல. ஆனால் சமாளிக்கப்படக்கூடிய சில சந்தர்ப்பங்கள் நமக்கு கிடைக்கிறது.

அது போன்ற சமாதானக் கமிட்டிகளை ஏற்படுத்த வேண்டும். அது போன்று கீழ்மட்டங்களிலேயும் இதுபோன்ற கமிட்டிகள் தேவைப்படும். அதிலே கட்சி பேதம் இன்றி, மத வித்தியாசமின்றி பொது ஜன நன்மைக்காக, சகோதர ஒற்றுமைக் காக இருக்கக்கூடிய அத்தனை பேர்களையும் அதில் இணைத்துக் கொண்டுபோய் அப்படிப்பட்ட முறையிலே இந்தமாதிரி கொடுமை களுக்கு முடிவுகட்ட வேண்டும். காவல் துறை மிகவும் உஷாராக இருந்து ஒரு சிறு நெருப்பு பொறி விழுந்துவிட்டால் அது பெரிய காட்டுத் தீயாக மாறி பலருடைய உயிரைப் பறித்துக்கொள்ளக் கூடிய ஒரு நிலைமையை சமாளிக்க வேண்டும் என்ற உணர்வோடு அத்தனை மக்களும் அந்த காவல் துறையும் இதிலே பங்கெடுக்க வேண்டியிருக்கிறது. இவ்வளவு விஷயங்களையும் நாம் கொஞ்சம் பரிசீலனை செய்தால் சமுதாய சீர்கேடுகள் வகுப்பு மாச்சரியங்கள் அல்லது ஜாதி சண்டைகளாக சிறு விஷயங்களிலிருந்து உருவாகி வளர்வதையும் பல உயிர்ச் சேதங்களையும் தடுப்பதற்கு நாம் வழிமுறைகளை கண்டு அறிய முடியும். அதற்காக இவை களைப் பரிசீலிப்பதற்காக இன்றைக்கு நடக்கக்கூடிய அவையினு டைய இதர நடவடிக்கைகளை நிறுத்தி இதை விவாதிக்க அனுமதிக்கவேண்டுமென்று கோருகிறேன்.

10–10 மணி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கடந்த 6-ஆம் தேதி சாத்தூருக்குப் பக்கத்திலுள்ள இருக்கன்குடி கிராமத்தில் நடந்த மாரியம்மன் கோயில் திருவிழாவிலே — எப்போதும் மாரியம்மன் கோயில், இதுமாதிரி கிராம தேவதைகள் உள்ள திருவிழாக்களிலே மொட்டை அடிக்கிறது என்பது ஒரு வழக்கம். வேண்டுதலுக்காக முடியைக் கொடுப்பது வழக்கம். அது நம் நாட்டிலே இருக்கிறது. இதுமாதிரி மொட்டையடிக்கும் போது, சில பேருக்கு வெட்கமாக இருக்கிறதோ, என்னவோ தெரியவில்லை; என்னடா, நம் தலை மொட்டையாகப் போய்விட்டதே, இத்தனை நாளாக சீவிக்கொண்டிருந்தோம் என்று சொல்லி, தொப்பி வாங்கு வதற்குப் போகிறார்கள். கலவரத்திற்குக் காரணம் 20 ரூபாய்தான். பெரிய கலவரத்திற்கு 1 கோடி, அரைக் கோடி என்றால் அதற்காகச் சண்டை போடலாம் என்று சொல்லலாம். பைசா பிரயோசனம் இல்லை. ஒரு தொப்பியினுடைய விலை 20 ரூபாய். 10

தெர்ப்பி வாங்கி இருக்கிறான். அதிலே கலவரம் மூண்டிருக்கிறது. 20 தொப்பியினுடைய கிரயத்திற்கு தகராறு பண்ணி, மோசமான முறையிலே கொடுத்துவிட்டான். அதற்குமேல் இந்தக் கலவரம் இரண்டு கிராமத்திற்குள்ளே, ஜாதி கலவரமாக மூண்டிருக்கிறதோ என்று தெரியவில்லை, கோஷ்டிக் கலவரம் இதிலே முதலிலே வந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று தெரிகிறது என்றால், சமூக விரோதிகள், இது மாதிரி உத்சவங்கள், கலவரங்கள், தகராறுகள் எங்கெங்கே நடக்கிறதோ, அங்கே போய் புகுந்து கொள்கிறார்கள். அவர்கள் உள்ளே புகுந்து கொண்டு சண்டையை வளர்த்துக் கொண்டு, 7 பேர்களுடைய உயிர்— ஒரு பெண்ணினுடைய இரண்டு கால்களையும் வெட்டியிருக்கிறார்கள். உயிர் போனவுடனே, சீமெண்ணெயை ஊற்றி அதன் மேலே நெருப்பு வைத்திருக்கிறான். நாம் சில பேர் என்ன சொல்கிறோம்? போலீஸ் தவறுதல் என்று. போலீசிற்கு எத்தனை கண் இருக்கும் 8 கண்ணா? முதுகிலேயும் கண் இருக்கிறதா என்ன ? அவனுக்கும் முகத்திலேதான் கண் இருக்கும். பின்னாலே கண் இருக்க முடியாது. ஒரு கோஷ்டி போகும்போது போலீசையே அவர்கள் அடித்திருக்கிறார்கள், போலீஸ்காரர்களும் அடிபட்டு ஆஸ்பத்திரியிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அந்த இறந்தவர்கள் தவிர, பல பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். இதை இப்படியே வளரவிடாமல்—ஏனென்றால், நாம் ஜாதியைப் பற்றி விரிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஜாதியை ஒற்றுமை பண்ணுகிற நாள் என்றைக்கு வரப் போகிறதோ தெரியவில்லை. நாம் ஜாதியை விரிவுபடுத்திக் கொண்டே போகிறோம். அதனால்தானோ என்னவோ, ஜாதிக் கலவரமும் விரிவடைந்து கொண்டே போகிறது. அதற்கு பல பேருடைய உயிர், அப்பாவிகள் உயிர், —கமாண்டர்-இன்-சீப் போகமாட்டான் பின்னால் போகிறவன்தான் அடிபடுவான். இது மாதிரி பலதரப்பட்ட இன்சன்ட்— ஒரு நாடக் கோஷ்டி. அது உள்ளே வந்திருந்தது என்றால் யாராவும் அடிபட்டு இருப்பார்கள். வேன் டிரைவர் மட்டும் அகப்பட்டு இருக்கிறான். அவனைக் கொலை பண்ணிவிட்டார்கள். எனவே, இந்த மாதிரி கோஷ்டிக் கலவரம்பற்றி சர்க்கார் நன்றாக ஆராய்ந்து, காரணம் என்ன, முடிவு என்ன என்பதை, இந்த சபையினுடைய அலுவல்களை ஒத்தி வைத்து சாங்கோபாங்கமாக விவாதிக்கக் கோருகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூரில் நடந்த நிகழ்ச்சி நம் அனைவரையும் நெகிழ வைத்து இருக்கிறது. துர்ப்பாக்கியமான இந்த நிகழ்ச்சி நம்மை மீண்டும் ஒரு முறை சிந்தித்துச் செயல்பட வைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கலவரம் நடந்தது. கலவரத்தில் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள்.





சில பேர் இறந்து போனார்கள் என்றால் எனவே, அதனால் கலவரங்களிலே நடக்கின்ற ஒன்று அது சாதாரணமாகக் பிரச்சினையை அணுகலாம். என்ற அளவிற்கு நாம் அந்தப் நாம் நுணுக்கமாக ஆய்வு ஆனால் சாத்தூரில் நடந்ததை வெட்டியிருக்கிறார்கள். செய்தால், தூங்கிக்கொண்டிருப்பவரை விஷயம். தன்னைத் அதுதான் இதிலே மிகவும் கவலைக்குரிய வெட்டினோம். இறந்து தாக்க வந்தார்கள். பாதுகாப்புக்காக சொல்லலாம். ஆனால் விட்டார் என்ற ஒரு காரணத்தையாவது வெளியூர்களிலேயிருந்து வந்தவர் தூங்கிக் கொண்டிருந்தவர்கள், கொண்டிருக்கிற டிரைவர், கள், ஒரு வேனிலே படுத்துக் கொலை செய்திருக்கிறார்கள். அந்த டிரைவரைக் குத்திக் படுத்துக் கொண்டிருந்த ஒரு தாய், விறகுக் கடைக்கு முன்னே பெண்ணைக் கொலை செய்வதற்கு ஒரு பெண்மணி, அந்தப் வெட்டியிருக்கிறார்கள். ஆகவே முன்பு, இரண்டு கால்களையும் எவ்வளவு பெரிய துவேஷ இதையெல்லாம் பார்க்கும்போது, வேரூன்றியிருக்கிறது உணர்வுகள் நம்முடைய மக்களிடத்திலே மிகவும் வேதனையாக என்று நினைத்துப் பார்க்கும்போது விழா நடந்தது. இருக்கின்றது. அதுவும் இருக்கன்குடியில் அந்தத் தகராறு அதிலே சில தகராறுகள் ஏற்பட்டன. போலீஸ்காரர் களைத் தீர்த்து வைக்க, கலரத்தை அடக்க அந்த நடவடிக் கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். சில பேர் காயமடைந்தார் கையின்போது போலீஸ்காரர்களும் ஆனால், அதற்குப் கள். அவர்களும் அடிக்கப்பட்டார்கள். இருக்கிற சாத்தூரில் பிறகு 8 கிலோ மீட்டர் தூரத்திலே காரணம் என்ன ? அதுவும் அந்தக் கலவரம் மூளுவதற்கான இன்னார்தான், அவர்களை வெளியூரிலிருந்து வந்தவர்கள் எல்லாம் வெட்டியவர் வெட்டவேண்டும் என்ற உண்மைகள் களுக்கு எப்படித் தெரிந்தது ?

10–15 மணி

எனவே, இது திட்டமிட்ட ஒரு செயலாக, கலவரத்தினுடைய வளாகம் விரியுவேண்டும். அது ஒரு இடத்திலே மட்டும் இருக்கக்கூடாது. இன்னவர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ, அவர்களை இன்னவர்கள் தாக்கவேண்டுமென்ற அளவிற்கு ஆய்வுகள் செய்யப்பட்டு, திட்டங்கள் போடப்பட்டு, இந்தக் கலவரம் நடந்திருப்பதாக நமக்குத் தெரியவருகிறது.

நத்தத்துப்பட்டியிலிருந்து இருக்கன்குடிக்கு களையெடுக்கச் சென்றவர்களைக்கூட தடுத்திருக்கிறார்கள்; யார், எவர் என்றெல்லாம் பார்க்காமல், நத்தத்துப்பட்டிலேயிருந்து இருக்கன் குடிக்குப் போனவர்கள் கலவரத்தில் கலந்துகொண்டார்களா அவர்களும் அந்தக் கலவரத்திற்குக் காரணமானவர்களா, அவர் களில் யாராவது, யாருக்காவது தீங்கிழைத்து இருக்கிறார்களா என்பதையெல்லாம்கூட ஆய்வு செய்து பார்க்காமல் அந்த ஊரிலேயிருந்து வந்த அனைவரையும், களையெடுக்கக்கூடாது

என்று, உங்களையெல்லாம் களையெடுக்கப்போகிறோம்
நீங்கள் என்ன இங்கே வயல்காட்டிலே களையெடுப்பது என்று
சொல்லிக்கொண்டு தாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால்,
இது மிகவும் வேதனைக்குரியது. அதனால்தான், பரவி வருகிற
இந்த துவேஷ எண்ணங்களை நாம் அனைவரும் ஒன்று
சேர்ந்து உட்கார்ந்து தடுத்து நிறுத்தாவிட்டால், இந்த விஷம்
பரவும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான்
எல்லோரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய
தலைமையிலே, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும்
அல்லது அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்ட சமுதாயக்
தலைவர்களாக இருக்கக்கூடியவர்களையும் பலதரப்பட்ட மக்க
ளையும் அவர்கள் அழைத்துப் பேசினார்கள் என்றால்
அவர்களுடைய இந்தக் கூட்டத்திற்கு மதிப்பு உண்டு. அவர்கள்,
இந்த உணர்வுகளுக்கெல்லாம் ஆளாகாதவர்கள். ஜாதி மத
பேதங்களில் எல்லாம் நம்பிக்கை இல்லாதவர்கள் என்ற வகையில்
இந்த ஜாதி துவேஷ உணர்வுகள் மேலோங்குவதைத் தடைப்
படுத்தும். ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கும் என்ற
நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே மாண்புமிகு முத
லமைச்சர் அவர்கள் இப்போதாவது, தங்களின் வாயிலாக,
அவர்களுடைய தலைமையிலே ஒரு சர்வ கட்சிக் கூட்டம்
அல்லது சர்வ சமுதாயக் கூட்டம், அதிலே சமயச் சான்றோர்
களும் கலந்து கொள்கிற வகையில் ஒரு கூட்டத்தைக் கூட்டி
னாலும் பயனுடையதாக இருக்கும் என்பதைத் தங்களுக்கு
எடுத்துச் சொல்லி, இந்தப் பிரச்சினையை மிக நுணுக்கமாக
ஆய்வு செய்ய வேண்டியிருப்பதால் சபை நடவடிக்கைகளை
ஒத்திவைத்து விவாதிக்க அனுமதி வழங்கப்பட தலைவர்
அவர்களே தங்களைக் கேட்டுக் கொண்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒத்திவைத்து, அவையின் நடவடிக்கை
களைத் தள்ளிவைத்து, இந்த ஒரு பிரச்சினை குறித்தே
பேசவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் கட்சி
களின் தலைவர்கள் எடுத்துக் கூறினாலும்கூட, ஒத்திவைத்து
பேசவேண்டிய அளவிற்கு இது பெரும் பிரச்சினை என்பதை
எடுத்துக் காட்டுவதற்காகத்தான் அவர்கள் அப்படி கூறியிருக்
கிறார்கள் என்பதை நான் மிக நன்றாக அறிவேன்.

நேற்றைய தினம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்
தப்பட்டோர், சீர்மரபினர் இவர்களுக்கான மானியக்
கோரிக்கை இங்கே விவாதிக்கப்பட்டு, மன்றத்தினால் ஏற்றுக்
கொள்ளப்பட்டபோது, நான் உரையாற்றிய நேரத்திலே
குறிப்பிட்டேன். நம்முடைய, காங்கிரஸ் கட்சியின் துணைத்
தலைவர் இங்கே சுட்டிக்காட்டியதைப் போன்று பிற்படுத்தப்
பட்ட மக்களுக்கும் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட
மக்களுக்கும், சீர்மரபினருக்கும் அவர்களுக்கு எதிராக அல்லது





ஆதிதிராவிட மக்களுக்கு எதிராக இவர்கள் அல்லது இவர்
களுக்கு எதிராக அவர்கள் என்ற நிலையில் இரு சாராரும்
இவ்வாறு மோதிக்கொள்கிற நிகழ்ச்சிகள் தொடர்ந்து இல்லா
விடினும்கூட, எல்லா இடங்களிலும் இல்லாவிடினும்கூட, அங்
கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும்போது அமைதிப்
பூங்காவாக இருக்கின்ற தமிழகத்தில், அப்படியே இருக்கவேண்டு
மென்று நாமெல்லாம் விரும்புகின்ற தமிழகத்தில் நடைபெறு
கிறபோது நமக்கு பெரும் கலக்கத்தை அவைகள் உருவாக்கு
கின்றன.

10–20 மணி

திடீரென்று இன்றைக்கு, இதுபோன்ற நிகழ்ச்சி தமிழ்
நாட்டிலே இந்த ஆண்டு ஏற்பட்டு விட்டதல்ல. 3, 4
மாதங்களுக்கு மேலாக நடைபெற்ற முதுகுளத்தூர் கலவர
மானாலும், 40 பேரை உயிரோடு வைத்து கொளுத்திய
வெண்மணி விபரீத நிகழ்ச்சியானாலும், அதற்குப்பிறகு விழுப்
புரத்திலே நடைபெற்ற வகுப்புக் கலவரமானாலும், அதன்
பின்னரும் கூட, கடந்த மாதங்களில் நடைபெற்ற பல்வேறு
சாதிக் கலவரங்களானாலும், இந்தியாவிலே மற்ற மாநிலங்
களில் நடைபெறுகின்ற அளவுக்குக் கட்டுப்படுத்த முடியாத
அளவுக்குப் போகாவிட்டாலும்கூட, வெண்மையாக இருக்கின்ற
துணியிலே ஒரு கருப்புப் புள்ளி விழுந்தால் அது பளிச்சென்று
தெரிவதைப் போல—கருப்பாக இருக்கிற துணியில் கருப்புப்
புள்ளி விழுந்தால் தெரிவதில்லை—வெண்மையாக இருக்கிற
துணியிலே கருப்புப் புள்ளி விழுந்தால் அது பளிச்சென்று
தெரிவதைப் போல அமைதியாக இருக்கின்ற தமிழகத்திலே
இதுபோன்ற சம்பவங்கள் நடக்கின்றபோது, நாம் துடித்துப்
போகிறோம். எனவேதான், தொடர்ந்து ஒரு நிலையான
அமைதியைத் தமிழகத்தில் ஏற்படுத்த, சிறு அசம்பாவிதம்
கூட சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் வகுப்புக்
கலவரங்கள் நடைபெறக் கூடாது என்கின்ற நல்லெண்ணத்
தோடு, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்களும்,
மார்க்சிஸ்ட் கட்சியின் தலைவர் அவர்களும், இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் அவர்களும், அருமை
நண்பர் லத்தீப் அவர்களும், அருமை நண்பர் உகம்சந்த்
அவர்களும், தீட்சிதர் அவர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்
கிறார்கள் ஒரு அமைதிக் குழு அமைக்க வேண்டுமென்று.
எனக்கு மிகுந்த உடன்பாடான கருத்து அது என்பதை
நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாநில அளவிலே ஒரு அமைதிக் குழு—நண்பர் லத்தீப்
அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போலவும், நம்முடைய
காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் சுட்டிக்
காட்டியதைப் போலவும், முதலமைச்சர் தலைமையிலேயே

இங்கே அமைக்கப்படும் என்பதையும், அந்தக் குழுவிலே மாநில அளவில் யார் யார் இடம் பெறவேண்டும், கட்சிக்கு அப்பாற்பட்டு இருக்கின்ற மதத் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் யார் யார் அதிலே இடம் பெற்றால் மாநில அளவில் பொதுவான ஒரு அமைதியை ஏற்படுத்த முடியும் என்பதையும் சிந்திப்பதற்கு, முதலில் நமது சட்டமன்றத்திலே யுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசி அவர்கள் கூறுகின்ற கருத்துக்களை ஏற்று அவர்களையெல்லாம் மாநில அளவிலான அமைதிக் குழுவிலே இடம் பெறச் செய்ய நான் தயாராக இருக்கின்றேன். அந்தக் குழு அமைந்த பிறகு, ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்ற பிரச்சினைகள் எழாமல் முன்கூட்டியே தடுக்கவும், அப்படி எழுந்தால் அதைக் கட்டுப்படுத்தவும், அமைதிக் குழுக்களை ஆங்காங்கு அமைக்கவும், நீங்கள் இங்கே தந்துள்ள அறிவுரைகளை நான் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

சாத்தூரில் நடைபெற்ற கலவரத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுப் பேசியவர்கள் எல்லாரும், லத்தீப் அவர்களைத் தவிர, தீட்சிதர் அவர்களைத் தவிர என்று கருதுகிறேன்— மற்றவர்கள் எல்லாரும் காவல்துறையின் மந்தப் போக்கு, அலட்சியப் போக்கு ஒரு காரணம் என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். எதிர்க்கட்சியில் இருந்து பேசுகின்றபோது அது ஒரு இலக்கணம்தான். நானே எதிர்க்கட்சியிலேயிருந்து பேசிய போது அப்படித்தான் பேசியிருக்கிறேன். ஆனால் இப்படிச் சொல்லிவிட்டார்களே என்று வருத்தப்படவில்லை. அதற்காக காவல்துறைக்கு வக்காலத்து வாங்கவுமில்லை. அவர்கள் கூறியது அனைத்துமே தவறு என்று நான் குறிப்பிடமாட்டேன். ஆங்காங்கு சிலபல தவறுகள் அந்தத் துறையிலும் இருக்கின்றன என்பதை உங்களைப் போலவே நானும் அறிந்தவன் என்ற காரணத்தால் அதை முழுமையாக, முற்றாக நான் மறுக்கவில்லை. இருந்தாலும்கூட, இந்தக் கலவர நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் காவல்துறை நண்பர்கள் நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறார்கள் என்ற தகவல் தான் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதனால்தான், அவ்வப்போது, எழுகின்ற பிரச்சினைகள்—போடியில் எழுந்தபோதும், இப்போது சாத்தூரில் எழுந்தபோதும், உடனடியாக அவைகளைக் கட்டுப்படுத்துகின்ற நிலைமைகள் உருவாகியிருக்கின்றன.

குறிப்பிட்ட இந்தப் பிரச்சினை 6-4-1990 அன்று காமராஜர் மாவட்டம், சாத்தூர் காவல் நிலையத்தைச் சார்ந்த இருக்கன்குடி கோயில் திருவிழாவையொட்டி நடைபெற்றதாகும். நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, 18 பட்டிகள் அங்கே இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். எனக்கும் அந்த 18 பட்டிகளைப் பற்றித் தெரியும். அங்கே



உள்ளவர்கள் சட்டம் ஒழுங்கு இவைகளைப் பற்றி எவ்வளவு மதிப்பார்கள் என்பது காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும். அவர்களுக்குத் தெரியும் என்று எனக்கும் தெரியும். எனவே அப்படிப்பட்ட அந்த 18 பட்டிகளைச் சூழ்ந்த அந்த இடத்திலே இந்த இருக்கன் குடியிலே உள்ள கோயிலில் நடைபெற்ற ஒரு விழாவினை யொட்டி அங்கே சென்றிருந்த நத்தத்துப்பட்டி தேவர் பெரு மக்கள் சிலர் ஒரு கடையிலே போய் ஒரு தொப்பி வாங்க முனைந்தபோது அங்கே இருந்த ஆதிதிராவிடர்களோடு தகராறு ஏற்பட்டிருக்கிறது. தகராறுக்குக் காரணம் அவர்களா, இவர் களா என்ற ஆராய்ச்சியில் நான் நுழைய விரும்பவில்லை. இருவரும் நம்மவர்கள் தான். நாம் தான் அவர்கள் என்ற காரணத்தால், அதைத் தொடர்ந்து 8-ஆம் தேதி மாட்டு வண்டியிலே சென்று கொண்டு இருந்த அர்ச்சுனன் என்ற ஆதிதிராவிட நண்பர்மீது நத்தத்துப்பட்டியைச் சேர்ந்த தேவர்கள் சிலர் கல் எறிந்ததாகக் கூறப்பட்டு அதன் காரணமாக இரு பிரிவாருக்கும் இடையே விரோதம் ஏற்பட்டது.

10-25 மணி

இதையடுத்து 8—4—1990 அன்று இரவு இருக்கன்குடி ஆதிதிராவிட பெருமக்கள் கும்பலாகச் சேர்ந்தபோது அங்கே இருந்த புறக்காவல் நிலைய காவலர்கள் அவர்களை அமைதிப் படுத்தி கலைந்து செல்ல அவர்களோடு நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடத்தி அந்த முயற்சியில் அவர்கள் வெற்றிபெற்று அவர்களும் கலைந்து சென்றிருக்கிறார்கள். இருந்தபோதிலும் கூட அவர்கள் கலைந்து செல்கிறபோது ஓரிரு கடைகள்மீது கற்கள் வீசப்பட்டு இருக்கின்றன. இந்தச் சூழலில் அமைதி ஏற்படுத்த 9—4—1990 அன்று சமாதானக் கூட்டத்தை நடத்த அதிகாரிகள் ஏற்பாடு செய்தார்கள். இதற்கிடையே 9—4—1990 அன்று காலையில் வயலில் வேலை பார்த்துக்கொண் டிருந்த சில தேவர் இனப் பெண்களை ஆதிதிராவிடர்கள் சிலர் ஊர்ப் பிரச்சினை தீர்ந்ததற்குப் பிறகுதான் வயல் வேலை செய்யவேண்டுமென்று தடுத்ததாகவும் சொல்லப் படுகிறது.

இதையடுத்து காலையில் சுமார் 9½ மணியளவில் நத்தத்துப்பட்டி தேவர் இனத்தவர்கள் சுமார் 250 பேர் இருக்கன் குடிக்குக் கும்பலாகச் சேர்ந்துகொண்டு சென்று அங்கே இருந்த கடைகளுக்கு நெருப்பு வைத்ததாகவும் இதில் 14 கடைகளும் ஒரு குடிசையும் 3 வைக்கோல் படப்புகளும் தீயில் சேத மாயிற்று என்றும் தகவல். இது பல்வேறு சாதியைச் சேர்ந்தவர்களுடைய உடைமையாகும். தேவர்கள் கல் மற்றும் சோடாபாட்டில் வீசியதில் மொத்தம் 14 பேர் காயம் அடைந்தார்கள். இதில் பத்து பேர் ஆதிதிராவிடர் கள். மூன்று பேர் ஜாதி இந்துக்கள். போலீசார் ஒருவரும் காயம் உற்றார்கள். காயமுற்ற அனைவரும் புற நோயாளிகளாக

மருத்துவ மனையிலே சிகிச்சை பெற்றார்கள். இந்த சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததும் காமராஜர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் இருக்கன்குடிக்குச் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளை விரைந்து மேற்கொண்டார். வன்முறையில் ஈடுபட்ட 17 நபர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இதற்கிடையில் காவல்துறை இயக்குநர் உத்தரவின்பேரில் இராமநாதபுரம் சரகக் காவல் துறைத் துணைத் தலைவரும் சம்பவ இடத்திற்குச் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டார். தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அதாவது டி.எஸ்.பி. கம்பெனி ஒன்று அனுப்பப்பட்டு பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டது. காமராஜர் மாவட்டக் கண்காணிப்பாளர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இரவு தங்கி, தேவையான இடங்களுக்குப் போலீசாரைக் காவலுக்கு நிறுத்தி ஏற்பாடுகளைச் செய்தார்கள். மறுநாள் 10-ஆம் தேதி விடியற்காலை 3 மணி சுமாருக்கு பதினெட்டுப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஆதிதிராவிட மக்கள் சுமார் 50 பேர் சாத்தூர் தேரடிக்குச் சென்று அங்கேயிருந்த தேவர்களை பயங்கரமான ஆயுதங்களால் தாக்க ஆரம்பித்தார்கள், என்றும் அதனால் சாத்தூரைச் சேர்ந்த மகாலிங்கத் தேவர் வயது சுமார் 48, நடராஜ தொண்டமான் வயது சுமார் 50, ஆகியோர் காயம்பட்டு மரணமுற்றார்கள் என்றும் செய்தி. மதுரையைச் சேர்ந்த வேங்கடபதி என்ற 35 வயதுள்ள பிராமணர் ஒருவரும் தாக்குதலில் காயம் அடைந்து மரணம் அடைந்தார். இவர் சாத்தூர் கோயில் திருவிழாவுக்காக மதுரையில் இருந்து வந்த இசைக் குழுவினரின் வேன் டிரைவர். இதற்கு எதிராகத் தேவர்களும் திரண்டு தாக்குதலில் ஈடுபட்டதில் சாத்தூரைச் சேர்ந்த 50 வயதுடைய சுப்பு என்கிற ஆதிதிராவிட பெண்மணி கொல்லப்பட்டார். சாத்தூரைச் சேர்ந்த 45 வயதுடைய கோவிந்தன் என்ற ஆதிதிராவிடர் படுகாயமுற்று மதுரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் இறந்தார். சில வீடுகளுக்கும், கடைகளுக்கும் தீ வைக்கப்பட்டன. திருவள்ளுவர் பேருந்து ஒன்று தாக்கப்பட்டதில் அதன் ஓட்டுநரும், ஒரு பயணியும் காயமுற்றார்கள். கலவரத்தில் 5 தேவர்கள் மற்றும் ஒரு ஆதிதிராவிடர் உட்பட 9 பேர் காயம் அடைந்தார்கள். இவர்களில் 3 பேர் உள்நோயாளிகளாகச் சிகிச்சை பெறுகிறார்கள். காவல்துறை கண்காணிப்பாளர் உடனே தலையிட்டு வன்முறை மேலும் பரவாமல் இருக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இதன் பிறகு 10-ஆம் தேதி அன்று சுமார் 12 மணி அளவில் ஆலம்பட்டியைச் சேர்ந்த ஆதிதிராவிடர்கள் இருக்கன்குடி அருகிலே உள்ள ஆட்டுப்பண்ணைக்குச் சென்று அங்கே பணியில் உள்ள நத்தத்துப்பட்டித் தேவரைத் தாக்கியதில் மாரிமுத்துத் தேவர் என்பவர் உயிரிழந்தார்.



மற்றொரு மாரிமுத்துத் தேவர் என்பவர் காயமுற்று சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளார். பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்த கூடுதலாக 3 காவல் துறை கண்காணிப்பாளரும் மற்றும் அதிகாரிகளும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் இரண்டு கம்பெனிகளும் மற்றும் மாவட்ட ஆயுதப் படைப் பிரிவினர் மூன்று 'ப்ளட்டூன்' களையும் அனுப்பக் காவல்துறை இயக்குநர் ஏற்பாடு செய்துள்ளார்.

10-30 மணி

மாவட்ட ஆட்சியாளர் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு வருகின்றார்கள். இராமநாதபுரம் காவல்துறைத் துணைத் தலைவரும், மதுரை நகர காவல்துறைத் துணைத் தலைவர் அவர்களும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வைச் செய்கின்றார்கள். ஜாதிக் கலவரமாக இந்த வன்முறை மற்ற இடங்களுக்குப் பரவாமல் தடுக்க மற்ற மாவட்ட அதிகாரிகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளார்கள். பொது இடங்களில் இரு பிரிவினரும் சச்சரவுகளில் ஈடுபட்டுக் கொள்ளும் நிலைமை இருந்தால் அதுமாதிரி இடங்களில் சண்டைகள் நடப்பதைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கலவரத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் இரு தரப்பிலும் சுமார் 60 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும் சிலரைக் கைது செய்யவும், சமாதானக் கூட்டம் ஏற்பாடு செய்யவும் நடவடிக்கை எடுத்து வன்முறை பரவாமல் தடுக்க அனைத்து முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

சட்டம் - ஒழுங்குத் துறை ஐ. ஜி. அவர்களும் அங்கே விரைந்து சென்றுள்ளார். அந்தப் பகுதியிலே 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மதுபானக் கடைகளை 3 நாட்களுக்கு மூட உத்தரவு இடப்பட்டுள்ளது.

ஆயுதங்களோடு நடமாடுகின்றவர்களிடமிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டு விட்டன. துப்பாக்கி மற்றும் கன் லைசன்ஸ் உள்ளவர்களிடம் அவரவர்கள் வைத்துள்ள ஆயுதங்களை காவல் நிலையத்தில் 24 மணி நேரத்திற்குள் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் திருவிழாக்கள் நடைபெறுகின்ற காலம். ஆகையால் திருவிழாக்கள் நடைபெறுகின்ற இடங்களுக்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்டு உயிர் இறந்தவர் குடும்பத்திற்கு தலா பத்தாயிரம் ரூபாய் வீதமும், காயம் அடைந்தவர்களுக்கு தலா ஐந்நூறு ரூபாய் வீதமும் வழங்கப்பட்டு விட்டது. கலவரம் நடந்த இடங்களில் சமாதானத்தை நிலைநாட்ட சமாதானக் குழு ஒன்று மாவட்ட ஆட்சித்

தலைவரால் நிறுவப்பட்டு அந்தக் குழுவினுடைய கூட்டம் இன்று காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே நடைபெறுகிறது. அந்தக் குழுவிலே, இடம் பெற்றுள்ள தேவர் பெருமக்கள், மென்மேனி பெருமாள், மென்மேனி இராமையாத் தேவர், மேட்டுப்பட்டி கிருஷ்ணத் தேவர், சாத்தூர் லட்சுமணன், சாத்தூர் வேலுச்சாமி, சாத்தூர் ஷண்முகவேலு, நத்தத்துப்பட்டி ராமன், மேட்டுப்பட்டி பெரியசாமி, சாத்தூர் சேகர், நத்தத்துப்பட்டி மருதுபாண்டியன், சாத்தூர் ரங்கசாமி, மேட்டுப்பட்டி சுந்தரபாண்டி, சாத்தூர் தனேந்திரன், சாத்தூர் ராஜா ஆகியோரும் ஆதிதிராவிடர் பெருமக்கள் சார்பாக, அந்த சமாதானக் குழுவில், வன்னிமடை சக்திவேல், வன்னிமடை செந்தூர்பாண்டியன், மென்மேனி வேலுச்சாமி, போத்திக்காட்டிப்பட்டி சண்முகம், இருக்கன் குடி முத்துசாமி, இருக்கன்குடி முத்தையா, இருக்கன் குடி இராமையா, மணியம்பட்டி சுப்பிரமணியம், கோல்வார்பட்டு சிவனு, செட்டுடையான்பட்டி அமிர்தராஜ், நல்லான்செட்டிப்பட்டி பாலகிருஷ்ணன், அணைக்கரைப்பட்டி பால்ராஜ், சாத்தூர் ராஜா, சாத்தூர் பெருமாள், நல்லான்செட்டிப்பட்டி தனராஜ், இருக்கன்குடி கருப்பசாமி ஆகியோர் இந்த அமைதிக் குழுவிலே இடம் பெற்று இன்றைய தினம் இது குறித்து அவர்கள் பேசுகிறார்கள். தற்போது நிலைமை மிக அமைதியாக இருப்பதாகவும் கடைகள் மற்றும் போக்குவரத்துக்கள் எல்லாம் செவ்வனே இயங்குவதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. தொடர்ந்து அங்கே அமைதி காக்கப்பட்ட எல்லாவிதமான ஏற்பாடுகளையும் அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இவ்வளவு விரிவாகக் இது பற்றி, கூறிய பிறகும், மாண்புமிகு கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ன வேண்டுகோளை ஏற்று மாநில அளவிலேயும், மாவட்ட அளவிலேயும் அமைதிக் குழு நிறுவப்படும் என்று நான் ஒப்புக்கொண்டு கூறிய பிறகும் ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் அவையின் இதர அலுவர்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

### 4. விதி 109-இன் கீழ் உறுப்பினரின் விளக்கம்.

தாம் அவையில் 22–3–1990 ஆம் நாளன்று பேசிய ஒரு கருத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி எண். 109-இன்கீழ் ஒரு தன்னிலை விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. அர்ஜுனன் அவர்கள் அளிப்பார்கள்.



திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மேற்குத் தொடர்ச்சி மலையில் மரங்கள் களவாடப்படுவது குறித்து நான் 22–3–1990 அன்று சட்டமன்றத்திலே ஒரு குற்றச்சாட்டை எழுப்பிய சமயம் அதற்குண்டான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளேன். ஆனால் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் நான் அவையில் இல்லாத நேரத்தினைப் பயன்படுத்தி, என்னைக் களங்கப்படுத்தும் நோக்கத்துடன், என் மீது வழக்குத் தொடரப்படுகிறபோது, நான் சட்டமன்றத்திலே தானே பேசினேன், ஆகவே என் மீது வழக்குப் போடமுடியாது என்ற அந்த சந்துபொந்துக்குள் நுழைந்து இந்த வழக்கில் நான் ஆஜராகமாட்டேன் என்ற நிலையை அவர்கள் எடுப்பார்களானால், அவர்கள் கொடுத்த உறுதிமொழியிலிருந்து பின்வாங்கிவிட்டார்கள் என்றுதான் அர்த்தம். எனவே என்னைக் களங்கப்படுத்தும் நோக்கத்துடன் பேசினார்கள்.

நான் குற்றச்சாட்டை எழுப்பிய சமயம் தகுந்த ஆதாரத்துடன் தான் பேசினேன். அதற்கு முழுப்பொறுப்பையும் ஏற்பதாகவும் கூறியுள்ளேன்.

வீணாக பழியை யார் மீதும் சுமத்தவில்லை. அரசு விசாரணைக் கமிஷன் வைத்தாலும், மாணிக்கவாசகம் வழக்கு மன்றத்திலே என் மீது வழக்குப்போட்டாலும், சட்டமன்றத்தில் நான் பேசிய பேச்சுக்கு வழக்குப் போட முடியாது என்று என்னைக் காத்துக்கொள்ள சட்டமன்ற விதிகளின் சந்துபொந்துகளைப் பயன்படுத்தமாட்டேன் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய நீண்ட பொது வாழ்வில் நான் யார் மீதும் ஆதாரம் இல்லாமல் வீண் பழியை சுமத்தியது இல்லை. அதே நேரத்தில் தவறைக் கண்டிக்க அரசு விசாரணைக் கமிஷனோ அல்லது பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டாலோ, உண்மைகளை நான் நிரூபிப்பேன் என்று கூற வாப்பளிக்க வேண்டுகிறேன்.

10–35 மணி

### 5. விதி 110-இன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்.

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப்பட்டினம், மற்றும் ஜகதாப்பட்டினத்திலிருந்து சென்ற மீனவர்களை விடுதலைப்புலிகள் என்று சொல்லப்படுகின்றவர்கள் கடத்திச் சென்று மற்றும் அவர்கள் விடுக்கப்பட்டது குறித்து கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கால்நடை பராமரிப்பு மற்றும் மீனள அமைச்சர் விதி 110-இன் கீழ் அறிக்கை ஒன்றை அளிப்பார்.

143805

[1990 ஏப்ரல் 11

*மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, 7-4-1990 அன்று கோட்டைப் பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினம் ஆகிய இடங்களிலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 107 விசைப்படகுகளும் மற்றும் அதிலிருந்த மீனவர்களும் கடத்திச் செல்லப்பட்டு விடுவிக்கப் பட்டது குறித்த அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஜெகதாப்பட்டினத் தில் இருந்து 7-4-1990 அன்று 215 விசைப் படகுகளும் கோட்டைப்பட்டினத்தில் இருந்து 115 விசைப் படகுகளும் காலை 7-00 மணிக்கு கடலில் மீன் பிடிக்கச் சென்றன. இந்தப் படகுகள் அனைத்தும் 8-4-1990 ஞாயிறு அன்று காலை 8-00 மணிக்குள் திரும்பி வரவேண்டும். ஆனால், அவற்றுள் ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்த 84 விசைப் படகுகளும், கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த 23 விசைப் படகுகளும் ஆக மொத்தம் 107 விசைப் படகுகளும் அதிலிருந்த மீனவர்களும் கரைக்குத் திரும்பிவரவில்லை.

இப்படகுகள் அனைத்தும் அதில் சென்ற 487 மீனவர்களும் 8-4-1990 அன்று மாலை 6-00 மணியிலிருந்து இரவு 9-00 மணிக்குள் கரைக்குத் திரும்பினார்கள்.

மேற்குறித்த சம்பவங்கள் குறித்து கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினம் ஆகிய இடங்களிலிருந்து விசைப்பட கில் சென்று வந்த மீனவர்களை நேரில் சந்தித்து விசாரணை செய்தபோது கீழ்க்கண்டவாறு சம்பவங்கள் நடைபெற்றதாகத் தெரிவித்தனர்.

7-4-1990 காலை 7-00 மணிக்கு இங்கிருந்து புறப்பட்ட படகுகள் சுமார் பகல் 1-00 மணியளவில் இலங்கைக் கரை தெரி யுமளவு தூரத்திற்குச் சென்று ''ட்ரால்'' வரை இயக்க ஆரம்பித்தவுடன் சிறிது நேரத்தில் முதலில் ஒரு ''பிளாஸ்டிக் படகில்'' விடுதலைப் புலிகள் என்று கருதப்படுகிறவர்கள் மூவர் ஆயுதம் தாங்கிய துப்பாக்கிகளுடன் இப்படகுகளைச் சுற்றி வளைத்து தமிழக மீனவர்களுடைய ஒரு படகில் மூவரும் குதித்து மற்றைய மீனவர்களுடைய படகுகள் அனைத்தையும் அவர்கள் சொல்லும் கரைக்கு எடுத்துச் செல்லுமாறு வலியுறுத்தினர். இதற்கிடையில் ஒரு கப்பலில் இருந்து வந்த இலங்கைக் கடற் படையினர் என்று கருதப்படுகிறவர்கள் சுமார் 500-க்கும் மேற் பட்டவர்கள் விடுதலைப் புலிகளிடமிருந்து தமிழக மீனவர்களை அழைத்துச் சென்றனர். இலங்கைக் கடற்படையினர் என்று கரு தப்படுகிறவர்கள் தமிழக மீனவர்களை ஓர் அறைக்கு அழைத்துச் சென்று அந்த அறையிலுள்ள ஆயுதங்களை மீனவர்களிடம் காண் பித்து, இந்த ஆயுதங்களின் மூலமாகத்தான் நாளை உங்கள் அனைவரையும் சுட்டுக்கொல்லப் போகிறோம் என்று அச்சுறுத்



1990 ஏப்ரல் 11] [டாக்டர் க. சந்திரசேகரன்]

தியதாகத் தெரிவித்தனர். இதற்கிடையில் இலங்கைக் கடற்படை மற்றும் விடுதலைப்புலிகள் என்று கருதப்படுபவர்களுக்கும் இடையே நடந்த நீண்ட பேச்சுவார்த்தைக்குப்பின் மீனவர்களை விடுதலைப்புலிகளிடமே இலங்கைக் கடற்படையினர் ஒப்படைத் தனர்.

பின்னர், விடுதலைப்புலிகள் ''பிளாஸ்டிக்'' படகுகளில் நமது மீனவர்களை அவர்கள் சென்ற படகுகளுடன் ''பூங்குடித் தீவுக்கு'' கொண்டு சென்று நங்கூரமிடச் செய்துள்ளனர். மீன வர்களை அங்கிருந்து மாலை 5–00 மணியளவில் ''வேன்'' மூலம் ஒரு பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு சென்று வைத்துள்ளனர்.

இரவு பள்ளிக்கூடத்தில் வைக்கப்பட்ட மீனவர்களை மறுநாள் 8–4–1990 காலை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து புகைப்படம் மற்றும் வீடியோ படம் எடுத்தனர். மேலும், மீனவர்களின் பெயர் மற்றும் படகுகளின் விவரங்களையும் குறித்து வைத்துக் கொண்டுள்ளனர். பின், ஒவ்வொருவருக்கும் ''பன்'', ''துவையல்'' மற்றும் ''வாழைப்பழம்'' ஆகியவை உண்பதற் காகக் கொடுத்துள்ளனர். பிறகு, தமிழக மீனவர்களுக்கு இடையே விடுதலைப் புலிகளின் பூங்குடித் தீவின் பகுதித் தலைவர் என்றுகருதப்படுகிறவர் உரையாற்றும்போது இனிமேல் இலங்கைக் கடற்பகுதிக்குள் வரக்கூடாது என்றும், வந்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார். பின், இரண்டு பிளாஸ்டிக் படகுகளில் இலங்கைக் கடற்பகுதி எல்லை வரை தமிழக மீனவர்களை பத்திரமாகக் கொண்டு வந்து விட்டு அவர்கள் திரும்பிவிட்டார்கள் என்றும் மீனவர்கள் கூறினர். மேற் கண்டவாறு விடுவிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரும் தத்தம் படகுகளுடன் ஜெகதாப்பட்டினம் மற்றும் கோட்டைப்பட்டினம் பகுதிகளுக்கும் 8–4–1990 அன்று மாலை 6–00 மணி முதல் இரவு 9–00 மணிக்குள்ளாக திரும்பியுள்ளனர்.

இலங்கைக் கடற்பகுதிக்குள் சென்று பிடிக்கப்பட்ட மீனவர்கள் இலங்கைக் கரைப்பகுதி தெரியுமளவிற்கு சென்று மீன் பிடித்த தாகவும், பெரும்பாலும் சங்கு இழு வலையையும், ஒரு சிலர் மட்டுமே மீன் இழு வலையையும் உபயோகித்ததாகவும் தெரிவித்தனர்.

10–40 மணி

இவர்கள் அங்கு சென்று இழுவலைகளை உபயோகித்ததால் இலங்கை மீனவர்களின் பாய்ச்சு வலைகள் மற்றும் வளி வலை களுக்கு பெருத்த சேதமேற்பட்டுள்ளதாகவும் இதுவே தமிழக மீனவர்களுக்கு விடுக்கும் கடைசி எச்சரிக்கை என்றும் மீண்டும்

வலியுறுத்தித் தெரிவித்துள்ளனர். மேலும், இலங்கை வாழ் மீனவர்களும் அவர்களுடைய எல்லையை மீறி நம்முடைய எல்லைக்கு வருகிறார்கள். அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நமது மீனவர்கள் கேட்டுக்கொண்டனர்.

கடலில் சங்கு பிடித்து விற்பது அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட ஒன்று. ஜெகதாப்பட்டினம் மற்றும் கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் சங்குகளைப் பிடிப்பதிலே தற்சமயம் முழு ஆர்வத்துடன் செயல்படுவதால், குறிப்பாக சங்கு இலங்கைக் கடற்கரை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலே அதிகம் கிடைப்பதால் அடிக்கடி தமிழக மீனவர்கள் அவர்களுடைய எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

மேற்கண்ட சம்பவங்களினால் எவ்வித உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் ஏற்படவில்லை. இனி தமிழகக் கடல் எல்லையைத் தாண்டிச் செல்லக்கூடாது என்று நமது மீனவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) டாக்டர் அம்பேத்கார் மற்றும் பாரதிதாசன் நூற்றாண்டு விழாக்களையொட்டி கைதிகளுக்குத் தண்டனைக் காலத்தை குறைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதி 110-இன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஓர் அறிக்கையைப் படைப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய மாபெரும் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கார் அவர்களின் நூற்றாண்டு விழாவும், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவும் ஒருங்கிணைந்து நமக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்ற ஆண்டாகும். இவர்களுக்கு நூற்றாண்டு விழா அமையும் இந்த ஆண்டில் தமிழக அரசு சார்பில் அவர்களை நினைவுபடுத்தும் வகையில் தண்டனை பெற்று, தமிழ்நாட்டுச் சிறைகளில் இருக்கும் கைதிகளுக்கு தண்டனைக் காலத்தைக் குறைத்து, விடுதலை வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி 12 ஆண்டுகள் முழுமையாக சிறைவாசம் முடித்த ஆயுள் தண்டனைக் கைதிகள் 72 பேருக்கு அவர்கள் எஞ்சிய தண்டனைக் காலத்தைக் குறைத்தும், பல்வேறு நிலைகளிலே சிறை வாசம் செய்து வரும் 866 கைதிகளையும் மற்றும் கொலை, கொள்ளை ஆகியவற்றைத் தவிர ஏனைய குற்றங்களுக்காக தண்டனை பெற்று வரும் 54 பெண் கைதிகளையும், மொத்தம் 992 கைதிகளை



நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் தலைவர்களின் நினைவாக 14-4-1990 தமிழ்ப் புத்தாண்டு அன்று விடுதலை செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு.)

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப்பட்டினம் மற்றும் ஜகதாப்பட்டினத்திலிருந்து சென்ற மீனவர்களை, விடுதலைப் புலிகள் என்று சொல்லப்படுகின்றவர்கள் கடத்திச் சென்றது மற்றும் அவர்கள் விடுவிக்கப்பட்டது குறித்து கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு, விதி 110(2)ன்கீழ் அளிக்கப்படும் அறிக்கையின்மீது எந்தவித விவாதமும் கூடாது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு........

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நமது மீனவர்களை விடுதலைப் புலிகள் தாக்கியதாகவும், அப்படி தாக்கப்பட்டு துன்புற்றவர்களை நமது அமைச்சர் அவர்கள் ஆறுதல் செய்ததாகவும் பத்திரிகைகளில் எல்லாம் செய்திகள் வந்திருக்கிறதே, அது பற்றி இதில் ஒன்றும் இல்லேயே, அது பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதனால்தான் சொன்னேன், இது தொடர்பாக எந்த விவாதமும் கூடாது என்று. (குறுக்கீடு) அப்படி எல்லாம் வாதத்தை நீட்டிக்கக்கூடாது. பிறகு விதிமுறைகளுக்குப் புறம்பாகப் போய்விடும். உட்காருங்கள்.

**திரு. கே. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது மீனவர்களுடைய நிலைமை மிகவும் அபாயகரமான நிலைமைக்கு இப்போது போய்க்கொண்டிருக்கிறது. இலங்கை அரசு என்ன செய்கிறதோ அது நமக்குத் தெரியாது. அது ஒரு பக்கம். விடுதலைப் புலிகள், ஒரு அரசு மாதிரி ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மீனவர்களின் பாதுகாப்புக்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி எங்களுடைய கருத்துக்களைச் சொல்லி விவாதிக்க நீங்கள் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கித் தர வேண்டும். மீனவர்களுக்கு ஒரு பாதுகாப்பு தேவை. கடல் எல்லைகளை எல்லாம் இரண்டு அரசாங்கங்களுக்கு இடையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உட்கார்ந்து, வரையறுத்துத் தர வேண்டி இருக்கிறது. இப்போது நிலைமை அத்து மீறி, அனுதினமும் நூற்றுக்கணக்கான ஆட்களைப்

[திரு. கே. ரமணி] [1990 ஏப்ரல் 11

பிடித்துக் கொண்டு போய், துப்பாக்கியைக் காட்டி, உங்களைச் சுட்டுக் கொல்லப் போகிறோம் என்று கூறினால் நிலைமை பதட்ட மாகும். எனவே இதைப்பற்றி விவாதிக்க ஒரு ஏற்பாடு உடனடி யாகச் செய்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

10-45 மணி

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு தலைவ ரவர்களே, மீனவர்களுடைய பாதுகாப்பில் நண்பர் திரு. ரமணி அவர்களுக்கு இருக்கின்ற அதே அக்கறை இந்த அரசுக்கும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீனவர்கள் தங்க ளுடைய பாதுகாப்பைக் கோருகிற அதே நேரத்தில் கடலில் மீன் பிடிப்பதற்கென்று ஒரு எல்லை இருக்கிறது. நேற்றைக்குக் கூட சொன்னார்கள். அந்த எல்லை வரம்பு கட்டப்பட வில்லை என்று. கடந்த காலத்திலே இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, இலங்கை-இந்தியா அரசுகளிடையே ஏற்பட்ட ஒப்பந்தத் திற்குப் பிறகு, அதற்கென்று ஒரு எல்லை நிர்ணயிக்கப்பட் டிருக்கிறது. அந்த எல்லையைக் கடந்து சென்றதாக நம்முடைய மீனவர்களேகூட ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒத்துக்கொண்ட சூழ்நிலையில் அங்கே உள்ளவர்கள் அவர் களைப் பிடித்துச் சென்று, ஆனால், எந்தவிதமான துன்பத்திற்கும் ஆளாக்காமல் பத்திரமாகத் திரும்ப ஒப்படைத்து இருக்கிறார்கள். முதலிலே நாகையிலிருந்து சென்ற மீனவர்கள் இப்படி ஒரு அவ திக்கு ஆளானபோது நானே இலங்கை அரசோடு தொடர்பு கொண்டு பிரேமதாசா அவர்களோடு பேசி, அவர்களை உடனடி யாக விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வந்த மீனவர்களும் தாங்கள் அங்கே மகிழ்ச்சியாக இருந்ததாகவும் சொல்லி, நம்முடைய நாகைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வீரையன் அவர்களை அழைத்துக் கொண்டு சென்னைக்கு என்னுடைய இல்லத்துக்கு வந்து எனக்குப்பாராட்டும், வாழ்த்தும் கூறிவிட்டுச் சென்று இருக்கின்றார்கள். அதைப்போலவே தான் இப்போதும் இவர்கள் எல்லையைக் கடந்து சென்ற காரணத்தி தினால் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். எல்லையைக் கடந்து செல்லாமல், இந்த எல்லைக்கு விடுதலைப் புலிகளோ அல்லது சிங்கள இராணுவமோ வந்து இவர்களை இழுத்துச் சென்று இருப்பார்களேயானால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள மாநில அரசு தயங்காது. இருந்தபோதிலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் அடிக்கடி நிகழாமல் இருக்க என்ன வழிவகைகளைக் காணலாம் என்பது குறித்து மத்திய அரசோடு மாநில அரசு கலந்து பேசும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** தலைவர் அவர்களே,... ... ... ...



1990 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள் இதுவே விதிமுறைகளுக்குப் புறம்பானது. விதிமுறைகளுக்குப் புறம்பானதை இழுத்துக்கொண்டே போவதா ? உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110 (2)-இன் கீழ் யாருக்கும், எந்த விவாதத்துக்கும் அனுமதி கிடையாது. வம்பு செய்வது என்றால் எப்படி வேண்டுமானாலும் வம்பு செய்யலாம். உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர் களே, இப்படிப்பட்ட சலுகைகள் முன் வரிசையில் இருப்பவர் களுக்குச் சில நேரங்களில் மரபையும் கடந்து தருவது உண்டு. முன் வரிசைத் தலைவர் வராதது எங்கள் குற்றம் இல்லை. (குறுக்கீடுகள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்புறம் நான் கடுமை யாக இருந்து விடுவேன். உட்காருங்கள் (குறுக்கீடு) உட் காருங்கள் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) எதிர்க் கட்சித் தலைவர் இருந்திருந்தால் பேச வாய்ப்பு அளித்து இருப்பேன். உட்காருங்கள். (குறுக்கீடு) விதியின் கீழ் இடம் இல்லை. உட்காருங்கள்.

(அ.இ.அ.தி.மு.க. கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய் தனர்.)

## 6. கவன ஈர்ப்பு

(அ) மயிலாடுதுறை நன்னிலம், குடவாசல் வட்டங்களில் நெற்பயிர்கள் நோயால் தாக்கப் பெற்றுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மயிலாடுதுறை, நன்னிலம், குடவாசல் வட்டங்களில் கோடை சாகுபடி செய்யப்பட்டுள்ள ஐ.ஆர். 50 நெற்பயிரில் நோய் தாக்கப்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன் :

***மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தஞ்சை மாவட்டத்திலுள்ள மயிலாடுதுறை உபகோட்டத் தில் சுமார் 50 ஏக்கர் பரப்பில் ஐ.ஆர். 50 நெல் பயிரில் சூலை நோய் தாக்குதல் தெண்பட்டது. இந்நோயின் தாக்கு

தல் ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறியப்பட்டு உடன் எடிபன்பாஸ் எனும் பூஞ்சாண மருந்து தெளிக்கப்பட்டு நோய் கட்டுப்படுத்தப்பட்டது.

அப்பகுதியில் சூலை நோயிலிருந்து பயிர்கள் நிவாரணம் அடைந்து நல்ல நிலையில் உள்ளது.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை உப கோட்டத்தில் சுமார் 50 ஏக்கர் பரப்பில் ஐ.ஆர். 50 நெற்பயிர் சூலை நோயால் பாதிக்கப்பட்டது என்றும், இந்த நோய்த் தாக்குதல் ஆரம்பக் கட்டத்திலேயே கட்டுப்படுத்தப்பட்டு, இப்போது கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை உப கோட்டத்திலே மட்டும் 50 ஏக்கர் பயிர் சூலை நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. மற்ற நன்னிலம், குடவாசல் வட்டங்களில் எவ்வளவு பாதிக்கப்பட்டது என்ற விவரம் இதில் தெரிவிக்கப்படவில்லை. இந்த நோய் கண்ட பயிர் முழுவதும் அழிந்து வரும் நிலையில் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பயிர் பாதுகாப்புச் செய்ய போதுமான பூச்சி மருந்துகள் வேளாண்மைக் கிடங்குகளில் இல்லாமல் இருந்தது. அப்படிப்பட்ட நிலை தவிர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நன்னிலம், குடவாசல் வட்டங்களில் என்றுதான் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டு இருக்கிறார்கள். அதனால் ஒட்டுமொத்தமாக தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை உபகோட்டத்தில் என்று பதில் சொன்னேன். அதுபற்றி தகவல் தரப்பட்டு இருக்கிறது. சுமார் 50 ஏக்கர் தான் பாதிக்கப்பட்டதாகவும், அந்தப் பாதிப்புக்கு உள்ளான உடனேயே எடிபன்பாஸ் பூஞ்சாண மருந்து தெளிக்கப்பட்டு, நோய் கட்டுப்படுத்தப்பட்டு பெருமளவு சேதம் ஒன்றும் இல்லை என்ற தகவல் தான் வந்து இருக்கிறது. மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு பகுதியிலும் பாதிக்கப்பட்டு இருக்கிறது விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்று கருதுவார்களேயானால் அதுபற்றி தனியாக எழுதிக் கொடுத்தால் விசாரித்து தகுந்த பரிகாரம் காணப்படும்.

10-50 மணி

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோய் கண்டவுடன் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட நிலை அங்கே இல்லை. நோய் கண்டு கிட்டத்



தட்ட ஒரு வார காலம் அல்லது பத்து நாட்களில் முழுமையாக பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. என்னைப் பொறுத்தவரையில் மக்களுக்கு காலரா, அம்மை நோய் காணும்பொழுது அரசின் சார்பில் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படுவதுபோல, விவசாயிகளுக்கு பெரிய இழப்பாக ஏற்படுத்தும் சூலை நோய், புகையான் போன்ற நோய்கள் ஏற்படும்பொழுது உடனடியாகத் துரித நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும். பயிர் முழுவதும் அழியக் கூடிய கொடிய நோய் காணும் பொழுது, தேவையான பூச்சிக்கொல்லி மருந்துகளை அரசின் மூலம் முழு மானிய விலையில் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நோயினால் பாதிக்கப்பட்ட தகவல் துறைக்கு வந்தவுடன்தான் நடவடிக்கை எடுக்கப்படும். துறைக்கே தகவல் தெரிந்தாலும் நேரடியாக நடவடிக்கையை எடுப்பார்கள். ஆகவே, தகவல் கிடைத்தவுடனேயே வேளாண்மைத் துறையால் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## (ஆ) சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப் பெறாதது குறித்து

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை

**சேலம் கழிவு நீரகற்று திட்டம்—தற்போதைய நிலை பற்றிய குறிப்பு**

4-10-1980 நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, அரசு ஆணை (நிலை) எண் 529-ல் சேலம் நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ. 910 இலட்சத்திற்கு நிறைவேற்ற நிர்வாக ஒப்புதல் அரசால் வழங்கப்

பட்டது. ஹட்கோவிடமிருந்து கடன் பெற்று இத்திட்டத்தினை நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஹட்கோ இத்திட்டத்திற்கு கடன் வழங்க முன்வரவில்லை. இத் தருணத்தில் இத்திட்டத்திற்கான செலவினம் ரூ. 1,200 இலட்சமாக திருத்தியமைக்கப்பட்டது. இதற்கு 8-3-1986 நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசு ஆணை (நிலை) எண் 286-ல் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டம் ஆயுள்காப்பீட்டுக் கழகத் திடமிருந்து கடன் பெற்று 1983-ம் ஆண்டு ஜூன் மாதத் தில் செயற்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டது.

2. இத்திட்டம் 214.00 கி. மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர்க் குழாய்கள் போடுதல், செவ்வாய்ப்பேட்டை நகராட்சி சந்தைப் பகுதியில் முதல்நிலை சுத்திகரிப்பு நிலையமும் பிரதான கழிவுநீர் வெளியேற்று நிலையமும் கட்டுதல் கழிவுநீர் வெளியேற்று நிலையத்திலிருந்து கழிவுநீர் இறுதியாக சென்றடையும் இடமான பூலவாரி அக்ரகாரம் கிராமம் மற் றும் அக்கரைப்பாளையம் கிராமம் வரை 9.70 கி.மீட்டர் தூரத்திற்கு 800 மி.மீ. அகலம் கொண்ட பி.எஸ்.சி. குழாய் போடுதல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் அடங்கும்.

3. இந்த கிராமங்களில் கழிவு நீர்ப்பண்ணை கழிவுநீர் வெளியேற்றும் பணிகளுக்காக சுமார் 600 ஏக்கர் நிலம் வரை கையகப்படுத்த திட்டமிடப்பட்டது. இத் திட்டத்தில் வெளியேற்றப்படும் நீரியற்கழிவுகளைக் கழிவு நீர்ப் பண்ணையில் புல் வளர்ப்பதற்காகப் பயன்படுத்தி அதனால் நகராட்சிக்கு வருவாய் கிடைக்கவும் திட்டமிடப் பட்டது.

திட்டச் செயல்பாட்டின் தற்போதைய நிலை:

4. இத்திட்டத்தின்படி சேலம் நகரம் வடக்கு மற்றும் தெற்கு என இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. வடக்கு மண்டலத்திலுள்ள 12 வட்டாரங்களில், 9 வட்டாரங் களில் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு 3 வட்டாரங் களில் பணிகள் தொடங்கப்பட்டன. மற்ற வட்டாரங்களில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. 1, 2, 3, 4 மற்றும் 5-வது வட்டாரங்களில் வீட்டு இணைப்பு கொடுப்பதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கப்பட்டு மேலும் 1, 2 மற்றும் 3-வது வட்டாரங்களில் வீட்டு இணைப்பு கொடுப்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டன. கழிவு நீரேற்று நிலையத்திற்கு குழாய்கள் அமைக்க தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் கழிவுநீர் கொண்டு சேர்க்கும் இடம் முடிவு செய்யப்படாததால் பணி தொடங்கப்படவில்லை.



5. கழிவுநீர் கொண்டு சேர்க்கும் இடத்திற்கு நிலம் கை யகப்படுத்தலுக்கு பூலவாரி அக்ரகாரம் மற்றும் அக்கரைப் பாளையம் கிராம விவசாயிகளிடமிருந்து கடுமையான எதிர்ப் புகள் எழுந்தன. வேறு பல மாற்று இடங்கள் பரிசீலனை செய் யப்பட்டு கடைசியில் சேலம் நகராட்சிக்குச் சொந்தமான பனைமரத்துப்பட்டி ஏரியில் கழிவுநீரைக் கொண்டு சேர்க்க முடிவு செய்யப்பட்டது. 15-6-1988 நாளிட்ட நகராட்சி நிர் வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணை நிலை எண். 587-ல் இச்செயற்குறிப்பிற்கு அரசு ஒப்புதலளித்தது. அதற்கேற்ப ரூ. 2,260 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு பனைமரத்துப்பட்டி ஏரியில் கழிவுநீரைக் கொண்டு சேர்ப்பதற் கான பணிக்கு தயார் செய்யப்பட்டு அம்மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில் நுட்பக் குழுவினால் அங்கீ கரிக்கப்பட்டது, திருத்திய மதிப்பீட்டிற்கு சேலம் நகராட்சி யும் ஒத்துக் கொண்டுள்ளது. நிதி ஆதாரச் சான்றிதழ்— Financial Viability Certificate நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரிடமிருந்து கேட்கப்பட்டுள்ளது.

6. தற்பொழுது பனைமரத்துப்பட்டி ஏரியின் பெரும் பாலான பகுதியைப் பொதுமக்கள் ஆக்கிரமித்துள்ளதாகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. வாரிய 17-9-1988 நாளிட்ட கடித எண். எப். 143/ஜேடிஓ 1/88-ல் இவ்வாக்கிரமிப்புகளை அகற்றியும் வேலியிட்டு மேற் கொண்டு முதன்நிலை நில அளவைப் பணிகளை எந்தவித இடையூறுமின்றித் தொடங்க ஏற்பாடு செய்ய நகராட்சி ஆணை யர் தமது கடித எண். ஆர்ஓசி. இ 3/41391/87, நாள் 20-9-1988-ல் சேலம் மாவட்ட சப் ஜட்ஜ் அவர்கள் சேலம் நகராட்சிக்கு பனைமரத்துப்பட்டி ஏரியிலுள்ள ஆக்கிரமிப் பாளர்களை வெளியேற்றக்கூடாது என்று தற்காலிகத் தடை யுத்தரவு பிறப்பித்துள்ளார் என்றும் இவ்வழக்கு சேலம் மாவட்ட சப் ஜட்ஜ் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது என்றும் கூறியுள்ளார். 29-9-1988 நாளிட்ட தமது ஆணையில் சேலம் மாவட்ட முதன்மை சப் ஜட்ஜ் ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ந்த ஓ.எஸ். 1415/82-ன் மீதான ஏ.எஸ். எண். 15/87-ஐத் தள்ளுபடி செய்தார். தற்போது ஆக்கிரமிப்பாளர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு பதிவு செய்து ஆக்கிரமிப்பாளர்களை ஏரியிலிருந்து வெளியேற்றுவதற்கு பெற் றுள்ள தற்காலிகத் தடையுத்தரவை நீக்க நகராட்சி நட வடிக்கை எடுத்து வருகிறது.

7. கழிவுநீர் கொண்டு சேர்க்க வேண்டிய இடப் பிரச் சினை தீர்ந்தபிறகு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளிக்கப் பட்டதும் மேற்கொண்டு இத்திட்டப் பணிகள் விரைவுபடுத்தப் படும். தற்போது, ஏற்கெனவே தொழில் நுட்ப ஒப்பளிப்பு அளிக் கப்பட்ட மதிப்பீடு திருத்திய மதிப்பீட்டின்படி மாற்றியமைக் கப்படுகிறது.

8. தற்போது ராசிபுரம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு நீராதாரமாக உள்ள பனைமரத்துப்பட்டி ஏரியில், சேலம் நகராட்சி கழிவுநீரைக் கொண்டு சேர்ப்பதனால் குடிநீர் வழங்குதல் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்று 15–6–1988 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை நிலை எண். 587-ல் அரசு ஆணையிட்டுள்ளது. 26–4–1988 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை (நிலை) எண். 443-ல் அரசு காவேரி ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு எடப்பாடி, இராசிபுரம் ஆகிய நகராட்சிகளுக்கும், ஒன்பது பேரூராட்சிகளுக்கும் மற்றும் 155 வழியோரக் கிராமங்களுக்கும் ஒரு மாற்று கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 1986.74 இலட்சம் செலவில் நிறைவேற்ற நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. எனவே பனைமரத்துப்பட்டி ஏரியில் கழிவுநீரைக் கொண்டு சேர்ப்பதினால் இராசிபுரம் நகராட்சிகு எந்தவ்த பாதிப்பும் ஏற்படாது. மேலும் காவிரி ஆற்றினை ஆதாரமாகக் கொண்ட இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் இந்நகராட்சி பயன் பெறும்.

திரு. கே. அர்ஜுனன்; பேரவைத் தலைவரவர்களே, சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காகப் பாதி வெட்டி ரோடுகளில் எல்லாம் இடைவெளி ஏற்படுத்தி நகரமே பாழடைந்து கிடக்கின்றது. பனைமரத்துப்பட்டி ஏரித் தண்ணீர் சேலத்திற்கும், இராசிபுரத்திற்கும் குடிநீருக்குப் பயன்படுகிறது. இராசிபுரத்திற்குக் காவிரி நீர் வர இன்னும் கிட்டத்தட்ட ஐந்தாண்டுக் காலம் ஆகும். அதுவரையில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கிடப்பில் போட வேண்டும். அதன்பின் ரீ எஸ்டிமேட் போட வேண்டிய சூழ்நிலை உருவாகும். பனைமரத்துப்பட்டி ஏரியினுடைய குடிநீர் பயனற்றதாகவே போய்விடும் நிலை உருவாகிறது. எனவே, அன்றும் இன்றும் பூலவாரியிலே அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள் பொதுமக்களைத் தூண்டிவிட்டதால் மாற்று ஏற்பாட்டிற்கு அரசு போய் விடக் கூடிய சூழ்நிலை உருவாகி வீட்டு இருக்கிறது. ஆகவே, சேலம் இரும்பாலைப் பகுதியில் காலியாக உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று, கழிவு நீரைத் தேக்கி, புல் வளர்க்கும் திட்டத்தை மேற்கொள்ள உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர் சொன்னதைப்போல, பூலவாரியிலேயிருந்து மற்ற இடத்திற்கு மாற்றப்பட்டது, இந்த ஆட்சி ஏற்பட்ட காலத்திலே அல்ல. அது பற்றி வழக்கு மன்றத்திலே வழக்கு





தொடர்ந்திருக்கிறது. பனைமரத்துப்பட்டியிலே இருக்கிற ஏரியிலே இதைப் பாய்ச்ச வேண்டுமென்ற கோரிக்கை நீதிமன்றத்திலே இருக்கிறது. அந்த நீதிமன்றத்திலேயிருந்து உத்தரவுகள் வருவதற்கு முன்பாக அந்த ஏரிப் பகுதியிலே பலபேர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை வெளியேற்ற வேண்டுமென்ற எண்ணத்திலே தான் அரசு.நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எடுத்த பிறகு இப்பொழுது மற்றப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன்: பேரவைத் தலைவரவர்களே, பனைமரத்துப்பட்டி ஏரியிலே இருக்கின்ற குடிநீரைப் பயனற்றதாக்கும் திட்டம் இது. எனவே, குடிநீரைப் பயன்படுத்துகின்ற வகையிலேயும் கழிவு நீர் அங்கே போவதற்குக் காலதாமதம் ஆகும் என்பதால், இராசிபுரததிற்குக் காவிரித் தண்ணீர் வருவதற்குக் குறைந்தது ஐந்தாண்டுக் காலமாகும. அதனாலே, பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படாமலேயே நீண்ட நாள் போய் விடும் என்பதாலும், சேலத்திலே கொசுத் தொல்லை பெருகி, அதனால் நோய் பெருகுவதும், இரவில் மின் சப்ளை இல்லாவிட்டாலும், மின் விசிறி வசதி இல்லாதவர்களும் தூக்கம் வராததால் கொசு ஓட்டிக்கொண்டிருப்பதைத் தவிர்ப்பதற்காகவாவது உடனடியாக சேலம் ஸ்டீல் பிளாண்டிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்திலே மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று அங்கே இந்தக் கழிவு நீரைக் கொண்டு போய் சேமித்து, புல் வளர்த்து அந்தத் திட்டத்தை உடனடியாக, இந்த ஆண்டே நிறைவேற்றக் கூடிய வகையிலே வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் அதை நிறைவேற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டம் 1984 ஆம் ஆண்டு முந்தைய ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்படுவதாக விழாவெல்லாம் கொண்டாடப்பட்டது. அதற்குப் பின்னாலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பூலவாரி பகுதியில் சூவேஜ்ஃபார்ம் அமைப்பதற்காக 700, 800 ஏக்கர் பார்க்கப்பட்டது. அது மேடான பகுதியாக இருப்பதாலும், விவசாயிகள் நல்ல விவசாயம் செய்யக் கூடிய நிலமாக இருக்கக்கூடிய பகுதியாக இருப்பதாலும் அந்தப் பகுதியைக் கையகப்படுத்துவது தேவையில்லை என்று துறை கருதி இப்பொழுது மாற்று ஏற்பாடாக பனைமரத்துப்பட்டி ஏரிக்கு இந்தக் கழிவு நீரைக் கொண்டு சென்று அங்கே சூவேஜ்ஃபார்ம் அமைக்கலாமா என்று இந்தத் துறை பரிசீலித்தது.

10-55 மணி.

அதுவும் சாத்தியமா, இல்லையா என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. இதற்கிடையில் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை அடிப்படையில், இப்போது சேலம் அருகில் ஒரு இடத்தைத் தேர்வு செய்து, அந்தக்கழிவுநீரை சுத்தப்படுத்தி, நகர் மையத்தில் ஓடும் திருமுடி முத்தாற்றில், சுத்தம் செய்யப்பட்ட தண்ணீரை விட்டு, பொட்டரத்தான்ஏரி, பூலவாரி ஏரி, வீரபாண்டி ஏரி, இப்படி பல ஏரிகளில் சுத்தப்படுத்திய தண்ணீரைக்கொடுத்து அதன் மூலம் பாசன வசதி செய்யவும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதைப் பற்றியும் இந்த அரசு இப்போது வேகமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், இந்த ஆட்சி வந்த பிறகு ஒன்றுமே செய்யவில்லை என்பதைப் போல இங்கே குற்றச்சாட்டாக கேள்வி கேட்கப்படுகிறது. இன்னொன்று, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான், இப்போது பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைவாக நிறை வேற்ற, அதுவும் மூன்று கோட்டமாகப் பிரித்து, விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று இந்தத் துறை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறார்.

7. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பதாவது சட்டப் பேரவையில் பொது நிறுவனங்கள் குழு சார்பாக, 1989–90 ஆம் ஆண்டுக்கான குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தல் 1990 ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு.

8. ஒழுங்குப் பிரச்சினை.

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவிற்குக் குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற வேண்டியது குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, இப்போது வரக்கூடிய பில் சம்பந்தமாக ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சி மன்றச் செயலர் அவர்கள்



கொண்டு வரக்கூடிய சட்ட மசோதா ஜனாதிபதியுடைய முன் ஒப்புதலைப் பெற்றுத்தான் இங்கே அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் அதை வாங்கி இருக்கிறார்களா என்பதை அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

*THIRU L. GANESAN (Parliamentary Secretary to Chief Minister) : Instiuctions f.om the President have already been obtainea.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, அவசர சட்டத்திற்கு வாங்கியது வேறு. இப்போது இங்கே வரக்கூடிய சட்டம் அதாவது Act of Legislature என்று இருக்கிறது ஆகவே, இங்கே வரக்கூடிய சட்டத்திற்கு Prior consent....

THIRU L, GANESAN (Parliamentary Secretary to Chief Minister ): As far as the concurrent Lists as well as the state list are conce.ned, even after passing this Legislation, we can send the Bill for the assent of the President and it cculd be obtained.

திரு. பி. எச். பாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1971–74ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். பஸ்களை தேசியமயமாக்கும்போது முதலில் முன் ஒப்புதலைப் பெற்றுத்தான் அந்தச் சட்டம் இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. Prior consent வாங்கிவிட்டுத்தான், இங்கே நாம் அறிமுகப்படுத்துவது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டது என்பது எங்களுடைய கருத்தாகும்.

9. சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தல்.

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை திருவாளர்கள் பி. மாரப்பன் மற்றும் பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோர் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அத்தீர்மானத்தை மொழிவார்.

*பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"19—2—1990 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரி அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/1990) இப்பேரவை நிராகரிக்கின்றது."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. எல். கணேசன்: (முதலமைச்சரின் ஆட்சிமன்ற **செயலர்**); **தலைவர்** அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி**கிறேன்:**

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1990) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. மாரப்பன், க. பொன்னுசாமி ஆகியவர்களின் தீர்மானமும், மாண்புமிகு முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர் அவர்களின் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் பேராசிரியர் க. பொன்னுசாமி.

11-00 மணி.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கின்ற அவசரச் சட்டத்தின்படி, தமிழ்நாட்டில் இயக்கூர்திகளின் பதிவு செய்யப்படும் நாளிலிருந்து 15 திங்கள் காலத்திற்கு முன்னர் வரி விதிக்கப்படலாகாது என்று கூறப்பட்டுள்ளது. 19—2—1990-ல் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு உள்ளது. எனவே இது 17 திங்கள் முன் தேதியிட்டு நடைமுறைக்கு வருகிறது. இயக்கூர்திகளின் சொந்தக்காரர்கள், வாடகைக்கு இயக்கூர்திகளை அமர்த்துபவர்கள், ஓட்டுபவர்கள், எதிர்பாராத நிலையிலே தண்டனை பெறுகிற அளவிற்கு அது அமைகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட வேண்டும். சட்டம் பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து மட்டுமே நடைமுறைக்கு வந்தால் அது சரியாக இருக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

1982-83 கால கட்டத்தில் மறைந்த முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இந்த வரி விதிப்புக்காக சட்டம் கொண்டு வந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகமும், அதனைச் சார்ந்த கட்சிகளும் இங்கே எதிர்ப்புத் தெரிவித்த அந்தக் கால கட்டத்தில் எதிர்க்கட்சியினர் கருத்துக்கு மதிப்பு அளித்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள் என்பதை இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சென்ற ஆண்டு கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கை மீது நடைபெற்ற விவாதத்தின்போது நுழைவு வரி என்ற பெயர் வேண்டாம் என்று அனைவரும்

* 9–4–1990-ம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





ஒருமுகமாகக் கூறியதை ஏற்றுக் கொண்டார்கள் என்பதை இங்கே நினைவுபடுத்தி, இன்று மீண்டும் அதே நுழைவு வரி என்ற பெயராலே இது நுழைக்கப்படுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அவசரச் சட்டத்தில் பத்தி 12-ல் பொது மக்கள் நலன் தொடர்பான குறிப்பிட்ட வகை ஊர்திகளுக்கு வரியிலிருந்து அரசு விலக்கு அளிக்கலாம் என்று ஒரு பகுதி இருக்கிறது. இது தெளிவாக இல்லை. அதிலே தவறுகள் நடைபெற மிகுந்த இடம் இருக்கிறது. ஊழலின் ஊற்றுக் கண்ணை அடைப்போம் என்று அடிக்கடி கூறுகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊழலுக்கு ஒரு ஊற்றுக் கண்ணைத் திறப்பதைப்போல இது இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பத்தி 15(1)-ல் இந்த வரி செலுத்தத் தவறினால், வரி முழுவதும், அதனோடுகூட வரித் தொகைக்கு இரு மடங்குக்கு மேற்படாத ஒரு தொகையை தண்டனைத் தொகையாக விதிக்கலாம் என்று இருக்கிறது. இது மிக மிக அதிகமான தண்டனைத் தொகை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதோடு கூட 3 மாத காலம் தாமதமாக இருந்தால், மாதம் ஒன்றுக்கு 1½ விழுக்காடு வரியின் மீது மேல் தண்டத் தொகையாக விதிக்கலாம் என்றும், 6 மாதத்திற்கு மேலே ஆனால், 2 விழுக்காடு விதிக்கலாம் என்றும் தண்டனைக்கு மேலே தண்டனை இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது தவிர்க்கப் படவேண்டும் என்று எனது நோக்கத்தை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்தி 13(3)-ல் வரி தொடர்பாக மேல்முறையீடு வரிசெலுத்த குறிப்பிட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செய்தாக வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இதற்கு விதிக்கப்பட்டு இருக்கிற நிபந்தனை மிக மிகக் கடுமையானது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வரியையும், தண்டனைத் தொகை முழுவதையும் செலுத்தி விட்டுத்தான் மேல் முறையீடு என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. வரிக் கணிப்பே தவறு என்று மேல் முறையீடு செய்யும்பொழுது இப்படிப்பட்ட நிபந்தனைகள் தேவையற்றவை என்பதை நான் இங்கே குறிப்பிடவேண்டும். அதோடு நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதியுள்ள எதற்காகவும், அரசுக்கு அல்லது பொது ஊழியருக்கு எதிராக எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் தொடரப்படுதல் கூடாது என்ற ஒரு கட்டுப்பாடு இங்கே விதிக்கப்பட்டு இருக்கிறது. இது அடிப்படை உரிமைகளை மீறும் அளவிலே உள்ளது. அவர்களுக்கு நீதி மறுக்கப்படுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். வாடகை ஊர்தித் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையை இத்தச் சட்டம் உருவாக்கும், இருக்கை வரிகளை முன்பே

நீங்கள் உயர்த்தி விட்டீர்கள். பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தி விட்டது. இந்தச் சூழ்நிலையில், இந்தத் துறையிலே இருப்பவர்கள் நசுக்கப்படுகிறார்கள். தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட வேண்டும்.

பத்தி 5-ல் வரிக்கணிப்பு யாரால் நடைபெறும் என்பது தெளிவாக இல்லை. அதுபோல் மேல் முறையீடு அமைப்புக் குறித்தும் தெளிவாக இல்லை. இரண்டாம் மேல் முறையீடு மட்டும் வணிக வரி இணை இயக்குநரிடம் செல்ல வேண்டும் என்றும், சீராய்வு வணிகவரி இயக்குநர் அவர்களிடம் செல்ல வேண்டும் என்றும் மட்டும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது சரியாக இருக்காது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்தச் சூழ்நிலைகளின் அடிப்படையில், இந்தச் சட்டத்தை எதிர்த்து, அது நிராகரிக்கப்பட வேண்டும் என்ற எனது கோரிக்கையை வலியுறுத்தி நான் அமைகிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தில் தமிழ்நாடு எல்லை என்று சொல்வதற்கு ஒரு பெரிய விரிவான விரிவுரை கொடுக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு என்று சொன்னால், தமிழ் எல்லை என்று சொன்னால் போதும், அதற்கு நகரப் பகுதி என்று தெளிவாக அறிக்கை கொடுக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு எல்லை என்று சொன்னால் போதும். அதற்கு ஒரு பக்கத்திலே விரிவாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு என்று சொன்னால் It includes all parts of the State அது இல்லாமல், மிக விரிவாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இன்று வரி என்று சொன்னவுடனே மத்தியிலே ஆளுகின்ற தேசிய முன்னணி அரசும் சரி, அதிலே பங்கேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசும் சரி, டாக்ஸ் என்று சொன்னால் அள்ளி அள்ளி வாரி வீசி, ஏறத்தாழ 30,40 சதவீதம் விலைவாசி இன்று ஏறிக்கொண்டிருக்கிற நேரத்திலே இந்த டாக்சியை ஓட்ட முடியாத நிலை இருந்து கொண்டு இருக்கிறது. பெட்ரோல் விலை அதிகமாகிவிட்டது. டீசல் விலை ஏற்றப்பட்டிருக்கிறது. டயர், ஸ்பேர் பார்ட்ஸ் விலைகள் எல்லாம் ஏறியிருக்கக்கூடிய நேரத்தில், நீங்கள் இத்தகைய ஒரு டாக்சை ஏற்றினால் அது எந்த வகையிலே நியாயமாக இருக்கும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

முந்தைய அரசு இருக்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியிலே இருந்து கொண்டு, இந்தச் சட்டத்தை எதிர்த்தார்கள். அதிகமான வரி என்று சொன்னவர்கள்





நாங்கள் வந்தால் வரியைக் குறைப்போம் என்று சொன்னவர்கள் மக்கள் வசதியைப் பெருக்குவோம் என்று சொன்னவர்கள், இன்று வந்தவுடன் எந்தெந்த இடத்திலே டாக்சை ஏற்ற முடியுமோ, அந்த அளவிற்கு ஏற்றியிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய சுருக்கமான கருத்து.

11-05 மணி

இங்கே 15 மாதத்திற்கு முன்னால், இந்த ஆர்டினன்ஸ் வந்த நாளிலிருந்து என்றால் கூட பரவாயில்லை—அதற்கு 15 மாதத்திற்கு முன்னால் வாங்கியவர்கள் கூட இந்த டாக்சை செலுத்த வேண்டும் என்று சொல்வது ஏற்றுக் கொள்வதாக இல்லை. மேலும் இது யாரை பாதிக்கும் என்று சொன்னால், புவர் டாக்சி ஓனர்ஸ், படித்த இளைஞர்கள், செல்ப்-எம்ப்ளாய்மென்ட் ஸ்கீமிலோ, பாங்கிலிருந்து கடன் எடுத்தோ, டிக்கிலிருந்து கடன் எடுத்தோ வாங்கியவர்கள்தான் அதிகமாக பாதிக்கப்படுவார்கள். உங்களுடைய நோக்கம் பாண்டிச்சேரியிலிருந்து கார்கள் வாங்கிக் கொண்டு வருகிறார்கள் என்று இருக்கலாம். அதனை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்தப் பகுதியிலிருந்து யார் பாதிக்கப்படுகிறார்கள்? விலைவாசி ஏறுகிறது என்பதுதான் முக்கியமான நோக்கமாக இருக்கிறதே தவிர, இங்கே இருக்கின்ற சட்டத்தினுடைய நுணுக்கங்களிலே எல்லாம் நீங்கள் அதிகமாக வரியைப் போட மாட்டோம் என்று சொல்லிக் கொண்டு இந்த நுழைவு வரி என்ற பெயரால் அதிகமான வரிகளை, ஏழை எளிய மக்கள் மீது சுமத்துகிறீர்கள். டாக்சிக்காக வரி அதிகமாக வாங்கினால், அதை அந்த டாக்சிக்காரன் கட்டுவதில்லை. ஏழை எளிய மக்கள் வரிப் பணம் கொடுத்தால்தான் டாக்சிக்காரன் கட்ட முடியும். அவன் அதிகமாகக் கொடுத்துத்தான் டாக்சியில் ஏற வேண்டுமே தவிர, வசதி படைத்தவன் ஏ.சி. காரில் போவான். அவனுக்கு இது பிரச்சினை இல்லை. ஆனால் ஏழை எளிய மக்கள் இன்று காரில் செல்ல வேண்டுமென்று சொன்னால், வரி உயரும். வரி உயரும் என்று சொன்னால், அதை டாக்சிக்காரன் பொது மக்களிடமிருந்து வாங்க வேண்டும். எனவே இந்த அரசு இந்தச் சட்டத்தை பின்வாங்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து தவிரவும், இந்த மாதிரி சட்டங்களை நாட்டிற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக விலைவாசி ஆகாயத்தை எட்டும் என்பதில் ஐயப்பாடு இருக்க முடியாது. அத்தோடு நீங்கள் 'பெனல்டி' போடுகிறீர்கள். 'டபுள், ட்ரிபுள்' என்று சொல்கிறீர்கள். ஆனால் சொல்லுவது என்பது எளிதாகச் சொல்லிக் கொண்டு போகலாம். ஆனால் யார் கட்டுவது? டாக்ஸ் மிக அதிகமாக இருக்கிறது என்று அப்பீல் கொடுத்தால், முதலில் எல்லாவற்றையும் கட்டுங்கள் என்று சொன்னால், அதனுடைய நோக்கம் என்ன? ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் நான் கேட்கின்றேன். நிச்சயமாக அவன் வரிச் சலுகைகளுக்கு அப்பீல் கேட்க வரும்பொழுது நீங்கள் கட்டுங்கள், வக்கீல் பீசையும் கொடுங்கள் என்று சொன்னால், யாராலும் கட்டுவதற்கு முடியாது. ஆகவே ஏழை

[திரு. மா. சுந்தரதாஸ்] [1990 ஏப்ரல் 11

களுக்காக செலவு செய்கின்ற அரசு நிச்சயமாக இந்தச்
சட்டத்தை 'வித்ட்ரா' செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு உதவித் தலைவர்
அவர்களே, இன்றைய தினம் இயக்கூர்திகள் வெளி மாநிலங்
களில் வாங்கப்பட்டு, தமிழ் மாநிலத்திற்குள் கொண்டு வரப்
படுகின்ற நிலையில், விற்பனை வரியில் ஏய்ப்பு நடக்கின்றது
என்ற காரணத்தால் தமிழகத்திற்கு வர வேண்டிய வருமானம்
வேறு சிலருக்குச் சென்று கொண்டிருக்கின்றது. அரசாங்க
கஜானாவிற்கு வரவில்லை என்ற காரணத்தால் இப்படிப்பட்ட
ஒரு சட்டத்தினை தமிழக அரசு கொண்டு வந்திருக்கிறது. இதை
இந்திய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்
கின்ற அதே நேரத்தில், இப்படி விற்பனை வரி வெளி மாநிலங்
களில் இருந்து வாங்கப்படுகின்ற வாகனங்களின் பேரில் இயக்கப்
படுவதின் காரணமாக நம்முடைய அரசுக்கு வர வேண்டிய
பணம் வரவில்லை என்பது மட்டுமல்ல. இன்றைக்கு நிதிப்
பற்றாக்குறையின் காரணமாக நம்முடைய மக்கள் எதிர்
பார்த்துக் கொண்டிருக்கின்ற எத்தனையோ நல்ல விஷயங்கள்
இன்றைக்கு செயல்பட முடியாமல் இருக்கிறது என்பதை நாம்
ஆய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நான் இந்த நேரத்தில் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்பு
கிறேன். இந்த விற்பனை வரியில் மாத்திரமல்ல. நீங்கள் ஒரு
நல்ல விஷயத்தைக் கண்டுபிடித்திருக்கிறீர்கள். கண்டு பிடித்து
அவற்றை ஏய்ப்பவர்களைத் தடுப்பதற்கும் அதிலே நமக்கு உரிய
பங்காக வர வேண்டிய வருவாயைப் பெறுவதற்குமாக இந்தச்
சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்
தில் இதுபோன்ற பல்வேறு சட்டங்கள், வரிகள் தமிழ் மாநிலத்
திலே வருகின்ற வருமானத்தை ஏய்க்கின்ற வகையில் இந்த
ஓட்டைகளோடு காட்சியளிக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட
ஓட்டைகளையும் நாம் அடைப்போமானால் நமக்கு வர
வேண்டிய வரிப் பணம் உரிய அளவிலே வந்து சேரும். இந்த
விற்பனை வரிச் சட்டத்திலே ஒரு புதிய அணுகுமுறையின்
காரணமாக ஏழை எளிய மக்கள் கட்டாயமாக பாதிக்கப்படப்
போவதில்லை. இதில் பாதிக்கப்பட இருப்பவர்கள் எல்லாம்
வெளி மாநிலங்களிலிருந்து கார்களை வாங்கி அவற்றை உள்
நாட்டிலே கொண்டு வந்து விற்பனை செய்து, வெளி மாநிலத்
திற்கும், உள் மாநிலத்திற்கும் இடையே இருக்கின்ற வரி
யினுடைய வித்தியாசத்தை தங்களுக்கு ஆதாயமாக எடுத்துக்
கொள்வதற்கும்தான் இதுவரையிலும் இந்த நிலைமைகள் பயன்
பட்டு வந்தன. ஆகவே ஒரு சில இடைத் தரகர்கள் அல்லது
விற்பனையாளர்கள் பெற்று வந்த வருமானம் இன்றைக்கு நம்
முடைய மாநில அரசுக்கு வந்து நல்ல பல திட்டங்களுக்கு உதவப்
போகின்றது என்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்,



1990 ஏப்ரல் 11] [திரு. செ. நூர்முகமது]

11–10 மணி

அதே நேரத்தில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல்
நமக்குத் தேவையான பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டி
யிருக்கிறது. அவைகளுக்குத் தேவையான பணம் இல்லை.
யானைப் பசிக்கு எள் உருண்டை என்பது போல் தமிழக மக்க
ளுடைய தேவைகள் ஆயிரமாயிரமாக இருந்தாலும்கூட, அதற்குத்
தேவையான நிதியாதாரங்கள் இல்லாத காரணத்தாலே நாம்
பல்வேறு கோரிக்கைகளை இல்லை என்றோ, பிறகு பார்க்கலாம்
என்றோ, தட்டிக் கழித்து வந்திருக்கிறோம். தாகத்திற்குத்
தவித்துக் கொண்டிருக்கின்ற கோடிக் கணக்கான மக்கள்
தண்ணீர்த் திட்டம் கேட்டால், பணம் இல்லை என்கிறோம். பல்
லாங்குழிப் பலகைகள் போல் காட்சியளிக்கின்ற சாலைகள்
சீர்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டால் பணம் இல்லை என்
கிறோம். பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் கட்டிடங்கள் வேண்டும்.
அவைகள் இடிந்து விழுகின்ற நிலையிலே இருக்கிறதே, கட்டிடம்
கட்டித் தாருங்கள் என்று கேட்டால் பணம் இல்லை என்று
சொல்லுகிறோம். மருத்துவ வசதியை விரிவுபடுத்தித் தர
வேண்டும் என்று சொன்னால் பணம் இல்லை என்று சொல்லு
கிறோம. ஆனால் பணம் இல்லை பணம் இல்லை என்று சொல்
வது மாத்திரம் அல்ல; ஒரு அரசுடைய கடமை தேவையான
பணத்தை சாதாரண மக்களிடமிருந்து அல்ல, ஏழை எளிய மக்க
ளிடமிருந்து அல்ல மாறாக எந்த இடங்களிலிருந்து பெறுவதற்கு
இயலுமோ அப்படிப்பட்ட பெரிய இடங்களிலிருந்து அந்தப்
பணத்தை எடுக்கிற ஒரு முயற்சியாக இந்த முயற்சி அமைய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே தான் இப்படிப்பட்ட வாகனங்களை உள் மாநிலத்திற்குக்
கொண்டு வருகிற நேரத்தில் ஏற்பட்டிருக்கிற வரி ஏய்ப்பைத்
தடுக்கிற வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதுபோல்
வேறு பல வரிகளிலேயும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதா
என்று சீர் தூக்கிப் பார்த்து அவைகளிலேயும் ஒரு திருத்தத்தைக்
கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதுபோல என்னுடைய மற்றொரு கருத்தை நான் சொல்ல
விரும்புகிறேன். இன்றைக்கு நாம் பணம் இல்லை என்று சொல்லு
கிற நேரத்தில் நம்முடைய தமிழகத்தில் எந்தப் பகுதிக்குச்
சென்றாலும் பார்க்கலாம். பரிசுச் சீட்டுக் கடைகள் மலிந்து
கிடக்கின்றன என்று. லாட்டரி சீட்டுகள்—தமிழக மக்களுக்கு
எளிதாக லட்சாதிபதியாக வேண்டும் என்பதிலே ஆர்வமும் மோக
மும் அதிகமாக இருக்கின்றன. அதைப் பயன்படுத்திக் கொண்டு
வெளி மாநில லாட்டரிகள் எல்லாம் ஏராளமான கவர்ச்சிகரமான
திட்டங்களை அறிவித்து இங்கிருந்து ஏராளமான பணத்தைக்
கொண்டு செல்கிறார்கள். இத்தோடு அது சம்பந்தம் இல்லை
என்றாலும் கூட இதனுடைய நோக்கம் நம்முடைய அரசாங்
கத்தினுடைய கஜானாவிற்கு அதிகமான பணத்தைக் கொண்டு

வந்து நாட்டு மக்களுக்கு நல்ல திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாக இது கொண்டு வரப் படுகிற காரணத்தால் இப்படிப்பட்ட லாட்டரி சீட்டுகளின் மூலமாக வெளி மாநிலங்களுக்கு ஏராளமான பணம் செல்கிறதே அதையும் தடுத்து நிறுத்தி நம்முடைய தமிழகத்திலேயே கவர்ச்சிகரமான பல திட்டங்களை அறிவித்து அந்தப் பணம் முழுவதும் நம்முடைய பகுதி மக்களுக்குப் பயன்படுகிற வகை, யிலே முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட பெரிய பணக்காரர்களிடமிருந்து வருகிற பணத்தின் மூலம் நம்முடைய வருமானத்தைப் பெருக்கி கொள்கிற நம்முடைய அரசு நல்ல பல திட்டங்களுக்கு அவற்றை செலவழித்து மக்களுடைய பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயல வேண்டும். குறிப்பாக ஏழை மக்களுக்கு ரேஷன் அரிசி விலையை உயர்த்தியது போன்ற விலை உயர்வுகளையெல் லாம் ரத்து செய்து அவர்கள் முகம் மலருகிற வகையிலே நிலைமையை உருவாக்க வேண்டும் என்று கோரி விடை பெற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இந்த புதிய சட்டமானது அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு மிகவும் விரோதமான ஒரு சட்டம் என்பதை நான் முதலிலே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆர்டிகின் 286-வது விதியின் கீழ் "No tax shall be imposed on sale or purchase which takes place outside a state." என்று ஆணித்தரமாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தின் அடிப்படையிலே வெளி மாநிலத்திலே வாங்கப்பட்டு, அங்கேயே டெலிவரியும் செய்யப்பட்டிருக்கிற ஒரு பொருள் மீது இன்றைக்கு இந்த மாநிலத்திலே நாம் டாக்ஸ் போடுவது சட்ட விரோதம் என்பதை முதலிலே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் இதற்கு முன்பு இதே போன்ற நிலைமை பம்பாய் மாநிலத்திலே ஏற்பட்டு அன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டிலே அந்த வழக்கு நடைபெற்ற நேரத்தில் சுப்ரீம் கோர்ட் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. எந்த ஒரு பொருள் மீதும் நீங்கள் வரியைப் போட வேண்டுமென்று சொன்னால் அந்த மாநிலத்திற்குள்ளே வாங்கப்பட்டிருக்க வேண் டும். சேல்டீட் சட்டப்படி செய்திருக்க வேண்டும். டெலிவரி யும் செய்யப்பட்டிருந்தால் தான் டேக்ஸ் போட வேண்டும். இந்த இரண்டும் நடைபெறவில்லை என்று சொன்னால் வேறு மாநிலத்தைச் சேர்ந்த பொருள்களுக்கு வரி போட முடியாது என்று தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இப்படிப் பட்ட சூழ்நிலையில் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இருக்கக் கூடிய இந்தச் சட்டத்தை இன்றைக்கு நாம் அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் இந்த அரசாங்கம் மறு பரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அதோடு செண்டிரல் சேல்ஸ் டாக்ஸைப் பொறுத்த<br>
வரையில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 3-வது பிரிவிலும்,<br>
4-வது பிரிவிலும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு<br>
மாநிலத்திற்குள் விற்பனை செய்கிற பொருள் மீது மற்றொரு<br>
மாநிலம் வரி போட முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள்.<br>
இந்த நிலைமையிலே இந்த சட்டமானது தோற்கக் கூடிய நிலை<br>
மையில்தான் இருக்கும். சிலருக்கு வேண்டுமானால் தொல்லை<br>
கள் கொடுக்கக் கூடிய நிலையிலே இந்தச் சட்டங்கள் இருக்கலாம்<br>
என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நான் ஒன்றைச்<br>
சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு சொல்லி இருப்பது<br>
நம்முடைய மாநிலத்திலிருந்து வருகிற வருமானத்தை மற்ற<br>
மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பெற்று விடுகிறார்கள். காரணம்<br>
அவர்கள் குறைவான அளவிலே டாக்ஸ் போட்டிருக்கிறார்கள்<br>
அதனால் அவர்களுக்குச் சென்றுவிடுகிறது என்று சொல்லு<br>
கிறார்கள். இந்தச் சட்டத்தை அமல்படுத்தி, இதுவும் செல்லும்<br>
என்று சொன்னால், மற்றவர்கள் இதை மேலும் மேலும் ஏமாற்<br>
றக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏனென்று சொன்னால், ரிஜிஸ்ட்<br>
ரேஷனை அவர்கள் இங்கே செய்யவில்லையென்று சொன்னால்,<br>
அந்த மாநிலத்திலேயே அவர்கள் ரிஜிஸ்ட்ரேஷன் செய்து விடு<br>
கிறார்கள். செய்து விட்டால், இனி வருகின்ற ஆண்டுகளில்கூட,<br>
நமக்கு வரவேண்டிய டாக்ஸ்கள் வராது. இங்கேயே வாங்கி<br>
ரிஜிஸ்ட்ரேஷன் செய்வதால், ஒவ்வொரு ஆண்டும் அந்த டாக்ஸ்<br>
நமக்குக் கிடைக்கிறது. இல்லையென்று சொன்னால், அவர்கள்<br>
அந்த மாநிலத்திலேயே வாங்கி அங்கேயே ரிஜிஸ்ட்ரேஷன் செய்து,<br>
ஆண்டாண்டு—ஒவ்வோர் ஆண்டும் அந்த வரியைச் செலுத்தி<br>
விடுவார்கள். வரி இழப்புதான் இதனாலே அதிகமாகுமே தவிர,<br>
வரி அதிகமாகக் கூடும் என்ற ஒரு நிலை இல்லை என்பதைத்<br>
மட்டும் இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.<br>
அதோடு மட்டுமல்லாமல் நாம் அரசாங்கத்திற்கு அதிகமான<br>
வரிகள் கிடைக்க வேண்டுமென்ற காரணத்திற்காக இந்தச்<br>
சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு முன் தேதி<br>
யிட்டு, 15 மாதங்களுக்கு முன்பிருந்தே இதை அமலாக்க வேண்டு<br>
மென்று சொல்லும்போது, பலர் இதை அறியாதவர்கள், எந்த<br>
அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க<br>
வேண்டும்.

11-15 மணி

வருமானம் அதிகமாக வரவேண்டுமென்று இதை அறிவித்<br>
திருக்கிறீர்கள். சமீபத்திலே; ஒரு அறிவிப்பை—ஒரு ஜி.ஓ.-வை<br>
அரசாங்கம் போட்டிருக்கிறது. 1974 ஆம் ஆண்டு வரையிலே,<br>
அதற்கு முன்பும் சரி, வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்கு கார்<br>
களைக் கொண்டு வந்தால், அவர்களுக்கு, மூன்று மடங்கு வரிகள்<br>
போடப்பட்டன. அந்த மூன்று மடங்கு வரியை இன்றைக்கு ரத்து<br>
செய்து உள்ளது. 1974 ஆம் ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டு<br>
களிலும் வாங்கிய வெளிநாட்டுக் கார்களுக்கு, இப்போது நாம்<br>
வரி விலக்கைத் தருகிறோம். எதற்காக? யாருக்காக? அல்லது

லாபம் அடையக்கூடியவர்கள் யார் என்ற விவரத்தை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இதிலே பல்வேறு தவறுகள் இருக்கின்றன. 1974 ஆம் ஆண்டு வரிவிலக்கு தர வேண்டுமென்று சொன்னால், இப்போது வேண்டுமானால் வரி விலக்கு தரலாம்.—ஆனால், 1990 ஆம் ஆண்டில் நாம் இருக்கிறோம்--1974 ஆம் ஆண்டும் அதற்கு முன்பும் வாங்கிய வெளிநாட்டுக் கார்களுக்கு வரிவிலக்கு 3 மடங்கு என்று போடப்பட்டிருப்பதை, ஒரே அளவிலே, உள்நாட்டுக் கார்களுக்கு என்ன வரியோ அதேதான் என்று சொல்கிறீர்கள், அதிலே சிலபேருக்கு சலுகை செய்ய வேண்டுமென்ற முறையில்தான் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு நுழைவு வரி என்ற வார்த்தையை உபயோகப்படுத்தியிருக்கிறீர்கள். சேல்ஸ் டாக்ஸை, அன்றைக்கு நம்முடைய மூதறிஞர் இராஜாஜி அவர்கள், 1936 ஆம் ஆண்டு கொண்டு வந்த நேரத்திலே மதுவிலக்கைத் தீவிரமாக அமலபடுத்தியதன் காரணமாக, அரசாங்கத்திற்கு சில இலட்ச ரூபாய் இழப்புகள் ஏற்பட்டன. அதை சரி செய்வதற்காக, அந்த சில இலட்சத்திற்காகத்தான் சேல்ஸ் டாக்ஸை அமல்படுத்தினார்கள். இன்றைக்கு சேல்ஸ் டாக்ஸானது, வளர்ந்து அதுவே 1,440 கோடி ரூபாய் அளவிலே சென்று கொண்டிருக்கிறது. இது காலப் போக்கிலே வளர்ந்து பல கோடிக் கணக்கான ரூபாயை, தமிழக மக்கள் மீது வரிச் சுமையை சுமத்துவதற்கான ஏற்பாடாகும். ஏற்கனவே நுழைவு வரி தேவையில்லை என்று இந்த மாமன்றத்திலே அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும், மற்ற எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களும் போராடி இருக்கிறார்கள். அந்த வார்த்தையை நீக்கி விடுங்கள். அதோடு மட்டுமல்ல, இந்த சட்டமே அரசியல் சட்டத்திற்கு முரணான ஒரு சட்டம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அதை வாபஸ் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த சட்டத்தை இந்த மாமன்றம் நிராகரிக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. எம். இராமச்சந்திரன்: பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கொண்டு வந்திருக்கிற இந்த வாகனச் சட்டம், மிகவும் வரவேற்கக் கூடிய ஒன்று. காரணம், இது ஏழை எளிய மக்களுக்கு எந்தவிதமான துன்பத்தையும் தருகிற ஒரு விஷயம் அல்ல. கார் வைத்திருப்பவர்கள் ஏழைகளாக இருக்க முடியாது. பேருந்துகளில் பயணம் செய்கிறவர்கள் ஏழைகளாக இருக்கின்றார்கள். அந்த மாதிரி, சரியற்ற முறைகளை இந்த அரசு பின்பற்றவில்லை. இது சம்பந்தமாக ஏமாற்று வேலைகள் நடைபெறுகிற காரணத்தினால்தான், நம்முடைய மாநிலத்திற்குள் வாங்குகிற வாகனங்களுக்கு





சரியான முறையிலே வரி செலுத்தப்படுகிறது. அதேசமயத்தில், வாகனங்களை வாங்குகிறவர்கள், வெளி மாநிலங்களிலிருந்து வாங்கிக் கொண்டு வந்து, நம்முடைய மாநிலத்தில் வரியைக் கட்டாமல், ஏய்க்கிற--ஏமாற்றுகிற ஒரு நிலைமைதான் இங்கே இருக்கிற காரணத்தினால், ஒரு வகையிலே அரசாங்கத்திற்கு வருமானம் வர வேண்டும் என்ற நோக்கத்தோடு வரியைப் போட்டார்கள் என்ற நிலைமை இருந்தாலும், அதேமுறையில் தான், தமிழக அரசாங்கத்தை—ஒரு மாநிலத்தை ஏமாற்றுகிற ஒரு முறையில், டீலர்ஸ் மற்றும் ஏஜன்ஸீகளாக செயல்படுகிறார்கள் என்கிற காரணத்தால் அந்த முறையில் மாறுதல் அளிக்கவேண்டும் என்கிற எண்ணத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருப்பது எல்லோரும் வரவேற்க வேண்டிய விஷயம். இதிலே மாற்றுக் கட்சி நண்பர்கள் எல்லாம் சட்டத்திற்குப் புறம்பான, அரசியல் நிர்ணயச் சட்டத்திற்குப் புறம்பான ஒரு விஷயம் என்று எல்லாம் சொன்னார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை.

11–20 மணி

1939-இல் சட்டம் கொண்டு வருகிறபோதே, அதிலே இருக்கிற முறைகள் எப்படியெப்படியெல்லாம் செயல்பட வேண்டும். என்று அந்தந்தக் காலங்களுகேற்றவாறு சட்டத்தை ஆக்கிக் கொள்ளலாம் என்கிற நிலைதான். ஆகவே 1939–ல் இருக்கிற சட்டத்தை ஒன்றாக நாம் மாற்றப் போவதில்லை. அதேபோல் அந்தந்த நிலைகளுக்கேற்றவாறு மற்ற மாநிலங்களில் வாங்கிக் கொண்டு நம் மாநிலத்தில் வரியை ஏய்ப்பவர்களுக்கு இந்த முறை செல்லும். ஆகவே இப்படிப்பட்ட முறையை நடைமுறைப்படுத்துவதுதான் நம் மாநிலத்திலுள்ள அரசாங்கத்தினுடைய வரி செலுத்துபவர்களுடைய கடமை. இதிலே தனியார்கூட சொல்லியிருக்கிறார்கள். சட்டத்திலே சொல்கிறபோதுகூட, இதிலே சொந்தமாக உபயோகப்படுத்துவதற்கு சலுகை கூட அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, டீலர்கள் மட்டும்தான் வரி கொடுக்க வேண்டும் என்கிற நிலை இருக்கிறது. வாங்குபவர்களுக்கு அல்ல. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறபோது, மொத்தமாக டீலர்கள் இங்கேயும் ஒரு அலுவலகத்தை வைத்துக் கொண்டு, அடுத்த மாநிலத்திலேயும் வைத்துக்கொண்டு, அந்த மாநிலத்திலே வண்டிகளை வாங்கி, இங்கே நம்மவர்களுக்கு விற்கிறார்கள். உரிமை உள்ளவர்கள் ,இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அடுத்த மாநிலத்திலே வாங்குகிறபோது தான் இந்தப் பிரச்சினை வருகிறது. ஆகவே, அந்த மாநிலத்திலே இருக்கிற உறுப்பினர்கள், அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வாங்குகிறபோது இந்த நிலை வருமேயானால், அதை நாம் கூட வரவேற்க வேண்டிய விஷயம் அல்ல. இந்தச் சட்டம் சரியானதல்ல என்றுகூட வாதிடலாம். ஆனால், இங்கிருப்பவர்கள் அங்கு போய் வாங்கிக்கொண்டு வந்து, இந்த அரசை

[திரு எம். இராமச்சந்திரன்] [1990 ஏப்ரல் 11

ஏமாற்றுகிற ஒரு நிலை இருக்கிற போது, இந்தச் சட்டம் உண்மை யிலேயே நமக்குத் தேவையான ஒரு சட்டம். அரசாங்கத்திற்கு ஒரு வருமானம் தருகிறது. ஆகவே, ஏமாற்றுபவர்களைத் த்டுக்கிற சட்டமாக இருப்பதால் அந்த முறையில் இச்சட்டத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எல். கணேசன் ; (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இந்த மசோதா மீது எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஆளுங் கட்சி உறுப்பினர்களும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கருத் துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் சட்டம் பயின்ற வர்கள் என்கிற காரணத்தால், மிகுந்த விழிப்போடு இந்த வினா வைத் தொடுத்தார்கள்—முன் அனுமதியைப் பெற வேண்டாமா? —பெறவேண்டும் என்று அறுதியிட்டு, உறுதியாகச் சொல்லாமல், பெற வேண்டாமா என்று மிகுந்த விழிப்போடு சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் சட்டம் பயின்றிருக்கிறாரா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. அவர் ஒன்றை, இது அரசியல் சட்டத்திற்கு விரோதமான சட்டம் இல்லையா என்று கேட்டார்கள். அரசியல் சட்டத்திற்கு விரோத மான ஒரு சட்டத்தை எந்தச் சட்டமன்றமும் நிறைவேற்ற முடி யாது. நிறைவேற்றினால் அது செல்லாது என்பது அடிப்படை யான அரசியல் ஞானம். ஆகவே, அவர்கள், நான் நம்புகிறேன். இரண்டு வரிகளைக் குழப்பிக் கொள்கிறார்கள் என்று கருது கிறேன். ஒன்று விற்பனை வரியையும் நுழைவு வரியையும் ஒன் றாக்கி அவர்கள் குழம்புகிறார்களோ என்று நான் கருதுகிறேன். விற்பனை வரி மீது மீண்டும் விற்பனை வரி விதிக்க முடியாது என்பது வேறு. ஆனால், இது நுழைவு வரி. நுழைவு வரி, விற்பனை வரி அல்ல. அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அடிப் படையில் நுழைவு வரி விதிக்கலாம். Entry 52 of the State List of Schedule VII of the Constitution of India. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர் கள் எழுப்பிய அரசியல் சட்ட விரோதமானது, அன்-கான்ஸ் டிடியூஷனல், Ultra-Vires ot the Constitution என்ற அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு இது உடந்தையானதல்ல. உட்படாதது என்பதை நான் மிகத் தெளிவாக வற்புறுத்திச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போலவே இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு.பொன்னு சாமி அவர்கள் வரி விதிப்பு அலுவலர், முதல் மேல்முறையீட்டு அலுவலர் யார் என்பது குறிப்பிடப்படவில்லை என்று சொல்லி யிருக்கிறார்கள். செக்ஷன் 5, 6-இல் குறிப்பிட்டதுபோல, அறி விப்பு, நோட்டிபிகேஷன் மூலமாக வரி விதிப்பு அலுவலர்களும்,



1990 ஏப்ரல் 11] [திரு. எல். கணேசன்]

முதல் மேல்முறையீட்டு அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை நான் அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகத் தெரி வித்துக் கொள்கிறேன்.

11—25 மணி

இங்கே இந்தச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் அதன் நோக் கத்தை அருள்கூர்ந்து புரிந்துகொள்ள வேண்டும். இந்தச் சட் டம் என்பது வரி ஏய்ப்பவர்கள் அல்லது மாநில அரசினுடைய வருவாயை வரி ஏய்ப்பின் மூலம் குறைக்க விரும்புகிறவர்கள். அப்படிச் செய்யாமல் தடுப்பதுதான் நோக்கமே தவிர, இது ஒரு பெரிய சட்டம் அல்ல, பெரிய அளவிலான எதிர்பார்ப்புடையது அல்ல என்பதை நீங்கள் அருள்கூர்ந்து புரிந்து கொள்ளவேண்டும். அண்டை மாநிலங்களில் இயக்கூர்திகள் மீது விற்பனை வரி நம் மாநிலத்தைவிடக் குறைவாக இருப்பதால் இயக்கூர்தி வணிகர்கள் பிற மாநிலங்களில் கிளைகளைத் திறந்து, இம் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், குறைவான விற்பனை வரி விதமுள்ள பிற மாநிலங்களில் உள்ள இயக்கூர்திகளை வாங்கத் தொடங்கினர். இம் மாநிலத்தைவிட்டு பிற மாநிலங்களில் விற் பனை வரி வீதம் மிகவும் குறைவாக இருக்கும் காரணத்திற்காக இம் மாநிலத்தில் குடியிருந்து இயக்கூர்திகளை பயன்படுத்துபவர் கள் பிற மாநிலத்தில் இயக்கூர்திகளை வாங்குகின்றனர். சில இனங்களில் வணிகர்கள், தமிழ்நாட்டிலுள்ள சென்னை மற்றும் பிறஇடங்களில் இயக்கூர்திகளை ஒப்படைத்துவிட்டு, பிற மாநிலத் தில் விற்பனை நடந்ததைப்போல் பாண்டிச்சேரி விற்பனை ரசீது கொடுக்கின்றனர். இவ்வாறு வணிகர்களும் வாங்குபவர் களும் இணைந்து கடைப்பிடிக்கும் இத்தவறான செயலால் தமிழ் நாடு அரசாங்கத்திற்கு கணிசமான வருவாய் இழப்பு ஏற்படு கிறது. இதைத் தடுக்கத்தான் இந்தச் சட்டம். இதையும்கூட 25—9—1989-ல் அமைச்சரவைக் கூட்டத்தில் மத்தியஅரசு ஒப்புதல் பெற்று, இயக்கூர்திகள் மீதான வரி விதிக்கலாம் என்று முடி வெடுக்கப்பட்டது. அமைச்சரவையின் முடிவின்படி 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளில் இயக்கூர்திகளின் மீதான வரி அவசரச் சட்டம் வரைவு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது. ஒப்புதலுக்காக 11—10—1989 அன்று அனுப்பப்பட்டது. மத்திய அரசின் ஒப்புதல் 20—1—1990 அன்று பெறப்பட்டது.

அதைப்போலவே பிறப்பிக்கப்படுகின்ற அவசரச் சட்டம் உங்களுக்குத் தெரியும், ஒரு காலக்கட்டத்திற்குமேல் அதற்கு உயிரில்லை. அதைச் சட்டமாக ஆக்கவேண்டும். எனவேதான் இந்தச் சட்ட முன்வடிவு இங்கே வந்திருக்கிறது. நான் ஒரே ஒரு புள்ளிவிவரத்தை மட்டும் சொல்கிறேன்.

ஸ்கூட்டரின்மீது நம்முடைய விற்பனை வரி 4 சதவீதம், ஆனால், பாண்டிச்சேரியில் 3 சதவீதம். மோட்டார் சைக்கிள்மீது நம்முடைய விற்பனை வரி 4 சதவீதம், பாண்டிச்சேரியில் 3 சத வீதம். Jeep, Van, sales tax 8 percent, whereas it is only 4 percent in Pondicherry.மோட்டார் கார் மீது நாம் 5 சதவீதம் விதிக்கிறோம். அவர்கள் 3 சதவீதம் விதிக்கிறார்கள். திரீ வீலர்ஸ், நாம் 15 சத வீதம்: அவர்கள் 3 சதவீதம். சேசிஸ், நாம் 6 சதவீதம், அங்கே 3 சதவீதம். லாரி மற்றும் பஸ்ஸஸ் 15 சதவீதம் இங்கே, அங்கே 4 சதவீதம். இந்த விற்பனை இடைவெளியை அவர்கள் ஏமாற்றுவதற்காக பயன்படுத்துகிற காரணத்தினாலேதான், ஏமாற்றாமல் தடுப்பதற்காக, வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக இந்தச் சட்டமே தவிர, யாரையும், யார் மீதும் வன்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இல்லை. இயக்கூர்தி களின் நுழைவின்மீதான அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்பு 1990மார்ச் திங்கள் வரையில் 55 இலட்சம் ரூபாய் வரி வசூ லிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இதிலே அரசியல் சட்ட சிக்கல் இல்லை. இதிலே யாரையும் தண்டிக்கிற நோக்கம் இல்லை. இது வரி ஏய்ப்பவர்களைத் தடுக்க வேண்டும் என்கிற முயற்சியே தவிர, அதற்கும் வக்காலத்து வாங்குவது எந்தவகை யிலும் நியாயமில்லை. எனவே, இந்தச் சட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பேசியபோது பத்தி 5, 6 பற்றி, தெளிவாக இல்லையென்று மட்டுந்தான் குறிப்பிட் டேன். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சி மன்றச் செயலர் அவர்கள் அவசரச் சட்டத்திலே பேசும்போது மிகவும் அவசரப்பட்டு ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். 5-ம், 6-ம் யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார்கள். இங்கே நானும் சட்டம் பயின்றவன் என்ற முறையிலே சொல்கிறேன். 'The Government May by notifica'ion appoint' என்று தான் இரண்டிலும் வருகிறது. இனிமேல் அவர்களை நிய மிப்பதற்கு அதிகாரம் வழங்குகின்ற ஒரு பத்தியாக இருக்கிறதே தவிர, அந்த அதிகாரத்தின்படி இந்த வணிக வரி விதிப்புக்குழு வும், மேல்முறையீட்டுக் குழுவும் அமைக்கப்பட்டுவிட்டதாக எந்த இடத்திலும் இல்லை. அதைத்தான் நான் குறிப்பிட் டேன். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சி மன்றச் செயலர் அவர்கள், அப்படி நியமிக்கப்பட்டிருக்கின்ற அவர்கள், யார் யார் என்பதை தெளிவாக்கவேண்டுமென்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

Thiru L. GANESAN : (Parliamentary Secretary to Chief Minister): It is only by notification. It will be done hereafter.



திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அறிமுகப்படுத்துவதற்கு முன்பாகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள், ஜனாதிபதியினுடைய முன் அனுமதி பெறப்பட்டிருக் கிறதா என்ற ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். அதை நாங்களும் வலியுறுத்துகிறோம். அதைப்போல கான்ஸ்டிடியூச னுடைய ஆர்டிகிள் 286-ல் மிகத் தெளிவாக, இதற்குத் தடை விதித்திருக்கிறது.

11-30 மணி

'No law of a State shall impose or authorise the imposition of a tax on the sale or purchase of goods where such sale or pu chase takes place (a) outside the Sta;e or (b) in the cou1se of the import of the goods into, o: export of the goods out of the te11i to1y of Ir.dia.' என்று ஆர்ட்டிகிள் 286-இல் தெளிவாகக் கூறப்பட் டிருக்கிறது. இவர்கள் குறிப்பிடுகிற ஷெட்யூல் 7, என்ட்ரி 52இல் ஏற்கெனவே வரி விதிக்கப்பட்ட எந்தப் பண்டத்திற்கும், எந்தப் பொருளுக்கும் மீண்டும் வரி விதிக்கிற உரிமை மாநில அரசாங் கத்திற்கும் இருப்பதாகக் கூறப்படவில்லை. நுழைவு வரி விதிக்க லாம் என்றுதான் இருக்கிறதே தவிர, குறிப்பிட்ட பொருட்களின் மீது சில நுழைவு வரிகளை விதிக்கலாம் என்று இருக்கிறதே தவிர, ஏற்கெனவே ஒரு மாநிலத்தில் விற்பனையான பண்டத்திற்கு, இன்னொரு மாநிலத்தில் நுழைகிறபோது அதற்கு நுழைவு வரி விதிக்கலாம் என்று எங்கும் இல்லை.

En ry 52 in List II–State List of Seventh Schedule ''Taxes on the entry of goods into a local area for consumption use or sale therein.' என்றுதான் இருக்கிறதே தவிர, ஏற்கெனவே ஒரு மாநிலத்தில் வரிவிதிக்கப்பட்ட எந்தப் பண்டமும், எந்தப் பொருளும், எந்த வாகனமும் இந்த மாநிலத்திற்குள் நுழைந்தால் மீண்டும் ஒரு நுழைவு வரி விதிப்பது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது. எனவேதான், இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடி வுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

" 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 13/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்,"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 20 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக் குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/1990) நிறை வேற்றப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 10. மானியக்கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 12, தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ், ரூ. 6,55,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும். "





திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆவர்களே, செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் நகரில் உள்ள ஜானகிராம் பந்துலு அறக்கட்டளை நிர்வாகத்தை, இந்து சமய அறநிலையத்துறை ஏற்று நடத்த வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 12 தமிழ்நாடு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,55,75,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையில் நிர் வகிக்கப்படும் ஆலயங்களுக்கு அறங்காவலர் குழு அமைப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 12 தமிழ்நாடு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,55,75,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

Thiru M. SUNDARADAS : Sir, to discuss about the conversion of the temple tank of Thiruvateeswarar temple in Madras into a shopping complex, I move the cut motion standing in my name, namely:—

" That the allotment of Rs. 6,55,75,000 under Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959—be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவை முன் விவாதத் திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

11-35 மணி.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய திருக்கோயில்களிலே நடைபெற வேண்டிய நற்பணிகளைப்பற்றி இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைக்க ஏதுவாக கொள்கை விளக்கக் குறிப்பு* ஒன்றை இங்கே வைத் திருக்கிறோம். அவைக் குறிப்பில் அதை ஏற்றிக்கொள்ள

* 334-349-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. கே. பி. கந்தசாமி] [1990 ஏப்ரல் 11

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்ட பிறகு என்னுடைய பதிலை நான் தருகிறேன். அதற்கிடையில் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் என்னிடத்திலே ஒரு குறிப்பைத் தந்து இருக்கிறார். அதிலே சொல்லியிருப்பது என்னவென்றால் அறநிலையத் துறை மானியத்தை முன்னிட்டு உறுப்பினர் களுக்கு சர்க்கரைப் பொங்கல், அக்காரவடிசல், லட்டு, புளியோதரை தரப்படுமா என்ற ஒரு கேள்வி எழுப்பப் பட்டிருக்கிறது. தலைவர் அவர்கள் அனுமதி தந்தால்– இந்த ஆண்டு அதற்கு நாங்கள் தயாராக இல்லை– அடுத்த ஆண்டு தரப்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் தொடங்குகிறது, முதலாவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேல் அவர்கள்.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதற்குத் தாங்கள் அனுமதி தந்தீர்களா இல்லையா என்று தெரியவில்லை. அப்படித் தந்தாலும் அடுத்த ஆண்டு, அப்போது தயாரித்துக் கொடுக்கச் சொல்லுங்கள். இப்போதே தயாரித்துக் கொடுத்தால் வீணாகிவிடும். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலில் கூறியதை மீண்டும் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் ஒரு குறிப்பை என்னிடத்தில் தந்திருக்கிறார். அதிலே அவர் கேட் டிருப்பது அறநிலைய மானியத்தை முன்னிட்டு உறுப்பினர் களுக்கு சர்க்கரை பொங்கல், அக்காரவடிசல்,லட்டு, புளியோதரை தரப்படுமா என்பது, அவ்வாறு கேட்டிருக்கிறார்கள். நாங்கள் இந்த ஆண்டு தயாராக இல்லை, அடுத்த ஆண்டு அவைத் தலைவர் அனுமதி தந்தால் அதற்கான ஏற்பாடு செய்யப் படும் என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது அவை மூலமாகத் தரப்பட வேண்டிய ஒரு பொருள் அல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரும்பினால் தனிப்பட்ட முறையில் கோயி லுக்கு அழைத்துச் சென்று அனைவருக்குமே தரலாம் என்று கூறி விவாதத்தைத் தொடங்கி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. தங்கவேல்......



1990 ஏப்ரல் 11]

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலில் பழனி பஞ்சாமிர்தத்தை யும் சேர்த்துக்கொண்டால் நலமாக இருக்கும். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து தங்கவேல் அவர்கள் பேசுவார்கள்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் மிக தித்திப்பான பொருட்களை ஒருமுறைக்கு இருமுறை இங்கே அறிவித்துவிட் டார்கள். ஆகவே இதற்கு ஓராண்டு கால அவகாசம் தேவை யில்லை. இன்றைக்கே அவர் நினைத்தால் கொடுத்துவிட முடியும். எனவே அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்குத் தயா ராக இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இனிமேல் தயார் செய்ய முடியாது.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே மிகப் புராதனமான ஆலயமாகிய பழனி பஞ்சாமிர்தத்தையும் சேர்த்துக் கொள்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, பஞ்சாமிர்தம் தரப்படும். ஆனால் அது நிச்சயமாக பழனி போன்று பல்வேறு கோயில்களில் லட்டு மற்றும் வடை பாயாசத் தோடு இருக்கக்கூடிய பல்வேறு பிரசாதங்கள் இருக்கின்றன. அனைத்து முக்கியமான கோயில்களில் இருக்கக்கூடிய பிரசாதங் களும் சேர்த்து நிச்சயமாகத் தரப்படும் என்பதை நான் தெரி வித்துக்கொள்கிறேன்.

*திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, இங்கே பெரும்பாலானவர்களுக்கு சர்க்கரை வியாதி இருக்கும். (சிரிப்பு). எனவே இனிப்பு தந்தால் பயன் இல்லை. ஆகவே காரம் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து இனிப் புடன் திரு. தங்கவேல் அவர்கள் பேச்சைத் தொடருவார்கள்.

11-40 மணி

*திரு. எம். தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இந்து சமய அறநிலையத் துறையினுடைய மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற அண்ணா

[திரு. எம். தங்கவேல்] [1990 ஏப்ரல் 11

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இனிப்புடன் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கோயில்கள் மூலமாக கோயில்கள், கலாச்சாரங்கள், கலைச் செல்வங்கள் பாதுகாக்கப்படுகின்றன. இந்தியாவில் அறநிலையத்துறை பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டாலும் தமிழகத்தில் தான் கலைச் செல்வங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

குறிப்பாக மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலேதான் இந்து சமய அறநிலையத்துறை மிகச் சிறப்பாக செயல்பட்டது. கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம் என்று நம் முன்னோர்கள் சொன்ன மொழிக்கேற்ப புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கோயில்களிலே இருக்கின்ற சிலைகளை எல்லாம் ஆங்காங்கே மக்கள் விரும்புகின்ற அளவுக்கு அவர்கள் எந்தெந்த அளவிலே வழிபட விரும்பினார்களோ அந்த அளவுக்கு திருத்தலங்களை பாதுகாத்து வந்தார்கள். குறிப்பாக திருச்சிக்கு அருகிலே உள்ள ஸ்ரீரங்கத்தின் அருள்மிகு ஸ்ரீரங்கநாதர் திருக்கோயில் வரலாற்றில் இடம் பெறுகின்ற வகையிலே மகா கும்பாபிஷேகம் நடத்திய அந்த பெருமை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைத்தான் சேரும்

தமிழகத்தின் திருக்கோயில்களில் கிட்டத்தட்ட 4,100 பணியாளர்கள் இருந்து வருகிறார்கள். அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று இந்த அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயில் பணியாளர்களாக இருக்கின்ற போது, இறக்க நேரிட்டால் இந்து சமய அறநிலையத்துறை பணியாளர் குடும்பநல நிதி திட்டத்தின் கீழ் அவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் 10 ஆயிரம் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது போதாது. அதை 20 ஆயிரமாக உயர்த்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல திருக்கோயில்களில் 20 ஆண்டுகளுக்கு மேலாக பணி புரியும் 60 வயதைக் கடந்து ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு ஓய்வுத் தொகை ரூ. 250 என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதை 500 ரூபாயாகவும் உயர்த்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல அரசு கோயில்களிலே பூசாரிகளாக பணியாற்றுகின்றவர்கள் அரசு நிலங்களைப் பாவித்துக் கொண்டு அந்த கோயில்களுக்கு முறையாக பூசை நடைபெறாமல் கோயில் சொத்தைத் தின்றுக்கொண்டு அந்த கோவிலை கவனிக்காமல்



1990 ஏப்ரல் 11] [திரு. எம். தங்கவேல்]

தமிழகத்தில் பல்வேறு கோயில்
இருக்கின்றார்கள். எரியமுடியாமல் பூசை நடத்த
களில் விளக்குகூட
முடியாமல் நடந்து கொண்டிருக்கின்றது. இதை இந்த அரசு
கவனித்து தமிழகத்திலே உள்ள பெரியக் கோயில்களிலே
சமயபுரம், பழனி, திருச்செந்தூர் குறிப்பாக எனது
தொகுதியிலுள்ள சமயபுரம் போன்ற பெரிய திருக்கோயில்களிலே
முறைகேடுகளும், ஊழல்களும் நடந்து வருகின்றன.
இதை இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.
உதாரணத்திற்குச் சொல்கிறேன். சமயபுரம் திருக்கோயிலிலே
வரும் பக்தர்களிடம் அங்கே இருக்கின்ற அரசு அதிகாரிகளும்
உடந்தையாக இருந்து கொண்டு நுழைவு கட்டணத்தை, அதாவது
அர்ச்சனை செய்கின்ற பணத்தை வசூல் செய்வதற்குப் பதிலாகப்
தனியாக வருகின்றவர்களை அழைத்துக் கொண்டு போய் சாமி
தரிசனம் காட்டுகிறோம் என்று கூறி அவர்களிடம் வசூல் செய்து
அந்தத் தொகை எல்லாம்அங்கே இருக்கின்ற துணை ஆணையா
ஆபீசர்களுக்கு போய்ச் சேர்கிறது. இதை இந்த அரசு
கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். சமயபுரத்தைப் பொறுத்த வரையில், அங்கே இருக்
கின்ற அரசு அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் அம்பாசிடர்
ஏ.சி. காரை அதிகாரிகள் தங்களுடைய சுய நலத்திற்காக,—அரசு
கோயிலுக்கான காரை தங்கள் சுய வேலைக்காகவும் சுய நலனுக்
காகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத்
மாண்புமிகு திரு.கே.பி. கந்தசாமி : அம்பாசிடர் கார்
துணைத் தலைவர் அவர்களே, இந்த ஏ. சி. யாருக்காகப் பயன்
ஈ.ஓ. பயன்படுத்த வேண்டாம் என்றால் அது தெரிந்து கொள்ள
படுத்துவதற்கு இருக்கிறது? அதைப் பற்றித்
விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்
திரு. எம். தங்கவேல் : அதாவது கோயில்
தலைவர் அவர்களே, ஈ. ஓ. பயன்படுத்தலாம், சம்பந்தப்பட்ட விவ
சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு, கோவில் அதை விட்டு விட்டு
காரங்களுக்கு மட்டும் பயன்படுத்தலாம். ஊழியர்கள் எல்லாம்
இருக்கின்ற மேனேஜர் மற்றும் இருக்கின்ற அந்த காரை
தனிப்பட்ட முறையிலே சொந்தக் காரியங்களுக்காக சொல்லிக்
பயன்டுத்துகின்றார்கள் என்பதை ஆதாரப்பூர்வமாக இருக்கிறேன். இதை
கொள்கிறேன். அதை நிரூபிக்கத் தயாராக கவனத்திற்கு கொண்டு
மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய
வருகிறேன்.

அது மட்டுமல்ல, அங்கே நடக்கின்ற நிகழ்ச்சிகள் அமைச்சர்
அவர்களுக்கு தெரிவதற்கு இல்லை. அதனாலே சொல்லிக்
கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அங்கேயிருக்கின்ற கெஸ்ட்அவுஸை

வி.ஐ.பி.க்கள் போய் தங்குவதற்கெல்லாம் கொடுக்காமல் அவர்களே அங்கே இருக்கின்ற துணை ஆணையர், ஈ.ஓ.வும் மற்ற அதிகாரிகளும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

11-45 மணி.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில் பணியாளர்களுக்காக ஏ.சி. கார் வாங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அவர்கள் அதைப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா? துறையினர் அதை அனுமதிக்கிறார்களா? யாருக்காக, எப்போது அந்தக் கார் வாங்கப்பட்டது? கோயில் பணியாளர்களுக்கு ஏ.சி. கார் வாங்கிக் கொடுக்கப்படுகிறது என்பது புதிய செய்தியாக இருக்கிறது. இங்கே தரப்பட்டுள்ள குறிப்பிலே அது பற்றி இல்லை. புதிய செய்தியாக இருப்பதனால் அதைப்பற்றி அவைக்கு விவரமாகத் தெரிவிப்பது ஏற்புடையதாக இருக்கும்.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏ. சி. கார்களை கவர்னர் மற்றும் முதல்வர் மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்று அரசு ஜி.ஓ. வில் இருக்கிறது. அதைத் தவிர தனியார் பயன்படுத்தலாம். ஆனால் கோயிலில் பயன்படுத்த ஏ. சி. கார் தேவையில்லை. இருந்தாலும் அங்கே நடைபெற்றதை இங்கே மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சமயபுரம் கோயிலில் உள்ளவர்கள் அதை கோயில் சம்பந்தப்பட்ட வேலைகளுக்குப் பயன்படுத்தாமல் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அந்தத் தொகுதியை சார்ந்தவர். எப்போது வாங்கப்பட்டது என்றால், அது ஏ டி. எம்.கே. காலத்தில் வாங்கப்பட்டது என்பதை அவருக்கு ஞாபகப் படுத்துகிறேன்.

திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்போது அந்தக் கார் வாங்கப்பட்டது என்கிற விவரத்திற்குள் நான் போகவில்லை. ஆனால் இப்போது அந்தக் காரை தவறாகப் பயன்படுத்துகிறார் என்பதை உறுப்பினர் சொல்லிக் கொண்டிருக்கிறார். யார் அதை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார்.





மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் பேசிக் கொண் டிருக்கிறார் என்றால், எதிர் தரப்பில் இருப்பவர்கள் அல்லது அமைச்சர் அல்லது பேசுகின்றவரே பதில் அல்லது விளக்கம் சொல்வதுதான் முறை. அதை விடுத்து, இப்படி இன்னொருவர் பதில் சொல்வதாக இருந்தால் நேரம் நீண்டுக்கொண்டே போகும் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்கிறேன். அங்கேயுள்ள காரை கோயில் வேலைக்குப் பயன்படுத்தாமல் சொந்த வேலைக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதைத் தான் சொல்கிறேன். சொந்தவேலைக்கு அந்தக்காரை பயன்டடுத்துகிறார் கள் என்கிற குற்றச்சாட்டை தான் நான் இங்கே சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் நான் சொன்னதைத் தவறாக புரிந்து கொண்டார்கள்.

அடுத்து, சமயபுரம் கோவிலைப் பொறுத்தவரையில் அங்கு நிரந்தரப் பணியாளர்களாக பணியாற்றிக்கொண்டிருந்த கிட்டத் தட்ட 20 பேரை செய்யாத குற்றத்திற்காக, குற்றம் செய்த தாக குற்றம் சாட்டி பணி நீக்கம் செய்திருக்கிறார்கள். அரசுக்குத் தெரிந்துதான் அப்படி நடவடிக்கை எடுத்தார்களா அல்லது அரசுக்குத் தெரியாமல் அங்கு இருக்கின்ற டி.சி. நடவடிக்கை எடுத்தாரா?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமயபுரம் மாரியம்மன் கோயிலைப் பொறுத்தவரையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல அங்குள்ள ஊழியர்கள் முறை தவறி நடந்ததன் காரணமாக ஒரு கொலையே அங்கு நடைபெற்றிருக்கிறது. அந்த 20 பேரும் சமயபுரத்தைச் சார்ந்தவர்களா அல்லது புதுக் கோட்டையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்களா என்பதை உறுப்பினர் இங்கே தெரிவிக்க வேண்டும்.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 பேர்களும் புதுக்கோட்டையைச் சார்ந்த வர்களா அல்லது திருநெல்வேலியிலிருந்து வந்தவர்களா என்பது அல்ல என்னுடைய கோரிக்கை.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தந்த வட்டாரத்தைச் சார்ந்த வர்களை நியமனம் செய்வதுதான் முறை. புதுக் கோட்டையிலிருந்து அங்கே இறக்குமதி செய்யப்பட்டார்களா என்பதை உறுப்பினர் அவைக்குத் தெரிவிக்க வேண்டும்.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் புதுக்கோட்டையிலிருந்து அங்கு வரவில்லை. சமயபுரம் பகுதியிலிருந்து தான் பணியில் நியமிக்கப் பட்டார்கள். கொலை என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். யார் அதற்குக் காரணம்? எப்படி கொலை நடந்தது? எதற்காக கொலை நடந்தது? இந்து அறநிலையத் துறை இது குறித்து எடுத்துள்ள நடவடிக்கை என்ன? இது குறித்து அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது போலீஸ் துறையினுடைய ஆய்வில் இருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக ஏற்கெனவே திருச் செந்தூரில் உண்டியலை உடைத்து, கொலையும் செய்து விட்டு அதை தற்கொலை என்று சாதித்தார்கள். இந்த அரசு நிச்சயமாக அப்படி சாதிக்காது. ஆகவே, வழக்கு பதிவு செய்யப்பட்டு, கொலைக்காரர்கள நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்பதை ஆணித்தரமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

11-50 மணி

திரு. எம். தங்கவேல் : தலைவரவர்களே, கொலை செய்த வர்கள் தண்டிக்கப்படக்கூடும், குற்றவாளிகள் தண்டிக்கப்படக் கூடும். ஆனால் குற்றம் செய்யாத பணியாளர்களை ஏன் அரசு பணி நீக்கம் செய்ய வேண்டும்? கொலை செய்தவர்கள் இன்று ஜெயிலிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். கோர்ட்டிலே வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது. குற்றவாளிகள் யார், யார் குற்றவாளிகள் அல்ல என்று கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு நீதிமன்றத்திற்குரியது. ஆகவே நீங்கள் எந்தவிதமான முடிவும் எடுத்து விட வேண்டாம். யார் குற்றவாளிகள் அல்ல என்பதையும் நீங்கள் சொல்ல வேண்டாம். மானியம் குறித்துப் பொதுவான கருத்துக்களை நீங்கள் சொன்னால் போதும்.

திரு. எம். தங்கவேல் : துணைத் தலைவரவர்களே, நான் மானியம் சம்பந்தமாகத்தான் பேசினேன். அமைச்சரவர்கள் கொலை என்று சொன்னதற்குப் பின்னால்தான் அதற்கு விளக்கம் தர வேண்டிய காலக்கட்டாயத்திற்கு நான் ஆளாக்கப்பட்டேன் என்பதை பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரி வித்துக்கொள்கிறேன். மேலும் பணி நீக்கம் செய்தவர்களுக்கும் அங்கே நடந்த சம்பவங்களுக்கும் சம்பந்தமே இல்லை. அவர்களை பணி நீக்கம் செய்த ஆர்டரிலேகூட சம்பந்தம் இல்லாமல்





கொடுத்திருக்கிறார்கள். அங்கே நடந்த மர்டருக்கும், பணி நீக்கம் செய்தவர்களுக்கும் சம்பந்தமில்லை. அந்த ஆர்டரை அமைச்சர் அவர்களிடத்திலே காட்டத் தயாராக இருக்கிறேன்.

மேலும் சமயபுரத்தைப் பொறுத்தவரையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அவர்கள் எல்லாம் பணியிலே அமர்த்தப்பட்டார்கள் என்ற ஒரே காரணத் தாலே, அவர்களைப் பழி வாங்க வேண்டுமென்ற நோக்கத் தோடு, அவர்களைப் பணி நீக்கம் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் சில ஒப்புதல் வாக்கு மூலங்களைத் தந்து கொண்டிருப்பதால், நானும் அதற்கு விளக் கம் தருகிறேன். சமயபுரத்திலே மட்டுமல்ல, இது போன்று பல்வேறு திருக்கோவில்களிலே, இன்னும் சொல்லப்போனால், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலே தேவைக்கு மேலே அதிகமான பணியாளர்களை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, எங்கெங்கோ இருந்து இறக்குமதி செய்து, இன்றைக்கு அவர்கள் அந்தக் கோவிலின் நிர்வாகத்திற்கு தலைவலியாக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : துணைத் தலைவர் அவர்களே, on a point of clarification. நமது அமைச்சர் பெருமகனார் இங்கே சொல்கிறபோது, திருச்செந்தூர் கொலை வழக்கு பற்றி பேசினார்கள். அது தற்கொலை என்று நாங்கள் சாதிக்க மாட் டோம் என்று சொன்னார்கள். நமது மாண்புமிகு முதல்வராக இருக்கிற கலைஞர் அவர்கள்கூட நீதி கேட்டு நெடும் பயணம் சென்றார்கள். இப்போது இந்த அரசு அது பற்றி புலன் விசா ரணை செய்து, வழக்கு நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக் கிறதா? நியாயம் கிடைப்பதற்கு வழி தேடியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவரவர் களே, எனக்குத் தெரிந்த மட்டிலே மீண்டும் புலன் விசாரணை நடைபெற்று வருகிறதென்று அறிகிறேன். ஆனால் அது பற்றி திட்டவட்டமான தகவல்களை முதலமைச்சர் அவர்கள் அறிவிப் பதுதான் சிறந்ததாக இருக்கும்.

திரு எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருச்செந்தூரைப் பற்றிச் சொன்னார்கள். திருச்செந்தூரில் நடந்த கொலை வழக்கு பற்றி, நான் சட்ட மன்ற உறுப்பினராக முதன் முதலாக வந்திருந்தாலும், அதை

[திரு. எம். தங்கவேல்] [1990 ஏப்ரல் 11

பற்றி நன்றாக அறிந்திருக்கிறேன். திருச்செந்தூரிலே கொலை நடந்தது. அதற்குப் பின்னாலே நீங்கள் எதிர் கட்சியாக இருந்த போது நடைப் பயணம் மேற்கொண்டது, நடைப் பயணத்தில் போகின்றபோது மோர் என்று நினைத்து டர்பன்டைனைக் குடித்தது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் முதன்முதலாக வந்திருக்கிறார்கள். அவர் ரொம்ப குறைச்சலாகப் பேசியிருப்பதால், கொஞ்சம் வாய்ப்புக்கொடுக்க லாம் என்றால், மானியத்தைப் பற்றிப் பேசாமல், மோர் குடிப் பதற்குப் பதிலாக வேறு ஏதோ குடித்ததாகச் சொல்கிறார்கள்.

(குறுக்கீடு) Have you got any general kn wledge ab ut the t mple and their administration? c n y u plac any g i vanc s before the Assembly? (குறுக்கீடு) சம்பந்தப்பட்ட செய்திகளைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள்.

திரு எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அறநிலையத் துறை மானிய விவா தத்தில் தான் கலந்துகொண்டு பேசுகிறேன். அமைச்சரவர்கள் சில கருத்துக்களைச் சொல்லும்போது, நான் புதிதாகச் சொல் கிறேன் என்று சொல்லுகிறீர்கள். நான் ........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியம் தொடர்பாகப் பேசுங்கள்.

திரு. எம். தங்கவேல் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, அமைச்சரவர்கள் சில கருத்துக்களைச் சொல்லும்போது அதற்கு விளக்கம் சொல்லத் தேவைப்படுகிறது. அதை ஏன் மறுக்கிறீர்கள்? என்று கேட்கிறேன்.

திருக்கோவில்களில் பணி புரியும் பணியாளர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமய புரத்தைப் பொறுத்தவரையில் அங்கே கிட்டத்தட்ட ஆண்டு வருமானம் ஒரு கோடியை எட்டிக் கொண்டிருக்கும் நேரத்திலே, அந்த சமயபுரம் திருக்கோவிலுக்குச் சொந்தமாக, அறநிலையத் துறை மூலமாக ஒரு கல்லூரியும், தொழில் நுட்பக் கல்லூரியும் அரசு உயர்நிலைப்பள்ளியும் ஏற்படுத்த வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இந்து சமயத்தின் எல்லாத் திருக்கோவில் களுக்கும் சென்று வழிபடலாமென்ற அந்த உணர்வினை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்து சமய அறநெறி முறை பண்



1990 ஏப்ரல் 11] [திரு. எம். தங்கவேல்]

பாட்டில் ஆதிதிராவிடர்களை ஈடுபடுத்தி, பெரிதும் ஊக்கு விக்கும் வகையிலே சுதந்திர தினத்தன்றும், பேரறிஞர் அண்ணா நினைவுநாள் அன்றும் சம பந்தி போஜனம் நடத்தப்பட்டுவருகிறது

அதை மேலும் ஊக்குவிக்கின்ற வகையிலே இவ்வாண்டு சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கார் பிறந்த நாளைக் கொண்டா டும் மத்திய அரசு அவருக்கு மிக உயர்ந்த பட்டமான பாரத ரத்னா விருதைக் கொடுக்கின்ற இந்த நேரத்தில் தமிழக அரசும் அந்த தாழ்த்தப்பட்ட மக்களை மேலும் ஊக்குவிக்கின்ற வகை யிலே திருக்கோயில்களில் ஆதிதிராவிடர்களை அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமருகின்றேன்.

11-55 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து திரு. சிவலோகம்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, point of clarification.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சிவலோகம் போவதற்கு "point of clarification" தேவையா? (சிரிப்பு).

திரு.கோ. வீரையன் : அவர் பேசி முடித்ததினால் Point of clarification. அவர் பேசியதை நான் குறிப்பிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிவலோகம் இங்கே பேசட்டும். நாம் எல்லாம் சிவலோகத்துக்குப் படிப்படியாகச் செல்லலாம். ஆனால் நான் உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, சமயபுரம் மாரியம்மன் திருக்கோவிலுக்கு ஒரு ஏர் கண்டிஷன் கார் இருப்ப தாக குறிப்பிட்டார்கள். சமயபுரம் மாரியம்மன் திருக்கோ விலுக்கு மட்டும்தான் அப்படி ஏ.சி. கார் இருக்கிறதா? தமிழகத்திலே எத்தனை திருக்கோவில்களுக்கு அப்படி ஏ. சி. கார்கள் இருக்கின்றன? ஆலய ஊழியர்களுக்கே ஊதியம் வழங்கப் போதாத நிலையில் இருக்கக்கூடிய இந்தத்துறை இப்படி ஏ. சி. கார்களை வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் தானா? இவற்றை எல்லாம் அரசு திரும்பப் பெற நடவடிக்கை எடுக்குமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சமயபுரத்தில் அந்த ஏ. சி. கார் 1984 ஆம் ஆண்டு வாங்கப்பட்டது. இதுபோன்று இன்னும் சில கோவில் களிலும் வாங்கப்பட்டு இருக்கின்றன. அதற்கான தகவல் என்

ஙிடத்தில் இல்லை. இது அவசியம்தானா என்பதை ஒரு பிரச்சனையாக இங்கே எழுப்பி இருக்கின்றார்கள். அதை நாம் பரிசீலனை செய்து முடிவு செய்வோம்.

திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தென் ஆற்காடு மாவட்டத்தில், புவனகிரி தொகுதியில் மறைந்த தென் ஆற்காடு மாவட்டச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், 20 ஆண்டுக் காலமாக ஒன்றியப் பெரும் தலைவராகவும் இருந்த அருமை அண்ணன் மிக மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மறைவையொட்டி மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சேத்தியாத்தோப்பில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்து நடந்து கொண்டிருக்கிற ஆலைக்கு எம். ஆர். கே. பெயரை வைத்து பெருமைப்படுத்தி இருக்கிறார்கள். அதற்காக புவனகிரி தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்த அறநிலையத் துறை சார்பாக மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் முதல்வர் அவர்கள் 'கோவில் கொடியவனின் கூடாரமாக இருக்கக் கூடாது' என்பதைத் தான் பராசக்தியின் மூலமாக கால் நூற்றாண்டுக்கு முன்பு மக்களுக்கு அறிவித்தார்கள். கோவில் கொடியவனின் கூடாரமாக இருக்கக் கூடாது என்பது சொல் அளவிலே மட்டுமல்லாமல், சொல்லிலும் செயலிலும் செய்யக்கூடிய இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பேன்' என்று சொன்னார்களே, அதற்கொப்ப இந்த அரசு நடந்துகொண்டு வருகிறது. அங்கே பல கருணை இல்லங்களை கலைஞர் ஆட்சிக் காலத்திலே ஏற்படுத்தினார்கள். அவைகளை எல்லாம் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களும், எதிர் கட்சியாக இருந்து பணியாற்ற மனம் இல்லாமலும், எதிரி என்று நினைக்கக்கூடியவர்கள் முன்பு கருணை இல்லத்தின் பெயரை அழித்துவிட்டு அன்பு இல்லம் என்று பெயர் வைத்தார்கள். இதை எவ்வளவு பெருந்தன்மையோடு அவர்கள் செய்து இருக்கிறார்கள் என்பதை நாங்கள் எல்லாம் இப்போது தெரிந்துகொள்கிறோம். தைத் திரும்பவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை இல்லம் என்று மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆறுபடை வீடுகளைக் கொண்ட முருகப் பெருமானின் ஒரு படை வீட்டுக்கு டாக்டர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் மாண்புமிகு அறநிலைத் துறை அமைச்சராக இருக்கிறார்கள் என்பது பெருமைக்குரியது. முன்பு கழக ஆட்சியில் எனது



தொகுதியில் உள்ள வள்ளலார் இராமலிங்க அடிகள் அவதரித்த மருதூர் என்ற சிற்றூரில் அடிகளார் பெயரில் நினைவுச் சின்னம் அமைப்பதற்காக மாண்புமிகு முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் வந்து நேரிலே பார்த்து அங்கே நினைவு ஆலயம் கட்டுவதற்கு 2 இலட்சம் ரூபாய் மதிப்பீடு போட்டு அந்த வேலையும் துவக்கப்பட வேண்டிய நிலையிலே அன்று ஆட்சி கலைக்கப்பட்டது. இராமலிங்க அடிகளார் அவர்கள் எனது தொகுதியில் மருதூரில் பிறந்தவர். அந்த நினைவாலயத்தை மீண்டும் அங்கே எழுப்பி அங்குள்ள மக்களுக்கு ஒரு நல்ல செயலைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**12–00 மணி**

மேலும் என்னுடைய தொகுதியில் ராகவேந்திரா பிறந்ததும் அங்கே தான்.

அந்த புவனகிரி தொகுதியில், பரங்கிப்பேட்டையில், காஞ்சிப் பெரியவாள் அவர்களுடைய தகப்பனார் ஆசிரியராக எங்கள் ஊரிலே இருக்கின்ற பள்ளியிலே பணியாற்றினார்கள். அங்கே தான் காஞ்சிப் பெரியவாள் அவர்கள் படித்தார்கள். இப்படியெல்லாம் பெரிய, புகழ் பெற்ற, தெய்வீகப் பற்றுள்ளவர்களெல்லாம் பிறந்த ஊர் அந்த புவனகிரி தொகுதி. ஆகையால் அந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரிமை கொடுத்து அங்கே எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, காஞ்சிப் பெரியவாளினுடைய தகப்பனார் ஆசிரியராகப் பணியாற்றியதாகச் சொல்கிறார். மூன்று பெரியவாள்கள் இருக்கிறார்கள். எந்தப் பெரியவாளுடைய தகப்பனார் அங்கே ஆசிரியராகப் பணியாற்றினார் என்பதைத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு எஸ். சிவலோகம் : காஞ்சிப் பெரியவாள், மூத்த பெரியவாள்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, பெரியவர் என்றால் ஒருவர்தான். அடுத்தவர் நடுவர். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இன்னொருவர். மூன்று முனிவர்கள் என்று சொல்லுவோமே தவிர, பெரியவர் என்று சாதாரணமாக அழைப்பது ஒருவரைத்தான். நாங்களெல்லாம் காஞ்சிப் பெரியவர் என்று அழைத்தால் ஒருவரைத்தான்—குறிக்கும். அடுத்து, இரண்டாவது மூன்றாவது பெரியவரைக் குறிக்கும். அடுத்து, இரண்டாவது மூன்றாவது என்று மூன்று முனிவர்கள் என்று சொல்கிறார்கள். பெரியவர் என்றால் அவர்களுடைய பெயர்.......

[1990 ஏப்ரல் 11

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவரவர்களே, வழக்கமாகப்
பெரியவர் என்று சொன்னால், பராமாச்சாரிய ஜகத்குரு
ஸ்ரீ சந்திர சேகரேந்திர சுவாமிகளைக் குறிக்கும்; ஆச்சாரியாள்
என்றால் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளைக் குறிக்கும்;
அடுத்தவரை புதியவர் என்று இப்பொழுது சொல்லுவார்கள்.
அவர்கள் புதியவராக இப்பொழுது பொறுப்பேற்றிருக்கிறார்
கள். அவரை விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் என்று குறிப்பார்
கள்.

திரு எஸ். சிவலோகம் : இராமலிங்க அடிகள் பிறந்த ஊரின்
பக்கத்திலே சாலை வசதிகளெல்லாம் பத்து இலட்சம் ரூபாய்
செலவு மதிப்பீட்டிலே இப்போது செய்யப்பட்டிருக்கிறது.

சிதம்பரம் நடராஜர் கோயில் உலகப் புகழ் பெற்றது
இதே கோயிலிலே தில்லை கோவிந்தராஜர் கோயிலும் இணைந்
திருப்பது, சைவமும், வைணமும் இணைந்துள்ளது. இந்த
விசித்திரக் காட்சியைக் காண்பதற்கு இந்தியா முழுவதிலும்
இருந்து யாத்திரிகள் தினமும் வந்து கொண்டிருக்கிறார்கள்.
அந்நியச் செலவாணியை அதிகரிக்கும் வகையில் வெளிநாட்டுப்
பயணிகளும் வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பயணிகள்
என் தொகுதியிலுள்ள பிச்சாவரம் பகுதி சுற்றுலா மையமாக
இருப்பதால், இந்தப் பயணிகள் வசதிக்காக பி. முட்லூருக்கும்
சி. முட்லூருக்கும் இடையே வெள்ளாற்றில் ஒரு பாலம் கட்டிக்
கொடுக்குமாறு—அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாளைய
கோரிக்கையை வைத்து, கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பாலம்
அமைந்துவிட்டால், கடலூருக்கும், சிதம்பரத்திற்கும் செல்வதற்கு
இருபது கிலோமீட்டர் தூரம் குறைவாக ஆகும். பயண நேரம்
சுமார்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பயணங்கள்
முடிவதில்லை. (சிரிப்பு).

திரு. எஸ். சிவலோகம் : சி. முட்லூரில் திருவேற்காடு
கருமாரியம்மன் கோயில் நிதியிலிருந்து பங்குத் தொகை
கொடுத்து அங்கே ஒரு கலைக் கல்லூரி அமைக்கப்பட்டிருக்கிறது.
அதனால், பள்ளி மாணவர்களுக்கும் அந்தப் பாலம் வருவதாக
இருந்தால் நன்மையாக இருக்கும். பொது மக்களுக்கும்
ரொம்ப நன்மையாக இருக்கும். இந்தப் பாலம் கட்டுவதால்—
(குறுக்கீடு) அறநிலையத்திற்குத் தொடர்பு இருப்பதால் தான்
அந்தப் பாலத்தைப் பற்றி நான் கேட்கிறேன். மேலும், மீனவ
சமுதாய மக்கள், விவசாயம், எஜுகேஷன், டூரிசம், இப்படி
எந்த ஹெட்டிலே வேண்டுமானாலும் அந்தப் பாலத்தைக்
கட்டிக் கொடுக்க முடியும். மாண்புமிகு அமைச்சரவர்கள்
சுற்றுலா அமைச்சராகவும் இருப்பதால் மிகவும் பணிவோடு
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 11] [திரு. எஸ். சிவலோகம்]

சீர்காழிக்குப் பக்கத்தில் வைத்தீஸ்வரன் கோயில் தமிழ
கத்தின் திருக்கோயில்களில் சிறப்பு மிக்க கோயில்களில் ஒன்று.
அங்குள்ள வைத்தீஸ்வரன், தையல் நாயகி அம்பாள், முத்துக்
குமாரசுவாமியைத் தரிசிக்க ஒவ்வொரு செவ்வாய், வெள்ளிக்
கிழமைகளிலேயும் மாதம் தோறும் கிருத்திகை நாட்களி
லேயும் மக்கள் ஏராளமாக வந்து சென்று கொண்டிருக்கிறார்கள்.
அங்கே ஒரு காவல் நிலையம் இல்லை. அதற்கு அங்கே ஒரு
காவல் நிலையம் அமைத்து, அந்த மக்களின் குறைகளைப்
போக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தருமபுரம் சந்நிதானம் 26 கோயில்களைக்
கொண்டது. அதிலே இருக்கின்ற அந்த சந்நிதானம் அவர்கள்,
'' ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்''
என்ற குறளுக்கு ஒப்ப ரொம்ப நேர்மையாக, எல்லோருக்கும்
எடுத்துக் காட்டாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள்,
காலனியானாலும், நேரிலே சென்று, அந்த மக்கள் ஒரு
வரவேற்பு கொடுத்தால்கூட, அந்த வரவேற்பைப் பெற்றுக்
கொண்டு, அந்த மக்களிடமெல்லாம், ஒழுங்காக நடந்து
கொள்ளுங்கள். தெய்வ நம்பிக்கையோடு இருங்கள். கோயில்
குத்தகைகளையெல்லாம் கொடுங்கள், அப்படி என்று சில
கதைகளைக் கூட பொதுக்கூட்ட வாயிலாகத் தெரிவித்து வசூல்
செய்து நன்றாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

12–05 மணி

இந்த நேரத்திலே, சம்பளம் வழங்கப்படாமல் இருந்த
திருக்கோயில்களிலே பணிபுரியும் அர்ச்சகர்களுக்குச் சாதாரண
மாக, தமிழ் நாடு பூராவும் யார் யாரோ, எதை எதையோ
பேசுகிறார்கள் இன்றைக்கு. இது நமக்கு ஒரு வேடிக்கையாக
இருக்கிறது. நியாயமாகத் தமிழ்நாட்டிலுள்ள அத்தனை
கோயில்கள். சம்பளம் 15, 20 வருஷமெல்லாம் பாக்கியிருந்தது.
எந்த ஆட்சியும் செய்யவில்லை. சென்ற ஆட்சியும் செய்யவில்லை.
என்னுடைய தொகுதியிலே இருந்த வி. வி. சுவாமிநாதன்
அமைச்சராக இருந்தும்கூட எந்த ஐயருக்கும் எந்தவிதமான
ஒரு பயனும் கிடையாது. சம்பளம் இல்லை. விளக்கேற்றவே
முடியவில்லை. இந்த தமிழக அரசு, தானைத் தலைவர்
டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் உள்ள அரசு,
இந்த மக்களுக்கெல்லாம் பொது நிதியிலிருந்து கொடுக்க ஒரு
ஆலோசனைக் குழுவைப் போட்டு, ஐந்து பேர் அடங்கிய
குழுவில் அடிகளார் போன்றவர்கள் அதிலேயிருந்து, எல்லா
அர்ச்சகர்களுக்கும் பணம் 10,000 ரூபாய் 15,000 ரூபாய்
கொடுக்கப்பெற்றது. அவர்கள் பிறந்த நாளிலிருந்து அவ்வளவு
பணத்தை பார்த்திருக்க மாட்டார்கள். சில அர்ச்சகர்கள்
என்னுடைய தொகுதியில் சொல்கிறார்கள். நான் கோயில்களுக்குப்
போகிறவன். நான் கொஞ்சம் தெய்வ நம்பிக்கை உள்ளவன்
தான். எல்லா கோயில்களுக்கும் போகும் போது அவர்கள்
ரொம்பவும் வாழ்த்துகிறார்கள். யார், தி.மு.க. தானே, வாய்பா

என்று அழைக்கிறார்கள். அவ்வளவு அன்புடன் உபசரிப்பு இருக்கிறது. அதற்காகத்தான் நான் அதை சொல்கிறேன். அவ்வளவு பணத்தை அவர்கள் பார்த்ததே இல்லை. இப் போது பாங்கிலே பணத்தை போட்டு வைத்திருக்கிறார்கள். இங்கே குறை சொல்கிறார்கள் என்றால், வேண்டாத பெண் டாட்டி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்கிற மாதிரி. எதற்கெடுத்தாலும் குற்றம் சொல் கிறார்களே தவிர, நல்லது செய்திருப்பதை ஏற்றுக்கொள்ளும் மனம் இல்லையே, அதுதான் என்ன நியாயம் என்று கேட்கிறேன்.

திரு. எம். தங்கவேல் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, போன ஆட்சியிலே வி. வி. சுவாமிநாதன் அவர்கள் அறநிலையத் துறை அமைச்சராக இருந்ததைப் பற்றி தவறாகச் சொன்னார்கள். அதுமட்டு மல்லாமல், 15 வருடங்களாக அங்கே வேலை பார்ப்பவர் களுக்கு சம்பளம் வழங்கவில்லை என்று சொன்னார்கள். 15 வருடங்கள் என்றால் தி.மு.க. ஆட்சியும் 1976-க்கு முன்னாலே இருந்தது, அவர்களும் தரவில்லை என்று தான் அர்த்தம்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னார்கள். உறுப்பினர் எழுப்பியதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குற்றச்சாட்டு சொல்லக்கூடாது.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டை யார் வேண்டுமானாலும் சொல்ல லாம் என்று சொல்லிக் கொண்டேயிருந்தால் எங்கே போகும் விவாதம். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையில் நடக்கக் கூடிய ஒரு சம்பவத்தைப் பற்றியது ஆகும்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : யார் எதை வேண்டு மானாலும் சொல்வது என்றால் சட்டமன்ற விவாதமாக இருக்க முடியாது என்பதை நான் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

திரு. எஸ். சிவலோகம் : துணைத் தலைவர் அவர்களே, கோவில்களில் விளக்கேற்றியதை விட வீட்டு விளக்கை ஏற்றி வைத்தது தான் இந்தத் தமிழக அரசு. நான் பிறந்த இடம் தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் பக்கத்தில் வாய்மேடு



போலீஸ் நிலையத்திற்கு—கிழக்கே மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கே வண்டுர மாரியம்மனுக்கு ஒரு பெரிய கோவில் இருக்கிறது. அதற்கு பிறகு ஔவையாருக்கு தமிழ் நாட்டில் அங்கேதான் கோவில் இருக்கிறது. வருடம் தவறாமல் அங்கே போய் வருகிறேன். அதனால் அவசியம் அமைச்சர் அவர்கள் அந்த சாலையை செப்பனிட்டு, அதற்கு வேண்டிய சில வசதிகளை செய்து தரவேண்டுமென்று பொற் பாதங்களை தொட்டு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் ; சபாநாயகர் அவர்களே, ஔவை யாருக்கு வேறு இடத்தில் கோவில் இல்லையென்று உறுப்பினர் அவர்கள் சொல்வதற்காக சொலகிறேன். நாஞ்சில் நாட்டில் கன்னியாகுமரியில் ஔவையார் கோவில் இருக்கிறது. இரண் டாவது, அவருக்கு பலர் இப்போது துணை செய்து கொண்டு, மைக்கை சரிசெய்வது போன்று உதவிகளை செய்கிறார்கள மகிழ்ச்சி, ஒருவேளை சிவலோகமாக அவர் இருக்கிற காரணத்தால், இகலோகம் பற்றி பிரச்சினைகள் அவருக்கு தெரியவில்லையா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு.)

திரு. எஸ். சிவலோகம் : துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பரங்கிப்பேட்டைப் பேரூராட்சிக்கு உட்பட்ட இடத்தில் அமிர்தவல்லி ஆதிமூலசுவாமி கோவில் இருக்கிறது. அங்காள பரமேஸ்வரி கோவில், அகரம் கொள்ளு மேடு என்ற இடத்தில் இருக்கிறது. முத்து குமாரஸ்வாமி தேவஸ்தானம் இருக்கிறது. கிருஷ்ணன் கோவில் இருக்கிறது. இந்த கோவில்களுக்கு எல்லாம் 150 ஏக்கர்களுக்கு மேல் நிலம் இருக்கிறது. இதற்கு யாரும் ஒழுங்காக குத்தகை கொடுப்ப தில்லை. அதனால், விளக்கு ஏற்றி வைக்கக்கூட முடியாமல் கஷ்டம் இருக்கிறது. இதெல்லாம் நாங்கள் அந்த கோவில் களை நேரில் பார்க்கிறபோது தெரிகிறது. இந்த அரசு வந்த ஒரு வருடத்தில் அய்யர் வீட்டு விளக்கை ஏற்றிய பிறகு எல்லா கோவில்களிலும் விளக்குகள் ஒழுங்காக எரி கின்றன. நன்றாக ஏற்றுகிறார்கள். அவர்கள் எல்லாம் நல்ல விதமாகப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். கூடுமான வரையில் அந்த கோவில்களுக்கு இருக்கிற குத்தகைபாக்கி களை புதிய சட்டம் போட்டு வசூல் செய்தால்தான் கோவில் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறும். இது குறைந்த குத்தகை. அவர்களிடம் யாரும் போய் ஒன்றும் கேட்கமுடியவில்லை. எங்களைப் போன்றவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இல்லையென்றாலும், நல்ல காரியங்களை தொகுதிக்குச் செய்ய நிச்சயமாக தயாராக இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் வந்து அமிர்தவல்லி அம்பாளை தரிசனம் செய்தார்கள். அங்கே ஒரு திருக்குளம் இருக்கிறது. எதற்காக பெரியவாளைச் சொன்னேன் என்றால், அவருடைய சுய சரித்திரம் இருக்கிறது. அந்த புத்தகத்தை எடுத்து

வந்திருக்கிறேன். ஆதிமூலசுவாமி தேவஸ்தானம் வரலாறே இருக்கிறது. அந்த கோவில் பிரசித்தி பெற்றது. நால்வர் எல்லாம் பாடிய ஊர். அந்த ஊரில் ஒரு திருக்குளம் இருக்கிறது. அந்த திருக்குளத்தில் யார் ஸ்நானம் பண்ணினாலும் குஷ்ட வியாதியிலிருந்து எல்லா வியாதிகளும் நிவர்த்தி ஆகிறது என்று வரலாறு சொல்கிறது. காஞ்சி பெரியவாள் அந்த குளம் எப்படி இருக்கிறது என்று கேட்டார்கள். அந்தக் குளம் ரொம்பவும் பாழடைந்து இருக்கிறது. தண்ணீரை கையில் தொட்டு மேலே தெளித்து கொள்கிறார்கள் ரொம்ப பேர்கள்—விவரம் தெரிந்தவர்கள். அதனாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்ல வேண்டாம். தயவுசெய்து நேரில் பார்த்து ஏதோ ஒரு பங்குத் தொகையை கொடுத்தால், எங்களைப் போல இருப்பவர்களும் நிதி வசூல் செய்வோம். ஊர் பொதுவில் கொடுக்கிறோம். அந்த திருக்குளத்தை தூர் வாரி, பழையபடி எல்லோரும் குளிக்கும் படியாக இந்த அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கூடுமான வரையில் சீக்கிரம் முடித்துக் கொண்டால் நல்லது.

*12—10 மணி*

திரு. எஸ். சிவலோகம் : அறநிலையத் துறை சார்பாக நான் கேட்டுக்கொள்வது, இந்த பாலம், எம். டி. ஆர். என்ற சாலை புதுச்சத்திரம், பரங்கிப் பேட்டை வருவதற்கு என்று ஒரு சாலை இருக்கிறது. அது மாவட்டத் தலைநகரை இணைக்கக்கூடிய சாலை. அது முக்கியமான சாலை என்று ஹைவேஸ்ஸிலே சொல்கிறார்கள். நாங்கள் வந்தபிறகுதான் அதைத் தெரிந்து கொண்டோம். எல்லாக் கோயில்களுக்கும் போகிற வழி அதுதான். தில்லை நடராஜன் கோயிலுக்குப் போகிற வழியும் அதுதான் கோவிந்தராஜ பெருமாள் கோயிலுக்குப் போகிற வழியும் அதுதான் இதனால் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களோ, அல்லது அறநிலையத் துறை அமைச்சர் அவர்களே, இதற்கு முயற்சி எடுத்து, பொதுப்பணித் துறை மூலமாக—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். அந்தச் சாலையை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இப்படிப் பட்ட வாய்ப்பைக் கொடுத்த உங்கள் எல்லோருக்கும் நன்றியைக் கூறி முடித்துக் கொள்கிறேன், அனைவருக்கும் நன்றி.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சிவலோகம் அவர்கள் கூறும்போது, ஒரு குளத்துத் தண்ணீரை மேலே தெளித்துக் கொண்டால் குஷ்டரோகம் போவதாகச் சொல்கிறார்கள். நான் இதுவரைக்கும் கேள்விப்படவில்லை,



அப்படிப் போனதாக. ஆகவே இது மூட நம்பிக்கையை தூண்டுகிறாரோ என்று எனக்குத் தோன்றுகிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர், ஆகவே தஞ்சை மாவட்டத்திலே உள்ளவர்கள் எல்லாம் சக்தி உள்ளவர்கள். அதே நேரத்தில், பக்தி உள்ளவர்கள். எப்படிப்பட்ட.................

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி தஞ்சையிலே இருக்கிறதா அல்லது தென்னாற்காட்டிலே இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு). அவருடைய தொகுதி தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறது என்று சொல்கிறாரா ? (குறுக்கீடு).

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, பல கோயில்களுக்குச் சென்றதாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் எந்தக் கோயிலுக்குச் சென்றார். என்ன அர்ச்சனை செய்தார் என்பதை தெளிவு படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை சம்பந்தமாக விவாதம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் ஒருபயனுள்ள தகவலை அவைக்குத் தரலாம் என்று கருதுகிறேன். சிவலோகத்தை அடைய வேண்டும் என்று உறுப்பினர்கள் விரும்பினால், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருமாறு அழைக்கிறேன். காரணம் அங்கே சிவலோகம் இருக்கிறது. சிவலோகம் என்ற ஊரும் இருக்கிறது.

* திரு ஆ. பாலையா : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் இந்தச் சபையிலே வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை அவருடைய மேலான பார்வைக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில், சுமார் 1 கோடி ரூபாய் கழிந்த ஆண்டைவிட கூடுதலாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. 1 கோடி ரூபாயை கூடுதலாக ஒதுக்கியதன் காரணத்தால், திருக்கோயில்களுடைய பராமரிப்பு, பாதுகாப்பு இவைகள் செம்மையாக, சிறப்பாக செய்ய முடியுமா என்பது ஒரு கேள்வியாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான், நமது மாண்புமிகு

[திரு. ஆ. பாலையா] [1990 ஏப்ரல் 11

அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், திருக்
கோயில்களுக்கு கூடுதலாக, இன்னும் கூடுதலாக நிதியைப்
பெற்றுத்தந்து அந்த கோயில்களுக்கு உரிய நல்ல ஏற்பாடுகளை
நல்ல வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று, நான்
இந்தச் சந்தர்ப்பத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்
கிறேன்.

தமிழகத்தில் இருக்கிற திருக்கோயில்களும், சமய சிந்தனைத்
தத்துவங்களும் இணைந்து தமிழ்நாட்டின் இரு கண்களாகவும்,
பண்பாட்டுச் சின்னங்களாகவும் விளங்குகின்றன. ஆயிரம்
ஆயிரம் ஆண்டுகளாக போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரும்
திருக்கோயில்கள் பல ஆண்டுக் காலமாக பல முறைகேடு
களுக்கும், சீர்குலைவிற்கும் காரணமாக இருந்து
கொண்டு இருக்கின்றன. அத்தகைய முறைகேடுகளுக்கும்,
சீர்குலைவிற்கும் ஆட்சியாளர்களுடைய அணுகுமுறைதான்
காரணம் என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது.
திருக்கோயில்களிலே அரசியல் ஆதிக்கம் புகுந்த காரணத்தாலே
திருக்கோயில் நிர்வாகங்கள் வரைமுறைப்படுத்த முடியாத
நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. அரசு, திருக்கோயில்களிலே,
அரசியல் ஆதிக்கம் செலுத்தாமல், திருக்கோயில்களுடைய
நிர்வாகம் சுதந்திரமாகவும், சுயேச்சையாகவும் செயல்பட
வழிவிட்டு, திருக்கோயில்களின் புனிதத் தன்மையைப் பாது
காப்பதற்கு உதவியாக இருக்கவேண்டும் என்று நான் இந்தச்
சந்தர்ப்பத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

கடல் கடந்த நாடுகளில் எல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்கள்
அந்தத் தமிழர்கள் இறையாண்மையிலே டக்தி கொண்டு,
அங்கே பல திருக்கோயில்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

12—15 மணி

அந்தத் திருக்கோயில்களிலே அவர்களுக்கு பூஜை செய்வதற்கு
இறை வழிபாட்டிற்கு என பயிற்சி பெற்ற ஓதுவார்கள், அர்ச்சகர்
கள், பூஜை செய்பவர்கள் இல்லை என்கின்ற ஒரு ஆதங்கம்
அவர்களுடைய உள்ளத்திலே இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள்
எல்லாம் நம்மைப் பார்த்துக் கேட்கின்றார்கள். இப்படிப்பட்ட
பயிற்சி பெற்றவர்களை எங்களுடைய பகுதியிலே இருக்கின்ற திருக்
கோயில்களுக்கு அனுப்பி வைத்து அங்கே பூஜை புனஸ்காரங்கள்
செய்வதற்கு உரிய வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டு
மென்று கேட்ட வண்ணமாக இருக்கிறார்கள். ஆனால் நம்
முடைய அறநிலையத் துறையின் சார்பாக அத்தகைய ஏற்பாடு
கள் எதுவும் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே
தான் நான் ஒரு கருத்தாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின்
பார்வைக்குக் கொண்டு வருகிறேன். ஓதுவார்கள், அர்ச்சகர்
கள், பூஜை செய்பவர்கள் இல்லாத நிலையை மாற்றுவதற்கு
அவர்களுக்கு உரிய பயிற்சிகளை இந்த அறநிலையத் துறையின்



1990 ஏப்ரல் 11] [திரு. ஆ. பாலையா]

சார்பில் அவர்கள் பலருக்கு அளித்து அவர்களைத் தயார்நிலையிலே வைத்துக் கொண்டால் வெளிநாடுகளிலிருந்து வருகின்ற கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு வசதியாக இருக்கும். அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சரவர்கள் செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல் இந்து மதத்தினுடைய தத்துவங்களையும், சிறந்த சிற்பக் கலைகளையும் பாதுகாக்க வேண்டும். அது நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்று. கேரள மாநிலத்திலே திருவனந்தபுரத்திலே இப்படிப்பட்ட சிறந்த சிற்பக் கலைகளை பாதுகாக்கவும், இந்து சமயத்தினுடைய தத்துவங்களை பாதுகாப்பதற்கும், ஒரு பயிற்சி நிலையம் அங்கே செயல்படுகின்றது.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே தமிழக சிற்பக் கலை உலகத்திலேயே புகழ்பெற்றது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இந்தக் காலக்கட்டத்திலே சிற்பக் கலை தமிழகத்திலே அழிந்து கொண்டு வருகின்ற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. அழிந்து கொண்டிருக்கின்ற சிற்பக் கலைக்கு புத்துயிர் ஊற்றுகின்ற அளவிலே, அந்த அற்புத சிற்பக் கலைக்கும் இந்து சமயத்தினுடைய தத்துவங்களை, சிறப்புகளைச் சொல்லித்தருவதற்கும், ஒரு பயிற்சி நிலையத்தை தமிழகத்திலே ஏற்படுத்துவதற்கு தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

உலகத் தமிழ் மாநாடுகள் எங்கெல்லாம் நடந்தாலும், அங்கெல்லாம் அறநிலையத் துறையினுடைய சார்பிலே இறையாண்மை நிறைந்த நூல்களை எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும். அங்கே இருக்கின்ற தமிழர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் இலக்கியங்களை, இறையாண்மை நிறைந்த இலக்கியங்களைப் படிப்பதற்கு உரிய வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்து சமய அறநிலையத்துறை மூலம் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பதையும் இந்துசமயத்தினுடைய ஆலயங்கள், தமிழ் வளர்த்த வரலாறு தமிழ் மூலம் ஆன்மீகம் வளர்த்த வரலாறுகளை வெளிநாட்டுத் தமிழர்கள், தமிழ் அறிஞர்கள் ஆகியோருக்கு அறநிலையத்துறை 'வெளியிடவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திருவான்மியூரிலே பன்றிமலை சுவாமிகளுடைய கோயில் ஒன்று இருக்கிறது. அந்தப் பன்றிமலை சுவாமிகளுடைய கோயில் இன்று சீரழிந்து, சின்னாபின்னமான நிலையிலே அறநிலையத் துறையாலே பாதுகாக்கப்பட முடியாத நிலையிலே இருந்து

கொண்டிருக்கிறது. பழுதுபட்ட அந்தக் திருக்கோயிலை திருப்பணி செய்து அதை பராமரிக்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதோடு, பன்றிமலை சுவாமிகளுடைய இந்து சமய பக்திப் பாடல்கள் வெளியிடப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. அப்பாடல்கள் எல்லாம் இந்து சமயத்தவர்கள், இந்து சமயத்தை விரும்பி நேசிக்கின்றவர்கள் எல்லோரும் அறிந்து கொள்வதற்காக, தெரிந்து கொள்வதற்காக படித்துப் பயன்பெறுவதற்காக, அந்த பக்திப் பாடல்களைப் பதிப்பித்து, வெளியிடவேண்டுமென்று நான் இந்து சமய அறநிலைய துறையை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

12.20 மணி

அடுத்தபடியாக ஒரு புகார் சொல்லப்படுகிறது. பழனி திருக்கோவிலில் லட்டு செய்து விற்பதற்கு டெண்டர்கள் வரவழைக்கப்பட்டு அல்லதுகொட்டேஷன்கள் வாங்கப்பட்டு குறைந்த கொட்டேஷன் தந்தவர்களுக்கு அல்லது குறைந்த டெண்டர் தந்தவர்களுக்குத்தான் அந்த வேலையைக் கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் அந்த நடைமுறைகளெல்லாம் பின்பற்றப்படாமல் எந்த ஒரு ஒழுங்கு முறையையும் ஏற்றுக்கொள்ளாமல் தனியார் ஒருவருக்கு தன்னிச்சையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. 7 லட்சம் ரூபாய்க்கான லட்டு தயார் செய்து விற்கக்கூடிய ஒரு உரிமையை தனிநபருக்கு கொடுத்ததன் மூலம் பல லட்சக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. அற நிலையத் துறை ஏலத்திற்கு விட்டிருந்தால் அல்லது டெண்டருக்கு விட்டிருந்தால் 14 லட்சம் ரூபாய் வரை வருவாய் கிடைத்திருக்கும் அத்தகையை வருவாய் இழப்பு எப்படி ஏற்பட்டது? அதற்கு காரணமானவர்கள் யார் என்பதை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வருகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே களவு போகிற சிலைகள் ஆபரணங்கள் இவைகளை கண்டு பிடிப்பதற்காகவும் கண்காணிப்பதற்காகவும் ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாக சொல்லுகிறார்கள். அதிலே கோவில்களிலே திருட்டு நடைபெறுவதை தடுக்கும் பொருட்டு உள்ளூரில் மரியாதைக்குரிய நபர்கள், முன்னாள் ராணுவ வீரர்கள், உள்ளூர் காவல் துறை அதிகாரிகள், பிர்கா வருவாய் ஆய்வாளர், துறையின் ஆய்வாளர் ஆகியோரைக் கொண்டு விழிப்புக் குழுக்கள் கிராமங்களிலும் சிறிய நகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. விழிப்புக் குழுக்கள் இயங்குவது குறித்து ஆய்வு செய்யும் பொறுப்பு மாவட்ட ஆட்சியர் மற்றும் துறையின் துணை ஆணையர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்கிற ஒரு நிலையை அரசு விளக்கி இருக்கிறது. அப்படியிருந்தும் இராமநாதபுரம் மாவட்டம் தேவகோட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட அதங்குடி ஈஸ்வரன்





கோவிலிலே சுமார் 20 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள தங்க கவசம் இரண்டு மாதங்களுக்கு முன்னாலே களவு போயிருக்கிறது. களவு போன தங்க கவசத்தை மீட்டு எடுத்து கொடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இது வரையிலும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் புகார் செய்கிறார்கள். அப்படிப்பட்ட திருட்டுகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கிறபோது தான் திருடியவர்களுக்கு ஒரு பய உணர்ச்சி தோன்றும். ஆகவே இந்த திருட்டைக் கண்டு பிடிப்பதற்கு உடனே நடவடிக்கை எடுத்து திருடு போன 20 லட்சம் பெருமான தங்க கவசத்தை மீட்டுக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்து அறநிலையத் துறை சம்பந்தமாக பல்வேறு பிரச்சினைகள் இருந்துக் கொண்டிருக்கின்றன. திருவிதாங்கூர் சமஸ்தானத்திலிருந்து பிரிந்து கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைந்ததற்கு பின்னாலே அறநிலைய நிர்வாகத்துக்கு திருவிதாங்கூர் சமஸ்தானத்தினுடைய சட்ட திட்டங்களும் இல்லை. தமிழ்நாடு அறநிலையத் துறையினுடைய சட்ட திட்டங்களும் அங்கே செல்லுபடி ஆகாத நிலையில் உள்ளன. தமிழகத்திலே அமுலில் இருக்கின்ற ஒரு சட்டம் ஒரு மாவட்டத்திற்குள்ளேயே செல்லுபடியாகாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. கர்நாடகத்திலே இருக்கிற ஒரு சட்டம் தமிழகத்திலே செல்லுபடியாகவில்லை என்று சொன்னால் நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் தமிழகத்திலே இருக்கிற ஒரு சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலை வருகிற போது பெரிய பிரச்சினைகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

சமீபத்திலே சுசீந்திரம் திருக்கோவில் பக்கத்திலே ஆலய ஊழியர்கள் அரசின் கவனத்தை ஈர்க்க உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்கள் நியாயமான தங்களுடைய கோரிக்கைகள் அறநிலையத்துறை நிறைவேற்றித் தர வேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உண்ணாவிரத இடத்திற்குப் போய் உண்ணாவிரதம் இருந்தவர்களை சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளை கேட்டு ஆவன செய்வதாக வாக்குறுதியை அளித்துவிட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையிலும் எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, சுசீந்திரம் கோவிலுக்கு சென்று நான் ஊழியர்களை சந்தித்து வாக்குறுதி அளித்ததாகச் சொல்லுகிறார்கள். எனக்கு

அப்படி நினைவு இல்லை. எப்படி அந்த தகவல் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கிடைத்தது என்று எனக்குத் தெரியவில்லை.

12.25 மணி

திரு. ஆ. பாலையா : ஆலய ஊழியர்களுக்காகப் போராட்டம் நடத்தியவர்கள், அமைச்சர்கள் வந்தார்கள், எங்களுக்கு வாக்குறுதி தந்தார்கள் என்று சொன்ன காரணத்தினாலேதான் அந்தத் தகவலை வைத்து தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். ஆலய ஊழியர்களுடைய பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கின்றது. தமிழகத்திலே அறநிலையத் துறையின் சார்பிலே ஏராளமான ஆலய ஊழியர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் இருந்துகொண்டிருக்கிறார்கள். தமிழகத்தினுடைய அறநிலையத்துறையில் வேலை செய்கின்ற ஆலய ஊழியர்களுக்கான சம்பள விகிதங்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்படவில்லை. அங்கே ஆலய ஊழியர்களாக இருக்கின்றவர்கள் அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொள்ளப்படாத நிலை உள்ளன. குமரி மாவட்ட ஆலய ஊழியர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 75 ரூபாயிலிருந்து 250 ரூபாய் வரையிலும் ஊதியம் கொடுக்கப்பட்டு வருகின்றது. உதாரணத்துக்கு ஒன்றை சொல்லுகிறேன். ஒரு துப்புரவுப் பணியாளர் காலை 4 மணியிலிருந்து இரவு 9 மணி வரையிலும் வேலை செய்தால் 75 ரூபாய் ஊதியம் வழங்கப்படுகின்றது. இந்தச் சம்பள விகிதம் உலகத்திலே எந்த நாடுகளிலும் கிடையாது. நான் கேட்டுக் கொள்வதெல்லாம், தமிழகத்திலே குமரிமாவட்டம் தவிர்த்த ஏனைய பகுதிகளிலே வேலை செய்கின்ற அறநிலையத்துறை ஆலய'ஊழியர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளமாவது குறைந்த பட்சமாக குமரி மாவட்ட ஆலைய ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் 1989–90 ஆம் ஆண்டுக்கான அறநிலையத்துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகின்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் கோயில் ஊழியர்களின் ஊதியம் குறைந்த நிலையில் இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இத்தனை ஆண்டுக்காலம் அது கவனிக்கப்படாமல் இருந்தது. இப்போதுதான் என்னுடைய பார்வைக்கு வந்திருக்கின்றது. கவனத்திற்கு வந்திருக்கின்றது. நிச்சயம் அதைப் பரிசீலனைசெய்து, எந்த அளவுக்கு அந்த ஊதியத்தை மற்றைய பகுதிகளில் இருக்கக்கூடிய ஆலய ஊழியர்களுக்கு சமமாகவாவது கொடுக்கவேண்டிய முறையில் ஆய்வு செய்து முடிவு எடுப்பேன் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன் என்று கழிந்த வருடம் இதே சபையில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஓராண்டு ஆகிய பின்னாலும் எந்தவிதமான முடிவும் அமைச்சர் அவர்கள் எடுக்கவில்லை, அவர்கள் அளித்த வாக்குறுதியின்படி.





மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே. ஏனைய ஆலய ஊழியர்களுடைய சம்பளம், ஊதியம் பற்றிக் கூட இப்போது தான் ஒரு முடிவு எடுத்துக் கொண்டு இருக்கின்றோம். ஆகவே, ஏதோ கன்னியாகுமரியிலே உள்ள ஊழியர்களுடைய ஊதியத்தைப் பற்றி விட்டு விட்டு, மற்றவர்களுடைய ஊதியத்தைப் பற்றி முடிவு எடுத்து விட்டதாக நினைக்க வேண்டாம். அனைத்து ஊழியர்களுடைய ஊதியத்தைப் பற்றி நாங்கள் மிகத் தீவிரமாகப் பரிசீலனை செய்து இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளே அது அறிவிக்கப்பட இருக்கின்றது. ஆகவே, எத்தனையோ ஆண்டுகளாக இருந்த ஒரு காரியத்தில், நாங்கள் ஓராண்டுக்குள்ளாவது ஒரு முடிவு எடுக்கக் கூடிய சூழ்நிலையில் வந்திருக்கிறோமே என்பதைப் பார்த்து ஒரு பாராட்டாவது தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வாக்குறுதிக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற ஆலய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவதோடு அவர்களுக்குரிய பணிப் பாதுகாப்பு, பணி நிரந்தரம், ஊதிய உயர்வு, அரசு அளிக்கின்ற பொங்கல் மானியம் இவைகளையெல்லாம் ஆலய ஊழியர்களுக்கும் நிச்சயமாக வழங்கப்பட வேண்டும்.

இன்னொன்று. குமரி மாவட்ட அறங்காவலர் குழுவின் அதிகாரத்திற்குட்பட்ட அலுவலகப் பணியாளர்கள், அவர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஏற்றெடுத்திருக்கின்றார்கள். அரசு ஊழியர்களாக அலுவலகப் பணியாளர்களை மட்டும் ஏன் ஏற்றெடுக்க வேண்டும் ? அலுவலகப் பணியாளர்களும், அங்கே இருக்கின்ற ஏனைய ஊழியர்களைப் போன்ற ஊழியர்கள் தானே. ஆகவே ஏனைய ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஏற்றெடுத்து அரசு சம்பளம் வழங்கப்பட வேண்டும். அலுவலக பணியாளர்களாக அங்கே 150 ஊழியர்கள் இருந்தார்கள். இப்போது அங்கே 80 ஊழியர்கள் வேலை பார்த்து வருகின்றனர். 70 இடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன. 70 இடங்களிலே ஊழியர்கள் நியமிக்கப்படாததன் காரணமாக அங்கே இப்போது இருக்கின்ற ஊழியர்களுக்குப் பணிச்சுமை தாங்க முடியாத அளவில் உயர்ந்து இருக்கின்றது. அவர்களுடைய பணிச் சுமையினைத் தவிர்ப்பதற்காக காலியாக இருக்கின்ற பணி இடங்களிலே உடனடியாக ஊழியர்களை நியமனம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். (மணியடிக்கப் பெற்றது). 2 நிமிடங்கள் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. மோகன்) மற்ற உறுப்பினர்கள் பேச முடியாமல் போய்விடும். உங்கள் கட்சியிலே மற்ற உறுப்பினர்களுக்கும் நேரம் கொடுக்க வேண்டியுள்ளது. சீக்கிரம் முடியுங்கள்.

[1990 ஏப்ரல் 11

12.30 மணி.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இந்தியாவிலேயே புகழ் பெற்ற மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் கோயில் இருக்கிறது. கேரள மாநிலத்திலிருந்து அந்த ஆலையம் தமிழகத்திற்கு வந்ததற்குப் பின்னால் அறநிலையத் துறையின் மூலம் எந்தவிதமான திருப்பணிகளும் நடைபெறவில்லை. திருப்பணிகள் நடைபெற எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நாங்களெல்லாம் பல ஆண்டுகளாக கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அது முக்கியமான ஒரு திருக்கோயில். நூற்றுக் கணக்கான மக்கள் தினம் தினம் வெளி மாநிலங்களிலிருந்து வந்து அங்கே அருள்மிகு பகவதி அம்மனை வணங்கிவிட்டு செல்கின்ற காட்சியைப் பார்க்கின்றோம். வெளி மாநிலங்களிலேயிருந்து வருகின்ற பக்தர்களுக்கு எந்தவிதமான வசதிகளும் இல்லை. அங்கே தங்குவதற்கு வசதியாக லாட்ஜ் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அதோடு மட்டுமல்ல, அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோயிலின் பக்கத்திலே ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்குரிய ஏற்பாட்டையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மண்டைக்காடு திருவிழாவைப் பொறுத்த அளவிலே அமைதியாகவும், எந்தவிதமான ஆர்ப்பாட்டமும் இல்லாத முறையிலே நடந்து கொண்டு இருக்கிறது. அறநிலையத் துறையைச் சார்ந்தவர்கள் அந்தத் திருவிழாவை நடத்த வேண்டும். அதுதான் முறையான நடவடிக்கை. ஆனால் காவல் துறையினர் அந்தத் திருவிழாவை நடத்துகின்ற பொறுப்பினை தன்னிச்சையாக எடுத்துக் கொண்டு திருவிழா சம்பந்தமான அத்தியாவசிய எந்தவிதமான காரியங்களுக்கும் வேண்டுமென்றே அனுமதி மறுக்கப்படுகிறது. ஒலிபெருக்கிகள் வைக்க வேண்டுமென்று கேட்டால், ஒலிபெருக்கிகளை வைக்கக்கூடாது என்கிற உத்தரவை அவர்கள் போடுகிறார்கள். இந்து சமய மாநாடு ஆண்டு தோறும் நடைபெறுகின்றது. அந்த சமய மாநாடுகள் நடப்பதைக் கூட தடை செய்கின்ற வகையிலே காவல் துறையினருடைய நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கிறது என்பதை தங்களுடைய மேலான பார்வைக்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். ஆகையினால் இனி வருகின்ற காலங்களில் அறநிலையத் துறையினர் தான் மண்டைக்காடு அம்மன் கோவில் திருவிழாவை சுதந்திரமாகவும் சுயேட்சையாக நடத்துவதற்கும் கோயில் வளாகத்தைச் சுற்றி எவ்வளவு ஒலி பெருக்கிகள் தேவையோ, அவைகளை வைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.



1990 ஏப்ரல் 11]

*திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே' மாண்புமிகு உறுப்பினர் பாலையா அவர்களைப் போல ஒரு முழு நேர பக்தனாக இல்லாவிட்டாலும், மனிதத் தன்மையிலே நம்பிக்கையுள்ள ஒரு பகுத்தறிவுவாதியாக, இன்றைக்கு கோயில்களிலே இருக்கிற சில பிரச்சினைகளைச் சொல்ல விரும்புகிறேன். கோயில் சொத்துக்களை அனுபவிப்பவர்கள், வெள்ளைக்காரன் காலத்திலே விதிக்கப்பட்ட குத்தகைத் தொகையையே இன்னும் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். தமிழகம் முழுவதும், கோயில் சொத்துக்களை அனுபவிப்பதற்கு என்றே உள்ளவர்கள், அதிலே பெரும்பாலானவர்கள் இந்தக் குத்தகைத் தொகையையே செலுத்துவதில்லை.

கோயில்களைப் பராமரிப்பதிலே சிரமம் ஏற்படுவதற்கு முக்கியமான காரணம், ஏராளமான சொத்து இருந்தும் அந்தச் சொத்துக்களை அனுபவிக்க பக்தர்கள் அல்லது அந்தச் சொத்துக்களை பரம்பரையாக அனுபவிப்பவர்கள் உரிய குத்தகை தொகையைத் தராதவர்கள் மீது ஆலய நிர்வாகம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்லப் போனால், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயிலுக்கு பல கோடி ரூபாய் பெறுமான காடு, வனாந்திர, சொத்துக்கள் உள்ளன. அவ்வளவையும் அனுபவிப்பவர்கள், ஒரு கால்வாசி பேர் கூட அந்தக் கோயிலுக்குத் தர வேண்டிய குத்தகைத் தொகையைத் தருவதில்லை. அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்து அதற்கென்று ஒரு சட்டத்தை இயற்றியாவது அவர்களை வெளியேற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கிற மதவாதிகள் பலபேரைப்பற்றி எவ்வளவோ சந்தேகங்கள் அவர்களைச் சுற்றி சுற்றி வருவதை நாம் பார்க்கிறோம். மதுரையில், மதுரை ஆதினம் அவர்கள் இருக்கிறார்கள். உண்மையிலேயே மதுரை ஆதினம் அவர்கள் ''ஊனைச் சுருக்கி உள்ளொளியைப் பெருக்க வேண்டும்'' என்ற சைவ சித்தாந்தத்திற்கு ஏற்ற வகையில் உண்மையான ஒரு பக்தராக இருக்கிறார். அந்த மதுரை ஆதினத்திற்கு உண்டான சொத்துக்கள் மதுரை நகரில் ஏராளமாக இருக்கின்றன. அதிலே குடியிருப்பவர்கள், ஏறத்தாழ 100 ஆண்டுக் காலம், 200 ஆண்டுக் காலம் என்று பரம்பரையாக குடியிருந்து கொண்டு ஒரு கட்டிடத்திற்கு மாதம் 5 ஆயிரம் ரூபாய் வாடகை தரக்கூடிய கட்டிடத்திற்கு வெறும் 50 ரூபாய் தந்துகொண்டு, ஆதினத்தையே மிரட்டி வாடகையை உயர்த்த விடாமல் செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் மதுரை ஆதினத்தின் மூலம் செய்ய வேண்டிய பல நற்பணிகளை அவர்கள் செய்ய முடியாமல் சிரமப்படுகிறார்கள். இதற்கென்று ஒரு தனி சட்டத்தை, மற்ற குத்தகைதாரர்கள் பாதுகாப்பு மசோதாவைத் தாண்டிய ஒரு சட்டத்தை, கோயில்

சொத்துக்களைப் பொறுத்த வரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சர்க்கார் சார்பிலே கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். எந்தெந்த கோயில்களுக்கு எவ்வளவு சொத்து, அதை யார் யார் இப்போது அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்ற பட்டியலை அந்த அந்த கோவில் அதிகாரிகள் மூலம் தயார் செய்து அதை பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும். சிவன் சொத்து குல நாசம் என்று பழமொழி சொல்வார்கள். பல பேர் சிவன் சொத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய புலன்கள் எல்லாம் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் அந்த கோவில் நிர்வாகம் பாழ்பட்டு போய் இருக்கின்றது. அந்த சொத்துக்களை கைப்பற்றுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டும். கோவில் சொத்துக்களை திருடுவதற்கு என்றே சில பேர் பரம்பரை பரம்பரையாக பிறந்து வாழ்கிறார்கள். அவர்கள் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய கோரிக்கை இவ்வளவு தான்.

12-35 மணி.

இதற்கிடையில் கடந்த கால புனித ஆட்சி பற்றி சொன்னார்கள். அவர்கள் இப்போது இருக்கிற ஆட்சி என்ன செய்ய வேண்டும் என்று பேசியிருந்தால் நான் குறுக்கிடப் போவது இல்லை. ஆனால் கடந்த கால 10 ஆண்டு காலம் ஒரு இருண்ட காலம், தமிழக சரித்திரத்தில் அமாவாசை நிரந்தரமாக சூழ்ந்து இருந்த காலம் என்று அறிவார்ந்த மக்கள் கருதுகிற காலம். அந்தக் காலத்தில்தான் சரித்திரப்புகழ் பெற்ற புனிதருடைய ஆட்சியில் திருச்செந்தூர் சுப்பிரமணியப்பிள்ளை டி.ஆர்.ஓ. ரேங்கில் உள்ள ஒரு அதிகாரி அநியாயமாகக் கொலை செய்யப்பட்டார். கொலை செய்யப்பட்ட அவருடைய ரத்த வாடை அங்கே திருச்செந்தூரில் வீசுகிறது.

அதே போல் ஸ்ரீரங்கத்தில் இ. ஓ. எக்சிகுட்டீவ் ஆபிசரை கயிற்றிலே கட்டி 6 அடி உயரம் உள்ள விட்டத்திலே தூக்குப் போடப்பட்டார். ஒரு மனிதன் நின்று தனியாக நிற்க முடியாத இடத்தில் தற்கொலை செய்து கொண்டார் என்று சொல்லக் கூடிய முறையில் அவரை அங்கே கொன்று தூக்கில் போட்டார்கள். அதற்கு எந்த விசாரணையும் இல்லை; வழக்கும் இல்லை, எதுவும் இல்லை. திருச்செந்தூர் கொலையைக் கண்டித்து எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அவருடைய செந்தாமரைப் பாதங்கள் செங்குழம்பாக காயம் ஆகும் அளவுக்கு 120 மைல் தூரம் நடந்து சென்று நீதி கேட்டார். ஆனால் நீதி அப்போது கிடைக்கவில்லை. ஆனால் அவர் டாக்டருடைய கட்டளையின் படி ஒய்வு எடுக்க சென்ற போது அதை ஒருவர்





குறிப்பிட்டு முருகன் இவரை தண்டித்தார் என்று சொன்னார். இப்போது அந்த முருகன் மூட்டு மூட்டாக தண்டித்து ஸ்பேர் பார்ட்ஸ்-க்கு அலைந்து கொண்டு இருக்கிற கதை நாட்டுக்குத் தெரியும். ஆனால் அந்த குற்றம் இது வரை கண்டுபிடிக்கப்பட வில்லை. எத்தனையோ வழக்குகள் 10 ஆண்டு காலம் கழித்து கூட குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கூடிய திறமை நம்முடைய போலீஸ் அதிகாரிகளுக்கு உண்டு. எனவே மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் அவர்கள் திருச்செந்தூர் சுப்பிரமணியப் பிள்ளை கொலையையும், ஸ்ரீரங்கம் எக்சிகுட்டீவ்ஆபிசர் கொலை யையும் அது எப்படி நடந்தது? என்னஎன்ற விவரங்கள், அந்தக் குற்றவாளிகளை மீண்டும் பிடிக்க முடியுமா என முயற்சி செய்ய வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தென்திருப்பேரையில் கோவில் நகைகள் திருடு போயின. அந்த நகைகள் திருட்டைக் கண்டுபிடிக்க அங்கே இருக்கும் பிராமணர்கள் பாத யாத்திரையாக வந்து மனு கொடுத்தார்கள். அது என்ன ஆயிற்று? அந்த நகைகள் திரும்ப வருமா என்ற விவரங்கள் நாட்டுக்குத் தெரியவில்லை. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து ஆணையிட்டு கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களைப் போல் அல்ல. நல்ல பக்திமான். நானே பார்த்தேன் ; அவர் கோவிலுக்கு வந்து கோவிலில் இருக்கக் கூடிய குறைகளை எல்லாம் நேரில் ஒரு பக்தி உணர்வோடு கேட்டார்கள். அவர் அப்படிக் கேட்டதற்கு இணங்க பல குறைபாடுகள் இன்றைக்கு நீங்கி இருக்கின்றன.

எங்களுடைய சிவகாசியில் ஒரு சிவன் கோவில் இருக்கிறது. உங்கள் தென்காசியை விட சிவகாசிக்கு கொஞ்சம் பவர் அதிகம். வடக்கே இருக்கிற காசிக்கு அடுத்து சிவகாசி, அதற்குப் பின்னால் தான் தென்காசி. கடவுள் அப்படி தான் வந்து இருக்கிறார். அந்த சிவன் கோவிலை வைத்து தான் அந்த ஊருக்கு பெயர். ரொம்ப பூர்வீகமான கோவில். ஆனால் அந்த சிவன் கோவிலை சுற்றி இங்கே பேசினார்களே நண்பர்கள் புரட்சித் தலைவருடைய ஆட்சியில் அப்படி இருந்தது ; இப்படி இருந்தது ; என்று, அந்த புரட்சித் தலைவருடைய ஆட்சியில் அந்த புள்ளி விவரங் களோடு சொல்கிறேன். ஆதாரத்தோடு சொல்கிறேன். இத் தனை சட்டமன்ற உறுப்பினர்களையும் என்னுடைய சொந்தச் செலவிலேயே சிவகாசிக்கு அழைத்துச் சென்று காட்டுகிறேன். இன்றைக்கு நீங்கள் வந்து பார்த்தால் அந்த சிவன் கோவிலைச் சுற்றி உள்ள கோவில் நிலத்தில் அநியாயமாக கடைகள் கட்டி, என்ன கடைகள், கள்ளச் சாராயம் விற்கிற கடைகள், அந்தக் கடையில் உட்கார்ந்து சாராயத்தை குடித்து விட்டு அங்கே இருக்கிற மட்டன் ஸ்டாலில் சாப்பிட்டுவிட்டு மாலையில்

பரோட்டா ஸ்டாலில் சாப்பிட்டுவிட்டு சிவன் கோவிலின் உள் பிரகாரத்தில் அந்த எலும்புகளை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு போகிறார்கள். கோவில் உள் பிரகாரத்தில்.. .....

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியில் நடைபெறு வதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார் : என் என் றால் இப்போது எல்லோரையும் அழைத்துச் சென்று காட்டு கிறேன் என்று சொல்கிறார். யாரை குற்றம் என்று சொல்லு கிறார் என்பதை அவர் இங்கே விளக்க வேண்டும என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியில் நடைபெற்ற முறை கேடுகளை களைவதற்கு இன்னும் கொஞ்சம் காலம் ஆகும். அந்த வகையில்தான் அவைகள் எல்லாம் இன்னும் அங்கே இருந்து கொண்டு இருக்கின்றன. பல்வேறு கோவில்களில் போடப் பட்ட அறங்காவலர்கள் இன்னும் அங்கே நீடிக்கிறார்கள். ஆகவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம், முந்தைய ஆட்சியில் நடைபெற்றதை தான் அவர் இங்கே சொல்லிக் கொண்டு இருக்கிறார்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்த்தார்கள். அவர் பார்த்த தற்குப் பின்னால் ஓரளவு சட்டப்படி அகற்றக் கூடியவற்றை அகற்றிவிட்டார்கள். சில பேர் இங்கே ஹைக்கோர்ட் இருக் கிறதே, நம்முடைய ஹைக்கோர்ட் தான் நமக்குத் தெரியுமே, மவுண்ட் ரோடில் யாரும் நடக்கக் கூடாது என்றால் உடனே ஸ்டே கிடைக்கும். அதைப் போன்று ஸ்டே கொடுத்து விட் டார்கள். சிவன் கோவிலைச் சுற்றி ஈவினிங்கில் மட்டன் ஸ்டால் வைக்கக் கூடாது என்றால் வைக்கலாம் என்று ஸ்டே வாங்கி இருக்கிறார்கள். அப்படி சட்டத்தை வைத்து மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். எதற்கு எடுத்தாலும் ஸ்டே வாங்கிவிடு கிறார்கள். அதை வைத்து......

12-40 மணி.

திரு. என். கணபதி : பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். கண்ணப்ப நாயனார் சிவனுக்கு கறியை வைத்துப் படைத்திருப்ப தாக புராணங்கள் சொல்கின்றன. ஆகவே, கோவிலில் கறி சாப்பிடுவது என்ன தப்பு ?

திரு. குமரி அனந்தன் : கண்ணப்ப நாயனார், தனது கண்ணையும் எடுத்து வைத்து அல்லவா படைத்திருக்கிறார் ? தன் கண்ணையே வைத்துப் படைத்தவர். இன்னொருவரின் எலும்பை வைத்துப் படைக்கவில்லை. இன்னும் ஒன்று, மாண்புமிகு



உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், தென்காசியைவிட, சிவகாசி உயர்ந்தது என்று. சிவகாசியும் எனக்கு வேண்டி யது தான். தென்காசியும் எனக்கு வேண்டியது தான். அது இருக்கட்டும். பல விஷயங்களைப் பேசும்போது விவாதம் திரும்பி விடுகிறது. பல வேளைகளில் அப்படிப் பேசிப் பேசி இப்போது அது தேர் இழுப்பது வரை போய் இருக்கிறது. பிரச் சினை என்னவென்றால், தென்காசி மிகப் புராதனமானது. சிறப்பு வாய்ந்தது. ஏனென்றால், அந்தக் காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்ட காலத்தில், தென்காசி கோயிலில் இருந்து ஒரு கல் கீழே விழுந்துவிட்டது. அந்தக் கல்லை இப் போது யாராவது எடுத்து திருப்பி பதிப்பார்களேயானால், அப்படிப் பதிப்பவர்களுடைய பாதத்தை என் தலையில் சுமப் பேன் என்று அந்த மன்னர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு சிவகாசியிலிருந்த லிங்கத்தை கொண்டு வந்து வைத்தார்கள். சிவகாசி என்பதே அந்த லிங்கத்தைச் சுற்றி வந்த ஊர்தான். அந்தப் பெருமை அங்கே உண்டு.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர் கள் இலக்கியம் எல்லாம் நன்றாகத் தெரிந்தவர். ஆனால் சிவகாசி கோவிலில் எப்படி அந்த லிங்கம் வந்தது ? தென்காசியில் அந்த லிங்கம் எப்படி வந்தது என்பதைக் கொஞ்சம் இலக்கியச் சுவை யோடு சொல்லியிருக்கலாம். அந்த சிவகாசிக்குச் சென்று பார்த் தால், அந்த மூர்த்திக்கு—அங்கே உள்ள லிங்கத்திற்கு தென் காசியைவிட அதிக சக்தி உண்டு என்பதை தெரிந்து கொள்ளலாம்.

திரு. குமரி அனந்தன் : சிவகாசிக்கு மட்டுமல்ல. எல்லா கோயில்களுக்குமே பட்டாசு வெளிச்சம் கொடுக்கிற சக்தியும் சிவகாசிக்கு உண்டு. எனவே அதைச் சொல்லவில்லை. புராதனத் தைச் சொன்னேனே தவிர அங்கே உள்ள சக்தியைப்பற்றி இல்லை. புராதனத்தைச் சொன்னேன். தொன்மையைச் சொன்னேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : இதற்கு இலக்கியக் கதையே இருக்கிறது. அவர்கள் இலக்கியச் செல்வர் என்ற காரணத்தால் நான் அவர்களிடம் எதிர்பார்த்தேன். அதைத் தனியாக வேண்டுமானால் பேசலாம். இங்கே பேசி அவையின் நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் இலக்கியச் சுவையும், இலக்கியக் கதையும் அதற்கு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : சிவகாசி பெரியதா, தென்காசி பெரியதா என்று சொல்வதைவிட, அந்தக் கோயில் களில் வேண்டுகின்ற ஆட்களின் புனிதத் தன்மையைப் பொறுத் துத்தான் இவைகள் சிறந்ததாக அமையும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. மோகன்) : தென்காசியின் குரல் கேட்டோம், இப்போது சிவகாசி.

திரு. பெ. சீனிவாசன் : ஆகவே உடனடியாக சிவகாசி கோயிலைச் சுற்றியுள்ள இந்த அநாகரீகமான நடவடிக்கைகளை, அமைச்சர் அவர்கள் கடுமையாக ஆணையிட்டு நிறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே இருக்கின்ற ஒரு சங்கத்தினர் கூட என்னிடம் கேட்டார்கள். உண்ணாவிரதம் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். உங்களுக்கு பக்தி இல்லாவிட்டாலும் வரவேண்டும் என்று சொன்னார்கள். இதற்கும் பக்திக்கும் சம்பந்தம் இல்லை, இது ஒழுக்கப் பிரச்சினை, நான் உங்களோடு வருவேன், ஆனால் இதற்காக உண்ணாவிரதம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை, நான் அமைச்சர் அவர்களிடம் சொல்லி, அந்த அழுக்குகளை அப்புறப்படுத்துகிறேன் என்றுகூட சொன்னேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி கூட கேட்டார். இந்த ஆட்சியில் நடக்கிறதா என்றார். கோர்ட்டில் ஒரே ஒரு தடை போட்டிருக்கிறார்கள். அந்தத் தடையைக் கூட, அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் பொறுப்பில் இருக்கிற கடைக்குத்தான் பெற்றிருக்கிறார்கள். அவர், புறம்போக்கு இடங்களை பட்டா போடுவதில் நிபுணர். கோயில் நிலம் என்று கூட பார்க்காமல், சிவன் சொத்து என்று கூட பார்க்காமல் தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் இப்படி செய்து கொண்டிருக்கிறார்கள் (குறுக்கீடு). ஏன் அவசரப்படுகிறீர்கள். இன்னொன்றையும் சொல்கிறேன். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வந்து பாருங்கள். அந்தக் கோயில் புராதனமான கோயில், மீனாட்சி அம்மன் என்ற பெயரைச் சொன்னாலே பக்தர்கள் கன்னத்தில் போட்டுக் கொள்வார்கள். அந்தக் கோயில் முன்பாக உள்ள புராதனமான சிலைகளை மறைத்து, பலகைகளை வைத்து மறைத்து, கடைகளைப் போட்டிருக்கிறார்கள். அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை (குறுக்கீடு). கேட்டால் நான் சொல்கிறேன். தேவைப்பட்டால் கூப்பிட்டுக் கேளுங்கள். நீதி விசாரணைக்குக் கூட உத்தரவு போடுங்கள். தங்கம் என்பது அவர் பெயர். அவர் செய்வது நியாயமா என்று சற்று பக்தி உள்ளவர்கள் சிந்தித்துப் பாருங்கள். சிலைகளைச் சுற்றி பலகைகளை அடைத்துக்கடைகளை அமைத்திருக்கிறார்கள். அவர் செய்தது நியாயமா என்று எண்ணிப் பாருங்கள். அது மட்டுமா ?

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில். அதைக் கட்டியது யார் என்று கூட இன்றுவரை ஆராயச்சியாளர்கள் முயற்சி செய்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் தெரியவில்லை. ஆண்டாள் பாசுரம் கேட்டிருப்பீர்கள். தேரோடும் ஸ்ரீ வில்லிபுத்தூர் வீதியைப் பார்த்திருப்பீர்கள். அந்த ஆண்டாள்



கோவிலில் ஏதோ ஒரு இடத்தில் சுண்ணாம்பு வைத்து பூசினார்கள். அந்த இடத்திற்கு ஒரு பெயர்ப்பலகை திறந்தார்கள். கிட்டத்தட்ட ரூபாய் 5,000 மதிப்பில் அந்த ஊர் எம். எல்.ஏ. பெயரை எழுத வேண்டுமென்பதற்காக அங்கே ஒரு கல்வெட்டை வைத்தார்கள்.

**12-45 மணி**

பத்தாண்டுக் காலமாக எங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஆலய நிர்வாகம் சிறப்பாக இருந்தது என்று சொல்கிறீர்கள். நண்பர்களே, தயவுசெய்து கொஞ்சம் மனசாட்சியோடு பேசுங்கள் சட்டசபையில் பேசும்போது.

திரு. எஸ். டி. உகம்சந்த் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் பேசும்போது பல்வேறு குற்றச்சாட்டுகளை ஏதோ போகிற போக்கில் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். நான் ஒன்று மட்டும் சொல்கிறேன். அவர்கள் பேசும்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பிளாட் போட்டு விற்பதில் சிறந்தவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். காஞ்சிபுரத்தில் இருக்கிற கச்சபேஸ்வரர் கோவில் நிலத்தை, அந்த சொத்தை யார் விற்று இருக்கிறார்கள் ? யார் பிளாட் போட்டு விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சங்கராச்சாரியார் முதற்கொண்டு எல்லோரும் இதைப்பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. மோகன்) : மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்களுக்கு ஒரு வார்த்தை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் தவறு நடைபெறுகிறது ஆலயங்களில் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக சில சான்றுகளைச் சொன்னார்கள். தவறை யார் செய்திருந்தாலும் அது கண்டிக்கத்தக்கது. உடனடியாக அவைகளைக் களைவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்கள். வேண்டுமானால் உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது வேறு ஏதாவது தவறுகள் இருந்தால் அதை அமைச்சரிடத்திலே சுட்டிக்காட்டலாம். அந்தத் தவறுகள் நிச்சயமாகக் களையப்படும். யார் செய்திருந்தாலும் சரி, ஆலயங்களில் தவறு நடக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இன்றைக்குக் காலையிலே சட்டமன்ற உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் தனக்கு பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று சொல்லி வெளிநடப்பு செய்திருக்கிறார். எனவே எந்த விதியின்கீழ் இப்போது எழுந்து பேசுகிறார்கள் என்று சொல்ல முடியுமா? (குறுக்கீடு)

[1990 ஏப்ரல் 11

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. மோகன்)** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு வார்த்தை. திரு. பெ. சீனிவாசன் சொல்வதில் என்ன உங்களுக்கு கருத்து வேறுபாடு. ஆலயங்களில் தவறு நடைபெறுகிறது என்பதைச் சொல்ல 3, 4 மேற்கோள்களைச் சுட்டிக்காட்டி இப்படி, இப்படி நடக்கின்றன, அவை களையப்பட வேண்டும் என்று சொல்கிறார். மேலும் உங்களிடத்திலும் தகவல் இருந்தால் உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசும் போது நீங்கள் அதை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) இப்போது ஏன் குறுக்கிடுகிறீர்கள். வேண்டாம் உங்களை நான் அனுமதிக்கவில்லை.

**திரு. எஸ். டி. உகம்சந்த்:** தலைவர் அவர்களே, அவர் கட்சி பற்றிச் சொல்கிறார்.

**திரு. பெ. சீனிவாசன்:** காஞ்சிபுரத்தில் நடைபெற்ற நீங்கள் குறிப்பிட்ட குற்றச்சாட்டை நான் ஒத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) காஞ்சிபுரத்தில் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை ப்ளாட் போட்டு சச்சிதானந்தம் என்ற சன்மார்க்கம் மிகுந்த அண்ணா தி.மு.க. காரர் விற்றுக்கொண்டிருக்கிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் சச்சிதானந்தம் என்ற கவுன்சிலர். அவர்தான் அவ்வாறு ப்ளாட் போட்டு விற்கிறார். அப்படி இல்லை, தி.மு.க. காரன்தான் விற்கிறான் என்றால் காட்டுங்கள். மறுநாளே அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் (கூச்சல் குழப்பம்.)

**திரு. எஸ். டி. உகம்சந்த்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் பேசும் போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குறிப்பிட்டுச் சொன்னதால்தான் சொன்னேன். தவறு எங்கே இருந்தாலும் களையப்படவேண்டும். அதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால் ஒரு முதலமைச்சரைக் குறிப்பிட்டுச் சொன்னதால்தான் மறுப்புச் சொன்னார்கள். கச்சபேஸ்வரர் பற்றிச் சொல்லும் போது....

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** அவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் கேட்டேன், அதற்கு இன்னும் பதில் இல்லை. எந்த விதியின் கீழ் பேசுகிறார் என்று விதியைச் சொல்லுங்கள். யார் வேண்டுமானாலும் இந்த விவாதத்தில் எழுந்து பேசிக் கொண்டிருக்கலாமா ? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது வேண்டுமானால் பதில் சொல்லட்டும். இங்கே திரு. சீனிவாசன் அவர்கள் பேசுகிறார்கள். அதற்கு பதிலாக அங்கே இருக்கின்ற அத்தனைபேரும் எழுந்து பேசலாமா? எந்த விதியின்கீழ் அவரைப் பேசுவதற்கு அனுமதிக்கிறீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 11]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு, இரா. மோகன்):** மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன் பேசுகிறபோது குறுக்கிட்டு 'நான் சில விளக்கங்கள் தருகிறேன்' என்று மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் எழுந்தார். ஆகவே அதற்கான அனுமதியை நான் தந்தேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் பேசுவதற்கெல்லாம் 'நானே பதில் சொல்வேன்' என்று ஒவ்வொன்றுக்கும் எழுந்து அவர் சொல்லக் கூடாது. அவர் சில குற்றச்சாட்டுகளைச் சொல்லி இதை இன்னின்னார் செய்திருக்கிறார் என்று சொல்கிறார். அவர்கள் எல்லாம் உங்கள் கட்சிக்காரர்களாக இருக்கிறார்கள் என்றால் நான் என்ன செய்ய முடியும்? தப்பு செய்தவர்கள் உங்கள் கட்சிக்காரராக இருந்தால் நீங்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். யாராக இருந்தாலும் தவறு செய்தவர்கள் கண்டிக்கப்பட வேண்டும். அவர்களைப் பாராட்டக்கூடாது. (குறுக்கீடு) இதை நான் அனுமதிக்க முடியாது. தவறு செய்தவர்கள் எந்தக் கட்சியிலே இருந்தாலும் சரி, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தலைகுனிய வேண்டும். நம்முடைய கட்சிக்காரர் இப்படிச் செய்து விட்டாரே என்று தலைகுனிய வேண்டும், அவர்களைப் பாதுகாக்கக் கூடாது.

12-50 மணி

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** அவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தைப் பற்றி நான் கொஞ்சம் விளக்கிச் சொல்லி விடுகிறேன். அதற்குப் பிறகு.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. மோகன்) :** நான் சொன்ன கருத்து என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அதாவது, 'எங்கள் கட்சிக்காரர்களையே சொன்னார்கள்' என்று திரும்பத் திரும்ப நீங்கள் சொன்னீர்கள். அவர், தவறு செய்தவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டார். தவறு செய்தவர்கள் பெயர்களைக் குறிப்பிடுகிற பொழுது, நீங்கள் அதை ''Defend' செய்யக் கூடாது, அவர்களைக் கண்டிக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவாதம் திசை திரும்பி வேறு பக்கம் போகிறது. விவாதத்திலே, என்னுடைய காதிலே விழுந்தது எல்லாம், மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் முன்னாள் ஆளுங்கட்சியைக் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டினார், ஒரு வேளை, அதை மறுப்பதற்காக, மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் எழுந்திருந்து பேசுகிறபொழுது, தி.மு.க. காரர்கள் இப்பொழுது விற்றுக் கொண்டிருக்கிறார்கள். என்று சொன்னார், அதற்குப் பதிலாக, திரு. சீனிவாசன் அவர்கள் மறுபடியும் சொல்லிக் கொண்டிருக்கும்போது, இப்பொழுது விற்றுக் கொண்டிருப்பவர் பெயரைச் சொல்லி, 'அவர் விற்றுக் கொண்டிருக்கிறார், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என்று சொன்னார். அதோடு அந்தப்

பிரச்சினை தீர்ந்துவிட்டது. தொடர்ந்து அதற்கு மேல் பேசிக் கொண்டிருந்தால் தனிப்பட்ட விவாதமாகிவிடும். எனவே, ஒவ்வொரு கட்சியிலேயும், அவரவர்களுக்குப் பேசுகிற வாய்ப்பு இருக்கிறபொழுது, அந்த உறுப்பினர்கள் தகுந்த விவரங்களைத் தந்து, தகுந்த ஆதாரத்தோடு பேசி, குற்றச்சாட்டுகள் எழுப்பலாமே தவிர, குறுக்கிட்டுப் பேசுகிறபொழுது, குற்றச்சாட்டு எழுப்ப யாருக்குமே உரிமை கிடையாது. கடந்த காலத்தைப் பற்றி, பொதுவாக சொல்லப்படுகிற விவாதத்திற்காக ஏதேனும் பதில் சொல்வதானால் மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பதிலிலேயே தெரிவித்து விட்டார். அந்தப் பதில் தவறு என்பதற்கு, ஒருவருடைய பெயரைச் சொல்லி, அவர் விற்றுக் கொண்டிருப்பதாக, திரு. சீனிவாசன் அவர்கள் சொன்னார்கள். ஏதேனும் அதிலே விளக்கம் இருக்குமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே விளக்கம் இருந்தால் விளக்கலாமே தவிர, மேலும் அதைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பது இந்த அவையினுடைய பொது நோக்கத்திற்கு ஒத்ததாக இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. குமரி அனந்தன் : துணை சபாநாயகர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் இந்த அவையிலே தொடர்ந்து எல்லாம் நன்றாக, சீராக, நடைபெற வேண்டுமென்பதற்காகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சபாநாயகர் அமர்ந்திருக்கிற—நமது மிக்க மரியாதைக்குரிய இடத்திலே அவர்கள் சொல்வதை எல்லாம் நாங்கள் தீர்ப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, ஒருவர் சொல்கிறபொழுது, தலைகுனிய வேண்டுமென்ற தீர்ப்பை அவர்கள் வழங்கக்கூடாது; ஏனென்றால் ஒவ்வொருவரும் அப்படிச் சொல்லிவிட்டால், இவர் சொல்ல, அவர் தலைகுனிய, இவர் சொல்ல, அவர் தலைகுனிய, நியாயம் எது என்று சொல்ல முடியாமல் போய்விடும். எனவே, யாரும் தலைநிமிர்ந்து போக முடியாத நிலைமைக்கு வந்துவிடுமோ என்று எண்ணுகிறேன் நான். ஏனென்றால் நியாயமானதை ஓரிடத்திலே எழுந்து சொல்ல வேண்டும்.

இரண்டாவது, நமது அமைச்சர் பெருமகனார் எந்த விதியின் கீழ் என்று கேட்டார். ஒழுங்குப் பிரச்சினை என்று வருகிற நேரத்திலே, அவர்கள் எழுந்து பேசுகிறபொழுது, அனுமதி கொடுப்பதும் கொடுக்காததும் சபாநாயகருடைய முடிவிற்கு விடப்பட வேண்டிய ஒன்று. எந்த விதியின்கீழ் நீங்கள் இப்பொழுது கேட்கிறீர்கள், முன்பு நீங்கள் வெளிநடப்புச் செய்தீர்கள்—அப்படியென்றால், முன்பு வெளிநடப்புச் செய்த காரணத்தால் இப்பொழுது ஏன் கேட்கிறாய் என்கிற பொருள் வருகிறது. அதெல்லாம் தேவைதானா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : நான் மீண்டும் சொல்கிறேன். இங்கே விவாதம் நடைபெறுகின்ற பொழுது,



சட்டமன்றத்திலே விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் நாம் விவாதம் நடத்த வேண்டும். பாய்ண்ட் ஆப் ஆர்டர் என்று ஒவ்வொன்றையும் எடுத்தால் இட்மஸ்ட் பி எ பாய்ண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். "Point of order" என்ற பெயரில் உதாரணத்திற்கு முன் வரிசையில் இருக்கிற திரு. குமரி அனந்தன் உட்பட எந்த ஒரு விஷயத்திலும் உங்களுடைய குறுக்கீடுகள் கூட அதிகம் என்று நான் முன்புகூட சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. குமரி அனந்தன், நான் சொல்கிறேன்.

THIRU. KUMARI ANANDAN : I cannot allow you to pass judgment on me. (கூச்சல்-குழப்பம்).

12–55 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்லப்பட்ட ஒரு உணர்வை வேறு கோணத்திலே எடுத்துக்கொண்டு வருத்தப்படக் கூடாது; ஆத்திரப்படக் கூடாது. அவர் எதை எண்ணிக் கொண்டு சொன்னார் என்றால், அடிக்கடி நீங்கள் எழுந்து குறுக்கிடுகிறீர்கள் என்று சொன்னால், அது சபாநாயகர், ஒருவர் இடையே அடிக்கடி எழுந்து நிற்கிறபோது தோன்றுகின்ற ஒரு எண்ணத்தைச் சொன்னதாகப் பொருள். ஆனால் உங்களுக்கு முன்வரிசையிலே இருக்கிற தலைவர் என்ற முறையில் அந்த உரிமை இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்த உரிமை இருந்தாலும் கூட மனதிலே படுகிறபோது, நேருக்கு நேர் ஓர் எண்ணம் வருகிறபோது, அதைச் சொல்லிவிட்டார் என்பதற்காக நீண்டநாள் சட்டமன்ற அனுபவம் உள்ள திரு. குமரி அனந்தன் அவர்கள் அந்த ஒரு வார்த்தைக்காகவே வருத்தப்படவோ, ஆத்திரப்படவோ வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கொஞ்சம் வயதானவன் என்ற காரணத்தால் இந்த ஆலோசனையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்றொன்று, இந்த அவை சீராக நடப்பதற்காகத்தான் இடையிலே என்ன விதியின்படி மாண்புமிகு உறுப்பினர் எழுந்து கேட்கிறார் என்பது ஒரு பிரச்சினையாக வருகிறதே தவிர, விவாதம் நடக்கும்போது ஒரு கருத்திற்கு மாறுபட்ட கருத்து இல்லை என்ற அடிப்படையிலே இங்கே விவாதங்களை நடத்த முடியாது; மாறுபட்ட கருத்து இருக்கத்தான் செய்யும். அந்தக் கருத்து உரிய நேரத்திலே பேசப்பட வேண்டும். ஒவ்வொரு உறுப்பினர் பேசுகிறபோதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்தை இடையிலே சொல்வது என்று

தொடங்கினால் ஒரு எல்லை இல்லாமல் போய்விடும். ஆகவே நான் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் உறுப்பினர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். கருத்துக்கள் தவறாக இருக்குமானால் கூடத் தங்கள் கட்சிக்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அந்த நேரத்திலே சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லலாம். மறுக்கக்கூடாது என்பதல்ல. நினைத்த போதெல்லாம் மறுத்தால் அதற்கு எதிர்ப்புக் கருத்து சொல்ல நேரிட்டு, அதனுடைய விளைவாக விவாதம் முடிவுற முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அந்த வகையில் ஏதேனும் சில வார்த்தைகள் யாரையேனும் புண்படுத்தியிருந்தால் கூட நான் மொத்தமாக அதற்கு வருத்தம் தெரிவித்து அவையின் நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைய அனைவரும் ஒத்துழைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

*THIRU. OSCAR C. NIGLI: Hon. Mr. Dep..ty Speaker. I know the heat of the moment. The Hon. Member, Thiru. Kumari Anandan used the words **. I request that the words be expunged.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்** : தலைவரவர்களே, அவை எல்லாம் குறிப்பிலே இடம் பெறவில்லை.

**திரு. என். பழனிவேல்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையினுடைய இந்த மானியத்திலே இன்றைக்கு பேசுகிறோம். தமிழ்நாட்டிலே இந்தத் துறையின்கீழ் இன்றைக்கு 35,150 சிறு கோயில்கள், மடங்களைச் சேர்ந்த கோயில்கள், மடங்கள், அறக்கட்டளைகள் என்று பல்வேறு முறையில் இருக்கின்றன. இந்தக் கோயில்களைப் பராமரிக்கவும் அங்கே மக்களுக்குத் தேவையான நல்ல வசதிகளைச் செய்து கொடுக்கவும் பக்தர்கள் வழிபடவும் அதை சீராக்கவும் என்று சொல்லி இந்த அரசு வந்தவுடனே நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை, 5 பேர்கள் கொண்ட ஒரு வல்லுநர் குழுவை அமைத்தது. அந்தக் குழு அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதாகத் தெரிகிறது. அந்தக் குழுவினுடைய அறிக்கையை வெளியிட்டால் வசதியாக இருக்கும், கோயில்கள் சிறப்பாக நடக்கும் என்று சில பெரிய மகான்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த அறிக்கையை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு கோயில்களில் எல்லா பொது மக்களும் பாகுபாடின்றி வழிபட தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தற்போது சில இடங்களில் ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி, விஸ்வ ஹிந்து பரிசத் போன்ற இயக்கங்கள் எல்லாம் இன்றைக்கு கோவில் தலங்களை அவர்களுடைய இயக்க அலுவலகங்களாக மாற்றக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்கான பயிற்சி கூட சில இடங்களில் நடப்பதாக தகவல் வந்திருக்கிறது. அம்மாதிரியான தகவல்கள் வருவது இந்து சமுதாயத்திற்கு உத[illegible] இராது. அதற்கு நேர் மாறாக, இஸ்லாமிய மக்களுக்கு [illegible] விரோதமான ஒரு நிலைமையை ஏற்படுத்தி விடும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



அதைப்போல, கோவில் ஸ்தலங்களைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் அந்தத் துறையினுடைய ஊழியர்களுடைய கடமையாக இருந்து வருகிறது. அதே நேரத்தில் இந்தத் துறையில் சுமார் 47,000-க்கு மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு வழங்கக்கூடிய ஊதியம் மிகவும் சொற்பமானது என்று பல இடங்களிலே சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் அங்கே தலைமை நிர்வாகத்தில் இருக்கிற ஏ.சி., டி.சி., சூப்பரின்டென்டெண்ட் போன்றவர்களுக்கு அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியம் கொடுக்கப்படுவதாகவும் மற்றவர்களுக்கு பெயரளவுக்கு ஊதியம் கொடுக்கப்படுவதாகவும் சொல்லுகிறார்கள். அதை இந்த அரசு நிவர்த்தி செய்வது பற்றி சிந்திக்க வேண்டும்.

13-00 மணி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் ஒப்புதலுடன் அவையினுடைய அலுவல் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

**திரு. என். பழனிவேல்** : அரசு ஊழியர்களுக்குக் கிடைப்பதைப் போல இவர்களுக்கும் ஊதியம் கிடைக்க ஏற்பாடு செய்ய இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, நிர்வாக அதிகாரிகளாக இன்றைக்கு கோவில்களிலே இந்து மதத்தைச் சேர்ந்த ஆண்களை மட்டுமே நியமிக்கின்றார்கள். அதே சமயத்தில் தக்கார்களாக பெண்கள் வருகிறார்கள். ஆனால் அந்த துறையிலே பணி புரியக்கூடியவர்களாக 47 ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகின்றார்கள் என்று சொன்னால், அவர்களிலே ஒருவர் கூட பெண் இல்லை என்ற நிலை இருக்கின்றது. பெண்களுக்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்து தரக்கூடிய இந்த அரசு இந்தத் துறையிலே பெண்களுக்கு ஏன் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக அரசு நன்கு யோசித்து இந்தத் துறையிலும் பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலைவாய்ப்புத் தரவேண்டும்.

அதேபோல, ஆதிதிராவிடர் பெருமக்களுக்கும் இந்தத் துறையிலே 18 சதவிகிதம் இட ஒதுக்கீடு இன்றைக்கு இல்லை. ஆகவே அந்த 18 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை இந்த ஆதிதிராவிட

மக்களுக்கும் பெற்றுத்தரவேண்டும். இன்றைக்கு பல்வேறு இடங்களிலே படித்துவிட்டு அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சும்மா இருக்கின்றார்கள். அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கக்கூடிய முறையிலே இந்தத் துறையிலே ஏற்படுத்தித் தரவேண்டும்.

அதேபோல, இன்றைக்கு கோயில்களுக்குச் சொந்தமான இடங்களிலே வீடுகள் கட்டிக் காலம் காலமாக இன்றைக்கு பல இடங்களிலே குடியிருந்து வருகின்றார்கள். அந்த குடியிருப்புகளை எல்லாம் அந்த மக்களுக்கு சொந்தமாக்கிவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, கோயில் ஸ்தலங்களில் கோவில் கடைகளில் சிறுசிறு கடைகள் வைத்திருப்பவர்கள் சொல்கின்றார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் வாடகைக் கட்டணத்தை உயர்த்துவதாக சொல்கிறார்கள். அம்மாதிரி சின்ன கடை வைத்திருப்பவர்கள் ஏதோ அன்றாட வாழ்க்கைக்காக நடத்துகின்றார்கள். பெரிய அளவிலே வைத்து வியாபாரம் செய்யக்கூடிய அந்த கடைக்காரர்களுக்கு வேண்டும் என்றால் உயர்த்துங்கள். அதற்கு தடை இல்லை. சின்ன கடைக்காரர்களுக்கு விதிவிலக்கு தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, கோவில் சொத்துக்களை எள்ளளவு முறை கேட்டிற்கும் இடமின்றிப் பாதுகாக்க வேண்டும். குறிப்பாக சில கோயில்களுக்கு பொதுமக்கள் வேண்டுதல் என்று சொல்லி மாடுகள், கோழிகள் இவைகளை எல்லாம் கொண்டு வந்து சும்மா விட்டுவிட்டு செல்கின்றார்கள். அம்மாதிரி பிராணிகளை எல்லாம் அந்தந்தப் பகுதியிலே இருப்பவர்கள் எல்லாம் பிடித்துக்கொண்டு போய் உபயோகப்படுத்துகின்றார்கள். அம்மாதிரி நடக்காமல் இந்தத் துறையும் சரி, அரசும் சரி, பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதுபோலவே, தமிழகத்தில் உள்ள சுமார் 35 ஆயிரம் கோயில்கள், மடங்கள், ஆதீனங்கள் இன்றைக்கு பெரும்பாலானவை பரம்பரை தர்மகர்த்தா என்ற பெயரிலே இருந்துகொண்டிருக்கின்றன. இந்த குறிப்பிலேகூட சொல்லியிருக்கின்றார்கள். 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட பரம்பரை தர்மகர்த்தாக்கள் இருப்பதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பரம்பரை தர்மகர்த்தா தேவைதானா? இந்த அரசு உடனடியாக ஒழித்துக்கட்ட வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். மக்கள் பிரதிநிதிகளை அல்லது அரசு கட்சி சார்ந்தவர்களை போட்டாலும்கூட ஒத்துக் கொள்வேன். மக்கள் பிரதிநிதிகளை நீங்கள் போட்டு அந்த பரம்பரைக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்.



அதுபோலவே, கோவில்களுக்கு அறங்காவலர் குழு என்பதே இன்றைக்கு பெரும்பான்மையான கோயில்களுக்கு இன்னும் போடப்படாமல் இருக்கின்றது. அதை ஏன் போடவில்லை? அதற்கு என்று வாக்காளர் ஜாபிதா தயாரிக்க வேண்டியிருக்கிறதா? தேவையில்லை. அரசு பார்த்து நியமிக்க வேண்டும். அதை உடனடியாக செய்து நல்லவர்களாக ஒழுக்கம் மிக்கவர்களாக, நாணயம் மிக்கவர்களாக, பொது மக்களுக்கு பயன்தரக் கூடியவர்களாகப் பார்த்து அமர்த்த வேண்டும்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் ஒரு மணித்துளியில் முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் 5 நிமிடம்கூட ஆகவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 மணித்துளிகள்தான்.

திரு. என். பழனிவேல் : ஆகவே, அந்த கோயில்களுக்கு உடனடியாக அறங்காவலர் குழுக்களை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்றைக்கு திடீரென சாமிகள் எங்கு பார்த்தாலும் நடு ரோடுகளிலேயே போக்குவரத்துக்கு இடையூறு செய்யக்கூடிய அளவிலே ஏற்படுகிறது. அதை எல்லாம் இந்த அரசு, இந்தத்துறை பார்த்து, அதை ஓரமாக குடிமக்களுக்கு இடையூறு இல்லாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே. இன்றைக்கு தமிழகத்தில் கோயில்களுக்கு சொந்தமான நிலங்கள் 6 லட்சம் ஏக்கருக்கு மேல் இருப்பதாகச் சொல்கின்றார்கள். அந்த நிலங்களை எல்லாம் சாகுபடி செய்யக்கூடியவர்கள் குத்தகை கொடுப்பதில்லை. இதிலே சொல்லியிருக்கின்றார்கள். 66 கோடி ரூபாய் இன்றைக்குப் பாக்கி வைத்திருப்பதாகச் சொல்கின்றார்கள். அதில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் சாகுபடி செய்வதாகத் தெரிகிறது. அது வந்து சேராது. அதை ஏன் நீங்கள் வருடம் எல்லாம் கணக்கிலே காட்ட வேண்டும்? அந்த ரூ. 66 கோடி முழுவதையும் ரத்து செய்துவிட்டு அந்த 6 லட்சம் ஏக்கர் நிலங்களை விவசாயம் செய்யக்கூடிய ஏழையெளியவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு பட்டா செய்து கொடுத்துவிட்டு அதற்கு ஒரு கிரயத்தை மார்க்கெட் ரேட்டுக்கு ஒரு கிரயத்தை நிச்சயித்தால் அதிலே பல கோடிக்கணக்கான ரூபாய் வரும். நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் வரும். அதை நீங்கள்

[திரு. என். பழனிவேல்] [1990 ஏப்ரல் 11

வங்கிகளிலே டெபாசிட் செய்தால்தான், அதன்மூலமாக வரக்கூடிய வருமானத்தை வைத்து கோயில்களை நாம் நிர்வகிக்கமுடியும். அந்த பணியினை இந்த அரசு செய்ய வேண்டும் என்று சொல்லி நான் இந்த நேரத்திலே உங்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

13-05 மணி

அதைப்போல, கோயில் நிலங்கள். முக்கியமான இடங்களில் கோயில் நிலங்கள் இருந்தாலும் கூட, அரசினுடைய தேவைக்கு அவற்றை கைப்பற்ற முடியவில்லை. இந்தத் துறையும் அந்த நிலங்களில் கை வைக்க முடியவில்லை. அதை வேண்டும்போது அரசு எடுத்துப் பயன்படுத்தும் வகையில் ஏதாவது சட்டத் திருத்தம் கொண்டுவருவது பற்றி அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். திருவாரூர் போன்ற இடங்களில் 90 வருடக் குத்தகைக்கு நிலங்களை எடுத்திருக்கிறார்கள். அவர்கள் அங்கே குத்தகை செலுத்தாதது மட்டுமல்ல, அங்கே அந்த நிலங்களை விற்பனை செய்வதற்கான முயற்சிகளில் ஈடு பட்டிருப்பதாக புகார் வந்திருக்கிறது. அந்தமாதிரி செய்வதை அரசு கண்டித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, கோயில் வருமானம் என்று பார்த்தால் உள் ளாட்சித் துறைக்கு மேலாக இத்துறைக்கு வருமானம் வருகிறது. குறிப்பாக, நான் சார்ந்திருக்கிற பழனி திருக்கோயிலில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது. ஆனால் அந்தப் பகுதி மக்களுக்கு எந்தவித வசதியும் கிடையாது. ரோடு வசதி, குடிதண்ணீர் வசதி, பேருந்து வசதி, கழிப்பிட வசதி எதையும் அங்கே செய்து தரவில்லை. போன வருடம் கூட நான் இதுகுறித்து பேசியிருக்கிறேன். பழனி முனிசிபாலிட்டிக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்து பழனியை அழகுபடுத்தினால் கோயிலுக்கு முருகனை தரிசிக்க வருகிற மக்கள் திருப்திகரமாக செல்வதுடன் பழனிக்கு நல்ல வசதி களும் கிடைக்கும். இதற்கு அரசு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய கோயில்களுக்கு வருகிற வருமானத்திலிருந்து ஒரு பகுதியை வைத்து, கோயில் இருக்கிற ஊரின் மற்றும் கோயிலின் முன்னேற்றத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைய தினம் திருக்கோயில்களில் அரசு தலையிடக் கூடாது என்று கோஷம் போடுகிறார்கள். அப்படியென்றால் கோயிலில் உள்ள விக்கிரகங்கள், தங்க நகைகள் எல்லாம் காணாமல் போய்விடும் நேரங்களில் அரசு தலையிடக் கூடாது என்றால் யார்தான் அவற்றைக் கண்டுபிடிப்பது? அந்தமாதிரி கோஷங் களை இந்த அரசு ஏற்றுக் கொள்ளக்கூடாது.



1990 ஏப்ரல் 11] [திரு. என். பழனிவேல்]

அடுத்து, இந்து சமய அறநிலையத் துறை சார்பாக மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைக்க இருக்கிறார்கள். அதை தயவு செய்து பழனியில் அமையுங்கள். அங்கேதான் ஏராள மாக வருகிறது. வருமானத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கிறது. அப்படி அங்கே இந்த மருத்துவக் கல்லூரியை அமைப்பது அந்தப் பகுதி மக்களுக்கு திருப்திகரமாக இருக்கும். எங்களுக்குத் திருப்தியாக இருக்கும். ஆகவே அதை அங்கே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல கல்லூரிகள், பள்ளிகள் போன்றவற்றை மிகப் பெரிய அளவிலே வருமானம் வரக்கூடிய கோவில்களில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பழனியிலே இன்றைக்கு 2, 3 கல்லூரிகள் இருக் கின்றன. இருந்தாலும் அதை மேலும் அதிகப்படுத்த வேண்டும். இன்றைக்கு மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி கோவில் என்று சொல்லி, இன்றைக்கு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய கோவில்களுக்கு சவால் விடக்கூடிய கோவில் அங்கே இருக்கிறது. தமிழகக் கோவில்களில் வருகிற வருமானத்திற்கு மேலே அங்கே வருவது போல இருக்கிறது. போன ஆட்சிக் காலத்தில் அன்றைய அமைச்சர் பெருமக்களே தலைமை ஏற்று, ஆரம்பிக்கப்பட்ட சாமிதான் அந்தச் சாமி. அந்தக் கோவி லினுடைய வருமானம் எவ்வளவு, அது யாருடைய கன்ட் ரோலில் இருக்கிறது, இந்த அரசாங்கத்தினுடைய கட்டுப் பாட்டில் வருமா, வராதா என்று இந்தக் குறிப்பிலே சொல்ல வில்லை. அதைப் பற்றி பதில் சொல்லும்போது அமைச்சர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து திருக்கோவில் விக்கிரகங்கள் மற்றும் விலை உயர்ந்த ஆபரணங்கள், மற்றும் பொருள்கள் திருடு போவதைத் தடுத்து, அவைகளைப் பாதுகாக்க, திருடர்களை எச்சரிக்க ஒரு கருவியைக் கொண்டு வரப்போவதாக இந்தக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். திருடர்களை எச்சரிக்க வேண்டு மானால் நீங்கள் கருவிகளைக் கொண்டு வரலாம். ஆனால் கோவில்களிலேயே சில திருடர்கள் இருக்கிறார்களே, அவர் களை எப்படி கண்டுபிடிக்க முடியும்? ஆகவே நல்ல நிர்வாகக் குழுக்களை உடனடியாகப் போட வேண்டுமென்று நான் கேட்டு கொள்கிறேன்.

பழனி கோவிலுக்கு திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் குழு வந்தபோது நான் நேரிலேயே எழுதிக் கொடுத்தேன். அந்தக் கோவிலுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரியை இயக்குநராகப் போடுங் கள். அது பெரிய கோவில். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அங்கே பணி புரிகிறார்கள். 10 கோடி ரூபாய்க்கு மேலே வருமானம் வருகிறது. நண்பர் திரு. பாலையா அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். அங்கே லட்டிலே ஊழல் என்று என் காதுக்கும் செய்தி வந்தது. ஆனால் எனக்கு

முழு விவரம் தெரியாது. லட்டிலே பெரிய மோசடி நடக்கிறது, உங்களுக்குத் தெரியுமா என்று என்னைக் கேட்டார்கள். எனக்கு தெரியவில்லை, ஆகவே தெரியாமல் சொல்லக்கூடாது என்று அதை விட்டுவிட்டேன். அங்கே ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**13.10 மணி**

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லட்டு மோசடி என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலையா அவர்களும், திரு. பழனிவேலு அவர்களும் சொல்வதால் சொல்கிறேன். 3 பேர் அதற்காக டெண்டர்கள் கொடுத்தார்கள். அதை ஏலத்தில் விடவில்லை. அதிகமாக யார் டெண்டர் கொடுத்தார்களோ அவர்களுக்கு அது விடப்பட்டிருக்கிறது. ஒருவர் அதை எதிர்த்து உயர்நீதி மன்றத்திற்கு வழக்காடச் சென்றிருக்கிறார். அவர் எப்படிப்பட்டவர் என்றால் திருச்செந்தூர் கோவிலிலே இன்னும் 3 லட்சம் ரூபாய் பாக்கி வைத்திருக்கிறவர். அவர், இதை எதிர்த்து உயர்நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார். ஆகவே இந்த வழக்கு உயர்நீதி மன்றத்திலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை யாரோ அனுமதியில்லாமல் கைப்பற்றி வைத்திருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அனுமதியில்லாமல் எப்படி நிலத்தைக் கைப்பற்றி இருக்கிறார்கள், அந்த நிலம் எவ்வளவு, யார் அந்த நிலத்தைக் கைப்பற்றி இருக்கிறார்கள் என்பதை எல்லாம் அமைச்சரவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல திருச்சி நகரத்திலே ஆட்டுக்காரத் தெருவிலே உள்ள நவநீத கிருஷ்ணன் கோவில் என்று ஒன்று இருக்கிறது. அந்த டிரஸ்டிகள், 3 தெருக்களைச் சேர்ந்த பெருமக்கள் போய் வந்து கொண்டிருந்த நடைபாதையை 3 ஆண்டுக் காலமாக அடைத்து விட்டார்களாம். அதனால் பொது மக்கள் போக முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அதை உடனடியாக எடுத்துக் கொடுக்க நீங்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல கோவையிலே வெள்ளியங்கிரி மலையிலே குடி தண்ணீர், கழிப்பிடம், பேருந்து வசதி எதுவும் இல்லை என்று என்னுடைய தோழர் திரு. வெள்ளியங்கிரி எழுதிக் கொடுத்திருக்கிறார். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர். ஆகவே



அதையெல்லாம் பார்த்து, நீங்கள் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மானியம் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

இந்து சமய அறநிலையத் துறை மானியத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை, கோயில் கூடாது என்பது இல்லை. கோயில் கொடியவர்கள் கூடாரம் ஆக இருக்கக் கூடாது என்பது தான் எங்களுடைய கொள்கை. கடந்த கால ஆட்சியில் கோயில்கள் கொள்ளையர்களின் கூடாரமாக இருந்தது. கோயில்களில் ஆபரணங்களெல்லாம் களவாடப்பட்டது என்பது நாடறிந்த உண்மை. ஆனால், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன்தான் ஆண்டவனுக்கு பாதுகாப்பு கிடைத்திருக்கிறது. ஆண்டவனுக்கு காலா காலத்தில் தொடர்ந்து பூஜைகள் நடைபெறுகிறது. கழக அரசு அமைந்த பிறகு இந்தத் துறைக்கு மிகப் பொருத்தமான ஒருவரை, அடக்கமே உயர்வினையும், அன்பே சிறப்பினையும் பெறும் என்பதைப் போல பொறுமையின் பொக்கிஷமாய், அதே நேரத்தில் எதையும் நிதானமாக சிந்தித்து, ஆனால் செயல் ஆக்கம் பெறுவதிலே அசுர வேகத்தை காட்டச் செய்யும் பண்புள்ள மாமனிதர் மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி அவர்கள் இந்த இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சராக பொறுப்பேற்றிருப்பதை பாராட்டுவதோடு, குறிப்பறிந்து உரிய பொறுப்பினை தந்த தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களை இந்த நாடே பாராட்டிக் கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் 35,150 இந்து சமய அறநிலையங்கள், அறக்கட்டளைகள் செயல்படுகின்றன. அவற்றின் விவரம், கோயில்கள் 33,112. மடங்கள் 56. மடத்து கோயில்கள் 55. குறிப்பிட்ட கட்டளைகள் 1,721. அறக் கட்டளைகள் 189. சமணக் கோயில்கள் 17. ஆக மொத்தம் 35,150.

**13–15 மணி**

இந்து அறநிலையத் துறையின் கீழ் உள்ளதைப் பற்றி விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கோயில் சொத்துக்களை முந்தைய அரசு ஒழுங்கான முறையில் பராமரிக்காமல் பெரும் புள்ளிகளுக்குக் குத்தகை விடப்

[திரு. கே. ஆர். ஜி. தனபாலன்] [1990 ஏப்ரல் 11

பட்டதாலும், அவர்களிடமிருந்து குத்தகைத் தொகைகள் நிலுவையில் இருப்பதாலும், அதனை அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கூறி வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அதிகாரிகளால் வசூலிக்க முடியவில்லை என்றால் அந்தப் பெரும்புள்ளிகள் மீது நீதிமன்றத்தில் வழக்கினைக் தொடுத்து நிலுவைக் குத்தகைப் பாக்கியினை வசூல் செய்வதோடு அவர்களை அந்த இடத்திலிருந்து காலி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். கோயிலுக்கு வருகின்ற வருமானத்தை நாட்டு மக்களுக்குப் பலன் அளிக்கும்படிப் பயன்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக முந்தைய ஆட்சிக் காலத்தில் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, கோயில் நிதியில் ஏழை அனாதைக் குழந்தைகளுக்கு ' கருணை இல்லம் ' அமைத்து அந்தக் குழந்தைகளைப் பராமரித்து வந்தார்கள். அதை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயில் நிதியில் இருந்து கல்விக் கூடங்களை அமைத்து ஏழை எளியவர்களுக்குக் கல்வி பயில வழி வகைகள் செய்ய வேண்டுகிறேன். கோயில் கடைகளில் வாடகைக்கு இருப்பவர்கள், அவைகளை நடத்தத் தங்களால் இயலவில்லை என்கின்றபோதும், அவைகளைக் காலி செய்யும்போதும் அவைகளை அறநிலையத் துறை வசம் கொடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்வதை விடுத்து அந்தக் கடைகளை வேறு நபர்களுக்குப் பகடிக்குக் கொடுக்கின்றார்கள். அதனால் பல ஊழல்கள் ஏற்படுகின்றது. அதைத் தவிர்க்க வேண்டுகிறேன்.

கோயில் புறம்போக்கு நிலங்கள் என்று சர்வேயில் வகைப் படுத்தப்பட்ட நிலங்களை உள்ளூர் பெரிய மனிதர்கள் தங்கள் அனுபவத்தில் வைத்துள்ளனர். அப்படிப்பட்ட முறையற்ற ஆக்கிரமிப்பை அகற்றி, அந்த நிலங்களை அரசின் நல்ல பல காரியங்களுக்கும், பொதுக் காரியங்களுக்கும் பயன்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற கோயில்களின் வளாகங்களைச் சுற்றி இருக்கின்ற நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, கோயில்களின் தூய தன்மை கெடுகின்ற வகையில் விரும்பத்தகாத செயல்கள் நடைபெறுகின்றன. அப்படிப் பட்ட நிகழ்வினைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



1990 ஏப்ரல் 11] [திரு. கே. ஆர். ஜி. தனபாலன்]

கோயில் குளங்கள் எல்லாம் பராமரிப்பு இல்லாமல் அசுத்தமாக உள்ளன. அதனால் பொது மக்களுக்குத் தொற்று நோய் பரவும் நிலை உள்ளது. ஆகவே கோயில் குளங்களை எல்லாம் தூர் எடுத்துச் சுத்தம் செய்து தகுந்த முறையிலே பராமரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணி செய்வதை முறையாக ஸ்தபதிகள் மூலம் செய்யப்படுவதில்லை. பொறியியல் துறையினர் மூலம் செய்யப்படுகிறது. அதனால் கோயில்களின் ஆகம சாஸ்திரப்படி அவைகள் நடைபெறுவதில்லை. எனவே, திருப்பணிகள் முறையாக நடைபெற ஸ்தபதிகளை அரசு நியமனம் செய்து, ஆகம சாஸ்திரப்படி பழைமைக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் திருப்பணிகள் நடைபெற வேண்டும்.

தமிழ் நாட்டில் பல கோயில்களில் திருப்பணி வேலைகள், ராஜ கோபுரங்கள் போன்ற பணிகள் பாதி வேலையிலேயே பல வருடங்களாக நிலுவையில் நிற்கின்றன. அவைகளை விசாரித்தால், நிதிநிலை இல்லாத காரணத்தால்தான் திருப்பணிகள் நின்றுள்ளது என்று கூறுகிறார்கள். ஆகவே, தமிழ் நாட்டில் வருவாய் அதிகமுள்ள திருக்கோயில்களிலிருந்து மேற்படித் திருப்பணிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுத்து, நிலுவையிலே நிற்கின்ற திருப்பணிகளையும், ராஜ கோபுரங்களையும் முடிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். சேலத்தில் உள்ள கோட்டை மாரியம்மன்கோவில் ராஜகோபுர வேலை கடந்த 10 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளதை இந்த அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

கோயில் திருப்பணிகளை உடனுக்குடன் கவனித்துச் செயல்படுத்த தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டுகிறேன். தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்களின் நிலங்கள், கடை வாடகைக்கு விட்டதை, வாடகை செலுத்தாமல் பல வருடங்களாகியும் காலி செய்யாமலும் இருக்கின்றார்கள். அவர்களைக் காலி செய்ய அறநிலையத் துறை அதிகாரிகள் நீதிமன்றம் சென்றால் நீதிமன்றத்தில் சிவில் சூட் என்று சொல்லி, அந்த வழக்கு பல வருடங்களாக நடைபெறுகின்றது. வழக்கு முடிய கால தாமதம் ஏற்படுகின்றது. நீண்ட நாட்களுக்குப் பிறகு வழக்கு முடிந்தாலும், மறு கோர்ட்டில் அப்பீல் செய்து விட்டு அவர்களே இருக்கின்றார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமையை மாற்ற இந்து சமய அறநிலையத் துறைக்கு என்று தனியாக நீதிமன்றங்கள், அந்தந்த மாவட்டத் தலை நகரங்களில் அமைத்து அதன் வழக்குகளை மூன்று மாத காலத்திற்குள் தீர்க்க அரசு ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. ஆர். ஜி. தனபாலன்] [1990 ஏப்ரல் 11

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் பணியாற்றுபவர்கள் பணிக் காலங்களில் இறந்தால் அவர்கள் குடும்பநலத் திட்டத்தின் கீழ் இந்து சமய அறநிலையத் துறை ரூபாய் 10 ஆயிரம் தான் உதவித் தொகை வழங்குகிறது. ஆனால் அரசுத் துறையிலே பணியாற்றுபவர்கள் பணி நேரங்களில் இறந்தால் அவர்கள் குடும்பநலத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு அரசு ரூபாய் 40 ஆயிரம் உதவித் தொகை வழங்குகிறது.

அதுபோல இந்து சமய அறநிலையத் துறையிலே பணியாற்றுவோர் பணிக் காலத்தில் இறந்தால் அவர்களுக்கும் ரூபாய் 40 ஆயிரம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் பல கோயில்களில் உள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லாமையால் கோயில்களை சுத்தம் செய்வதற்கும், சுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்கும் தண்ணீர் இல்லாமல் அர்ச்சகர்கள் அவதிப்படுவதால் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து, பம்ப்செட்டுகளை வைத்து, மேல்நிலைத் தொட்டி கட்டி, குழாய் மூலம் தண்ணீர் சப்ளை செய்தால் கோயிலையும் சுத்தமாக வைத்துக்கொள்ளலாம் ; பக்தர்கள் வந்து தங்குவதற்கும் தண்ணீர் வசதியும் கிடைக்கும்.

தமிழ்நாட்டிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோயில்களுக்குப் பக்தர்கள் சென்று தங்குவதற்கு வசதியாக இதுவரை அரசு 14 திருக்கோயில்களில் மட்டும் 58 பயணிகள் ஓய்வு விடுதிகளையும், 231 குடில்களையும் மற்றும் 951 தனி நபர் அறைகளையும் கட்டியுள்ளது. இவைகள் பக்தர்களுக்கு போதாத நிலையில் இருப்பதால் இந்த நிதியாண்டில் பக்தர்கள் தங்குவதற்கு அறைகள் அதிகமாகக் கட்டும்படி அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோயில்களைக் காணவும், சாமியை தரிசனம் செய்யவும் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். கோயில்களில் பகல் 12 மணிக்கு உச்சி கால பூஜை செய்து கோயில்களை மூடி விடுவதினால் சுற்றுலாப் பயணிகள் கோயில்களில் சுவாமி தரிசனம் செய்ய இயலாமலும், சிற்ப வேலைப்பாடுகளைக் கண்டுகளிக்க முடியாமலும் செல்ல நேரிடுவதினால், தொடர்ந்து கோயில்கள் திறந்து இருந்தால் சுற்றுலாப் பயணிகள் காலதாமதமில்லாமல் வந்து செல்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே அதற்கு அரசு வழி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு இந்த இந்து சமய அறநிலையத் துறை உண்மையிலேயே அறத்துடன் செயல்படுவதற்கு ஆக்கப்பூர்வமான செயல் திட்டங்களை உருவாக்கி வரும் இந்த அரசுக்கும் தமிழக முதல்வருக்கும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் பாராட்டையும் வரவேற்பையும் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.



1990 ஏப்ரல் 11] 13-20 மணி

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு உதவி
சபாநாயகர் அவர்களே, இந்த அறநிலையத் துறை சம்பந்தப்
பட்ட மானியத்திலே கருத்து கூற நான் முன் வந்திருக்கிறேன்.
இதுவரையிலே பல கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார்கள்.
அறநிலையத் துறையிலே, தமிழ்நாட்டிலே, இந்துக்களுக்கு மட்டு
மல்ல, சமண மதமும் இதிலே சேர்ந்திருக்கிறது என்பது தெரி
கிறது இதிலேயிருந்து.

இதற்கு ஒதுக்கியிருக்கின்ற ரூபாயைப் பார்த்தால், போன
வருஷம் கம்மியாக இருந்திருக்கிறது. இப்பொழுது ஒரு
கோடி ரூபாய்கூட. இந்த விலைவாசி ஏறி இருப்பதைப் பார்த்
தால் 6,55,75,000 ரூபாய் என்றால், மற்ற இலாக்காக்களுக்கும்,
இதற்கும் பார்த்தால், எவ்வளவோ கம்மியாக இருக்கிறது. நாலா
யிரத்துச் சொச்சம் கோடி ரூபாய் வருமானத்திலே இதற்குச்
செலவுக்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது என்றால், 6,55,75,000
ரூபாய்தான்.

பலவிதமான பிரிவுகளிலே உள்ள கோவில்கள் நமது நாட்
டிலே இருக்கின்றன. ஒரு கோயில், இரண்டு கோயில் அல்ல;
35,000 கோயில்கள். இதிலே சமணக் கோயில் கொஞ்சம்
இருக்கிறது. அதற்குக் கட்டளைகள் இருக்கின்றன. அறக்
கட்டளைகள் இருக்கின்றன.

இத்தனை கோயில்களையும் யார் கட்டியிருக்கிறார்கள்
என்றால், எப்பொழுதோ, இதைப் பல்லவன் கட்டினான்,
இதைச் சோழன் கட்டினான், இதைச் சேரன் கட்டினான், இதை
நாயக்கர் கட்டினான் என்று சொல்லுகிறோமேயொழிய, நம்
முடைய வரலாற்றுக்குத் தெரிந்த அளவிற்கு யாரும் இந்தக்
கோயிலைக் கட்டியதாகத் தெரியவில்லை. எல்லாம், 100
வருஷம், 500 வருஷம், 1,000 வருஷம் என்று சொல்கிறார்கள்.
நம் கோயில்களெல்லாம் அவ்வளவு பெரிய கோயில்கள். ஒரு
கோயில், இரண்டு கோயில் அல்ல. சைவ ஆகமத்திலே இருக்
கின்ற கோயில்கள், ஆயிரங்கால் மண்டபம், நூற்றுககால் மண்ட
பம், அர்த்த மண்டபம், கர்ப்பக்கிரகம் என்று இது மாதிரி
கோயில்கள் ஆகம விதிப்படி கட்டிய கோயில்களெல்லாம் இருக்
கின்றன. அன்றைக்கு அந்த இராஜாக்கள் கட்டியிருக்கின்றார்
கள். இதை இப்பொழுது புதுப்பிக்கவும் முடியவில்லை., ஒரு
கல்லை எடுத்து இந்தப் பக்கம் வைக்க முடியவில்லை.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: திருச்சியிலே இராஜ
கோபுரம் கட்டியிருக்கிறார்களே, அதை தீட்சிதர் மறந்து
விட்டாரா ?

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : கோபுரம் என்பது
கோயிலிலே ஒரு பகுதி. இன்னும் எத்தனையோ கோபுரங்கள்
பாக்கி இருக்கின்றன. ஒரு கோபுரம்தான் கட்டியிருக்கின்றார்

கள். பாக்கி வைத்து விட்டுப் போனார். அதைக் கட்டுவதற்
குள்ளேயே எத்தனையோ சச்சரவுகள், எத்தனையோ சண்டை
கள், கும்பாபிஷேகமே நடக்குமா, முடியுமா என்று இருந்தது.
அந்த ஜீயர் கும்பாபிஷேகம் பண்ணுவதற்குள் பட்ட பாடு
கொஞ்ச நஞ்சமல்ல, அவருக்கே கோபம் வந்துவிட்டது. கோபம்
வந்து, கும்பாபிஷேகமே நடக்குமா நடக்காதா என்ற வேகத்திற்கு
வந்து விட்டது. அதற்கு கர்நாடகாவிலே 12 இலட்சம், 13 இலட்
சம் கொடுத்தார்கள் : ஆந்திராவிலே 14 இலட்சம், 15 இலட்சம்
கொடுத்தார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே மட்டும் கொடுக்
கிறேன் என்று சொன்னார்கள், யாரோ, ஒருவரை வைத்து,
சங்கீத கச்சேரி வைத்து, அதிலிருந்து வசூல் பண்ணிக் கொள்ளுங்
கள் என்று சொன்னார்களே தவிர, தமிழ்நாட்டிலேயிருந்து
எதுவும் கொடுக்கவில்லை. ஏதோ ஃபங்க்ஷனுக்கு வந்திருந்து
நடத்தினார்களே என்று திருப்திப் பட்டுக் கொண்டோம். இரண்டு
மந்திரிகள் வந்து, உதவி ஜனாதிபதி வெங்கட்டராமன்—தமிழ்
நாட்டுக்காரர் அல்லவா, இதற்கு வராமல் இருப்பாரா—அவர்
வநதிருந்து மேடையிலே உட்கார்ந்து அந்தக் கோபுரத்தைப்
பார்த்தார். சந்தோஷப்பட்டேன். இப்படி அந்தக் கோபுரம்
அமைந்தது. ரொம்பப் பணம் . அமைச்சர்கள் வந்தார்கள்,
அவர்கூட இருந்தார்கள், இரண்டு ஜீயர்கள் போட்டோவெல்லாம்
அமைச்சரோடு எடுத்தார்கள், போட்டோவிலேயெல்லாம் ஜீயர்
வந்தார். கட்டிடமாவது ? இருக்கின்ற கோயிலைப் பராமரிப்
பதற்கே முடியவில்லை. ஏன் பிள்ளை தத்து எடுத்துக் கொள்ள
வில்லை என்றால், இருக்கின்ற பெற்ற பிள்ளையைப் பராமரிக்
கவே முடியவில்லை, ஏன் தத்துப் பிள்ளை எடுத்துக் கொள்ள
வில்லை என்று கேட்பது போல இருக்கிறது. இருக்கின்ற
கோயில்களைச் சரியாகப் பராமரிக்க முடிகிறதா ? அதுதான்
நம்முடைய கேள்வியே. எத்தனை கோயில்கள் இருக்கின்றன?
அதற்குப் போகும் பக்தர்களுக்கு வசதி, இன்ன விதமான பரா
மரிப்பு என்று செய்ய வேண்டாமா ?

ஒவ்வொரு விஷயத்திற்கும் கமிட்டி போடுகிறோம், இப்
பொழுது ஐவர் கமிட்டி போட்டார்கள். அதைப்பற்றி விரி
வாகச் சொல்வதற்கு நான் இப்பொழுது வரவில்லை. பல
தவறுகள் நடந்திருக்கின்றன. அந்த ஐவர் கமிட்டியிலே என்ன
சொன்னார்கள் ? அதை எதற்காகப் போட்டோம் ? அது நிறை
வேற்றப்படுகிறதா ? நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகிறதா
என்று பார்த்தால் அது ஒன்றும் தெரியவில்லை.

இதற்கு முன்பு எத்தனையோ கமிட்டி. சுப்பிரமணிய சாமி
கோயிலிலே பால் கமிட்டி போட்டார்கள். அந்தப் பால்
னமோ ஒரு நீதிபதி. அது எப்படியோ வெளியே
வந்து விட்டது. தப்பித் தவறி கலைஞரிடத்திலே வந்து
விட்டது பேப்பரிலே பார்த்து விட்டோம். அது நிஜமோ,
பொய்யோ தெரியவில்லை. ஆனால் கமிட்டி என்றால், இரக
சியமாக உள்ளே வைத்துப் பூட்டி விடுகிறார்கள்.



அதற்குப் பிறகு ஒரு கமிட்டி போட்டார்கள். தண்டாயுத
பாணி சுவாமி கோயில் இருக்கிறதே, அதற்கு ஒரு
கமிட்டி போட்டார்கள். அது எப்படி ஜீரணம் ஆயிற்று ?
கூடிய ஜீரணமாகக் அந்த விவகாரம் என்னவாயிற்று?
கமிட்டி போட்டார்களே, அந்தக் கமிட்டியினுடைய
விவகாரம் என்னவாயிற்று? அந்தக் கமிட்டியினுடைய பரிந்
துரைப்படி இப்பொழுது நடக்கிறதா ? அபிஷேகத்தை நடத்த
முடியவில்லையே அதிலே தண்டாயுதபாணி சுவாமி கோயில்
என்பது சாமானியமான கோயிலா ? நம்முடைய தமிழகத்தில்
அதிக வருமானம் உள்ள கோயில். ஏனென்றால், பக்கத்திலே
யெல்லாம், இப்பொழுது எங்கு எங்கோ, வேறே ஸ்டேட்டுக்குப்
போகிறார்கள். இன்னும் கொஞ்சநாளில் விஷு, 14ஆம் தேதி
ஐயப்ப பக்தர்கள் லாரி லாரியாக வேன் வேனாகப் போவார்கள்.
ஐயப்ப பக்தர் சுவாமிகளுக்குக் கணக்கே கிடையாது. கொஞ்ச
நஞ்சமல்ல. இந்த வருஷம் 30 இலட்சம், அடுத்த வருஷம்
50 இலட்சம், இன்னும் கோடிக்கு மேலே போகும் போலே
இருக்கிறது. நம்முடைய பணமெல்லாம் எங்கே போகிறது
பாருங்கள் ? அதேமாதிரி திருப்பதிக்குப் போனால், லட்டு
விவகாரம் சொல்கிறார்கள், திருப்பதிக்குப் போவதோடு அல்ல,
லட்டு வேறு வாங்கிக்கொண்டு வருகிறார்கள் நிறைய.

13–25 மணி

அதோடு குருவாயூர் போகிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டில்
இருக்கிற பழனியாண்டவர் கோவில் இருக்கிறதே, சாமானியமான
தெய்வமா அது ? அங்கேயும் வருகிறார்கள். அதிலே ஒன்றும்
தவறில்லை. இவ்வளவு பேர்கள் அங்கே போகிறார்கள் என்ற
வருத்தம்தான் எனக்கு. (குறுக்கீடு) தெய்வ பக்தி கம்மியாக
இல்லை. எல்லாம் நம் நாட்டில் ஒன்றாக இருந்தது. நான்
சைவர்தான். நான் திட்டவில்லை, பக்தி இல்லாமல் இல்லை.
என் பெயரே வெங்கடேஸ்வரன் தானே— நானா திருப்பதியைத்
திட்டுகிறேன். வைணவராக இருந்தால் வெங்கட்டராமன் என்று
வைத்துக் கொள்வார்கள். சைவராக இருப்பவர்கள் வெங்கடேஸ்
வரன் என்று வைத்துக் கொள்வார்கள். அதிலே வித்தியாசம்
கிடையாது வித்தியாசம் எபன்து நடுவில் ஏற்பட்டது. தென்
கலை, வடகலை, விபூதி, கரிக்கோடு, இதெல்லாம் எப்போது
ஏற்பட்டது ? இவை நடுவில் ஏற்பட்ட வித்தியாசங்கள் தானே
தவிர, ஏற்கெனவே ஆரம்பத்தில் இந்த வித்தியாசங்கள் இல்லை.
இன்னும் நிறைய சப்ஜெக்ட் பேச வேண்டியிருக்கிறது. நேரம்
இல்லை. இன்னும் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். அதற்கு
பிறகு அமைச்சர் அவர்கள் பதில் கொடுக்க வேண்டும்.

கோவில் திருப்பணி பண்ணுவதற்கு ஒரு கமிட்டி போட்டு,
ஐவர் குழு என்று கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் போட்டு,
குன்றககுடி அடிகளார், எங்கள் ஊர் ஐயங்கார், சங்கராச்சாரியார்
அனுப்பிய ஒருவர்—இத்தனைபேர் அடங்கிய ஐவர் குழு
பாட்டு—நிலைமை என்ன ? கருவூலங்கள் பூட்டி வைத்துக்

கொள்ளப்பட வேண்டும். கருவூலங்களை பூட்டி வைக்காமல் திறந்தா வைத்துக் கொள்வார்கள்? புதியதாக ஏதோ யோசனை சொல்லி இருக்கிறார்கள். அப்போது எத்தனை விக்கிரகங்கள் திருட்டு போனது? இப்போது விக்கிரகம் ஏதாவது திருட்டு போகிறதா? எனக்கு சந்தேகம் விக்கிரகங்கள் பூராவும் திருட்டு போய்விட்டதோ நாட்டிலே என்று(சிரிப்பு)

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: துணைத் தலைவர் அவர்களே, ஐவர் குழு அறிக்கையை நாங்கள் இன்னும் வெளியிடவில்லை. நம்முடைய தீட்சிதர் அவர்கள் அதை பெற்றுவிட்டார்களா என்று தெரியவில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: ஐவர் குழு போட்டோம். அவர்கள் அபிப்ராயத்தில் என்ன யோசனை சொல்லி இருக்கிறார்கள் என்றால் திருக்கோயில்களில் பாதுகாப்பிற்காக திருடாமல் எச்சரிக்கை கருவி பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வசதியற்ற கோயில்களில் விழிப்புப் பதிவு கடிகாரங்கள் வைக்கப்பட்டு உள்ளன, மேலும் போட்டிருக்கிறது இந்த கொள்கை அறிக்கையில் திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டது. அக்குழுவானது காலமுறையில் திரு வாபரணங்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள், அவைகள் வைக்கப்படுகின்ற திருக்கோயில்களின் பாதுகாப்பு அறைகள் முதலியவைகளை பார்வையிட்டு அவைகளைச் சீர் செய்ய ஆலோசனைகள் வழங்கியுள்ளது'' எனவே, அவர்கள் திருக்கோயில்களை பார்வையிட்டு இருக்கிறார்கள். என்ன சொல்கிறார்கள் என்றால் இருக்கிற சொத்தை பாதுகாக்க வேண்டும். இன்றைய தினம் சம்பாதிப்பது இருக்கட்டும், சொத்துக்கவே வேண்டாம். அந்த காலத்தில் தர்ம காரியங்களுக்கு எழுதி வைத்தார்கள் என்றால் தாவர, ஜங்கம சொத்துகள். ஜங்கம சொத்து வெகு கோயில்களில் இருக்கிறதா, இல்லையா என்றால் (குறுக்கீடு) ஸ்ரீரங்கத்தில் நடக்கிறதே.. அங்கே வெங்கடாஜலம் என்ற ஒரு ஆடிட்டர் ஜலகண்டபுரத்தில் காணாமல் போய்விட்டான். அவன் என்ன ஆனான் என்றே தெரியவில்லை. சிறு பையன், அவனுடைய வயது 28. அவனுக்கு கல்யாணமே ஆகவில்லை. அவனுடைய நிலைமை எப்படி இருந்தது—எம்.ஏ. படித்து இருக்கிறான். எப்படி இறந்தான் என்றால் தற்கொலை பண்ணிக் கொண்டான் என்கிறார்கள். எம்.ஏ. படித்தவன் எதற்காக தற்கொலை பண்ணிக்கொள்ள வேண்டும்? படிக்கத் தெரியாதவன் தான் தற்கொலை பண்ணிக்கொள்வான். இல்லையென்றால் படித்து வேலை கிடைக்காதவன் தற்கொலை பண்ணிக்கொள்வான். இல்லை ஏதாவது அங்க ஹீனம் இருக்க வேண்டும். அப்படி ஒன்றுமே இல்லை. ஒருநாள் இராத்திரி தொங்குகிறான். காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால் அவனுக்கு மெண்டல் டிஸ்-ஆர்டர். ஆயிரக்கணக்கான



பேர் நம்முடைய பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். ஒருவர்கூட தற்கொலை செய்துகொண்டதாக பேப்பரில் செய்தி வரவில்லை. வேறு என்ன காரணங்களுக்கோ தற்கொலை பண்ணிக்கொள்கிறான். ஆனால் மெண்டல் டிஸ்-ஆர்டருக்காக தற்கொலை பண்ணிக்கொள்வதில்லை. ஸ்டேட்மெண்டில் என்ன சொல்கிறார்கள் என்றால், வெங்கடாஜலம் எம்.ஏ. படிக்கிற வரைக்கும் மெண்டல் டிஸ்-ஆர்டர் இல்லை. வேலை கிடைக்கிற வரைக்கும் மெண்டல் டிஸ்-ஆர்டர் இல்லை. சம்பளம் வாங்குகிற வரைக்கும் மெண்டல் டிஸ்-ஆர்டர் இல்லை. ஸ்ரீரங்கம் கோவிலுக்கு ஆடிட்டராக வந்த பிறகு மெண்டல் டிஸ்-ஆர்டர் ஆகிவிட்டதாம். ஏதோ இருக்கிறது அங்கே. அதுதான் அப்படி என்றால், அந்த கோவிலில் ஒரு ஜீயர் இருந்தார். அந்த ஜீயரை—நமக்கு எவ்வளவு தான் அதிகாரம் இருக்கலாம். முஸ்லீம் கிட்டே போய் தலையிட முடியுமா? வேறு கிறிஸ்துவர்களிடம் போய் தலையிட முடியுமா? ஆனால் நம்முடைய இந்து கோயில்களில் இருக்கிற ரெலிஜியஸ் ஹெட் இருக்கிறார்கள் பாருங்கள்—அவரை அந்த காலத்தில் டிஸ்மிஸ் பண்ணினார்கள். ஜீயரை டிஸ்மிஸ் பண்ணியதற்கு என்ன காரணம் என்றால் எங்கள் வேலையில் தலையிட்டார்கள் என்று சொன்னார்கள், ஏன் தலையிடுகிறார்? அவர்கள் திருக்கோயிலில் ரங்கநாத சுவாமிக்கு ஆரம்ப காலத்லிருந்து திருப்பணி பண்ணுகிறவர். வம்சாவழியாக வருகிறவர். அந்த திருக்கோயிலில் என்ன நல்ல காரியம் நடந்தாலும், அதற்கு ஆலோசகர் மாதிரி, அட்வைசர் மாதிரி இருக்கிறவர். ஏதோ ஒரு காரணம் (குறுக்கீடு) அது முந்தைய ஆட்சியில் தான் சொல்கிறேன். இந்த $1\frac{1}{2}$ வருடத்தில் செய்திருந்தால் நீங்கள் விட்டுவிடுவீர்களா? இதற்கு முன்னால் இருந்த ஆட்சியைத்தான் சொல்கிறேன். அந்த ஜீயரை டிஸ்மிஸ் பண்ணிய பிறகு, அங்கே என்ன நடந்தது என்றால், பயங்கரமான சம்பவம்—உள்ளே சாமி இருக்கிறதா, இல்லையா என்றால்—சாமி இருக்கிறது. அதை ஒன்றும் பண்ணிவிட முடியாது. இவ்வளவு நீளம் இருக்கிற விக்கிரகத்தை பெயர்க்கவும் முடியாது. லட்சம் பேர் வந்தாலும் தூக்கவும் முடியாது. ஆனால், சின்ன சின்ன விக்கிரகங்கள் எத்தனை இருக்கின்றன? எப்படித்தான் கண்டு பிடித்தார்களோ தெரியவில்லை. விக்கிரகங்களில் எல்லாம் ஐம்பொன் இருக்கிறது. தங்கம் இருக்கிறது என்று கண்டுபிடித்து விட்டார்கள். அப்புறம் பார்த்தால் காலையில் ஒரு விக்கிரகம், சாயங்காலம் இரண்டு விக்கிரகம் போகிறது. அடுத்த நாள் மூன்று விக்கிரகம் போகிறது. கண்டே பிடிக்கமுடியவில்லை. கொலை பண்ணுகிறான் விக்கிரகத்திற்காக எங்கள் உத்தமர் கோயிலில் கொலையே நடந்தது.

13-30 மணி

உத்தமர்கோயில் என்பது ஸ்ரீரங்கத்திற்குப் பக்கத்திலே கல்லணைக்கு அடுத்த கிராமம், கல்லணையை ஒட்டின கிராமத்திலே கொலை செய்து விக்கிரகங்களை எடுத்துக்,

கொண்டு போகிறான். அப்படி என்றால் விக்கிரகங்களுக்கு எவ்வளவு மகிமை பாருங்கள். சில பேர் என்ன நினைக்கிறார்கள். என்றால் அந்த விக்கிரகங்களின் அழகைக் கண்டு, அதனுடைய சிற்பத்தைக் கண்டு, வெளிநாட்டுக்கு விற்கிறான். தங்கத்தைக் கொண்டு இங்கே கண்டு பிடித்து விட்டான். ஐம்பொன் இருக்கிறது என்ற உடன் தங்கம் எப்படி இருக்கிறது. தங்கம் எந்தக் கையில் இருக்கிறது. காலில் இருக்கிறதா, முகத்தில் இருக்கிறதா; என்று பார்த்து அதை அரிந்து திருடுகிறான். (மணியடிக்கப்பெற்றது) இதற்கெல்லாம் பாதுகாப்பு வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 10 மணித்துளிகள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடியுங்கள்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : இப்போது கொஞ்சம் குறைந்து இருக்கிறது. இந்த விக்கிரகங்களை என்ன செய்து இருக்கிறார்கள் என்றால் திருவாரூரில் கொண்டு போய் அங்கே ஒரு பெரிய ஜெயில் கட்டி அந்த விக்கிரகங்களை அங்கே கொண்டு போய் போட்டு அது எல்லாம் பட்டினியாக இருக்கின்றன. அதற்கு இனிமேல் ஒரு பெயர் வைக்கலாம் என்று பார்க்கிறேன். பட்டினிலிங்கேஸ்வரர்கள் உள்ளே இருக்கிறார்கள் என்று. அத்தனை விக்கிரகங்களையும் யாருக்காவது கொடுக்கலாம்; யாராவது நைவேத்தியம் செய்து கொண்டு போகிறான், எல்லா கோவில்களிலும் அதை வைக்கலாம். அதை கேட்டால் பூஜை பண்ண முடியாத விக்கிரகங்கள் என்று சொல்லுகிறான். பூஜை பண்ண முடியாத விக்கிரகங்கள் என்று நாட்டில் ஒன்று இருக்கிறதா? அதையெல்லாம் கொண்டு போய் ஒரு ஜெயிலில் போட்டு அதற்குள் போட்டால் எப்படி? அந்த திருவாரூர் கோவில் எப்படி என்றால் அது பெரிய கோவில், அதற்கு எத்தனை ஏக்கர் இருக்கிறது என்றால் 2 ஆயிரம் வேலி என்று சொல்லும் போது 12 ஆயிரம் ஏக்கர் அந்த ஊர் மிராசுதாரைக் கேட்டால் அந்த வடபாதி மங்கலம் முதலியாருக்கு ஒரு வேலி கம்மியாக எனக்கு இருக்கிறது. என்று அந்தக் காலத்தில் சொன்னார். சாமி பக்தி அன்றைக்கே இருந்து இருக்கிறது. வசதி படைத்தவர்கள்கூட அந்த அந்த சாமிக்கு சமமாக நமக்கு இருக்கக் கூடாது என்று சொல்லி ஒரு வேலி கம்மியாக இருக்கவேண்டும் என்று சொல்லி வைத்து இருக்கிறார்கள். அந்தக் கோவிலைப் பார்த்தால் முள் குத்துகிறது. ஏற்கனவே அங்கே பெரிய தேர். அது முழு தேராக இருந்தபோது அந்த தேர் எரிந்து போனது எனக்குத் தெரியும். அதன் பிறகு தான் அந்தக் காலத்தில் ஒரு பெரிய டிராமெட்டிக் ஆரட்டர் இருந்தார். அவர் தான் கன்னையா என்ற ஒருவர், வசூல் செய்து முழுத் தேரை செய்தார். 1947 ஆம் வருடம் தேர்தல் நடந்ததற்குப் பிறகு 20 வருடம் தேர் நடக்கவில்லை. பிரம்ம உற்சவத்தில் தேர் உற்சவம் என்ன, அதனுடைய மகிமை என்ன அதனுடைய காரணம் என்ன என்பது வெகு பேருக்குப் புரியவில்லை. அதன் பிறகு கலைஞர் வந்தார். 1967 ஆம் வருடம் மறுபடியும் வடத்தை இழுத்துவிட்டார். கிட்டத்தட்ட 1967-68-ல் ஒரு தடவை தேரை இழுத்தார். கலைஞர் வந்த பிறகு 1967 ஆம் வருடம் ஆட்சியை கைப்பற்றிய பிறகு திரு. சி.என். அண்ணாதுரையும், இவரும் சேர்ந்து இருந்த காலத்தில் இழுத்தார். அதன் பிறகு 20 வருடம் நடுவில் இல்லை. அந்தத் தேர் பாவம் முழிமுழித்துக்கொண்டு இருந்தது. 20 வருடத்திற்குப் பிறகு மறுபடியும் நின்று போய்விட்டது. நின்று போனதை மறுபடியும் நம்முடைய மாண்புமிகு திரு. கந்தசாமி, நல்ல பெயர் வைத்து இருக்கிறார். ஆறுமுகக் கடவுள், சுப்பிரமணியக் கடவுளைக் கண்டால்தான் எல்லோரும் நேசிக்கிறார்கள். அந்த அளவுக்கு இவர் வந்து சேர்ந்தாற்போல் 2 தடவை தேரை இழுத்தார். சாமான்னிய காரியம் அல்ல. ஏன் என்றால் அந்தக் காலத்திலே 4 வடம். ஒரு வடத்திற்கு 2 ஆயிரம் பேர். ஆள் வேண்டும். எல்லோரும் பெரிய பண்ணை வைத்து இருப்பவர்கள். ஏன் என்றால் சட்டம் வராத காலத்தில் நிலச் சட்டம் எல்லாம் அப்போது இல்லை. லேண்டு ரிபார்ம் எல்லாம் அப்போது கிடையாது. மிராசுதாரர்கள் கூப்பிட்ட உடனே 2 ஆயிரம் பேர், 3 ஆயிரம் பேர் வந்து இழுப்பார்கள். அதுவும் 5 நாள், 6 நாள் ஆகும். இப்போது ஒரே நாளில் இழுத்து விடுகிறார். இரண்டு வருடம் நடந்தது. போன வருடமும் நடந்தது. இந்த வருடமும் நடந்தது. இந்த அரசு வந்தால் நாட்டில் தெய்வீகம் இருக்காது, தெய்வப் பண்பாடு இருக்காது, கோவில்கள் இருக்காது, உற்சவங்கள் நடக்காது என்று வெகு பேர் பேசிக்கொண்டார்கள். கூப்பிட்ட உடனே நம்முடைய அமைச்சர் வருகிறார். எல்லோரையும் பார்த்து விடுகிறார், ஒன்றையும் விடுவது இல்லை. ஜீயரில் இருந்து சங்கராச்சாரியரிலிருந்து கோவில் திருநாளில் இருந்து ஒன்றும் விடுவது இல்லை. நல்லபடியாக இப்போது நடக்கிறது. திருவாரூர் கோவிலுக்கு 2 ஆயிரம் ஏக்கர் இருக்கிறது; வேதாரண்யம் கோவிலுக்கு 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருக்கிறது. இருந்து என்ன பயன்? யாரோ யாழ்ப்பாண தம்பிரான் கண்ட்ரோலில் இருக்கிறது. எல்லாம் கண்டிரோல் தான். யாழ்ப்பாணம் தம்பிரான், திருவாடுதுறை தம்பிரான் தர்மபுரம் கட்டளை, வெகு கோவில்களுக்கு தர்மபுரம் கோவிலுக்கு திருவாடுதுறை கோவிலுக்கு 2 ஆயிரம், 3 ஆயிரம், 4 ஆயிரம் ஏக்கர் எல்லாம் வசதி படைத்தவர்கள் எழுதி வைத்தது அவர்களுடைய கண்ட்ரோலில் இருக்கிறது. கண்ட்ரோலில் நல்லா நடக்கிறது. இப்போது வைத்தீஸ்வரன் கோவிலைப் போய் பார்த்தால் ரொம்ப நல்லா நடக்கிறது (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 'Time control' இருக்க வேண்டும். 13 மணித்துளிகளை முழுங்கி இருக்கிறீர்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அதனால் என்ன? நாளைக்கு உங்களுக்கு சக்தி கொடுப்பது நாங்கள் தான். (சிரிப்பு) கோவிலைப் பாருங்கள் அப்படிப்பட்ட திருக்கோவில்களில் பிரீஸ்ட்டு அர்ச்சகர்கள், வெகு பேர் என்ன நினைக்கிறார்கள் என்றால் ஐயன்தான் என்று நினைத்துக் கொள்கிறார்கள். இன்னும் புரியவில்லை. ஐயன் தானா, அர்ச்சகர் தானா என்று புரியவில்லை. இதோ இவர் இருக்கிறாரே சேலம் மாவட்டம் காளிப்பட்டிக் கோவில் என்றால் தெரியும், இல்லையா, காளிப்பட்டிப் பூசாரி என்று கேள்விப்பட்டால் அந்தக் காலத்தில் அரசியலில் உள்ளவர் ஐ.ஏ.எஸ்., ஐ.சி.எஸ். படித்தவர்கள் காளிப்பட்டிக்கு தைப் பூசத்தின்போது வருவார். இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிலிருந்து தைப் பூசத்தின்போதுதான் வருவார். அவர் வந்து உட்கார்ந்த உடனே 20 லட்சம் 10 லட்சம் ரூபாய் வசூல் ஆகும். வசூல்ஆகுமா, ஆகாதா? காளிப்பட்டிப் பூசாரி என்றால் நான்கூட விழுந்து கும்பிடவேண்டும். (குறுக்கீடு) ஐயர் ஆக இருந்தால் அர்ச்சகர் மற்ற ஆட்களாக இருந்தால் பூசாரி, அது மட்டும் கொஞ்சம் விக்கரமாக இருக்கிறது. சரியாக இல்லை. அவரையும் அர்ச்சகர் என்று வைத்துக்கொள்ளலாம். (சிரிப்பு) வெகு பேர் என்ன நினைக்கிறார்கள் என்றால் ஏன் அரிஜனங்களை அர்ச்சகராக நியமிக்கக்கூடாது என்று, யாராவது வேண்டாம் என்று சொன்னார்களா? நியமிப்பதற்கு சட்டம் ஏற்கனவே இருக்கிறது. அவர்கள் மாட்டேன் என்கிறார்களே. இப்போதே நான் குடுமி வைத்துக் கொண்டு போனால் கொஞ்சம் மரியாதை இருக்கிறது. கிராப் வைத்துக் கொண்டு போனால் மேலேயும், கீழேயும் பார்க்கிறான். பழனியில்ப் போய் பாருங்கள், தைப் பூசத்திற்கு எஸ்டிமேட் கமிட்டியில் போய் இருந்தேன். எங்களால் மேலே போக முடியவில்லை. அவ்வளவு ஜனங்கள். பக்தி இல்லாமலா இருக்கிறது. பங்குனி உத்தரத்தின் போது நாம் ஒரு ஊசியை டாக்டர் கிட்டே போய் போடும்போது ஊசி கைகிட்டே வரும்போதே அப்படி இப்படி ஒதுங்குகிறோம்; ஒரு ஊசியை குத்திக்கொள்வதற்கே நாம் பயப்படுகிறோம். அவன் மேலே நூற்றுக்கணக்கான ஊசிகளை குத்திக்கொண்டு ஆடுகிறான், பக்தி இல்லையா; அக்கினி குண்டத்திலே குதிக்கிறானே, இவ்வளவு தூரம், 100 அடி, 200 அடி தாண்டிக் கொண்டு போகிறானே, பக்தி இல்லையா? அவனுக்கு என்ன புண் வந்துவிட்டது. டாக்டர் கிட்டே போய் அவன் ஊசி போட்டுக் கொள்கிறானா? நாம் தான் ஏ.டி.சி. ஊசி போடுங்கள் சார் என்கிறோம். ரத்தம் வந்துவிட்டது, ஏ.டி.சி. ஊசி போடுங்கள் சார், செப்டிக் ஆகாமல் இருக்கவேண்டும் என்று சொல்கிறோம். எத்தனை ஊசி கணக்கே இல்லை, அவ்வளவு குத்து குத்துகிறான், ஒன்றும் ஆகவில்லை. பக்தி இல்லையா? அந்தச் சாமியினுடைய சக்தி இருக்கிறது என்று சொல்கிறேன். பழனியிலே சக்தி இல்லை என்று சொன்னால், இவ்வளவு காவடி வருமா? கோழி கொண்டு வருகிறான். அறுத்துக்



கொண்டு வருகிறான், உயிர் வந்துவிடுகிறது, எப்படி வந்தது, நீ பார்த்தாயா என்று கேட்டால் பார்க்கிறோம். போய் இருந்தால் தெரியும். அதுமாதிரி அந்த அலகு குத்திக் கொண்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். ஒரு ஊசியைக் கொண்டு அலகு குத்தச் சொல்லுங்கள் பார்ப்போம். அவன் வயிறு பூராவும் குத்தியிருக்கிறான். வாய் பூராவும் குத்தியிருக்கிறான். அதிலே தொங்கிக்கிட்டு போகிறான், அப்படிப்பட்ட பக்தி பரவசங்களை ஊக்குவிக்கிற நம்முடைய சாமிகள், நம்முடைய பெரிய விக்கிரகங்கள் எல்லாம் நம்மிடத்திலே நிறைய இருக்கின்றன. அதை சரியான முறையிலே பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

13–35 மணி

இன்னொரு சமாச்சாரம் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ஆறுமுகம் அவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ? திருமானூர் கோவிலில் ஒரு இடம் இருந்தது. அதை எப்படி விற்றார்கள். எதற்கு விற்றார்கள், யாருக்கு விற்றார்கள். அதிலேகூட கட்டிடம் கட்டி— நல்லவேளையாக தகராறு எழும்பவில்லை. அந்தக் கட்டிடத்தை எல்லாம் கிளீன் பண்ணிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். பங்குனி உத்திரம் அன்றைக்கு இடித்துத்தள்ளிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒரு கோவில் சொத்தை விற்கும்போது, ஜாக்கிரதையாக விற்கவேண்டும். தகராறு ஏற்படாமல் விற்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, காவடி எடுப்பதைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். அதே மாதிரி கடவுள் இல்லை என்று சொல்லிக்கொண்டு, அம்பாசிடர் காரை எல்லாம் இழுக்கிறார்களே, அது எல்லாம் சக்தியால் நடக்கிறதா அல்லது பக்தியால் நடக்கிறதா ?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நான் சொல்வது நடக்கக்கூடியது. நீங்கள் நடக்காததைச் சொல்கிறீர்கள். அப்படி நடக்கவில்லை. அதுமாதிரி நடக்கவில்லை. அப்படி இழுத்ததாக எனக்குத் தெரியவில்லை. நாஸ்திகம் பேசலாம். நாஸ்திகத்திற்கு இப்போது எங்கே வலு இருக்கிறது ? வெளியிலே வேண்டுமானால் பேசலாம். நம்முடைய தமிழ்நாட்டிலே அது இல்லவே இல்லை. வட நாட்டிலே கோயில்கள் எல்லாம் சரியானபடி இல்லை. வெறும் சின்னச் சின்னவைகள்தான். இப்பகூட நைமிசாரண்யத்திலே எங்கள் ராஜகோபுரம் கட்டிய ஸ்தபதி போய் அடிக்கல் நாட்டிவிட்டு வந்திருக்கிறார்கள். உலகம் பூராவும், தமிழ்நாட்டிலே உள்ள கோயில்கள் மாதிரி கட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். நம்முடைய தமிழ்நாடு கோபுரம் போல கட்ட வேண்டும் என்று எல்லோரும் ஆசைப்படும்போது, நாம் அதற்கு இழுக்கு தேடக்கூடாது. நாஸ்திகம்

பேசலாம். இன்றைக்கு ஏற்படவில்லை அது. ராமாயணம் இதிகாச காலத்திலேயிருந்து நாஸ்திகம் இருந்து இருக்கிறது. இரண்யன் காலத்திலிருந்து நாஸ்தீகம் என்று ஒன்று இருந்திருக்கிறது. ராமன் வந்து ஐயனா, ராவணன் ஐயனா? ராமன் வந்து சத்திரியன், ராவணன் ஐயன், இது தெரியுமா உங்களுக்கு. (சிரிப்பு) பிராமணன், அக்னி ஹோத்ராஸ்ச வேதாஸ்ச ராக்ஷஸானாம் கிருகேகிருகே சொல்லுங்கள். இல்லை என்று சொல்லுங்களேன் என்னிடம். இங்கே அப்துல் லத்தீப் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தெரியாத்தனமாக முஸ்லீமாகப் பிறந்துவிட்டார்கள். பூர்வாங்கம் அவர்கள் சமஸ்கிருதம். சகல ஸ்தல புராணமும் அவர்களுக்குத் தெரியும். எனக்குத் தெரியாது. சகல ஸ்தல புராணமும் அவர்களுக்குத் தெரியும். பிறகு, எழுந்திருந்து சொல்லச் சொல்கிறேன். நன்றாகச் சொல்லக்கூடிய சக்தி இருக்கிறது அவருக்கு. இருந்தாலும் ஆலய ஊழியர்கள் நியமிக்கப்படுவது என்பது சர்வீஸ் கமிஷன் மூலமாக நியமிக்கிறார்கள், பாருங்கள் அதைப் போல அல்லது எம்ப்ளாய்மென்ட்டிலே இருந்து நியமிக்க வேண்டும். ஏன் என்றால், அவர்களுக்கு வேண்டிய டிரஸ்டிக்கு வேண்டிய ஆட்களை நியமித்து விட்டார்கள் என்ற குறை இருக்கிறது. இப்போது சொன்னார்கள் பாருங்கள், புதுக்கோட்டையிலிருந்து இறக்குமதி பண்ணுகிறார்கள் என்று சொன்னார்களே, அதுமாதிரி நாம் ஏன் பண்ணக் கூடாது? வருங்காலத்திலே பண்ணால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அதுமாதிரி அவர்களை சர்வீஸ் கமிஷன் மாதிரி, எம்ப்ளாய்மென்ட்டிலிருந்து அவர்களை நியமிக்க வேண்டும். கவர்ன்மென்ட் ஊழியர்களுக்கு என்னென்ன கொடுக்கிறோமோ, அது அத்தனையையும் அவனுக்குக் கொடுக்க வேண்டும். அதே மாதிரி அவர்களை டிரான்ஸ்பர் பண்ண வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து லத்தீப் அவர்கள் கோவிலைப் பற்றி பேச இருக்கிறார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** அவருக்கு நான்தான் சொல்லிகொடுத்தேன். (சிரிப்பு).

அடுத்தபடியாக ஒரு சம்பவம் நடந்தது. சமீபத்திலே பார்த்தசாரதி கோவிலிலே பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள், அந்தப் பிச்சைக்காரர்களை எல்லாம் வெளியேற்று என்று சொன்னார்கள். பார்த்தா, அங்கே வேலை செய்கிற பியூன், கிளார்க் எல்லோருமே பிச்சைக்காரனைப் போல இருக்கிறான், கோவில் ஊழியர்கள் எல்லாம் பிச்சைக்காரனைப் போல இருக்கிறான், எனவே, இதுமாதிரி பலவிதமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

கோவில் சொத்துக்களைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவன் சொல்கிறான், இவன் சொல்கிறான் என்று கேட்கிறீர்கள். இன்றைக்குப் பாருங்கள், சாரங்கபாணி கோவிலுக்குப் போனால், தேரைச் சுற்றிக் கடைகள் இருக்கின்றன. ஏன், சரியாக உற்சவத்தை நடத்தினால், அவன் கடையைப் போடுவானா ? ஏன் நடத்தவில்லை. (மணியடிக்கப்பட்டது).





இந்த டிபார்ட்மெண்டிலே, ஜாதி வித்தியாசம் பார்க்காமல் நம்முடைய கலைஞர் அவர்கள் ஆதி திராவிடர்களை உள்ளுக்குள்ளே நுழைத்தது அவர்கள்தான். அது உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ. முதலிலே அப்பாயின்ட்மென்ட் செய்தது நம்முடைய கலைஞர் அவர்கள். அதைத் தெரிந்து கொள்ளுங்கள். அதிலே கூட வித்தியாசம் ஒன்றும் கிடையாது. எப்படியாவது கோவில்கள் இருக்க வேண்டும். இப்போதுகூட நித்தம் ஒரு முகூர்த்தத்திலே 20 கும்பாபிசேகங்கள் நடக்கின்றன. (மணியடிக்கப்பட்டது). இவ்வளவு கொண்டு வந்திருக்கிறேன்.

அறங்காவலர்கள் போடுவது என்பது ஒரு அளவிலே கேட்டுப் போட வேண்டும். ஐவர் கமிட்டி போடுகிறார்கள். அந்தக் கமிட்டியை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். வேண்டுமானால் அறிக்கை சொல்லத் தயாராக இருக்கிறேன். இன்னின்னார் மேலே மிஸ்டேக் இருக்கிறது என்று சொல்லத் தயாராக இருக்கிறேன். இருந்தாலும், நீங்கள் எவ்வளவு சொன்னாலும் நான் அதனுடைய குறையைப் பற்றிச் சொல்ல மாட்டேன். இருந்தாலும் இந்த டிரஸ்டியை நியமிக்கும்போது—இந்த ஸ்ரீரங்கம் கோவில் இருக்கிறதே, அது ஒரு ஸ்கீம்டெம்பிள்—அந்தந்தக் கோவிலுக்குத் தகுந்தாற்போல் நியமிக்க வேண்டும். பரம்பரை டிரஸ்ட் என்று இருக்கிறது. அந்த பரம்பரை டிரஸ்ட்டை ஏன் ஒழிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. சில பேர்கள் பரம்பரை டிரஸ்டியை ஒழிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் தூக்கி வேறு ஒருவருக்குக் கொடுத்து விட வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்போது அவனுக்கு என்ன வருகிறது. கோவிலிலிருந்துதான் வாய்தா பணத்தைக் கட்டிக் கொண்டு வருகிறான். (மணியடிக்கப்பட்டது). எனவே, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

13-40 மணி

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990–91ஆம் ஆண்டுக்கான இந்து சமய அறநிலையத் துறை 12ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தின் பாரம்பரியச் சொத்துக்களாகிய பழமையான திருக்கோயில் கட்டிடக் கலை அம்சங்களைப் பராமரித்து, பாதுகாத்து, அக்கோயில்களை தூய்மையாக, இதமாக, தெய்வீக சூழ்நிலையை உறுதிப்படுத்தும் பெரும் பணிக்கு பொறுப்பு ஏற்றுள்ள மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தமிழக முதல்வர் அவர்களின் வழி காட்டுதலுடன் மேற்கொண்டுள்ள நேர்மையான நடவடிக்கைகளும், சிறப்பான திட்டங்களும்,

ஆன்மீகத்தில் நம்பிக்கையுள்ள அனைவராலும் பாராட்டப்படுகின்றன. முந்தைய ஆட்சியில் துவக்க விழா நடத்தியதோடு நின்றுபோய்விட்ட ஏராளமான திருப்பணிகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டு மக்கள் மனம் மகிழும் வகையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பயன்படுத்தாமல் கிடந்த நகர்ப்புற நிலங்களில் அங்காடி வளாகங்கள் அமைத்து, ஆலய வருவாயைப் பெருக்கும் பெரும் திட்டம் இன்றையதினம் செயற்படுத்தப்படுவதை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் கோயில் நிலங்களை குத்தகை சாகுபடியாளர்களாக அனுபவித்தவர்களில் பல்வேறு வகை உண்டு. இங்கே பேசிய உறுப்பினர்கள் கூட குத்தகைகளை கடுமையான வகையில் வசூலிக்க வேண்டுமென்று சொன்னார்கள். குத்தகைப் பயிர் சாகுபடியாளர்களில் பல்வகை உண்டு. குறிப்பாகச் சொல்லப்போனால் குத்தகை வணிக இடங்கள், கோயில்களுக்குச் சொந்தமான குத்தகை குடியிருப்பு இடங்கள். அதே போன்று பயிர் சாகுபடியாளர்கள் இவைகள் அனைத்தையும் ஒரே முறையில் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளக் கூடாது.

கடந்த 10 ஆண்டுக்காலயாக காவிரி ஆற்றின் பிரச்சினை காரணமாக, அதேபோன்று இயற்கை பொய்த்ததன் காரணமாக ஆறுகளில் தண்ணீர் வராத நிலையில் கடுமையான குத்தகையை வசூல் செய்வது என்பது எப்படி நியாயமாகும்? வணிக இடங்களை வைத்திருப்பவர்கள் வேண்டுமானால் இதை முறையாகச் செலுத்தலாம். ஆனால், சாகுபடியே செய்யாத நிலங்களுக்கு கட்டாயமாக கடுமையான குத்தகை வசூல் செய்ய வேண்டுமென்பதை தயவு செய்து மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று குத்தகை நிலங்களில் சாகுபடி செய்பவர்கள் இந்த ஆண்டு இலாபகரமாக, சிறப்பாக சாகுபடி செய்திருக்கிறார்கள். நல்ல முறையில் விளைவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டுக்கான குத்தகையை வேண்டுமானால் உடனடியாக இந்த ஆண்டு அவர்களிடமிருந்து வசூலிக்கமுடியும். ஆனால், இந்தக் குத்தகையை அவர்கள் செலுத்தச் செல்கின்ற நேரத்தில், பழைய பாக்கிகளுக்குத்தான் வரவு வைப்போம் என்று சொல்வதின் காரணமாக இன்றைய தினம் சாகுபடி செய்யும் விவசாயிகள் கூட குத்தகையை செலுத்துவதற்கு முன்வரவில்லை. எனவே, தயவு செய்து ஏற்கெனவே, முந்தைய ஆட்சியில், நம்முடைய கலைஞர் ஆட்சிக் காலத்தில் குத்தகை சாகுபடியாளருக்கு 1982ஆம் ஆண்டு பசலிக்கான குத்தகை நெல்லை அளந்தால் பழைய பாக்கிகளைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற முற்போக்கு சட்டத்தைக் கொண்டு வந்ததின் காரணமாக இன்றைய தினம் எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற குத்தகை சாகுபடியாளர்கள் ஓரளவிற்காவது நிம்மதி



யாக சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். மீண்டும் அதே போன்று ஒரு சட்டத்தை இந்தப் பேரவையில் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையத் துறை மேம்பாட்டிற்காக இந்த அரசு மேற்கொள்ளும் பணிகளுக்கு மக்கள் மத்தியில் மகத்தான வரவேற்பு உள்ளது. ஆனால், சில அதிகாரிகளிடமிருந்து போதிய ஒத்துழைப்பு கிடைக்காத நிலையும் உண்டு. சில அதிகாரிகள் இன்னமும் முந்தைய ஆட்சியின்போது நிலவிய மெத்தனப் போக்கிலிருந்து தங்களை மாற்றிக் கொள்ளவில்லை. இதனால், அறநிலையத் துறையின் முந்தைய ஆட்சியின் போக்கே தொடருகிறதோ என்ற ஒரு அச்சம் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக முந்தைய அரசால் நியமிக்கப்பட்டுள்ள தவறான நிர்வாகிகள், டிரஸ்டிகள், ஆலய நிதிகளை விரயமாக்கும் வகையில் அவர்கள் செயல்முறைகளை இன்னமும் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, உடனடியாக அந்த பழம் பெருச்சாளிகளை நீக்கிவிட்டு, புதிய நிர்வாகிகளை, டிரஸ்டிகளை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் இத்துறையின் அதிகாரிகள் பதவி உயர்வு பெறுவதற்காக முதல் நிலை நிர்வாக அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வந்த கோயில்களை தேவையற்ற வகையில் உதவி ஆணையர் நிலை, துணை ஆணையர் நிலை, இணை ஆணையர் நிலை என்ற புதிய நிலைகளுக்கு உயர்த்த புதிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டன.

13–45 மணி

இதனால் ஆலயங்களின் உபரி நிதி கடுமையாக விரயம் ஆவதைத் தவிர வேறு எந்த வகையான முன்னேற்றத்தையும் நம்மால் காண முடியவில்லை. இதுபோன்று பதவி உயர்வின்போது இட மாற்றத்தை தவிர்க்கவும் ஊழியர்களின் நிலையை கிரேடு உயர்த்துவது அல்லது குறைப்பது போன்ற செயல்கள் எந்த விதமான வரைமுறையும் நியதியும் இல்லாமல் விருப்பம் போல் செய்யப்படுகிறது.

பிரசித்தி பெற்ற முதல்நிலை கோவிலாக குடந்தை அருள்மிகு கும்பேஸ்வரர் திருக்கோயிலை இரண்டாம் நிலைக்கு குறைத்தார்கள். அதற்கு பதிலாக சென்னையிலே இருக்கிற அகஸ்தீஸ்வரர் கோயில் என்கிற ஒரு சாதாரண கோயில் முதல் நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் கிரேடு மாற்றுவதை உடனடியாக தவிர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று அற நிலையத் துறை பணியாளர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பதற்காகவே கோயில்களில் தேவையற்ற புதிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டு அப்பதவிகளில் கோயில் பணி

யாளர்கள் நியமிக்கப்பட்டால் ஏற்படக்கூடிய சம்பள செலவை விட பல மடங்கு கூடுதலான சம்பளம் பெறும் அறநிலையத் துறை பணியாளர்கள் அயல் பணியாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக மேட்டுப்பாளையம் வட்டம் தேக்கம்பட்டி அருள்மிகு வன பத்திரக் காளியம்மன் கோயிலில் பல ஆண்டுக்காலமாக ரூ. 500-20-600 என்ற சம்பள விகிதத்தில் உதவியாளர் பதவி இருந்தது. அக் கோயிலில் 12-9-1989-லிருந்து ஓராண்டுக் காலத்திற்கு புதிய உதவியாளர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டு அப்பதவியில் அறநிலையத் துறைப் பணியாளர் ஒருவர் அயல் பணியாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு வழங்குகிற சம்பளம் ரூ. 1,200-30-1,560-40-2,040. இந்த சம்பள விகிதம் இன்றையதினம் கொடுக்கப்படுகிறது. இத்தகைய முரண்பாடுகளும் அநீதிகளும் பணியாளர்கள் மத்தியில் ஒரு மனக் கசப்பையும் பொது மக்கள் மத்தியில் வீண் பிரச்சினைகளையும், வீண் பழியையும் இந்த அரசுக்கு ஏற்படுத்தியிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எனவே அறநிலையத் துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு பதவி வாய்ப்புகளை உண்டாக்கிடும் வகையில் புதிய பதவிகள் ஏற்படுத்தப்படுமானால் அப்பதவிகளை அறநிலையத்துறை அலுவலகங்களிலேயே ஏற்படுத்தி அதன் மூலம் அறநிலையத்துறையின் நிர்வாகத்தை விரிவு படுத்தவும் நிர்வாகப் பணிகள் தாமதம் இன்றி நடக்கவும் பயன்படுத்திக் கொள்வது நல்லது. மாறாக கோவில்களின் நிதி விரயம் ஆகும் வகையில் பதவிகள் ஏற்படுத்தினால் மக்கள் மத்தியில் ஒரு மிகப் பெரிய அதிருப்தியை ஏற்படுத்த வேண்டிய ஒரு நிலையாக அது அமையும். எனவே இப்படிப்பட்ட அயல் பணிகளுக்கு கோயில்களில் நியமனம் செய்வதை தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவரும் திருக்கோயில் பணியாளர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும், அறிவிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இன்றையதினம் பல்வேறு சலுகைகள் அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகிற சலுகைகள் அந்தத் திருக்கோவில் பணியாளர்களுக்கு கிடைத்தாலும் போதுமான அளவுக்கு அவைகள் கிடைக்கவில்லை. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் இன்றைய தினம் வீட்டு வாடகைப்படி அதேபோல அகவிலைப்படி இவைகள் எல்லாம் அரசு ஊழியர்களுக்கு கிடைக்கிற அளவுக்கு இந்தப் பணியாளர்களுக்கு கிடைக்கவில்லை. பல மாதங்களாக அவர்களுக்கு ஊதிய பாக்கி இருந்து வருகிறது. எனவே இந்தப் பணியாளர்களுடைய குறைபாடுகளை உடனடியாக களைய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்,



கடந்த ஆண்டு இதே மாமன்றத்தில் நான் இந்தக் கோரிக்கையை எடுத்து வைத்தேன். அரசு ஊழியர்களாக உள்ள அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் சம்பளத்திற்காக திருக்கோயில்களின் நிகர ஆண்டு வருமானத்தில் 10 விழுக்காடு சகாய தொகையாகவும் 4 விழுக்காடு தணிக்கைக் கட்டணமாகவும் வசூலிக்கப்படுவது போல, திருக்கோயில் பணியாளர்கள் சம்பளத்திற்காக 40 விழுக்காடு தொகையை வசூலித்து ஒரு தனி நிதியை ஏற்படுத்தி அதிலிருந்து திருக்கோயில் பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்கும் வகையில் கிரேடு வாரியாக ஊழியத்திற்கு ஏற்ற ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். 1973-74 ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்தில் தான் முதன் முதலாக திருக்கோயில் பணியாளர்களுக்கு சம்பள விகிதமே நிர்ணயம் செய்யப்பட்டது. அதே போல 1987 ஆம் ஆண்டு, முதல்நிலை பணியாளர்களுக்கு மட்டும் சம்பள விகிதம் திருத்தி அமைக்கப்பட்டது. இடையில் கோயில் பணியாளர்களுக்கு 1977ஆம் ஆண்டுக்கு பிறகு சம்பள விகிதங்கள் மாற்றி அமைக்கப்படவில்லை. எனவே தற்கால நிலைமைக்கு ஏற்ப அவர்களுக்கு அவர்களுடைய சம்பள விகிதத்தை கணிசமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமாய் பணிவோடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல புதுக்கோட்டை சமஸ்தான கோயில்களுக்கு சொந்தமாக இருந்த 35,500 ஏக்கர் நஞ்சை, 71,500 ஏக்கர் புஞ்சை நிலங்களை புதுக்கோட்டை சமஸ்தானம் தங்கள் வசம் எடுத்துக்கொண்டு கோயில் நிர்வாகத்தை நேரிடையாக சமஸ்தான விதிமுறைகளின்படி நடத்தி வருகிறார்கள். 1948 ஆம் ஆண்டு, மேற்படி சமஸ்தானம் இந்திய அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட பிறகும் (மணியடிக்கப் பெற்றது) 31-3-1953 வரையிலும், தமிழக வருவாய்த்துறையின் மூலமே நிாவகிக்கப்பட்ட இந்தக் கோயில்களின் நிர்வாகத்தை, 1-4-1953 முதல் அறநிலையத் துறையுடன் ஒப்படைத்தபோது, அக்கோயில்களின் நிர்வாக செலவிற்காக, ஆண்டுக்கு ரூ. 2,65,000 அரசால் வழங்கப்பட்டது. இன்றைக்கு, இத்தொகை ரூ. 4 லட்சமாகவும், பிறகு கழக ஆட்சியில் ரூ. 5,30,000 ஆகவும் உயர்த்தப்பட்டது. இது 15 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்டத் தொகை. எனவே, அதை 5 மடங்கு உயர்த்தி, ரூ. 25 லட்சமாக அவர்களுக்கு வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

13-50 மணி

முந்தைய ஆட்சியின்போது, தனிப்பட்ட காரணங்களுக்காக திருக்கோயில் பணியாளர்கள் பலர் ஆட்சியாளர்களால் பழி வாங்கப்பட்டுள்ளனர். அவர்களின் மேல்முறையீடுகளின் மீது, இதுவரை எந்தவிதமான தீர்வும் காணப்படவில்லை. எடுத்துக் காட்டாக, சுவாமிமலை, அருள்மிகு சுவாமி நாத திருக்கோயிலில் மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வந்த திரு. ஜி.

[திரு. செ. இராமலிங்கம்] [1990 ஏப்ரல் 11

ராமகிருஷ்ணன் என்பவரும், கோவில்பட்டி, அருள்மிகு பூவநாத சுவாமி திருக்கோயிலில் எழுத்தராகப் பணிபுரிந்து வந்த திரு. பால்சாமி என்பவரும் பழிவாங்கப்படும் நோக்கத்தில், பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். முந்தைய ஆட்சியில் பழி வாங்கப்பட்ட இதர துறையின் பணியாளர்கள், மாண்புமிகு கலைஞர் அவர்கள் பதவியேற்ற பிறகு, (மணியடிக்கப்பெற்றது) கருணை அடிப்படையில் பலருக்கு மீண்டும் பணிநியமனம் வழங்கியிருக்கிறார்கள். அந்த கருணையின் அடிப்படையிலாவது அவர்களுக்கு மீண்டும் பணி நியமனம் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனது தொகுதியைப் பொறுத்த மட்டில், ஆதி திராவிடர் குடியிருப்புகளில், பெரிய கோயில்கள் எழுப்பிட, பல கிராமங்களிலுள்ள மக்களிடம் இருந்து, மானிய உதவியைக் கேட்டு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. குறிப்பாக, கும்பகோணம் வட்டம், வண்டுவாஞ்சேரி, செம்மாங்குடி, போஹுர், முருத்தங்குடி, துக்காச்சி, மேலக் காட்டூர், உத்திப்பாக்கம், முல்லாங்குடி, கீழ்க்காட்டூர், செருகடம்பூர், ஆரலூர், கிளிமங்கலம், நெய்வாசல், கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து முறையாக முன்மொழிவு அனுப்பப் பட்டிருக்கிறது. அவைகளுக்கு மானிய உதவி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், புகழ்பெற்ற சூரியனார் கோயில், தென்னகத் திருப்பதி என்று போற்றப்படும் உப்பிலியப்பன் கோயில், ராஜஸ்தலம் போன்ற மிகப்பெரிய ஆலயங்கள் இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அன்றாடம் அந்த ஆலயங்களுக்கு போய்வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கே வருகின்ற பக்தர்களுக்கு கழிப்பிட வசதி, குளியலறை, தங்குமிடம் போன்ற அடிப்படை வசதிகள்கூட இல்லாத நிலைமையில், அந்த ஆலய நிர்வாகிகள், வருவாயை மட்டும் எடுத்துக் கொள்கிறார்களே தவிர, தேவையான வசதிகளை செய்து தருவதில்லை. இதற்கெல்லாம் காரணம் மக்கள் பிரதிநிதிகளாக அங்கே நிர்வாகிகள் இல்லாத காரணம்தான். எனவே, உடனடியாக இந்த ஆலயங்களுக்கு நிர்வாகிகளை நியமித்திட வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில், (மணியடிக்கப்பெற்றது) திருப்பனந்தாள் காசிமடம் என்ற ஒன்று இருக்கிறது. இந்த மடத்திலிருந்து வருகின்ற வருவாயைக் கொண்டு, அங்கே செந்தமிழ்க்கல்லூரி. . . . .

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சொல்ல வேண்டுமென்ற ஆர்வம் காட்டுவது நியாயம்தான். ஆனால் இந்த அவையினுடைய நேரத்தை எந்த அளவுநீட்டிப்பது என்று தலைவருக்கும்தெரியாமல் அமைச்சருக்கும் தெரியாமல் ஒவ்வொரு



1990 ஏப்ரல் 11] [டாக்டர் க. அன்பழகன்]

வரும் பேசுகின்ற காரணத்தால், மொத்தத்திலே கால நீட்டிப்பு மிக அதிகமாக ஆகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்ல வேண்டிய செய்திகளை, தங்களுடைய வேண்டுகோளாக அமைச்சருக்கு கடிதம் மூலமாகத் தந்தால், அவைகளுக்கெல்லாம் அமைச்சர் பதில் தெரிவிப்பார் என்று அவர் சார்பாக, நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, ஆளுங் கட்சி உறுப்பினர்கள் பேச்சை முடித்து, மற்றவர்களுக்கு இடம் தர கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: பேசவா? வேண்டாமா? (குறுக்கீடு) பேசவேண்டாம் என்றால் பேசவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் எப்போது முடிவுறும்—நிறைவுபெறும் என்று நினைத்துக் கொண்டிருக்கிற நேரத்தில் தான், எனக்கு இந்த வாய்ப்பை வழங்கவேண்டுமென்ற ஒரு மரபை, ஏனோ தெரியவில்லை, அதுவும் நோன்பு நேரத்தில், கடைப்பிடித்து வருகிறார்கள். இருந்தாலும் என்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. அமைச்சர் அவர்களே கூட, பேச வேண்டுமா, கூடாதா என்று சொல்லும் அளவிற்கு ஒரு இக்கட்டான நேரத்தில் இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இருந்தாலும் ஏனைய மானியங்களில் எல்லாம் பேசக்கூடிய நான் இந்த மானியத்திலும் பேசக்கூடிய கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக நின்றிருக்கிறேன். ஏனென்றால், என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய இந்து உடன்பிறப்புக்களுக்கு நான் தான் இங்கே பிரதிநிதி. அவர்கள் வந்து இங்கே பேசமுடியாது. எனவே, அவர்களுடைய பிரதிநிதியாக இருக்கக்கூடிய நான் அவர்களுடைய உணர்வுகளை இந்த அவை முன் வைப்பது என்னுடைய கடமை. எனவேதான், இந்த மானியத்திலும் நான் பேசியாகவேண்டும் என்பதற்காக நின்று இருக்கிறேன்.

13–55 மணி

இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டபிறகு, ஆட்சியில் உள்ளவர்களுடைய எண்ணங்கள் எதுவாக இருந்தாலும் ஆட்சி வேறு, கட்சி வேறு, ஆட்சி எல்லோருக்கும் சொந்தமானது, எல்லோருக்கும் நன்மை பயக்கவேண்டும் என்ற அடிப்படையில் செயல்படவேண்டும் என்ற பொது நோக்கோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடனே, இந்து அறநிலையத் துறையை செம்மைப்படுத்தவேண்டும், சீர்படுத்தவேண்டும், மேன்மைப்படுத்தவேண்டும், அறநிலையங்களை, கோயில்களை மேம்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் சமயச் சான்றோர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்தது பாராட்டக்கூடிய ஒன்று. அந்தக் குழுவும் செம்மையாகப் பணியாற்றி ஆய்வுகள் நடத்தி ஒரு அறிக்கையை அரசிற்கு அளித்திருக்கின்றது. அந்த அறிக்கையை வெளியிடவேண்டும்

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 11

என்ற கோரிக்கைகளும் இன்றைக்கு நாட்டில் எழுந்திருக்கின்றன. காஞ்சி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரியார், ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கூட அந்த அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து இருக்கிறார்கள். ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மட்டுமல்லாமல், வெங்கடேஸ்வர தீட்சிதர் சுவாமிகளும் இங்கே நேரிடையாக அந்தக் கோரிக்கையை வைத்திருப்பதன் காரணமாக, அதை நானும் வலியுறுத்திட விரும்புகிறேன்.

தமிழகத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாகக் கொடுத்திருக்கிற இந்தக் குறிப்புகளின்படி, மொத்த அறக்கட்டளைகள், கோயில்கள் உட்பட 35,150. அதாவது இந்தத் துறையினுடைய ஆளுகைக்குட்பட்ட அறக்கட்டளைகள், கோயில்கள் என்ற விவரம் தரப்பட்டிருக்கிறது. இதிலே இரண்டாயிரம் ரூபாயிலிருந்து, 1,00,000 ரூபாய் வரை வருமானம் உள்ள கோயில்கள் 8,591 கோயில்களாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இதைக் குறைத்து நாம் பார்ப்போமேயானால், வருமானக் குறிப்பு இல்லாத கோயில்களாக இந்தக் குறிப்பில் காணப்படுபவைகள் ஏறக்குறைய 26,559 கோயில்களாக அமைகின்றன. இதிலே அவர்களுக்கு எப்படி வருமானம் வருகிறது? கோயில்களிலே அன்றாடம் நடக்கவேண்டிய பூஜைகள், புனஸ்காரங்கள், ஆராதனைகள், நியமப்படி, ஆகமப்படி எப்படி நடைபெறுகின்றன, அதற்கு நிதியாதாரங்கள் என்ன என்ற குறிப்பு இதிலே இல்லை. எனவே குறிப்பிடத்தக்க நிதியாதாரங்கள் இல்லை என்பதை இது கூறுகின்றது. எனவே, ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக வருமானம் உள்ள கோயில்களிலே இருந்து கல்லூரிகளை நடத்தவேண்டும், அந்த வருமானங்களிலேயிருந்து மருத்துவமனைகளை நடத்தவேண்டுமென்றெல்லாம் கூட இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆனால் ஒரு கோயில் வருமானத்தினுடைய மிக முக்கியமான நோக்கம், பக்தியை வளர்க்கவேண்டும், சான்றாண்மையை வளர்க்கவேண்டும் என்பதுதான் அதனுடைய முக்கியமான நோக்கம். எனவே, அதிகமான வருமானமுள்ள கோயில்களிலேயிருந்து கல்விச் சாலைகளை அமைப்பது, மருத்துவமனைகளை அமைப்பது என்று சொல்வது அவ்வளவு ஏற்புடையதாக நான் கருதவில்லை.

கல்விச் சாலைகளையும், மருத்துவமனைகளையும் அமைக்கின்ற பொறுப்பை அரசாங்கம் வகிக்கின்றது. அதைக் கோயில் வருமானங்களிலேயிருந்துதான் செய்ய வேண்டும் என்பது அவசியம் அல்ல. அந்தப் பணத்தை சிறிய கோயில்களுக்கு வருமானம் இல்லாத கோயில்களுக்கு பங்கிட்டுக்கொடுக்கக்கூடிய ஒரு வழிவகையைக் காணவேண்டும். அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு அந்தக் கோயில்களிலே வருகின்ற வருமானங்கள்



1990 ஏப்ரல் 11] [திரு. எம். அப்துல் லத்தீப்]

முறையாகப் பயன்படுவது இல்லை என்ற ஒரு குற்றச் சாட்டும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே உண்மை இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். குறிப்பாக, பரம்பரை அறங்காவலர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் ஏறக்குறைய இந்த பரம்பரை அறங்காவலர்களால் நிர்வகிக்கப்படுகின்ற கோவில்கள், அறக் கட்டளைகள் 4,074 தமிழகத்தில் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆகவே அந்த பரம்பரை அறங்காவலர்கள் என்பதை சட்டத்தின் மூலமாக அதை நிறுத்த வேண்டும், அதை ஒழிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

14-00 மணி

அது மட்டும் அல்லாமல், இன்றைக்கு யார் கோவில்களை அறக்கட்டளைகளை நிர்வகிப்பது என்ற பிரச்சினையில் ஏறக்குறைய 1,587 வழக்குகள் வழக்கு மன்றங்களில் இருப்பதாகவும், அந்தக் கோவில்கள் மீது இப்போது துறை ஆதிக்கம் செலுத்த முடியவில்லை, தடை ஆணைகள் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும் வழக்குகள் நிலுவையில் இருக்கின்ற காரணத்தாலும் ஏறக்குறைய 1,587 கோவில்கள் இன்றைக்கு இந்த துறையினுடைய நேரடி ஆளுகை இல்லாமல் இருக்கிறது. தன்னிச்சையாக இயங்கிக் கொண்டு இருக்கின்றன என்று புள்ளி விவரங்கள் இங்கே சொல்கின்றன. எனவே, அதைப் பற்றி அரசு சிந்திக்க வேண்டும், அதைத் தடுப்பதற்கு சிவில் கோர்ட்டுகளை ஏற்கெனவே குறிப்பாக இந்த அறக்கட்டளைகள் மீது அதில் எழுகிற வழக்குகளை தீர்ப்பதற்கு சிவில் கோர்ட்டின் இறையாண்மையை அதனுடைய ஆதிக்க ஆளுகையை தடை செய்து இதற்காக தனியாக அமைப்புகள் ஏற்படுத்தி விசாரணை செய்து எவ்வளவுக்கு எவ்வளவு விரைந்து அந்த முடிவுகளைச் செய்ய வேண்டுமோ அந்த வகையில் நீதி கிடைக்கின்ற வகையில் நாம் வேறு அமைப்புகளை சுதந்திரமான அமைப்புகளை டிரிபுனலாகவோ, அல்லது வேறு வகையிலோ அமைப்பதற்கு சட்டங்களைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் ஆக்கிரமிப்புகளைப் பற்றி நண்பர்கள் இங்கே சொன்னார்கள். நான் அதைப் பற்றி எல்லாம் விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் 3 அடி எடுத்து வைத்தால் 2 அடிகளில் அறக்கட்டளை நிலங்கள் மீது தான் நீங்கள் வைக்க முடியும். அது முஸ்லீம் அறக்கட்டளையாக இருந்தாலும் அல்லது இந்து அறக்கட்டளையாக இருந்தாலும் சென்னை நகரத்தில் இருப்பது மட்டும் அல்ல, தமிழகத்தில் இன்றைக்கு ஆயிரக்கணக்கான மட்டும் அல்ல, லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. அவைகளை எல்லாம் அறக்கட்டளை நிலங்களா என்பது கூட பதிவேடுகளில் இல்லாத அளவுக்கு

இன்றைக்கு பதிவேடுகள் மாற்றப்பட்டு இருக்கின்றன. எனவே, இன்றைக்கு மெட்ராஸ் ஆர்க்கீவ்ஸ் என்று சொல்லக்கூடிய அந்த புராதன எழுத்துக்கள், தஸ்தாவேஜ்களில் இருக்கக் கூடியதை அந்தத் துறையிலே புதிதாக ஆய்வு செய்து பழைய தஸ்தாவேஜ்களை எல்லாம் கண்டுபிடித்து ஏறக்குறைய 200, 300 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தஸ்தாவேஜ்களை எல்லாம் நீங்கள் ஆய்வு செய்து பார்த்தால் நிச்சயமாக அறக்கட்டளை நிலங்கள் எங்கே இருக்கின்றன, கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் எவை என்பதை எல்லாம் நீங்கள் கண்டுபிடித்து, அதை கண்டுபிடிப்பது இந்த அரசின் கடமை அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றவும், ஸ்ட்ரெய்ட் சேல் என்று சொல்லக் கூடிய அளவுக்கு இந்தத் துறையினுடைய அனுமதி இல்லாமல் சட்டத்திற்குப் புறம்பாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் கோவில் நிலங்கள் பாராதீனம் செய்யப்பட்டு இருக்கின்றன. எனவே பாராதீனம் செய்யப்பட்ட அந்த கோவில் நிலங்களை எல்லாம் மீட்பதற்கு, நீண்ட கால குத்தகை என்ற அடிப்படையில் 99 ஆண்டுக்கு விடப்பட்ட கோவில் நிலங்களை சுவாதீனம் எடுப்பதற்கும், அந்த குத்தகையை எல்லாம் ரத்து செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அண்மையில் கூட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் ஒரு நீண்ட கட்டுரை வந்தது. மதுரவாயிலில் இருக்கக் கூடிய கோவில் குறித்த மகத்தான ஒரு உண்மை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் ஓரே ஒரு உண்மை. இத்தகைய உண்மைகள் நாடு முழுவதும் நிறைந்து இருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் கண்டுபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**14-05 மணி**

பொதுவாக நம்முடைய கோவில்கள், நதிகள் என்று சொல்லக் கூடிய அளவுக்கு நதிகளைச் சுற்றி நதிக்கரைகளிலே நம்முடைய நாகரீகம் வளர்ந்து இருக்கிறது. அதே நேரத்தில் கோவிலைச் சுற்றி நம்முடைய நாகரீகம் வளர்ந்து இருக்கிறது. பாலாற்று நாகரீகம் பாலாற்றுக் கரையிலே இருக்கிற கோவில்கள், காவேரி நாகரீகம் காவேரிக் கரையிலே இருக்கிற கோவில்கள், வைகை கரையில் இருக்கிற கோவில்கள், பொருனை நதிக்கரையில் இருக்கிற கோவில்கள், எழிலம் ஆற்றுக் கரையில், மணிமுத்தா நதி, கோமுகி நதி போன்ற நதிகளின் கரைகளில் இருக்கிற கோவில்கள் என்று வரிசைப்படுத்தி அவைகளை எல்லாம் நாம் முறையோடு ஆய்வு செய்து அழிந்து விட்ட கோவில்கள் எவ்வளவு? இன்றைக்கு இருக்கிற கோவில்கள் எவ்வளவு? எதற்கு நாம் அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பதையெல்லாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன. என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையிலே





பாலாற்றங்கரையின் நாகரீகத்தின் அடிப்படையிலே உருவாக்கப்பட்ட அந்தக் கோயில்கள் இன்றைக்கு முற்றிலும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. எங்களுடைய வாணியம்பாடி தான் பாலாறு தமிழகத்திற்குள் நுழைகின்ற முகத்துவாரம் என்று சொல்லக் கூடிய அளவிற்கு இருக்கக் கூடிய ஒரு ஊர். அங்கு தான் பாலாற்றின் நாகரீகத்தினுடைய தொடக்கம் என்று சொல்கிறார்கள். அங்கே ஒரு மிகப் புராதனமான, பல்லவர்கள் காலத்திற்கு முந்தைய ஒரு கோயில் இருக்கிறது. அதிதீஸ்வரர் கோயில் என்று சொல்கிறார்கள். ஆண்டவனே அதிதியாக வந்தான்; ஆனால் அங்கே இருக்கின்ற அந்தப் பகுதியினுடைய அழகைக் கண்டு அதிதியாக வந்தவன் அங்கேயே தங்கி விட்டான் என்கிற அளவிற்கு சொல்லப்படுகிற ஒரு புராதனமான கோயில் அது. அந்தக் கோயிலுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, அதைத் திருப்பணி செய்வதற்கு அரசு உரிய மானியங்களை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆம்பூரிலே இருக்கின்ற கோயில்கள், பள்ளிகொண்டான் கோயில் என்று ஒன்று இருக்கிறது. பள்ளி கொண்ட பெருமாள் எழுந்தருளியிருக்கிற கோயில் பள்ளி கொண்டான் கோயில். இந்தக் கோயில்களெல்லாம், காஞ்சீபுரம், சதுரங்கப்பட்டினம் வரையிலே, முக்கியமான கோயில்களாகக் கருதப்படுகின்றன. எனவே, பாலாற்றங்கரையிலே இருக்கின்ற இந்தக் கோயில்களையெல்லாம் கணக்கிலே எடுத்து, அவைகளைப் பழுதுபார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே, திருவெட்டீஸ்வரன் கோயில் பற்றி ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அது என்னுடைய தொகுதியைச் சார்ந்தது. நான் திருவெட்டீஸ்வரன் கோயிலுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்து இருந்தேன். என்னிடத்திலே என்னுடைய தொகுதி மக்கள் வேண்டினார்கள் ஆறுமுகசாமி சந்நிதி மிகவும் பழுதடைந்து இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்துச் சென்று இருந்தேன். திருவெட்டீஸ்வரன் கோயிலிலே இருக்கிற குளத்திலே ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டக் கூடாது என்பதற்காக இங்கே வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருந்தார்கள். யார் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டுகிறார்களோ, எனக்குத் தெரியாது. அப்படி கட்டுவதாக ஒரு கற்பனை செய்து கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறார். தயவு செய்து, இந்த மாதிரி விவகாரங்களிலே கேட்டுக் கொள்வது, ஒரு பத்திரிகை கூட இதைக் கொச்சைப்படுத்தி எழுதியிருந்தது. அந்த நிலங்களில் எல்லாம் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டுவதற்கு லத்தீப் முயல்கிறான், என்று. லத்தீப்புக்கு இதிலே என்ன இருக்கிறது? லத்தீப்பிடம் கோரிக்கை வந்தது. கோரிக்கையின்படி அமைச்சரை அழைத்துச் சென்றேன். ஆறுமுகசாமி சந்நிதியை அவர்கள் பழுது பார்த்தார்கள் அந்தக் குளத்திலே தகாதவர்களெல்லாம்

D
V211,31'N90
N90.2712
143805

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 11

இரவு நேரங்களிலே தகாத காரியங்களை நடத்துகிறார்கள். கோயில் சாந்நித்தியமும் புனிதமும் அதிலே கெடுகிறது என்பதாக அங்குள்ள மக்கள் என்னிடத்திலே சொன்னார்கள். அமைச்சர் அவர்களிடத்திலே நான் சொல்லி, அவர்களை அழைத்துச் சென்றேன். அதற்காக பத்திரிகையிலே இப்படி எழுதுகிறார்களே, யார் இவர்கள்? இவர்கள்தான் அந்த நிலத்தை ஆக்கிரமித்து இருப்பவர்கள். இவர்கள் அந்த நிலத்திலேயிருந்து வருகிற வருமானத்தையெல்லாம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிற கொள்ளையர்கள். அவர்கள்தான் இப்படி எழுதியிருக்கிறார்கள். மேலும், இந்து முன்னணிக்காரர்களும், ஆர். எஸ். எஸ். காரர்களும் என்ன சொல்கிறார்கள் என்றால், இதற்கு விரோதமான நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். என்ன நோக்கம் என்று சொன்னால், இப்படி சொன்னால் லத்தீப் பயந்து விடுவான் என்று நினைக்கிறான். லத்தீப்பைப் பற்றி இவர்களுக்குத் தெரியாது. ஆயிரம் எதிர்ப்புகள் வந்தாலும் நல்லது என்று எதை நினைக்கிறானோ அதைச் செய்தே தீருவேன். எனவே, என்னுடைய தொகுதியிலே இருக்கிற திருவெட்டீஸ்வரன் கோயிலைப்பற்றி என்னிடத்திலே சொல்லாமல் அவர்கள் நேரடியாக வந்து இங்கே சொல்ல முடியுமா? திருவெட்டீஸ்ரன் கோயில் குளத்தில் அவர்கள் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டுகிறார்களா? அதிலும் குளத்திலே கட்டுவார்களா? சிந்திப்பதற்கும் ஒரு தெளிவு வேண்டாமா? அந்தக் குளத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமென்பதுதான் நோக்கமே தவிர, வேறல்ல. அதிகாரிகளெல்லாம்கூட வந்திருந்தார்கள். அமைச்சர்கள் வந்திருந்தார்கள். அதற்கும் பத்திரிக்கைகள் எழுதுகின்றன. எல்லாப் பத்திரிகைகளையும் நான் சொல்லவில்லை. ஒரு பத்திரிக்கை எழுதியிருக்கிறது. ஆகையால் அந்தப் பத்திரிக்கை பற்றி நான் காமெண்ட் அடிக்க விரும்பவில்லை. இப்படித்தான் நாடு உருவாகிவிட்டது. பத்திரிகைகள் என்று சொன்னால், சில பத்திரிகைகள் இப்படித்தான் எழுதுவது, இப்படித்தான் நடப்பது என்ற முடிவிற்கு வந்திருக்கும்போது I don't care அவைகளைப்பற்றியெல்லாம் நான் கேர் பண்ணுவது இல்லை. இன்றைக்கு அதற்கான வெட்டுத் தீர்மானம் இங்கே வந்திருக்கிற காரணத்தால் நான் இதைப்பற்றிச் சொல்கிறேன். அந்தத் திருவெட்டீஸ்வரன் கோயிலைப் பற்றி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் கோமளீஸ்வரன் கோயில் என்று ஒரு கோயில் இருக்கிறது. அதுவும் ஒரு மிகப் பெரிய கோயில்.......... (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Kindly take care of the Assembly.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டிக்கொண்டபோதே நான் பேசாமல் உட்கார்ந்து



1990 ஏப்ரல் 11] [திரு. எம். அப்துல் லத்தீப்]

இருக்க வேண்டும். முடித்துவிடுகிறேன். அந்தக் கோமளீஸ்வரன் கோயிலையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக, கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட்மெண்டில் இந்த இந்து ரிலீஜியஸ் என்டொவ்மெண்ட் இருக்கிறது. அவர்களிடத்திலேதான் வஃக்ப் துறையும் இருக்கிறது. கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட்மெண்டில் இந்த என்டோவ்மென்ட் இருக்கும்போது இந்தத் துறையாலே, இந்தமாதிரி எவ்வளவு கோயில்கள் இருக்கின்றன என்று முழு கவனத்தையும் அவர்களால் செலுத்த முடியுமா ? வஃக்ப் துறையையும் அதிலே இணைத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையிலே நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வேன்.

14–10 மணி

இன்னொன்றையும் நான் சொல்லிக் கொள்கிறேன். வணிக வரித்துறை என்ற ஒரு பெரிய துறையுடன் இந்து சமய அற நிலையத் துறையும், வஃக்ப் வாரியமும் இணைக்கப்பட்டு இருக்கின்றன. இந்து சமய அறநிலையத் துறை ஒரு பெரிய துறையாக இருக்கின்றது. வணிகவரித் துறை பெரிய துறை. ஆகவே இவைகளோடு வஃக்ப் வாரியமும் இருப்பதால் எந்தக் காரியமும் சிறப்பாக நடைபெற முடியாது. (மணியடிக்கப் பெற்றது) இந்த வேலையும் நடக்கவில்லை. அந்த வேலையும் நடக்கவில்லை. அப்படிப்பட்ட குறை இருக்கிறது. ஆகவே வஃக்ப் வாரியத்தை, சமூக நலத்துறை போன்ற சிறிய துறைகளோடு இணைத்துவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இந்துசமய அறநிலையத்துறையும் சிறப்பாக செயல்படும், வக்ப் வாரியமும் சரியாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சரியான கண்காணிப்பும் இருக்கும். அறக்கட்டளை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், அறக்கட்டளை சொத்துக்களைப் பொறுத்தவரையில், ஒரு காம்ப்ரஹென்சிவ் பில் கொண்டுவந்தால், இந்தத் துறை செம்மையாக செயல்படும் என்பதைக்கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேரம் இல்லாத காரணத்தால் ஒரு சில கருத்துக்களை மட்டும் கூற விரும்புகிறேன். தமிழகத்தில், புறக்கணித்ததைப் போல எங்கள் மாவட்டம் இன்று நடந்துகொண்டிருக்கிறது. எங்கள் ஊரில் உள்ள திருவட்டாறில் உள்ள கோயில் அப்படி இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எங்கள் திருவட்டாறு கோயிலுக்கு வந்திருந்தார்கள். முதலில் 1811 ஆம் ஆண்டுக்கு முன்னால், அந்தக் கோயில்கள் எல்லாமே கரைக்காரர்கள் கையில் இருந்தது. கர்னல் மன்றோ காலத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தார்கள் இரவோடு இரவாக அந்தக்கோயில் சொத்துக்களை எல்லாம் ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்குக் கீழே கொண்டுவந்து விட்டார்கள். அப்படியே 1922 ஆம் ஆண்டுவரை ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் தான் இருந்தது. மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டது. 1922 ஆம் ஆண்டிலேயே கேரளாவைச் சேர்ந்த கிருஸ்தவ சகோதரர்களுக்கு

அங்கே வேலை கிடைக்காததால், தனியாக இதற்கு ஒரு தேவஸ்வம் போர்டு உண்டு பண்ண வேண்டுமென்று நினைத்து, திருவிதாங்கூர் அரசு 1922 ஆம் ஆண்டிலே தனியாக ஒரு தேவஸ்வம் போர்டை உண்டு பண்ணினார்கள். அதிலேயிருந்து தேவஸ்வம் போர்டுக்கு எத்தனை ரூபாய் மானியம் கொடுக்க வேண்டுமென்று நினைத்தபோது, ரெவின்யூ வருமானத்தில் 40 சதவீதம் அளவுக்கு சொத்துக்கள் இருந்ததாகவும், 40 சதவீதத்திற்கு இணக்கமாகக் கொடுக்கவேண்டுமென்று எண்ணி கொடுத்து வந்தார்கள். அதுவும் போதாது என்றால் கூடுதலாக, மொத்தமாக அரசாங்கத்திலிருந்து கூடுதலாகச் செலுத்த வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். 1956 ஆம் ஆண்டு அவைகள் தமிழகத்தில் இணைந்தபோது அதைக் கணக்கிட்டுப் பார்த்து மக்கள் தொகை அடிப்படையிலும் நமக்கு 13½ லட்சம்ரூபாய் கொடுத்தார்கள். இன்றும் அந்த ரூபாய்தான் கொடுத்துவருவதால், அங்கே உள்ள ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லை. இதில் ஒரு கோயில் கூட விலக்கு இல்லை. அங்கே பல கோயில்களுக்கு விளக்குகள் போட பணம் இல்லை. சுசீந்திரம், கன்னியாகுமரி போன்ற 1—2 கோயில்கள் தவிர, மற்ற கோயில்கள் மிக மோசமாகத்தான் இருக்கின்றன. வறுமைக்கோட்டுக்குக் கீழே பல கோயில்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்றன. அந்த ஏழைக் கோயில்களில் பணியாற்றும் ஊழியர்கள் எப்படி சம்பளம் வழங்கமுடியும் ? தமிழகத்தில் உள்ள பல கோயில் ஊழியர்களுக்கு இருக்கின்ற வசதிகள் அங்கே கொடுக்க முடியவில்லை. ஆகவே அத்தகைய கோயில்களுக்கு அரசின் மானியம் வழங்கப்பட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். எத்தனையோ நல்ல காரியங்கள், திருப்பணிகள் செய்கிற இந்த அரசாங்கம், கன்னியாகுமரி மாவட்டத்தை மனதில் கொண்டு, அங்கேயுள்ள ஏழை சாமிகளுக்கு, ஏழை கோயில்களுக்கு எல்லாம் உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய ஊர் காடுகள் நிறைந்த பகுதி. அந்தக் காடுகளில் உள்ள தடிகள் கள்ளத்தனமாக வெட்டப்படுகின்றன. அதற்கு வேண்டிய தடுப்பு ஏற்பாடுகளைச் செய்வதோடு, அந்தக் காடுகளுக்கு வேலி போடவேண்டும். மலைகளை சர்வே பண்ணி வேலி போடும்படி கேட்டுக் கொள்கிறேன். அங்கே நிறைய மரங்கள் காய்ந்து, சாய்ந்து கிடக்கின்றன. தமிழகம் முழுவதும் பல காடுகளில் மரங்கள் சாய்ந்து கிடக்கின்றன, பட்டுப் போய்க் கிடக்கின்றன. அப்படிப்பட்ட மரங்களை ஏலம் போட்டால் நிறைய பணம் வரும். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

14-15 மணி

திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளை சம்பந்தமான மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்திலே ஒரு இந்துக் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை இன்று தனி நபர் அனுபவித்து வருகின்ற செய்தியை நீங்கள் இந்தக் குறிப்பில் அறிவித்திருக்கிறீர்கள். அந்தத் தனி நபர் எத்தனை ஆண்டுக்காலமாக அப்படி அந்த நிலத்தை அனுபவித்து வந்தார் என்ற விவரக் குறிப்பு இங்கே தரப்படவில்லை. சிதம்பரம் சபா விநாயகர் கோயில் நிலத்தை ஒரு தனியார் இதுவரையில் அனுபவித்து வந்திருக்கிறார் என்றால் அவர் எத்தனை ஆண்டு காலம் அதை அனுபவித்து வந்தார் என்ற விவரத்தைத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதைக் கண்காணிக்கின்ற வகையில் எல்லாத்தரப்பு மக்களையும் கொண்ட ஆலோசனைக் குழுவை அமைக்கவேண்டும். அது வெறும் அறநிலையக் குழுவாக மட்டும் அல்லாமல் எல்லாத்தரப்பு மக்களையும் கொண்டதொரு குழுவாக அமைத்து அந்தக குழுவின் மூலமாக கோவில் நிர்வாகத்தைக் கண்காணிக்கின்ற அளவுக்கு சிறப்பாகச் செம்மையாகச் செயல்பட வேண்டுமென்ற கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

கோயிலுக்குரிய காலியிடங்களை அந்தந்தப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஏழை எளிய மக்களுக்கும் பொது மக்களுக்கும் பயன் அளிக்கின்ற வகையில் பள்ளிக்கூடங்கள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற சமூகப் பணிகளுக்குரிய கட்டிடங்கள் அமைக்க இலவசமாக அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் கோயில், மட நிலங்களைக் குத்தகை பார்க்கின்ற ஏழை, எளிய விவசாயிகளுக்கு சொந்தமாக்கவேண்டும் என்று நான் இங்கே வலியுறுத்திக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கேரளாவில் திரு. அச்சுதமேனன் அவர்களின் ஆட்சிக் காலத்தில் உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற சட்டத்தைக் கொண்டுவந்தது போல் இந்த அரசும் முன்மாதிரியாக அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன். ஏழை, எளிய விவசாயிகளுக்குக் குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொகையைக் கொண்டு தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துக் கோயில்களின் நிர்வாகத்தையும் செம்மையாக நடத்த முடியும் என்ற கருத்தை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீரங்கம் கோவிலிலே தணிக்கை செய்வதற்காக வருகை தந்து இருந்த தணிக்கையாளர் தூக்கிலே தொங்கவிடப்பட்டார் என்ற செய்தி தமிழகம் முழுவதும் அறிந்த உண்மை. அந்தத் தணிக்கையாளருக்கு அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதற்கு என்ன காரணம்? அது ஒரு வேளை அந்த நிர்வாகத்தில் ஏற்பட்ட கோளாரைக் கண்டுபிடிப்பதற்காக அவர் மேற்கொண்ட

முயற்சிக்காக இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதா? அல்லது ஒருவேளை வேண்டுமென்றே பழி வாங்கப்பட்டாரா என்ற விவரத்தை அரசின் வாயிலாகத் தரவேண்டும். இதற்கென்று ஒரு தனிக் குழுவை நியமனம் செய்து அதை இங்கே தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் முழுவதும், குறிப்பாகச் சொன்னால் தஞ்சை மாவட்டத்தில் உள்ள முத்துப்பேட்டை கோயிலுக்குச் சொந்தமான ஒரு பஸ், அதாவது மாணவ மாணவிகளை ஏற்றிச்செல்கிற பஸ் இயங்காமல் இருக்கிறது. ஓராண்டு காலமாக அது செயல்படாமல் இருக்கிறது. அதை இயக்க ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருக்கோயில்களிலே பணிபுரிகின்ற பணியாளர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொளகிறேன்.

14-20 மணி

தமிழகத்திலே உள்ள திருக்கோயில்கள் விவகாரத்தை இங்கே நிறைய உறுப்பினர்கள் தெளிவுபடுத்தினார்கள். தமிழகத்திலிருந்து சில சாமிகள் வெளிநாடுகளுக்கு பயணம் செய்தார்களே, விமானம் ஏறிச் சென்று பயணம் செய்த அந்த சாமிகள் எப்போது திரும்பி வருவார்கள்? இல்லை திரும்பி வருவதற்கான ஏதாவது ஆயத்த ஏற்பாடுகள் உள்ளதா என்பதைத் தெளிந்த கருத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மேலும் திருக்கோயிலுக்கு தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு 18 சதவிகிதம் ஆலய வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும் என்ற கருத்தினை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக எனது தொகுதியில் உள்ள வெங்கனூரில் ஒரு திருக்கோயில் உள்ளது. அந்த திருக்கோயில் சரியான முறையில் இயங்காமல் இருக்கிறது. அதற்கு சரியான நிதி நிலைமை இல்லாத காரணத்தினால் அந்தக்கோயில் பாழடைந்து இருக்கிறது. திருச்சி மாவட்டத்திலே ஸ்ரீரங்கம் தெரு அழகு அதாவது வெங்கனூர் அழகு என்ற சிறந்த கருத்தின் அடிப்படையிலே இயங்குகின்ற அந்தக்கோயிலுக்கு அரிய வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற கருத்தினைக் கூறிக்கொள்கிறேன். எனக்கு, கொடுத்த வாய்ப்பினுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை கடைசியாக ஒவ்வொரு தடவையும் அழைத்துத்தான் பேசுகிறேன். தயவு செய்து இரண்டொரு நிமிடத்திலே பேசி முடித்துக் கொள்கிறேன். இந்து



அறநிலையத் துறையின் சார்பாக மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

1398 ஆம் ஆண்டு பசலி என்று சொல்லக்கூடிய குத்தகைதாரர்களிடம் இருந்து கடந்த ஆண்டு அரசுக்கு வரவேண்டிய ரூபாய் 66.37 கோடி இன்னும் வராமல் இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். நம்முடைய அறநிலையத் துறையில் ஏராளமான இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், முதல் நிலை செயலர், இரண்டாம் நிலை செயலர், மூன்றாம் நிலை செயலர் எல்லாம் போட்டு செயல் படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு அரசு இந்த கோயில்களுக்கு வரக்கூடிய வருமானங்களை எல்லாம் அந்த அதிகாரிகள் செவ்வனே வசூல்செய்வார்களானால் அந்த தேவாலயங்களுக்கு இன்னும் ஏராளமான வளர்ச்சிப் பணிகளை செய்யமுடியும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டு கொள்ளவேண்டும்.

சிதம்பரத்திலே சபாவிநாயகர் கோயிலினுடைய சொத்துக்களை கணக்குப் பார்த்துக் கொண்டிருப்பதற்காக தனி வட்டாட்சி அலுவலர் ஒருவரும் அவர் கீழே உள்ள சில அதிகாரிகளும் இருக்கிறார்கள். இன்னும் எங்கெங்கெல்லாம் நிலம் இருக்கிறது. எவ்வளவு விலை மதிப்புள்ள நிலம் என்றெல்லாம் இன்றைக்குக்கூட கணக்குப்பார்க்க முடியாத நிலையிலே இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்த பணிகளை வேகமாக செய்யக்கூடிய இந்த இலாகா இப்போது சற்றுத்தாழ்ந்த நிலையில் போய்கொண்டிருப்பதை நினைத்து நான் வருத்தப்படுகிறேன். இன்றைக்கு கோயில்களுடைய சொத்துக்களை யாரோ அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சிதம்பரம் கோயிலுக்கு சொந்தமான ஏறக்குறைய 422 ஏக்கர் நிலத்தை கண்டுபிடித்து விட்டோம். ஆகவே அங்கே வேலை நடக்காமல் இல்லை. இன்னும் வேலை நடந்துகொண்டிருக்கின்றது. எவ்வளவு நிலம் கோயிலுக்குச் சொந்தமானவை என்று தெரியாமல் இருந்தது. இப்போது அந்த 422 ஏக்கர் நிலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டினுடைய கோயில்களுடைய சொத்துக்கள், அதாவது பொருள்களை எல்லாம், சிலைகள் எல்லாம் அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து போன்ற நாடுகளிலே எல்லாம் கடத்தி செல்லப்பட்டு அங்கே

வைத்திருப்பதாகவும் அவற்றை கண்டுபிடித்ததாகவும் சொல்கிறார்கள். அவர்களை காபிபோசா என்ற சட்டத்தின் வாயிலாக கைது செய்து சிறைச்சாலையில் அடைக்கவேண்டும் என்று தமிழக அரசு சட்டம் போட்டாலும், மத்திய அரசினுடைய உத்தரவை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே விரைவான முறையிலே, அப்படிப்பட்ட கோயில்களுடைய பொருள்களை, எடுத்தவர்கள் எப்படிப்பட்ட தன்மையில் உள்ளவர்களாக இருந்தாலும் அவர்களை கண்டுபிடித்து அந்த சொத்துக்களை மீட்பதோடு கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கோயில்களிலே பணியாற்றுகின்ற அரசு ஊழியர்கள், ஐந்தாவது ஊதியக்குழுவிலே சில விவரங்களைக் கேட்டிருந்தார்கள். அந்த ஊழியர்கள் 5 அம்ச கோரிக்கையை வைத்து இருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்து இருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்து இருக்கின்றார்கள். அங்கே வேலை செய்கின்ற அந்த ஊழியர்கள் ஏழைகளாகவும் வசதி வாய்ப்பு அற்றவர்களாகவும் இருக்கின்றார்கள். அவர்களைப் பரிவோடு கவனித்து அரசு ஊழியர்கள் என்னென்ன சலுகைகளைப்பெறுகின்றார்களோ அவைகளை எல்லாம் அவர்களுக்கும் வழங்கவேண்டும். அவர்கள் பணியில் இறந்தால் 40 ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டும். அவர்களுக்கு தீபாவளி போனஸ் போன்று மற்ற அரசு ஊழியர்களுக்கு என்னென்ன வழங்குகிறார்களோ அத்தனையும் வழங்குவதற்கு நீங்கள் தயவுசெய்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் உங்களுடைய குழந்தைகளைப் போல, அந்த முறையிலே அவர்கள் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு இருக்கின்றார்கள்.

**14.25 மணி**

அதே போன்று, ஆலயங்களில் இருக்கிற சொத்துக்களை, கணக்குகளை தணிக்கை செய்ய வருகிற அதிகாரிகள் நிர்வாகத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். அங்கே தணிக்கை செய்யும் போது ஆடம்பரமான லாட்ஜுகளை ஏற்பாடு செய்வதும், அவர்களுக்குத் தேவைப்படும் உபசரணைகளைச் செய்வதும் சரிதானா? இப்படி செய்வதால் கோயில்களில் என்ன தவறு நடைபெறுகிறது என்பதை உள்ளபடியே தணிக்கை செய்ய முடியாத துரதிருஷ்டவசமான நிலைமை பல்லாண்டுகளாக இருந்துகொண்டிருக்கிறது, ஏ.ஜி ஆடிட் என்று சொல்கிறார்களே, அதுபோல அரசு ஆடிட்டர்களை அவர்களோடு போட்டு தணிக்கை செய்தால்தான் தவறுகளைக் கண்டுபிடிக்க முடியும், என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து கொள்கிறேன்,



அடுத்து, ஏழை, தாழ்த்தப்பட்டவர்கள் பலபேரை இந்து கோயில்களில் பூசாரிகளாக நியமிக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள், முன்னாலே. அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதைக் கொண்டு வந்து, தாழ்த்தப்பட்ட மக்களையும், மலைவாழ் மக்களையும் கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, அறங்காவலர்கள் நியமனம் செய்யப்படுவதில்லை. ஒவ்வொரு பகுதியையும், ஒவ்வொரு தொகுதியையும் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி கோயில்களில் அறங்காவலர்களை நியமித்தால் தவறுகள் நிகழாமல் சிறப்பாக நடக்க வழிவகை ஏற்படும்.

இன்றைக்குப் பெரிய கோயில்களில் பூஜை செய்கின்ற பூசாரிகள் திருநீறு போன்றவற்றை தட்டுகளில் போட்டு கொடுக்கின்றபோது 10 ரூபாய், 100 ரூபாய் என்று தட்டில் வழங்கினால் தான் தங்களுக்கு சிறப்பு என்கிற எண்ணத்தில் அப்படி செய்கிறார்கள். இனிமேல் அப்படி போடாமல் எல்லோரும் காசை உண்டியலில் போடும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சென்னைக்குப் பக்கத்திலே, செங்கை அண்ணா மாவட்டத்தில் இருக்கிற மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயிலைப் பொறுத்தவரையில் அது தனி நபர்களின் கையில் இருக்கிறது. அங்கே பல்லாயிரக்கணக்கான பணத்தை அவர்கள் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆலயத்தை அரசு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி ஏராளமாக வருமானம் வருகிற கோயில்களில் உள்ள வருமானத்தை எடுத்து தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதிகளில் உள்ள கோயில்களுக்கு உதவி செய்யலாம். உதாரணமாக தேர்தல் காலங்களில் வாக்கு கேட்க போகும்போது அப்படிப்பட்ட பகுதிகளில் வசிக்கிற மக்கள் தங்கள் பகுதியில் கோயில் கட்ட முடியாமல் தாங்கள் கஷ்டப்படுவதால் கோயில் கட்டிக் கொடுத்தால்தான் வாக்களிப்போம் என்று சொல்கின்ற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையை அரசு மாற்ற வேண்டும். அதற்கு பெரிய தனியார் கோயில்களை எல்லாம் அரசு கையகப்படுத்தி, சட்டத்திலே எந்த இடர்பாடு வந்தாலும் அவற்றை எல்லாம் தூள்தூள் ஆக்கி நலிந்த கோயில்களுக்கு அவற்றின் வளர்ச்சிக்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். என் தொகுதியில் இப்படிப்பட்ட பல கோயில்கள் இருக்கின்றன,

அடுத்து, காஞ்சிபுரத்தில் ஒரு கோயில் இருக்கிறது. அந்த கோயிலுக்குச் சொந்தமான இடத்தை தனிப்பட்ட நபர்கள் சிலர் பிரித்து எடுந்து இருக்கிறார்கள் என்று இங்கே கூட சொன்னார்கள். இச்செயலை செய்தவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுத்து இப்படி செய்கின்றவர்களை அப்புறப்படுத்த வேண்மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நீண்ட நேரம் பேச விஷயங்கள் இருந்தாலும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கோரிக்கைக்கு இணங்க (சிரிப்பு), இத்துடன் என் உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு நன்றி. இப்போது பதிலுரை, மாண்புமிகு இந்து சமய-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள்,

14-30 மணி

மாண்புமிகு திரு. கே. பி. சுந்தசாமி: அவைத் தலைவர் அவர்களே, வெகு நேரமாகிவிட்டது. உறுப்பினர்கள் அனைவரும் பசியோடு இருப்பதை நானும் அறிவேன். ஆகவே 30 நிமிடங்களில் என்னுடைய பதிலுரையை முடித்து விட வேண்டுமென்று நான் கருதுகிறேன். ஆகவே சொல்ல வேண்டியதை சுருக்கமாகச் சொல்லிவிடலாமென்று நினைக்கிறேன். ஏனென்றால் இந்தக் கூட்டத் தொடரிலேயே அறநிலையத் துறை சம்பந்தமாக, காம்பரஹன்சிவ் பில் என்று சொன்னார்களே அதைப்போல சில பிரிவுகளை, சட்டத்தினுடைய சில பிரிவுகளை மாற்றி அமைத்து, அந்தத் துறையினுடைய பணிகள் மேலும் சரிவர நடக்க, கோவில் நிலங்களைப் பாதுகாக்க நிலங்களில் இருந்து வரக்கூடிய வருவாயை முறையாகப் பெற்றுக் கொள்ள இப்படிப்பட்ட நோக்கங்களோடு சட்டத் திருத்தம் கொண்டு வர இருக்கிறோம். அந்த நேரத்திலே இன்னும் சில கருத்துக்களை எடுத்து வைக்க முடியும். ஆகவே இன்றைக்குச் சொல்லப்பட்ட சில பிரச்சினைகளுக்கு என்னுடைய பதிலை எடுத்து வைப்பது முறையாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

முதலிலே ஐவர் குழு அறிக்கை. நம்முடைய தீட்சிதர் அவர்களும், இன்னும் சில உறுப்பினர்களும் அது பற்றிப் பேசினார்கள். திருக்கோவில்களிலே சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டும். சீரமைப்புப் பணிகள் நடைபெற வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டது. ஆட்சிக்கு வந்தஉடனே முதல்வர் சமயச் சான்றோர்களை எல்லாம் அழைத்துப்பேசி, அந்த ஆலோசனைக் கூட்டத்திலேயே



ஐவர் குழு உறுப்பினர்களையும் அறிவித்தார்கள், நம்முடைய தீட்சிதர் அவர்களுக்கு சில மனக்குறைகள் உண்டு. அது என்ன என்பது எனக்குத் தெரியும். இங்கே அவர்கள் சொல்லாவிட்டாலும்கூட, எங்கள் இருவருக்கிடையே ஒரு வைப்ரேஷன்—அவர் என்ன நினைக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அந்தக் குழுவை அமைத்தோம். அந்தக் குழு ஆங்காங்கே சென்று, பல்வேறு திருக்கோயில்களுக்குச் சென்று, ஆன்மீகச் சான்றோர்களை எல்லாம் சந்தித்து, பல விவரங்களைத் திரட்டி அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை மூடி மறைக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு நிச்சயமாக இல்லை. அதைப் பரிசீலிக்க வேண்டும். முறையோடு பரிசீலிக்க வேண்டும். குழு அமைத்தால் மட்டும் போதாது. அந்தக் குழு எவ்வளவு சிரமப்பட்டு அந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அந்த அறிக்கையை சட்ட மன்றத்திலே வைக்க வேண்டுமென்றால், இன்றைக்குக் கூடவைக்க முடியும். ஆனால் அதில் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறநிலையத் துறை பரிசீலிக்க வேண்டும். அதைப் போல வருவாய்த்துறை, சட்டத் துறை பரிசீலிக்க வேண்டும். அந்த அறிக்கையிலே காணப்படுகிற பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டுமானால் எந்த வகையிலே சட்டத் திருத்தங்கள் கொண்டு வரவேண்டுமென்று சட்டத் துறை எங்களுக்குக் கருத்து தெரிவிக்க வேண்டும். அதைப்போல இதிலே நிலம் சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால் வருவாய்த் துறையும் இது குறித்து சில கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே ஆய்வு நடந்தது. அனைத்துத் துறைகளும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அமைச்சர் அவைக்கு, ஐவர் குழுவின் அறிக்கை கொண்டு வரப்பட்டது. அமைச்சர் அவையிலே 3 அமைச்சர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு, பத்திரிக்கையிலே அது செய்தியாக வந்திருக்கிறது.— அறநிலையத்துறை அமைச்சர் போக்குவரத்துத்துறை அமைச்சர், உள்ளாடசித் துறை அமைச்சர் ஆகிய 3 அமைச்சர்கள் கொண்ட குழு, துறைகள் தெரிவித்த கருத்துக்களை எல்லாம் பரிசீலித்து, அந்தக் குழுவினுடைய அறிக்கை, அமைச்சரவை உட்குழுவினுடைய அறிக்கை அமைச்சரவைக்குத் தரப்பட்டிருக்கிறது. அநேகமாக வெகுவிரைவிலே, இன்னும் 10 நாட்களுக்குள்ளே, 23 ஆம் தேதி அமைச்சரவைக் கூட்டம் நடப்பதாக இருக்கிறது. அந்த அமைச்சரவைக் கூட்டத்திலே அந்த அறிக்கை, எங்களுடைய அறிக்கை, எங்களுடைய கருத்துக்கள், எங்களுடைய சிபாரிசுகள், எங்களுடைய பரிந்துரைகள் வைக்கப்பட இருக்கின்றன. அதற்குப் பிறகு அமைச்சரவை முடிவு எடுத்த பிறகு, ஐவர் குழுவினுடைய அறிக்கையும், அந்த அறிக்கைமீது அமைச்சரவை எடுத்த முடிவுகளும் நிச்சயமாக இந்த அவைக்கு அறிவிக்கப்படுமென்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளே—மே மாதம் 11 ஆம் தேதிவரை

கூட்டம் நடைபெறுவதாக இருக்கிறது இந்தக் காலகட்டத்திற்குள்ளே, நிச்சயமாக ஐவர் குழு அறிக்கையையும், அந்தப் பரிந்துரைகள்மீது நம்முடைய அமைச்சரவை என்னென்ன முடிவுகளை எடுத்திருக்கிறது என்பதையும் சேர்த்து அவையிலே நிச்சயமாக வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

14–35 மணி

இன்றைக்குக் காலையிலே இடுக்கன்குடி என்று நினைக்கிறேன், சாத்தூர் பக்கத்திலே. இடுக்கன்குடி என்று நினைத்துக்கொண்டு இருந்தேன். இருக்கன்குடி என்று சொல்கிறார்கள். அப்படியே வைத்துக்கொள்வோம். அங்கே கோவில் திருவிழாவையொட்டி 5 பேர் வெட்டிக் கொலை என்று செய்தி வந்து இருக்கிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் 7 பேர் கொலை என்று சொன்னார். ஐந்தாக இருந்தாலும், ஏழாக இருந்தாலும், அது தவிர்க்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட கலவரங்கள் அதுவும் கோவில் திருவிழாவையொட்டி ஏற்பட்டு இருக்கின்றது. வைகளை எல்லாம் தடுக்க வேண்டும். இதற்காக ஒரு குழு அமைக்கப்படும் என்ற அளவிலே காலையிலே முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள், இந்தப் பிரச்சினையிலே நானும் ஒரு கருத்தை எடுத்து வைப்பது இந்தப் பேரவைக்கு உதவிகரமாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

பரம்பரை தர்மகர்த்தாக்களை, பரம்பரை அறங்காவலர்களை ஒழிக்க வேண்டும் என்று நம்முடைய பழனிவேல் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தீட்சிதர் அவர்கள் அப்படி ஒழிப்பதற்கு என்ன அவசியம் வந்துவிட்டது என்று ஒரு எதிர் கேள்வியைக் கேட்டார்கள். நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் சொல்லி இருக்கின்றேன். பரம்பரை அறங்காவலர்களை ஒழிக்கின்ற எண்ணம், நோக்கம் இந்த அரசுக்கு அறவே இல்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லி இருக்கின்றேன். ஆனால் அதே நேரத்தில் பரம்பரை அறங்காவலர்கள் மட்டும்தான் கோவில்களைப் பொறுப்பேற்று நடத்த வேண்டும் என்ற நிலையை மாற்றி ஏனைய திருக்கோயில்களிலே எப்படி ஐந்து உறுப்பினர்கள் அறங்காவலர்களாகப் பொறுப்புக்குப் போடுகிறோமோ அதே போல ஒரு கோவிலிலே ஒரு அறங்காவலர் இருக்கும் இடங்களிலே அவரை அப்படியே வைத்துக்கொண்டு மேலும் 4 அறங்காவலர்களை அரசு நியமனம் செய்யக்கூடிய அளவுக்குச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவரப்படும் என்று நான் அறிவித்து இருக்கின்றேன். அது சட்டத் துறையின் ஆய்விலே இருக்கின்றது. நிச்சயமாக இந்தக் கூட்டத் தொடரிலே அந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும். அப்படிப்பட்ட கோவில்களிலே அறங்காவலர்கள் நியமிக்கப்படுவார்கள்.



குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் பக்கத்திலே பெரிய பாளையம் என்ற இடத்திலே பவானி அம்மன் ஆலயம் இருக்கின்றது. அங்கே பரம்பரை அறங்காவலர் இருக்கின்றார். அங்கு மிகச் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கு எந்தவிதமான குறைகளையும் நான் சொல்லமாட்டேன். நிர்வாகத்திலே சில குறைகள் இருந்தாலும் கூட இன்றைக்கு அந்தக் கோவிலின் முதலீடு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய். 50 கிலோ தங்கத்தை அவர்கள் சேர்த்து வைத்து இருக்கிறார்கள். அங்கு முறைகேடுகள் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

அதுபோல் திருவொற்றியூரில் இருக்கக்கூடிய தியாகராசர் கோவில் மிகப் பழமைவாய்ந்த கோயில்; மிகத் தொன்மை வாய்ந்த கோயில். அங்கேயும் பரம்பரை அறங்காவலர் இருக்கிறார். அங்கே முறைகேடுகள் அதிகமாக நடந்துவிட்டதாகத் தெரிகிறது. அதைவிட இன்னும் சிறப்பாக அக்கோவிலை நடத்த முடியும். ஆகவேதான் இப்படிப்பட்ட திருக்கோவில்களிலே பரம்பரை அறங்காவலர்களையும் வைத்துக்கொண்டு—நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், பரம்பரை அறங்காவலரை ஒழிக்கவேண்டுமானால் சட்டச் சிக்கல்கள் நிச்சயமாக ஏற்படும், வழக்கு மன்றத்திற்கு செல்வார்கள்; அது 10 அல்லது 12 ஆண்டுகள் வரை இழுத்துக்கொண்டு இருக்கும். ஆனால் ஆந்திராவிலே ஏற்கெனவே இருந்த பரம்பரை அறங்காவலர்களோடு மேலும் 4 பரம்பரை இல்லாத அறங்காவலர்களை நியமித்து அந்த விவகாரம் உயர்நீதி மன்றத்திற்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் எடுத்துச்செல்லப்பட்டு, 'கான்ஸ்டிடியூஷன்' பெஞ்ச் என்று சொல்லப்படுகின்ற ஐந்து நீதிபதிகள் ஏற்கெனவே அந்த வழக்கை விசாரித்து அந்த நியமனம் சரி என்ற அளவிலே தீர்ப்புக் கொடுத்துவிட்டார்கள். ஆகவே அந்த வகையிலே நாம் அதைச் செய்துகொண்டால் உடனடியாக எந்தவிதமான சட்டச் சிக்கலும் இல்லாமல், அது வழக்குமன்றத்திற்குப் போய் சிக்கிக் கொள்ளாது என்ற காரணத்திற்காக நாம் இப்படிப்பட்ட முறையைக் கடைப்பிடிக்கலாம் என்று கருதுகின்றேன்.

ஆனால் இருக்கன்குடியிலே ஒரு விநோதமான ஏற்பாடு இருக்கின்றது. இங்கே சொல்கின்றார்கள், இப்படிப்பட்ட பரம்பரை தர்மகர்த்தாக்கள், அறங்காவலர்கள் இருக்கின்ற கோவில்களிலே hereditary trustee with beneficiary rights; hereditary trusetee with bare rights நிர்வாகத்தை மட்டும் வகிக்கக்கூடிய அறங்காவலர்கள் சில கோவில்களிலும், ஆனால் அந்தக் கோவில்களினுடைய வருமானத்திலே பங்கு கொள்ளக் கூடிய அளவிலே சில கோவில்களிலும் அறங்காவலர்கள் இருக்கின்றார்கள். இருக்கன்குடியைப் பொறுத்தவரையிலும் சிக்கல்களுக்கு, தகராறுகளுக்கு எல்லாம் காரணம், நான் நினைப்பது அங்கே ஏதோ சாதிக் கலவரம் எப்படியோ தொப்பி வாங்கப்

போன இடத்தில் ஏற்பட்டது என்று இங்கே சொல்லப்பட்டது. என்றாலும் அதைவிட ஒரு ஆழமான காரணம் இருக்கக் கூடும் என்று நான் கருதுகின்றேன். அந்தக் கோவிலிலே கடந்த 10 அல்லது 12 ஆண்டுக்காலமாக-அதற்கு முன்பாகவும் இருக்கலாம் ஒரு பிரச்சினை இருந்து வருகிறது. யார் அந்தக் கோவிலுக்கு அறங்காவலராக இருப்பது என்பது அந்தப் பிரச்சினை. அந்தப் பகுதியிலே பூசாரிகள் இருக்கிறார்கள். முழுக்க முழுக்க ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தாலும் கூட அங்கு அறங்காவலர்கள் பூசாரிகள் என்று சொல்கிறார்கள். அவர் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று எனக்குத் தெரியவில்லை.

1ஃ-40 மணி

ஆனால், நிச்சயமாக ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர் கள் அல்ல. அதிலே ஒரு குழு—இரண்டு பேர்—ஒருவர் சங்கையா பூசாரி; இன்னொருவர் சேதுலிங்க பூசாரி. இவர்களுக்கு அந்தக் கோயிலினுடைய வருமானத்திலே ஒரு பங்கு இருக்கக்கூடிய அள விற்கு ஒரு திட்டம் இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு பேரும், ஆளுக்கு மூன்றாண்டுக்காலம் இருக்க வேண்டுமென்று சொன்னால், அந்த மூன்றாண்டுக் காலத்திற்குள்ளே அதிகாரத் திலே இருக்கக் கூடியவர்களைப் பயன்படுத்திக் கொண்டு, மூன் றாண்டு முடிவதற்குள்ளே அடுத்த குழுவினரைச் சேர்ந்த வர்கள் அந்தப் பொறுப்புக்கு வருவதற்கு முயற்சி செய்து, வழக்கு மன்றத்திலே வழக்காடுகிறார்கள் ஏறக் குறைய ஆண்டு ஒன்றுக்கு இந்தக் கோயிலினுடைய வரு மானத்திலேருந்து 15,20 இலட்சம் அவர்களுக்கு அந்தப் பங்கின் மூலமாகப் போய்ச் சேருகிறது என்று நினைக்கிறேன். அங்கு திட்டம் இருக்கிறது. அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு அவர்களாவது நல்ல வாழ்க்கை நடத்துகிறார்களா என்றால், இல்லவே இல்லை. அவர்களுடைய நிலைமையும் ஏழ்மையிலே தான் இருக்கிறது. அத்தனையும் அவர்கள் வழக்கு மன்றத்திலே கொண்டுபோய், ஒருவரோடு ஒருவர் மோதிக் கொண்டு செலவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

என்னிடத்திலே கூட அந்த விவகாரம் கொண்டு வரப்பட்டது. இந்தத் திருவிழாவிலே நானும் வந்து கலந்து கொள்ள வேண்டு மென்று அவர்கள் கேட்டார்கள். இந்த விவகாரத்தை நீங்கள் என்றைக்கு முடிக்கின்றீர்களோ, அன்றைக்கு வருகிறேன் என்று நான் சொல்லியனுப்பினேன், கோயில் பணத்தை ஒரு தனிப்பட்ட பூசாரி எப்படி எடுத்துக் கொள்ள முடியும்? அதற்காக ஏற்கனவே ஒரு திட்டம் இருந்தாலும் கூட, அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். ஆகவே, பணத்தை எடுத்துக் கொண்டாலும் கூட, இருவரிலே ஒருவர் கூட நன்றாக இல்லை. நல்ல நிலையிலே இல்லை, ஆகவே, இந்தத் திட்டத்தையும் மாற்றியமைக்க வேண்டும்; மாற்றியமைத்த பிறகு என்னிடத்திலே வந்து சொல்லுங்கள்,



ஏற்கனவே நான் கோயிலைப் பார்த்திருக்கிறேன், அமைச்சர் என்ற முறையிலே பார்த்திருக்கிறேன். ஆனாலும் திருவிழாவிலே வந்து கலந்து கொள்ள வேண்டுமென்ற .....

திரு. பெ. சீனிவாசன் : அமைச்சரவர்கள் சொல்வதைப் போல, இரு தலைமுறை தலைமுறையாக இந்த விவகாரம் இருந்து வருகிறது; கோயில் வருமானத்திலே இவ்வளவு பங்கு என்ற சட்டத்தை மாற்றி, அவர்களுக்கு இவ்வளவு மானியம் என்று ஃபிக்சட் ரேட்—இத்தனை பேருக்கு அந்தக் குடும்பத்திற்குப் பரம்பரையாக உண்டு என்று வைத்து விட்டால் கூட நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, அருமையான கருத்து. ஏதாவது ஒரு முறையிலே, இருக்கின்ற திட்டத்தை அங்கே மாற்றியமைக்க வேண்டும். அதை மாற்றி யமைத்தால்தான் இப்படிப் பட்ட கலவரங்களைத் தடுக்க முடியும் என்பது என்னுடைய கருத்து என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப்பிறகு இங்கே அறங்காவலர்கள் போடுவதைப் பற்றிச் சொன்னார்கள். ஏன் இன்னும் அறங்காவலர்களை நியமிக்க வில்லை என்றெல்லாம் இங்கே எடுத்துப் பேசப்பட்டது. அதற்கும் காரணம், இந்த ஐவர் குழுதான். ஒரு குழுவை நியமித்த பிறகு அந்தக் குழு, என்ன பரிந்துரை சொல்கிறதோ அதைப் பரிசீலனை செய்து அதை ஏற்றுக் கொள்வதா, ஏற்றுக் கொள்ள வேண்டாமா என்பதை முடிவு செய்வதற்கு முன்பே, அப்படிப் பட்ட நியமனத்தைச் செய்தால் அந்தக் குழு அமைத்ததற்கே அவசியமில்லை என்ற ஒரு நிலைமை ஏற்பட்டுவிடும்: அந்த குழுவிலே இருந்தவர்கள் சற்று மனத்தாங்கல் கொள்ளக் கூடும் என்ற காரணத்திற்காகத்தான் அந்தக் குழுவினுடைய அறிக்கை வரட்டும், அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு, அந்த அமைச்சருடைய முடிவு தெரிந்த பிறகு, அறங்காவலர்ளை நியமிக்கலாம் என்ற வகையிலேதான் கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது. இருந்தாலும் கூட, இந்த நேரத்திலே நான் ஒன்றை இங்கே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நம்முடைய ஆளுநர் அவர்கள்—ஆளுநருடைய ஆட்சி இங்கே இருந்ததே, அந்த நேரத்திலே, அறநிலையத் துறையில் சில நல்ல காரியங்களைச் செய்திருக்கின்றார்கள். அதில் இரண்டை மட்டும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல முடியும்,

அதில் ஒன்று, அப்பொழுது, கோயில்களிலே அறங் காவலர்கள் குழுவினுடைய Term of office முடிந்த உடனே இன்னொரு குழுவை அவர்கள் நியமிக்கவில்லை. அதற்கு முன்பிருந்த ஆட்சியிலே தக்கார்களை நியமித்தார்கள், அறங்

காவலர் குழு—ஐந்து பேர் கொண்ட குழு, அல்லது தக்கார் fit persons Political — fit person ஒரு கட்சியைச் சார்ந்தவர் களைத் தக்காராக நியமிக்கக்கூடிய அளவிலே பல கோயில்களிலே இருந்தது. ஆனால், ஆளுநர் செய்த ஒரு நல்ல காரியம், அறங் காவலர் குழுவையும் அவர் நியமிக்கவில்லை; political fit persons அரசியல் கட்சியைச் சேர்ந்த தக்காரையும் அவர் நியமிக்க வில்லை. official fit person என்ற ஒரு கோயிலிலே உள்ள செயல் அலுவலரை இன்னொரு கோயிலுக்கு fit person தக்காராக நியமித்து, இப்படியொரு நல்ல காரியத்தை அவர் செய்து தந்தார் என்று இந்த நேரத்திலே நான் என்னுடைய துறையினுடைய நன்றியோடு அந்தக் கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, இன்னொன்றையும் அவர் செய்திருக்கிறார். கோயில் நிலங்களை விற்பது சம்பந்தமான ஒரு கோப்பு அவருக்கு வந்தபொழுது, அங்கே எழுதியிருக்கின்றார், "Let the elected Government take a policy decision, till then, this may be kept pending" என்ற அளவிற்கு ஒரு குறிப்பினை எழுதியிருக்கின்றார். அந்தக் குறிப்பின் காரணமாக எத்தனையோ நிலங்கள்—கோயில் நிலங்கள் விற்கப்படாமல் தடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் நன்றிப் பெருக்கோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**14-45 மணி**

இன்னொன்று, இந்த கோயில் விவசாய நிலங்களை கோயி லுக்கே வைத்துக் கொள்வதா அல்லது விவசாயம் செய்கிற, குத்தகைதாரர்களுக்கு, விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுத்து விடுவதா என்ற ஒரு பிரச்சினை இங்கே எடுத்துப் பேசப்பட்டது. நம்முடைய பழனி சட்டமன்ற உறுப்பினர் பழனிவேல் அவர்கள், அத்தனை நிலங்களையும் பட்டா செய்து கொடுத்து விடுங்களேன் என்ற அளவிற்கு ஒரு கருத்தைச் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில் நான் இதிலே மிக அழுத்தமாக ஒரு கருத்தை கொண்டிருக்கிறேன். It is may personal opinion. கோவில் நிலங்கள் அவை கோயில் நிலங்களாகவே இருக்கட்டும். குத்தகைதாரர்களும் அப்படியே இருக்கட்டும். இரண்டு தலைமுறையோ, மூன்று தலைமுறையோ, ஐந்து தலைமுறையோ, அந்த சொத்து சொந்தச் சொத்து என்று இருக்காதே தவிர, யாரிடத்தில் குத்தகைக்கு இருக்கிறதோ, அவர்களே அதை அனுபவித்துக் கொள்ளட்டும். ஆனால், கொடுக்க வேண்டிய பணத்தை, கோயில்களுககு 25 சதவீதம் தான் கேட்கிறோம். முன்னால் 40 சதவீதமாக இருந்தது. அதற்கு பிறகு 25 சதவீதமாக மாற்றப்பட்டிருக்கிறது. வருகிற வருவாயில் 4,000 ரூபாய் என்றால் 1,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார் கள். இதுகூட எந்த ஆண்டில் வறட்சி இருக்கிறதோ, எந்த



ஆண்டில் விளைச்சல் இல்லாமல் இருக்கிறதோ, அந்த ஆண்டில் வசூல் செய்யாமல் இருக்கலாம். ஆனால் விளைச்சல் இருக்கிற ஆண்டுகளில் நிச்சயமாக இந்தத் தொகையை கொடுத்தாக வேண்டுமென்ற முறையில் நம்முடைய அரசு ஒரு முடிவெடுக்க இருக்கிறது. ஐவர் குழுவின் பரிந்துரைகளில் என்னென்ன சொல்லி யிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, இதிலே முடிவெடுக்க இருக் கிறோம். ஆகவே, நிலத்தை குத்தகைதாரர்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லவே இல்லை என்பதை மிகத் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

அதே நேரத்தில் யார் சாகுபடி செய்கிறார்களோ, அவர் களிடத்திலிருந்து நிலத்தை திருப்பி எடுத்து விட வேண்டுமென்ற எண்ணமும் எங்களுக்கு இல்லை. இன்றைக்கு மாரடோரியம் முடிந்துவிட்டது. வசூல் செய்வதைத் தள்ளி வைக்கச் சொல்லி யிருந்தார்கள். போன ஆண்டு நம்முடைய அரசு ஆணையிட்டு இதைச் சொல்லியிருந்தார்கள். அதற்குரிய காலம் மார்ச் மாதம் 30ம் தேதியோடு முடிந்து விட்டது. ஆனால் அது இருக்கும்போது கூட, கோயில் நிலத்தை வைத்துக்கொண்டு, கோயிலுக்குரிய பங்கை செலுத்தி விட வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல் படுகிறவர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் இந்த நாட்டிலே இருக் கிறார்கள். வருவாய் வந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, கோயிலுக்குச் சேரவேண்டியதைச் செலுத்தி விட வேண்டுமென்ற உயரிய எண்ணத்தோடு எத்தனையோ ஆயிரமாயிரம் விவசாயிகள் இருக்கிறார்கள். ஆனால், ஆங்காங்கு இருக்கக்கூடிய சில விவசாயிகள் அவர்களை Cultivating tenants என்று சொல்ல மாட்டேன், இடைத் தரகர்கள் இருக்கிறார்கள், அவர்கள் தான் இப்படி பாக்கி வைத்திருப்பதாகத் தெரிகிறது. இதை யெல்லாம் விசாரிக்க இருக்கிறோம். எது எப்படியிருந்தாலும் எந்த ஆண்டில் குத்தகை கொடுக்க வேண்டுமோ. அதை கொடுக் காவிட்டால் நிலத்தை வைத்துக்கொள்வதில் சிக்கல் ஏற்படலாம். முறையோடு கொடுத்து விட்டால் ஆண்டாண்டுக் காலத்திற்கு, எத்தனை தலைமுறைக்கு வேண்டுமானாலும் நிலத்தை அவர்களே வைத்துக்கொள்ளலாம். It is as good as owning the land என்ற அளவிலே சொல்லி, பட்டா கொடுக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை சற்று நிறுத்தி விட வேண்டுமென்று அவை உறுப் பினர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போல நகர்ப்புற நிலங்கள். எத்தனையோ கிரவுண்ட்ஸ், 100 கிரவுண்ட்ஸ், 200 கிரவுண்ட்ஸ் என்ற அளவில் ஆங்காங்கு ஆக்கிரமிப்பில் இருக்கிறது. வாடகை மிகக் குறைந்த வாடகை. அடி விலை வாடகை என்ற அளவில் அந்தக் காலத்தில் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். 25 ரூபாய், 50 ரூபாய் என்று உள்ள இடத்தில் பெரிய பெரிய கட்டடத்தை எழுப்பி இருக்கிறார்கள். ஒன்று, யார் அந்தச்

[திரு. கே.பி. கந்தசாமி] [1990 ஏப்ரல் 11

கட்டடத்தை எழுப்பியிருக்கிறார்களோ அவர்கள் அந்த நிலத்தை இன்றைக்கு இருக்கிற மார்க்கெட் விலையில் வாங்கிக்கொள்ள வேண்டும். அல்லது கட்டடத்திற்கான வாடகையை, அறநிலையத் துறையிலிருந்து என்ன வாடகை முடிவு செய்கிறார்களோ, அதைக் கொடுக்க வேண்டும். ஏதாவது ஒரு முறையில் இவைகளை எல்லாம் ஒழுங்கு படுத்த வேண்டியிருக்கிறது.

(14.50 மணி)

இங்கே காஞ்சிபுரம் பற்றி ஒரு பிரச்சினை வேகமாக எழுந்தது. எனக்கு அங்கே என்ன நடைபெற்றது என்று பரிபூரணமாகத் தெரியும், முழுமையாகத் தெரியும். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, போன ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆட்சிக்கு வந்த போது, அதிகாரிகளும், அ.தி.மு.க. கட்சிக்காரர்களும் சேர்ந்து 6, 7 ஏக்கர் நிலத்தை பங்கு போட்டார்கள். அதைப் பங்கு போட்டு எடுத்துக் கொண்டார்கள் என்று சொன்னபோது, உடனேயே இங்கே நம்முடைய ஆட்சி வந்தவுடனே, நான் இந்தப் பிரச்சினையை சட்டமன்றத்திலே சொன்னவுடனே குடிசைகளைப் போட்டார்கள். அறநிலையத் துறையிலேயிருந்து வழக்கு மன்றத்திலே வழக்கு தொடர்ந்தார்கள். எப்படியோ, அது முழுமையாக அந்த வழக்கு இங்கே துறைக்குச் சாதகமாகத் தான் வரவேண்டும். ஏன் என்றால் விதிகளின்படி, நடைபெறவில்லை. வேகவேகமாக ஆட்சி மாறியவுடனேயே எப்படியாவது முடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்திருக்கிறார்கள் ஆகவே வழக்கு மன்றத்திலே அது நிற்காது. இருந்தாலும் கூட என்றைக்கு வழக்கு மன்றத்திற்குப் போய்விட்டதோ, அதற்குப் பிறகு, அங்கே போடப்பட்டு இருக்கிற குடிசைகளை அகற்ற முடியவில்லை. நாங்கள் 5 மாதம், 6 மாதம் வழக்கு மன்றத்திலே அந்த வழக்கைப் போட்டும், ஒரு தீர்ப்பை வாங்க முடியவில்லை. உடனே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று நான் சொல்வதற்குக் கூச்சப்படவில்லை—திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே எங்களுடைய கொடியை ஊன்றிக் கொண்டு இன்னொரு 6 ஏக்கர், பக்கத்திலேயிருக்கிற இடத்திலே போய் அவர்கள் குடிசைகளைப் போடுகிறார்கள். அவர்களுக்கும் அங்கே இருப்பதற்கு சட்டப்படி, விதிப்படி உரிமை கிடையாது. நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் எங்களுக்கு ஒரு உறுதி மொழியைத் தந்தால், நீங்கள் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கே போட்டிருக்கிறார்களே, நாளைக்கே அந்தக் குடிசைகளை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். நாளை மறுநாளே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய போர்வையிலே இங்கே இன்னொரு 6 ஏக்கரிலே போட்டிருக்கிறார்களே, அதை நானே முன்னுக்கு நின்று, ஏனென்றால் அவர்கள் இருப்பதற்கும் உரிமை இல்லை, (குறுக்கீடு) சொல்லவேண்டுமானால் சொல்லுங்கள்.



1990 ஏப்ரல் 11]

*திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதைப் போன்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் யாராவது போட்டு இருந்தாலும் சரி, அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அந்த நிலத்தைக் கைப்பற்றியிருந்தாலும் சரி, அரசாங்கம் எந்த நடவடிக்கை எடுத்தாலும், நாங்கள் முழு ஒத்துழைப்புத் தருவோம். அப்படிப்பட்ட சமூக விரோதிகள் யார் என்று சொன்னாலும் சரி, நாங்கள் ஒத்துழைப்புத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : உறுப்பினர் உகம்சந்த் அவர்கள் புதிதாகச் சொல்வார்கள் என்று நினைத்தேன். இதைச் சொல்வதற்கு இடைமறிக்கவேண்டியதில்லை. நீங்கள் தந்துதானே ஆகவேண்டும். தரமுடியாது என்று சொல்ல முடியுமா? நான் கேட்பது உங்களுடைய கட்சிக்காரர்கள் தான் அங்கே போட்டிருக்கிறார்கள். அதை அங்கிருந்து அகற்ற முடியுமா என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

திரு. எஸ்.டி. உகம்சந்த் : துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தை நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். தவறு யார் செய்திருந்தாலும் சரி, அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுங்கள், நாங்கள் குறுக்கே வரமாட்டோம். நடவடிக்கை எடுக்கவேண்டிய இடத்திலே நீங்கள் இருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : I think I am not very clear to the Honurable member. நான் கேட்பது, நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு வழக்கு மன்றத்திலே நடந்து கொண்டிருக்கிறது. நீதிபதி ஏதோ ஒரு தீர்ப்பைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் கொடுக்கிறார்கள் என்பதை இங்கே நான் விவரமாகச் சொல்ல முடியாது. சொன்னால், அது கோர்ட்டை அவமதிப்பதாக ஆகிவிடும். நான் சொல்வதெல்லாம், நீங்கள் அந்த வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டு.............

திரு. எஸ்.டி. உகம்சந்த் : துணைத் தலைவர் அவர்களே, நீங்கள், நீங்கள் என்று சொன்னால், உங்களைக் குறிப்பதில்லை. (குறுக்கீடு), நாங்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நபர் யாராவது இருந்தால், தவறு செய்திருந்தால், நடவடிக்கை எடுக்க வேண்டிய இடத்திலே நீங்கள் இருக்கிறீர்கள், எடுங்கள். கட்சி அவர்களுக்கு ஆதவரவாக வராது என்ற உத்தரவாதத்தைத்தான் நான் தரமுடியுமே தவிர, இல்லை நீங்கள் பிரித்துக் கொடுங்கள் என்று சொன்னால், அதிகாரத்தை எங்களிடம் தாருங்கள் நாங்கள் பிரித்து விடுகிறோம்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : துணைத்தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் இவ்வளவு விரிவாகப் பேச வேண்டிய அவசியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஏன் என்றால், நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. ஏற்கனவே குடிசை போட்டவர்கள் அ.தி.மு.க. கொடியோடு குடிசை போட்டார்கள். இப்பொது குடிசை போட்டவர்கள் தி.மு.க. கொடியோடு போட்டு இருக்கிறார்கள். எனவே எந்தக் கொடி போட்டாலும், அந்தக் கட்சி ஆட்சியிலே இருப்பதை எண்ணிக் கொண்டு அந்தக் கொடியைப் போட்டு இருக்கலாம். இந்தக் கட்சி ஆட்சியிலே இருப்பதை எண்ணிக் கொண்டு இந்தக் கொடியைப் போட்டிருக்கலாம். எனவே அந்தக் கொடி போட்ட காரணத்தால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனால் வழக்கு ஏற்பட்டு, அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு உறுதி கொடுப்பாரா என்று கேட்கிறார்கள். அந்த உறுதியை அவர்களிடத்திலே கேட்கத் தேவையில்லை. ஏன் என்றால் நீதிமன்றத்திலே முடிவு வருகிற போது, இந்த அரசாங்கம் அதற்கு ஏற்ப நடவடிக்கையை எடுத்துக் கொள்ளும். (குறுக்கீடு).

14-55 மணி

திரு. டெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும்தான் பசிக்குது. அதாவது நீதிமன்றத்திலே அந்த வழக்கை உங்கள் கட்சிக்காரரிடத்திலே சொல்லி வாபஸ் வாங்கலாம். நீதிமன்றத்திற்குப் போனால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கிறீர்கள்.

சிவகாசியில் கே. கே. சுவாமி என்ற உங்கள் கட்சிக்காரர்—நகரசபை கட்டியிருக்கின்ற கழிப்பிடத்திற்குள்ளே அந்த செப்டிக் டாங்க் தனியாகக் கட்டியிருக்கிறார்கள்.—அந்த செப்டிக் டாங்க் மேலேயே வீடு கட்டியிருக்கிறார். நீங்கள் வேண்டுமானால் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். கே. கே. சுவாமி சிவகாசியிலே ரொம்ப முக்கியமானவர். அவர் ஏற்கனவே இரண்டு வீடுகள் புறம்போக்கில் கட்டியிருக்கிறார். அது தவறு. சிவகாசி நகரத்தினுடைய மையத்திலே ஒரு பெரிய கழிப்பிடம், பெண்கள் போகிற கழிப்பிடம், அந்தக் கழிப்பிடத்தினுடைய, செப்டிக் டேங்க் கழிவு தேங்குகிற குட்டையை மூடிய அந்த சிமெண்ட் கான்கிரீட்டை உள்ளடக்கி ஒரு பெரிய வீடு கட்டியிருக்கிறார்கள். அதைத் தயவு செய்து நீங்கள் குறித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். அது புதிய தகவல். ஆனால் ஒன்றை நான் சொல்ல விரும்புவது. காஞ்சிபுரத்தில் இன்றைக்கு எல். டி. பாங்க்குக்கு எதிரிலே அங்கு சாக்கடை நீர் செல்லுகின்ற பாதையில் இன்றைக்கு



அதை அடைக்கின்ற அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகக் கொடிக் கம்பமே பறக்கின்றது. சாக்கடை நீர் செல்லுகின்ற பாதையை அது அடைக்கின்றது. யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுங்கள்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இன்றைக்கு இங்கே அந்த உறுதிமொழியைத் தர அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் தயாராக இல்லை. ஆகவே வழக்கு மன்றத்திலே என்ன வருகிறதோ, அதைப் பார்த்துக்கொள்வோம். வழக்கு மன்றத்திலே என்ன தீர்ப்பு வருகிறதோ, அதைப் பார்த்துக் கொள்ளலாம்.

இன்னொன்று. இங்கே பேசிய உறுப்பினர் நம்முடைய பெரியசாமி என்று நான் கருதுகிறேன். தணிக்கை முறையைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இதிலே ஒரேயொரு சின்ன திருத்தம். தணிக்கை நடைபெறுகிறது. இங்கே அரசுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள்தான் அந்த தணிக்கையைச் செய்கிறார்கள். அவர்கள் அறநிலையத்துறையின் கீழ் இயங்குகிறார்கள். அங்கே குறைபாடு இருக்கின்றது. என்ன குறைபாடு இருக்கின்றது என்றால், தணிக்கை செய்த பிறகு, அந்த தணிக்கை அறிக்கையிலே என்னென்ன சொல்லப்படுகிறதோ, அதற்கு ‘Follow up action’ இல்லை. அதாவது ஒரு குறையை எடுத்துச் சொன்னால், அந்தக் குறை எப்படி வந்தது என்பதற்கு இதுவரை சரியான தொடர் நடவடிக்கை இல்லை. அதை இந்தத் துறை இன்னும் அதிகமாக, அதிலே கவனம் செலுத்தி, நிச்சயமாக அந்தத் தொடர் நடவடிக்கையை தணிக்கை செய்த பிறகு குறைகள் என்னென்ன இருக்கிறதோ, அவைகளைக் களைவதற்கு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர, இன்றைக்கு இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். ரூ. 6,55,75,000 தானே இங்கே மானியத் தொகை எழுப்பப்பட்டிருக்கிறது என்றும், அதிலேகூட, ரூ. 1 கோடி தானே போன ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகம் என்றும் சொன்னார்கள். இந்த மானியக் கோரிக்கையில் உள்ள தொகை கோயில்களின் திருப்பணிகளுக்காக அல்ல. கோயில்களின் ஏனைய செலவுகளுக்காக அல்ல. அரசாங்கத்திலிருந்து நமக்கு சில அதிகாரிகள் தருகிறார்கள். அவர்களுடைய ஊதியத்திற்காக. இதைத் தருகிறார்கள். அதுகூட முதலிலே அரசாங்கம் தந்துவிட்டு, பிறகு கோவில் வருவாயிலிருந்து நாம் அந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்தி வருகிறோம். இந்த மானியக் கோரிக்கை எதற்காக சட்டமன்றத்தினுடைய அனுமதிக்காக இங்கே வருகின்றது என்றால், நாங்கள் கோவிலிலிருந்து திருப்பிக் கொடுப்பதற்கு முன்பாக அரசிடமிருந்து நாம் அந்தப் பணத்தைப் பெறுகின்றோம்.

[திரு கே. பி.கந்தசாமி] [1990 ஏப்ரல் 11

அந்தப் பணத்தைப் பெறுவதற்காகத்தான் இப்போது மானியக் கோரிக்கைக்கு இங்கே அனுமதி பெறப்படுகின்றது. இது திருப்பணிகளுக்காக அல்ல. அந்த ஊதியத்திற்காக, அதிலேயும் கூட, இதற்கு முன்பு கொஞ்சம் அங்கே வாங்குவதற்கும், கொடுப்பதற்கும் 'கேப்' கொஞ்சம் குறைவாக இருந்தது. அதைக்கூட இப்போது நிறைவு செய்கின்ற வகையிலே திருக்கோயில் வருவாய் இந்த ஆண்டு கணிசமாகப் பெருகியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

15-00 மணி

இந்தக் கோயில் வருவாய் மூலமாக நான் ஏற்கெனவே பலமுறை ஆங்காங்கே பேசி, பத்திரிகைகளில் வந்திருக்கிறது ஆகவே அவை அனைத்தையும் திரும்பச் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன். இருந்தாலும் கூட பூஜைகள், திருப்பணிகள், ஏனைய சீரமைப்பு வேலைகள் இவைகள் தவிர சமுதாயப் பணிகளிலேயும், கல்விப் பணிகளிலேயும் நிச்சயமாக இந்தக் கோவிலினுடைய வருவாய் செலவிடப்பட வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அதற்கு நம்முடைய லத்தீப் அவர்கள் மாறுபட்ட கருத்து உடையவராக இருந்தாலும்கூட, நாம் அந்தக் கோவிலுக்கு வரக்கூடிய வருவாயிலேயிருந்து ஒரு பகுதியை நிச்சயமாக சமுதாயப் பணிகளுக்கு செலவிட்டு ஆகவேண்டும். எத்தனையோ கல்லூரிகளை நடத்தி வருகின்றோம். 7 கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் இப்படி பல்வேறு இடங்களில் கல்விச் சாலைகளை திருக்கோயில்கள் மூலமாக நடத்தி வருகின்றோம். இவைகளைக் கூட இன்னும் அதிகமாக நடத்திட வேண்டும் என்பது என்னுடைய ஆசை. பெரியார் மாவட்டத்திலே பன்னாரி மாரியம்மன் கோவிலிலே இருந்து வருகிற வருமானத்தில் அங்கே ஒரு மகளிர் கல்லூரி அமைத்திட வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. என்னுடைய எண்ணம் எல்லாம் அப்படிப்பட்ட பணிகளை இந்தத் துறை ஏற்றாக வேண்டும் என்பதுதான் நம்முடைய கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். முழுக்க முழுக்க செல்ஃப் பைனான்சிங் என்ற அளவிலே ஆரம்பிக்கப்பட்ட இப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு ஒரு 4 அல்லது 5 ஆண்டுகள் கழித்து கிராண்ட் கொடுக்கக் கூடிய ஒரு முறையிலே கல்வித் துறையும் எங்களோடு ஒத்துழைத்தால் நிச்சயமாக ஒரு கல்லூரி என்ன, 10, கல்லூரிகளை — பெரியார் மாவட்டத்திலே ஒரு கல்லூரியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்களே அந்த ஒரு கல்லூரி அல்ல, இரண்டு மூன்று ஆண்டுக் காலத்திலே தமிழ்நாட்டிலே 10 கல்லூரிகளை —தொடங்கி நடத்திட இந்த அறநிலையத்துறை முன்னுக்கு வரும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



1990 ஏப்ரல் 11] [திரு கே. பி. கந்தசாமி]

இதுபோன்ற சமுதாயப் பணிகளை—ஏற்கனவே முன்பு இந்த அரசு தமிழகத்தில் ஆட்சியில் இருந்தபோது பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தி இருந்தது. இன்றைக்கு நான் சுற்றுலாத் துறைக்கும் அமைச்சர் என்ற முறையிலே சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தப் பிச்சைக்காரர்கள் தொல்லை மிகக் கொடுமையாக அதிகமாக இருக்கிறது அதுவும் வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய பயணிகளுக்கு என்பது எனக்குத் தெரியும். அப்போது இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தியபோது ஓரளவு நாட்டிலே உள்ள பிச்சைக்காரர்களை ஒழிக்கின்ற நிலைமை ஏற்பட்டது அதற்குப் பிறகு மீண்டும் எப்படியோ வந்து விட்டது. நான் அறநிலையத் துறையின் மூலமாக, ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்து பேசியிருக்கிறேன். அறநிலையத் துறை மூலமாக இந்தத் திட்டத்தை ஏற்று நடத்தலாம் என்று கருதுகிறோம். எங்களிடத்திலே கட்டிடம் கூட இருக்கிறது. பழனியிலே ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த ஒரு விடுதியிலே இன்றைக்கு அங்கே யாருமே தங்காதபடி அப்படியே வேக்கன்டாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடத்திலே அவர்களைக் கொண்டு வந்து வைத்து வேலை கொடுத்து — அங்கே நிலம் இருக்கிறது, அந்த நிலத்திலே உழச் செய்ய வேண்டும் அல்லது வேறு ஏதாவது வேலை கொடுக்க வேண்டும். அப்படி வேறு ஏதாவது ஒரு வேலையை அவர்களுக்கு உருவாக்கித் தந்து இப்படிப்பட்ட பணிகளை தமிழ்நாடு முழுவதும் அறநிலையத் துறை மூலமாக எடுத்துச் செய்திட வேண்டும் என்ற திட்டம் எங்களுக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஒரு முக்கியமானப் பிரச்சினை, இந்தப் பிச்சைக்காரர்களை யார் பிடித்துக் கொண்டு வருவது? காவல் துறையைச் சேர்ந்தவர்கள் பிடித்துக் கொண்டு வந்தால் வழக்கு மன்றத்திற்குக் கொண்டு போகிறார்கள். வழக்கு மன்றத்திலே அவர்களை எங்கே அனுப்புவது என்று தெரியாமல் விட்டு விடுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆகவே இப்படிப்பட்ட ஒரு இடம் அறநிலையத் துறையிலே இருக்கிறது என்று தெரிந்தால் வழக்கு மன்றத்திலேயே அங்கேயே கொண்டு போய்ச் சேருங்கள் என்று சொல்லுவார்கள். ஆகவே அந்த முறையிலே காவல் துறையினுடைய ஒத்துழைப்போடு இந்தப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்தை இந்த அறநிலையத்துறை ஏற்று நடத்தி தமிழ்நாட்டிலே இரண்டாண்டுக் காலத்திற்குள்ளே எங்கேயும் பிச்சைக்காரர் இல்லை, பிச்சைக்காரரே தெரியாது என்று ஒரு நிலைமையை நாம் ஏற்படுத்தி விட முடியும் என்று நாம் நம்புகிறோம் என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு கே. பி. கந்தசாமி] [1990 ஏப்ரல் 11

ஒரே ஒரு பிரச்சனை இதிலே, யார் பிச்சைக்காரர்? Definition of a begger — ஒரு கோவிலிலே காவி உடை அணிந்து கொண்டு இருக்கிறவர் சந்நியாசியா, பிச்சைக்காரரா என்ற நிலைமை எழுந்தால் என்னைப் பொறுத்த வரையில் அதை டிபைன் பண்ண வேண்டுமென்றால் யார் பிச்சைக்காரர் who is a begger— என்ற அளவிலே இதற்கு ஒரு ..(குறுக்கீடு) நான் நினைக்கிறேன் காவி உடை உடுத்தி ஒரே இடத்திலே உட்கார்ந்துக் கொண்டு மற்றவர்கள் கொடுப்பதை ஏற்றுக் கொண்டால் அவர் சந்நியாசி. ஆனால் எழுந்து நின்று டிமாண்ட் செய்தால், எனக்கு 5 ரூபாய் கொடு, பத்து ரூபாய் கொடு என்று கேட்டு வாங்கக் கூடிய நிலைமையிலே ஒருவர் இருந்தால் அவர் பிச்சைக்காரர். He must b: removed to the Beggers Rehabilitation Home என்ற அளவிலே இதற்கு சில வரைமுறைகளை நாம் வகுத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை நாம் ஏற்று செயல்படுத்த முடியும் என்று நான் கருதுகிறேன். இதுபோன்று இன்னொரு முக்கியமான திட்டம் நான் ஏற்கெனவே சில இடங்களிலே சொல்லியிருக்கிறேன். தமிழ்நாடு முழுவதும் deserted women, dese ted children என்ற முறையில் அநாதை, ஆதரவற்ற தாய்மார்கள், இளம்பெண்கள், கைம்பெண்கள், விதவைகள் போன்றோரைப் பற்றியது. நான் சிதம்பரனார் மாவட்டத்திற்கு சென்றிருந்தபோது அங்கே உள்ள சமுதாய நலத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளை அழைத்துப் பேசினேன். இந்த மாவட்டத்தைப் பொறுத்த மட்டிலே எத்தனை பேர்கள் உள்ளார்கள் என்று கேட்டேன். ஐந்தாயிரம் பேர்கள் இருக்க முடியும் என்று சொல்லுகிறார்கள்.

**15.05 மணி**

அப்படியானால் தமிழ்நாடு முழுவதும் லட்சக் கணக்கில் இருந்திருக்க வேண்டும். இவர்களுக்கெல்லாம் மறுவாழ்வு அளிக்கக்கூடிய நேரத்திலே, இங்கிலாந்து நாட்டிலே இருந்து இன்றைக்கு இங்கே வந்து செய்து கொண்டிருக்கிறார்கள். பழனிக்கு அருகிலே வத்தலக்குண்டு பகுதியிலே, 17 கிராமங்களில், '' ஜேம்ஸ் சிம்டன் '' என்பவர் உருவாக்கி இருக்கிறார். அவருடைய பொறுப்பிலே, 1,500 அநாதைக் குழந்தைகள் இருக்கிறார்கள். ஏறத்தாழ 500-க்கும் மேற்பட்ட தாய்மார்கள், ஆதரவற்ற இளம் பெண்கள், விதவைகள் இருக்கிறார்கள். அங்கே ஒரு நல்ல குடும்பப் பாசத்தை அவர் உருவாக்கி, அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். நான் அங்கு போய் பார்த்தேன். என்னை அந்தத் திட்டம் மிகவும் கவர்ந்துவிட்டது. இங்கே, கருணை இல்லம், அன்பு இல்லமாக மாற்றப்பட்டிருப்பதாகச் சொல்லி, அதை மீண்டும் கருணை இல்லமாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. இங்கே இருக்கின்ற அதை '' அநாதை இல்லம் ''என்று மாற்றினார்களே தவிர. அதில் அன்பும் இல்லை, அது இல்லமாகவும் இல்லை. நான், பழனியிலே 250 அநாதைக் குழந்தைகளை அழைத்துப் பேசி



1990 ஏப்ரல் 11] [திரு. கே. பி. கந்தசாமி]

னேன். ஆகவே, அன்பும், இல்லமும் ஆக இருக்கக் கூடிய அளவிலே, விதவைத் தாய்மார்களையும், குழந்தைகளையும் சேர்த்து, அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை, '' ஜேம்ஸ் சிம்டன் '' என்பவர் வத்தலக்குண்டு பகுதியிலே செய்துகொண்டு வருகிறாரே, அந்தப் பணியைப் போன்றதொரு திட்டத்தை தமிழ்நாடு முழுவதிலும் செய்திட திட்டமிடப்பட்டிருப்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, விக்கிரகங்களைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஐகான் என்பதைப் பற்றி தீட்சிதர் அவர்கள் இங்கே சொன்னார்கள் என்று நினைக்கிறேன். திருவாரூரிலே, ஏறத்தாழ 1,500 விக்கிரகங்கள் அறையிலே பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. வாரத்திலே ஒரு நாள், செவ்வாய்க் கிழமையோ, வெள்ளிக்கிழமையோ தான் அங்கு பூஜை நடக்கிறது. எல்லா விக்கிரகங்களையும் சேர்த்து , தீபம் காட்டி விடுகிறார்கள். நானும் அங்குபோய் பாாத்தேன். தீட்சிதர் அவர்களோடு ஒத்தக் கருத்தை உடையவன் நான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே அவை விக்கிரகங்களாகவும் இல்லை ; ' ஆண்டிக் ' பொருட்களாகவும் இல்லை ; ஒன்று அப்படி இருக்க வேண்டும் ; இல்லை, இப்படி இருக்க வேண்டும். இன்றைக்கு, அமெரிக்கர்களோ, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களோ, இந்த விக்கிரகங்களை லட்சக் கணக்கான, கோடிக்கணக்கான பணத்தைக் கொடுத்து வாங்கிக் கொண்டு போகிறார்கள். அவர்களுக்கு ஆண்டிக் வேல்யூ ' இருக்கிறது. ஒன்று ' ஆண்டிக் வேல்யூ ' இருக்க வேண்டும் ; அல்லது அந்த விக்கிரகங்களினுடைய சிறப்பு இருக்க வேண்டும். இந்த இரண்டும் இல்லாதபடி, அறையிலே இருட்டறையிலே அவை பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே என்னுடைய கருத்து, மாவட்டந்தோறும், இப்படிப்பட்ட ஒரு இடத்தை நாம் ஏற்பாடு செய்து, எங்கெங்கு மீண்டும் அவற்றை கோயில்களுக்கு பூஜைகளுக்காக எடுத்துச் செல்கிறார்களோ, அங்கே அவற்றுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். பாதுகாப்பு இல்லை என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட இடத்திலே கொண்டுபோய் வைக்கிறார்கள். இங்கே 1,500 விக்கிரகங்கள் இருக்கின்றன என்று சொன்னால், அவைகளில் ஏறத்தாழ 100 சிலைகளைத்தான் ஆண்டுதோறும் பூஜைகளுக்காக கோயில்களுக்கு எடுத்துச் செல்கிறார்கள். மீதம் 1,400 சிலைகள் அங்கே இருக்கின்றன. ஆகவே, நான் நினைப்பது, ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட ஒரு ' ஐகான் சென்டர் ', விக்கிரகங்களை வைக்கக்கூடிய ஒரு அறையை முக்கியமான கோயில்களிலே ஏற்பாடு செய்து, அந்த மாவட்டத்திலே எந்தெந்த கிராமங்களிலுள்ள கோயில்களுக்கு ஆண்டுதோறும் நடைபெறுகிற திருவிழாக்களுக்கு குறிப்பிட்ட விக்கிரகங்களை எடுத்துச் செல்ல வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அவற்றை மட்டும்

அங்கே வைத்துவிட்டு, மீதமுள்ள சிலைகளை விக்கிரகங்களை இங்கே சென்னையிலே ஒரு நல்ல மியூசியம் ' ஐகான் மியூசியம் ' என்ற அளவிலே ஏற்பாடு செய்து அதில் அவற்றை வைத்து, பயணிகள் — குறிப்பாக, வெளிநாட்டுப் பயணிகள் பார்க்கக் கூடிய அளவிலே ஏற்பாடு செய்தால், எத்தனையோ லட்சக் கணக்கான ரூபாய் இந்த அறநிலையத் துறைக்கு வருவாயாக வருமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அதை நிச்சயமாக ஆன்மீகப் பெரியோர்களுடன் கலந்துபேசி, அவர்களின் ஒப்புத லோடு நிறைவேற்றுவோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல ராமேஸ்வரம் கோயிலைப்பற்றி மட்டும் இறுதியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. மோகன் : ரொம்ப முக்கியமான பாயின்ட். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தச் சிலைகளைப்பற்றி சொன்ன காரணத்தினாலே, நான் இந்தக் கேள்வியை எழுப்புகிறேன். சாதாரண சிலைகள் அல்ல இவைகள். இந்தியாவிலேயே, எங்கேயும் காணப்படாத பஞ்ச லோக சிலைகள். நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது, இந்தக் கேள்வியை பாராளுமன்றத்திலே எழுப்பி, இந்தியாவிலே, அதிகமாக, தமிழ்நாட்டிலே தான், பஞ்சலோகச் சிலைகள் திருட்டு போகின்றன என்ற புள்ளிவிவரங்கள் — 5 ஆண்டுக் காலத்திற்கு எடுத்த புள்ளி விவரங்களை அன்று நான் அளித்திருந்தேன். எதற்குச் சொல்கிறேன். என்று சொன்னால், இப்போது சிலை திருட்டு குறைந்திருக்கிறது. பல லட்சக் கணக் கான மதிப்புள்ள அந்த விக்கிரகங்களை பாதுகாக்கின்ற மிகப் பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதற்கு சரியான முறை யிலே, ஒரு வழி தேவை. நீங்கள் சொல்வதைப்போல, திருவா ரூரில் ஒரு இடத்திலே வைத்து இருக்கிறோம் என்று சொன்னால், இன்னும் அதை எப்படி பாதுகாக்கப் போகிறோம் ; பொது மக்களும் அதைச் சென்று பார்க்கின்ற அளவிற்கு எப்படி நாம் அதைப் பயன்படுத்த போகிறோம் என்பதிலே மிகுந்த கவனத்தை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

15-10 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மோகன் அவர்கள் சொல் கின்ற கருத்து மிகவும் மனதிலே கொள்ள வேண்டிய கருத்து. ஆகவே, நாங்கள் நினைத்ததையெல்லாம், ஒரே ஹாலிலே எங்கே இருந்து பார்த்தாலும் தெரியக்கூடிய அளவில், அங்கே செக்யூரிட்டி போட்டிருக்கின்றார்கள், அதுபோல இங்கேயும் தகுந்த பாதுகாப்பு போட்டு, ஆனால் அங்கங்கே அறைகளாகப் பிரிக்காதபடி ஒரே ஹாலிலே எங்கேயிருந்து பார்த்தாலும் பார்ப்பதற்குத்தெரிகின்ற அளவிலே, இன்னும் வேண்டுமென்றால்





அங்கே போட்டோ மூலமாகப் பார்ப்பதை விட நாம் ஒரு இடத்தி லிருந்து மானிட்டர் செய்யலாம். அப்படிப்பட்ட முறைகளைச் செய்தால் —ஒரு டாலர் என்பது இங்கே நமக்கு 17, 20 ரூபாய் என்றாலும் அமெரிக்காவிலிருந்து வருபவர் களுக்கு ஒரு டாலர் என்பது மிகச் சாதாரண காரியம். ஆகவே, அப்படிப்பட்ட முறையிலே—கோயிலுக்கு வருவாயை அதன்மூல மாகப் பெருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

இன்னொன்று, கடைசியாக, நம்முடைய தமிழ்நாட்டிலே, ஆந்திராவிலே, திருப்பதியிலே இருப்பதுபோன்று, ஒரு நல்ல சூழ்நிலை கோயில்களைச் சுற்றி இல்லை என்பது வெகு நாட்க ளாக ஆங்காங்கே கோயிலைச் சென்று பாரத்தவகையிலே நான் பாரத்துகொண்டு வந்தேன். இப்போது கடந்த வாரத்தில் ராமேஸ்வரத்திற்குச் சென்று இருந்தேன். திருப்பதியைப் போன்று நிச்சயமாக ராமேஸ்வரத்தில் அங்கே ஒரு 100 ஏக்கர் நிலத்திலே காட்டேஜ்களைக் கட்டலாம், வெளிநாட்டுப் பயணிகள் வருகின்றார்கள் அங்கே வடநாட்டிலிருந்து எத்தனையோ பயணிகள் பக்தர்கள் அந்தக்கோயில்களுக்கு வருகின்றார்கள், எனவே திருப்பதியிலே எப்படிப்பட்ட சூழ்நிலை மலையிலே அமைக்கப் பட்டிருக்கின்றதோ அதுபோல, இங்கே ராமேஸ்வரத்திலே கடற் கரை ஓரத்திலே அப்படிப்பட்ட ஒரு நிலைமையை அப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்திட முடியும், அதற்கு வசதி இருக்கின்றது என்பதை இந்த அவைக்கு எடுத்துச் சொல்லி இந்த அளவிலே என்னுடைய பதிலை நான் நிறுத்திக்கொள்ளலாம் என்று கருது கிறேன்.

இன்னும் ஒன்றே ஒன்று. நம்முடைய உகம்சந்த் அவர்கள், அவருடைய ஊரிலே உள்ள ஒரு பிரச்சினை பற்றி இங்கே வெட்டுத் தீர்மானமாகத் தந்திருக்கின்றார்கள். ஜானகிராம் பந்துலு டிரஸ்ட். ஏறத்தாழ 45 ஏக்கர் நிலத்தை அவர்கள் ஆக்கிரமித்து வைத்து இருக்கின்றார்கள். எந்தவிதமான நன்மையும் கோயிலுக்கோ, அல்லது பொது ஸ்தாபனத்திற்கோ இல்லை, அறக்கட்டளைக்கு இல்லை என்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். நான் இதுபற்றி இன்னும் சரியாக விசாரிக்கவில்லை. நிச்சயமாக உங்கள் ஊருக்கே வந்து நானே உங்களோடு கலந்து பேசி, என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவைகளை எடுக்கலாம். அதுபோல, பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை நான் பார்த்துவிட்டேன். நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மட்டும் இங்கே சொல்லி, வெட்டுத் தீர்மானங்களை நீக்கி இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே நான் எழுந்து நிற்கின்றேன். தெரிந்ததைச் சொல்ல வேண்டும் என்ப

தற்காக அல்ல. இங்கே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதிலே இரண்டே செய்திகளுக்கு எனக்கு விளக்கம் வேண்டியிருக்கிறது. ஒன்று, இந்தப் பிச்சைக்காரர்களைப் பற்றி ஒரு அளவுகோல் என்று சொன்னபோது, அமர்ந்திருந்து, அந்த இடத்திலேயே இருந்தால் அவர்கள் சன்னியாசி என்றும், எழுந்து நின்று அவர்கள் கேட்பார்கள் என்றால் அவர்கள் பிச்சைக்காரர்கள் என்றும் ஒன்றைச் சொன்னார்கள். ஆனால் நமது நாட்டில் இருக்கின்ற பாரம்பரியப் பழக்கப்படி இரண்டும் நடந்திருக்கிறது. ஆதிசங்கரர் சின்ன வயதிலே புறப்பட்டுப் போகிறபோது, 'பிக்ஷாந்தேஹி' என்று எல்லா இடங்களிலுமே போய்க் கேட்டிருக்கிறார். அவரும் சன்னியாசிதான். 'இருந்த இடம் தேடி வந்து வருந்தி அழைத்தாலன்றி உண்ண மாட்டேன்' என்று இருந்த இடத்திலிருந்தே சில சன்னியாசிகள் உண்டிருக்கிறார்கள். எனவே, சன்னியாசி யார். பிச்சைக்காரர்கள் யார் என்ற அளவுகோலை இன்னும் எங்களுக்கு விளக்குகின்ற வகையிலே சொல்ல வேண்டும்.

அடுத்த செய்தியாக (குறுக்கீடு) மொத்தத்திலே சொல்லி விடுவது நல்லது. அடிக்கடி எழுந்ததாக ஒரு பிரச்சினை எழும். இருக்கன்குடி கோயிலைப் பொறுத்தவரையில் நல்ல விளக்கங்கள் எங்களுக்குத் தந்தாலும்கூட, காலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னபோது அந்தத் திருவிழாவிற்கு வந்தவர்கள் ஒரு கடையில் தொப்பி வாங்கியது நிமித்தம் ஏற்பட்டது தான் இந்தச் சண்டை என்றும், அதிலிருந்து அது பெருகிப் போயிற்று என்றும், சாத்தூர் வரை பரவிற்று என்றும் சொன்னார்கள். எனவே, முதலமைச்சர் அவர்கள் சொன்னதைத் தான் நாங்கள் இத்தனை நேரமும் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். இப்போது அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கோயில் சம்பந்தப்பட்ட விழாவோடு தொடர்புபடுத்தி, இதற்கு சிலர் தொப்பிதான் காரணம் என்று சொல்கிறார்கள்., நான் அதைவிட வேறு காரணம் இருப்பதாகச் சொல்கிறேன் என்று, அறங்காவல் குழு நியமிப்பதிலேதான் இது ஆரம்பித்தது என்று சொல்கிறார்கள். எனவே, நாங்கள் முதலமைச்சர் அவர்கள் சொல்வதை எடுத்துக்கொள்வதா? அல்லது அறநிலையத்துறை அமைச்சர் சொல்வதை எடுத்துக்கொள்வதா? எது உண்மை என்பதை இந்த அவை அறிவதற்கு அவையிலே. . .

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர், முதலமைச்சர் அவர்களுக்கும், எனக்கும் முடிச்சு மிக நன்றாகவே போடுகிறார். அந்த முடிச்சு வெற்றிகரமாக ஆகாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபற்றி இங்கே பேசிய உறுப்பினர்கள், தொப்பி வாங்கப் போன இடத்திலே அது ஆரம்பித்தது என்று சொன்னார்கள். நான் மறுக்கவில்லை. அதற்கும் ஆழமாக ஒரு காரணம் இருக்கலாம். ஒரு குழு



போடும்போது அதையும் சேர்த்து நீங்கள் பாருங்கள் என்றுதான் நான் சொல்கின்றேனே தவிர, நானும், முதலமைச்சரும் இது பற்றிப் பேசவில்லை. இந்தப் பிரச்சினை வந்த பிறகு, அவர்கள் அறிக்கை தயாரித்த பிறகு இதைப்பற்றிப் பேசவில்லை. பேசியிருந்தால் நான் அவர்களிடத்திலே சொல்லியிருப்பேன். ஆனால் இங்கே அவையிலே என்னென்ன பேசப்பட்டதோ, அதை இன்றைக்கு நடந்த, நேற்றோ, இரண்டு நாட்களுக்கு முன்போ நடந்தவற்றிற்கு இது ஒரு காரணமாக இருந்தாலும்கூட, அங்கே இருக்கக்கூடிய இவ்வளவு இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வரக்கூடிய கோயில்களிலே அறங்காவலர்கள் ஒழுங்காக இயங்கினால் அங்கே சட்டப்பிரச்சினை, சட்டம் ஒழுங்கு இந்த அளவுக்கு சீர்கெடாதபடி பார்த்துக்கொள்ள முடியும் என்றுதான் நான் சொன்னேன். அடுத்து பிச்சைக்காரர்கள் பற்றி. வேண்டுமானால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவைப் போட்டு யார் பிச்சைக்காரர்கள் யார் பிச்சைக்காரர்கள் இல்லை என்பதை முடிவு செய்யலாம் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

15-15 மணி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தப் பணியைக் கொடுத்தாலும் செய்து கொள்கிறேன். லட்சாதிபதி பணியைவிட இந்தப் பிச்சாதிபதிகள் பற்றி எனக்கு ஒரு பணி கொடுத்தால் அதனை நான் ஏற்றுக் கொள்வேன். நானும் ஒரு எளியவன் தான். ஆனால் முதலமைச்சர் அறிக்கை தெரிவிக்கின்ற நேரத்தில் எனக்குத் தெரியாது என்று நீங்கள் சொன்னீர்கள். எனவே, நான் தெரிந்து கொள்வதற்காகக் கேட்டேனே தவிர வேறு ஒன்றும் உங்களை முடிச்சுப் போட வேண்டும் என்றோ, வேறு ஒன்றும், பிடித்துப் போட வேண்டும் என்றோ எனக்கு நோக்கம் இல்லை. எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும்,

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்திலே அறநிலையத் துறையிலே வரும் வருமானங்கள் முழுவதும் கல்விக்குச் செலவு செய்வது பற்றி ரொம்ப சந்தோஷம். அதை நான் மறுக்கவில்லை. ஒரு பகுதி அநாதைகளுக்குச் செய்வது நல்ல காரியம் தான். அதற்கு மேல் பிச்சைக்காரர்கள் விடுதி கட்டுவது நல்லகாரியம்தான். இப்படி நல்ல காரியங்கள் எல்லாவற்றுக்கும் இந்தஅறநிலையத்துறைபணத்தைத் தான்எடுக்க வேண்டுமா? ஆயிரம் காலமாக கோவில்கள் எல்லாம் பரந்து கிடக்கின்றன. கோவில்களைக் கட்ட முடியவில்லை, பூஜை எல்லாம் செய்ய முடியவில்லை. எனவே இவைகளுக்கு எல்லாம்

செலவு செய்வதை விட அதற்குச் செலவு செய்வது நல்ல காரியமாக இருக்கும். இதற்கு வேறு துறையிலிருந்து பணத்தை எடுத்துக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 35 ஆயிரம் கோவில்கள் பற்றி இங்கே சொன்னார்கள். அதிலே லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள கோவில்கள் ஏறத்தாழ இரண்டு ஆயிரம். 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள கோவில்கள் 8,400 அல்லது 8,500 என்று கணக்குக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் 200, 100 ரூபாய் கூட வருமானம் வரக் கூடிய கோவில்களை லிஸ்டடு கோவில்கள், நான் லிஸ்டடு கோவில்கள் இன்றைக்கு என்று நம்முடைய அறநிலையத்துறையின் ஆதிக்கத்தின் கீழ் எடுத்து வைத்து இருக்கிறார்கள். இவ்வளவும் அவசியமா இல்லையா என்பதை நாங்கள் ஆய்வு செய்துகொண்டு இருக்கிறோம். முக்கியமான கோவில்கள், அந்தக் காலத்தில் கட்டப்பட்ட கோவில்கள், திருக்கோவில்கள் இவைகளைச் சீர் செய்வதற்கு நிச்சயமாகச் செய்து ஆக வேண்டும்—ஆனால் ஆங்காங்கே இருக்கக்கூடிய சிறிய கோவில்களை எல்லாம் அந்தத் துறை தான் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆங்காங்கே இருப்பவர்கள் கோவில் என்றால் ஒரு ஊரில் இருப்பவர்கள் கோவில்களைக் கட்ட வேண்டும்; கோவில்களைப் பாதுகாக்க வேண்டும், கோவில்களை நடத்த வேண்டும்—ஆனால் பெரிய கோவில்களில் இந்தத் துறையினுடைய பொறுப்பு, துறையினுடைய தலையீடு ஏன் வந்தது என்றால் இவ்வளவு பெரிய சொத்துக்களை கோவில்களுக்கு அந்தக் காலத்திலே மன்னர்களும், மற்றவர்களும் எழுதி வைத்த காரணத்தினால் அதைப் பாதுகாப்பதற்காக இன்றைக்கு அரசினுடைய தலையீடு இங்கே வந்து இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு கிராமத்திற்கும் போய்க் கோவில்களை நடத்துவதற்கு இந்த துறை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிவிட்டது. பல்வேறு பிரச்சினைகளை அமைச்சர் இடத்தில் சொல்வதற்கு நேரம் இல்லாவிட்டாலும் பின்னர் நடைமுறையில் அதை அமல் செய்வார்கள் என்று எண்ணி இந்தப் பிச்சைக்காரர்களை எல்லாம் பிடித்துக்கொண்டு பழனியில் கல்லூரியில் இருக்கக் கூடிய அந்த விடுதியில் வைப்பதற்கு ஒரு திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது கல்லூரி மாணவர்கள் விடுதி காம்பவுண்டுக்குள் இருக்கிறது. அதிலே கொண்டுபோய் நீங்கள் பிச்சைக்காரர்களை வைத்தால் எப்படி சூழ்நிலை சரியாக இருக்கும்? ஆகவே, நான் தயவுசெய்து கேட்டுக்கொள்ளுவது அந்த மாதிரி ஒரு எண்ணம் இருந்தாலும் நீங்கள் பழனிக்கு பிச்சைக்காரர்களைக் கொண்டு வருவதாக இருந்தாலும்கூட



மலை அடிவாரத்திலே கொடைக்கானல் ரோடு பக்கம் அங்குள்ள ஒரு காட்டில் இடத்தை வளைத்துப் போட்டு அங்கே வைத்துக் கொள்ள நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்களும் நம்மவர்கள் தான். ஆகவே அங்கே ஒரு கட்டிடம் இருந்ததால் சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அது பிடிக்கவில்லை என்றால் அதை விட்டு விடுகிறோம், வேறு இடத்தில் கொண்டு போய் வைக்கப்படும்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுராந்த கத்தில் இருக்கின்ற அந்த ஜானகிராம் டிரஸ்ட்டை நான் பார்வை யிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் இன் றைக்குக் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் உள்ள மேல் மருவத்தூர் கோவில் தனியாருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்து அற நிலையத்துறை அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று புரட்சித் தலைவர் உத்தரவு போட்டு இருந்தார். இன்றைக்குத் தனியாருக்கு ஒப்படைப்பதற்கு உத்தரவு போடப் பட்டிருக்கிறது. அதை அரசு மீண்டும் எடுக்குமா? அப்படி உத்தரவு போட்டதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கக்கூடிய கோவிலைத் தனியாருக்கு ஒப்படைத்துவிட்டோம் என்பது தவறு. சில விதிகளில் அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. என்றைக்கு வேண்டுமானாலும் மீண்டும் நாம் எடுத்துக்கொள்ள லாம். அப்படிப்பட்ட முறையில் தான் முழு விலக்கு வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். ஆனால் என்றைக்கு வேண்டுமானாலும் அறநிலையத்துறை மீண்டும் எடுத்துக்கொள்ள லாம் என்ற வகையில் செய்துதான் அந்த விதி விலக்கு தரப் பட்டிருக்கிறது. நான் இங்கே இன்னும் ஒன்றைச் சொல்ல வேண் டும். எத்தனையோ ஆதீனங்கள் இருக்கின்றன. தர்மபுரம் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், சங்கர மடம். ஆனால் ஒரு சில ஆதீனங்கள் இன்றைக்குக் கோவையில், சுந்தரசாமிகள் கௌபால மடம் இருக்கிறது. என்ஜினியரிங் காலேஜை அவர்கள் நடத்துகிறார்கள். மிகச் சிறந்த ஒரு சேவை. ஆயிரக்கணக்கான வேலிகள் நிலமுள்ள ஆதீனங்கள் இருந்தாலும் 15–20 மணி

[திரு. கே. பி. கந்தசாமி] [1990 ஏப்ரல் 11

கூட என்ஜினியரிங் கல்லூரி நடத்தவில்லை. ஆனால் கோவையிலே சுந்தரம் சாமிகள் நடத்துகிறார். அதைப்போல மேல் மருவத்தூரிலும், அங்கே ஒரு பாலிடெக்னிக், என்ஜினியரிங் காலேஜ் நடத்துகிறார்கள். மரியாதை கொடுக்கிறோம். அதிலே முஸ்லீம்களும் இருக்கிறார்கள், மற்றவர்களும் இருக்கிறார்கள் என்று ஹைகோர்ட் வரை சென்று வழக்கு போட்டிருக்கிறார்கள். வழக்கு முடியாத நிலையிலே இருக்கிறது. நல்ல பணிகளைச் செய்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் அவர்கள் பாராட்டுவார்கள் என்று கருதுகின்றேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுதே மணி 3-20 ஆகிறது. இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் நின்றால் எப்படி? உங்களுக்கும் ஒரு கூட்டுப் பொறுப்பு வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய நேரத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் விருப்பப்படி நீட்டிக்க முடியாது. அப்படி நீட்டிக்க வேண்டுமென்ற நோக்கம் இருந்திருக்குமானால் மாலையிலே இந்த அவை நடைபெறும் என்று முன்கூட்டியே அறிவித்து, மாலை 4-00 மணிக்குத் தொடங்கி இருக்க வேண்டும். 3 மணி 20 நிமிடம் ஆகிறபோது மறுபடியும் கேள்வி கேட்க இந்த அவையில் தொடர்ந்து அனுமதிக்கக்கூடாது என்று நான் அவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் எஸ். டி. உகம்சந்த் மற்றும் கே. ஆர். சுந்தரம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 12 தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,55,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



1990 ஏப்ரல் 11]

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 12—4—1990 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 15-22 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

### II. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

எதுவுமில்லை

#### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

90. கோரிக்கை எண். 12. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

91. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கை 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

[1990 ஏப்ரல் 11

(233-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 12.

### தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக்குறிப்பு 1990–91

**முன்னுரை :**

இந்து மற்றும் சமண மத அறக்கட்டளைகள்/அற நிறுவனங்கள், 1960 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து செயலுக்கு வரப்பெற்ற 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 22/1959) நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**1. அற நிறுவனங்கள் :**

தமிழ் நாட்டில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிருவாகத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு 35,150 இந்து மற்றும் சமண அற நிறுவனங்கள்/அறக்கட்டளைகள் செயல்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| திருக்கோயில்கள் | 33,112 |
| மடங்கள் | 56 |
| மடத்துக் கோயில்கள் | 55 |
| குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| அறக்கட்டளைகள் | 189 |
| சமணக் கோயில்கள் | 17 |
| மொத்தம் | 35,150 |



1990 ஏப்ரல் 11]

இந்த அறநிறுவனங்கள் வருமானங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

| வகைப்பாடு. (1) | எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. ஆண்டு வருவாய் ரூ. 2,001-லிருந்து ரூ. 9,999 வரை உள்ள பட்டியலில் சேரா அற நிறுவனங்கள் | 6,464 |
| 2. ஆண்டு வருவாய் ரூ. 10,000-லிருந்து ரூ. 49,999 வரை உள்ள பட்டியலில் சேர்ந்த அறநிறுவனங்கள் | 1,585 |
| 3. ஆண்டு வருவாய் ரூ. 50,000-லிருந்து 99,999 வரை உள்ள பட்டியலில் சேர்ந்த அறநிறுவனங்கள் | 210 |
| 4. ஆண்டு வருவாய் ரூ. 1,00,000-மும் அதற்கு மேலும் உள்ள பட்டியலில் சேர்ந்த அற நிறுவனங்கள் | 332 |
| கூடுதல் ... | 8,591 |

**குறிப்பு :**

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழுள்ள அற நிறுவனங்களில் கணக்குகள் பசலி ஆண்டினை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

**2. நிர்வாக அமைப்பு :**

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் (இந்திய ஆட்சிப் பணித் தரத்தில் நியமிக்கப்படுகிறவர்) துறையின் தலைவராக இருந்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 22/1959) நடைமுறைப்படுத்துகிறார். இவருக்கு உதவியாக இரு இணை ஆணையர்கள், எட்டு துணை ஆணையர்கள், துணை ஆணையர் தரத்தில் ஒரு நேர்முக உதவியாளர் மற்றும் உதவி ஆணையர் தரத்தில் ஒரு கூடுதல் நேர்முக உதவியாளர் மற்றும் பதினேழு உதவி ஆணையர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், இவர் களைத் தவிர திருக்கோயில் ஆபரணங்களையும் மற்றும் விலை யுயர்ந்த பொருட்களையும் மதிப்பீடு செய்யும் பணியில் எட்டு உதவி ஆணையர்களும் (நகை சரி பார்க்கும் அதிகாரிகள்)

மற்றும் திருவாரூரில் உள்ள உலோக திருமேனிகள் பாதுகாப்பு மையத்தின் பொறுப்பை நிருவகிக்க ஒரு உதவி ஆணையரும் உள்ளனர்.

திருக்கோயில் திருப்பணி மதிப்பீடுகளைத் தயாரித்தல், மேற்பார்வையிடுதல் மற்றும் அறநிறுவனங்களின் கட்டிட வேலைகளை மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளில் ஆணை யருக்கு உதவியாக மேற்பார்வை பொறியாளர் ஒருவரின் தலைமை யில் கோட்டப் பொறியாளர் ஒருவரும் மற்றும் தேவையான தொழில் நுட்ப அலுவலர்களும் அடங்கிய பொறியியல் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அலுவலகத் தில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் திருக்கோயில் நிலங்களுக்காக ஒரு தனி அலுவலர் கொண்ட தனி வருவாய் பிரிவு ஒன்று திருக்கோயில்களின் நிலங்களை ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் வருவாய் அலுவலர் களுடன் தொடர்பு கொண்டு அடிப்படைப் பதிவேடுகளைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. அனுமதியின்றி தனி யார் அனுபவத்தில் இருந்து வரும் சிதம்பரம் அருள்மிகு சபா நாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைக் கண்டறியும் பணியினை ஒரு தனி வட்டாட்சியர் மற்றும் அவருடைய துணைப் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

துறையின் வரவு-செலவுக் கணக்குப் பிரிவானது, கருவூலம் மற்றும் கணக்குத் துறையைச் சார்ந்த ஒரு முதுநிலை கணக்கு அலுவலர் பொறுப்பில் உள்ளது. இவருக்கு உதவியாக ஒரு உதவி கணக்கு அலுவலர் உள்ளார்.

அறநிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் பணியினை ஒரு தலைமைத் தணிக்கை அலுவலரின் நேரடிக் கண் காணிப்பில் இயங்கும் தணிக்கைப் பிரிவு செய்து வருகிறது. தலைமைத் தணிக்கை அலுவலர் தலைமைக் கணக்காயர் அலுவல கத்தைச் சார்ந்தவராவார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை எட்டு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையரின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. மேலும், பதினேழு கோட்டங் களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. மேற் குறிப்பிட்ட அலுவ லர்களுடைய நிர்வாக வரம்புகள் கீழே தரப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1. துணை ஆணையர், சென்னை | 1. உதவி ஆணையர், சென்னை |
| | 2. உதவி ஆணையர், காஞ்சி புரம். |





| (1) | (2) |
|---|---|
| 2. துணை ஆணையர், தஞ்சாவூர். | 3. உதவி ஆணையர், தஞ்சாவூர். |
| | 4. உதவி ஆணையர், நாகப்பட்டினம். |
| 3. துணை ஆணையர், மயிலாடுதுறை. | 5. உதவி ஆணையர், கும்பகோணம். |
| | 6. உதவி ஆணையர், கடலூர். |
| 4. துணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | 7. உதவி ஆணையர், புதுக்கோட்டை. |
| | 8. உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி. |
| 5. துணை ஆணையர், மதுரை. | 9. உதவி ஆணையர், மதுரை. |
| | 10. உதவி ஆணையர், இராமநாதபுரம். |
| 6. துணை ஆணையர், திருநெல்வேலி. | 11. உதவி ஆணையர், திருநெல்வேலி. |
| | 12. உதவி ஆணையர், நாகர்கோவில். |
| 7. துணை ஆணையர், கோயம்புத்தூர். | 13. உதவி ஆணையர், கோயம்புத்தூர். |
| | 14. உதவி ஆணையர், ஈரோடு. |
| 8. துணை ஆணையர், சேலம். | 15. உதவி ஆணையர், சேலம். |
| | 16. உதவி ஆணையர், தர்மபுரி. |
| | 17. உதவி ஆணையர், வேலூர். |

[1990 ஏப்ரல் 11]

3. சமய நிறுவனங்கள் மற்றும் கட்டளைகளின் நிர்வாகம்:

திருக்கோயில்கள், அவற்றின் முக்கியத்துவம், வருவாய் மற்றும், அவற்றுக்குள்ள சொத்துக்களின் அடிப்படையில் ஒருங்கிணைக் கப்பட்டுள்ளன. கீழ் விவரிக்கப்பட்டபடி இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் மற்றும் செயல் அலுவலர் நிலையில் (நிலை-1 முதல் 4 வரை) அத்திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| இணை ஆணையர் | 5 |
| துணை ஆணையர் | 4 |
| உதவி ஆணையர் | 12 |
| செயல் அலுவலர், நிலை-1 | 53 |
| செயல் அலுவலர், நிலை-2 | 117 |
| செயல் அலுவலர், நிலை-3 | 172 |
| செயல் அலுவலர், நிலை-4 | 130 |

4. 55 திருக்கோயில்கள் திருமடங்களால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் 17 கட்டளைகள் அல்லது குறிப்பிட்ட கட்டளைகள் திருமடங்களின் பொறுப்பில் உள்ளன. இதுவரை திருமடங்களைச் சார்ந்த 8 திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

5. மடங்களின் நிர்வாகம் :

மடங்களின் பொதுவான நிர்வாகத்தினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஆய்வு செய்யும் பணியினை ஒரு துணை ஆணையரும், ஒரு மண்டலக் கணக்கு அலுவலரும் மேற்பார்வையிட்டு வருகிறார்கள்.

6. அறங்காவலர்கள் :

4,074 அறநிலையங்கள் பரம்பரை அறங்காவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 633 அறநிலையங்கள் துறை மற்றும் நீதிமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகத் திட்டத்தின்படி நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அறங்காவலர் அந்தஸ்து குறித்தும், அறங்காவலர்கள் நியமனம் செய்ய துறையின் அதிகாரம் குறித்தும், 1,587 அறநிலையங்கள் குறித்து, வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. இத்துறை, இன்றைய நிலையில், 20,939 அறநிலையங்கள் சம்பந்தமாக அறங்காவலர் நியமனம் செய்யும் அதிகாரத்தை மேற்கொண்டுள்ளது.



1990 ஏப்ரல் 11]

7. திருக்கோயில் பணியாளர்கள் :

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகைக்குட்பட்ட பல்வேறு அறநிறுவனங்களில் 47,800 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு ஊதியம் பணமாகவும், தானியமாகவும் வழங்கப்படுகின்றது. இணை ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் உள்ள செயல் அலுவலர்களால் நிர்வகிக்கப்படும், உயர் வருவாய் கொண்ட திருக்கோயில்களில் (மொத்த திருக்கோயில் பணியாளர்களான 47,800 நபர்களில்) 4,100 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

திருக்கோயில் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால், இந்து சமய அறநிலைய பணியாளர் குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ் அவர்களின் குடும்பங்களுக்கு ரூ. 10,000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

திருக்கோயில்களில் குறைந்த பட்சம் 20 ஆண்டுகள் பணி புரிந்து 60 வயதைக் கடந்த ஓதுவார்களுக்கு மாத ஓய்வூதியத் தொகையாக ரூ. 250 வழங்கப்பட்டு வருகின்றது.

இது தவிர திருக்கோயில் பணியாளர்களுக்கு, கீழ்க்காணும் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன:—

1. திருக்கோயில் பணியாளர்கள் பணியில் இறக்க நேரிடும் போது, பொதுவான செலவினங்களுக்காக அவர்களது குடும்பத்திற்கு ரூ. 250 வழங்கப்படுகின்றது. இத் தொகை அப்பணியாளருக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகைகளில் பிறகு சரி செய்து கொள்ளப்படுகின்றது.

2. திருவிழா நாட்களில் ஏற்படுகிற அதிகப்படியானப் பணிகளைச் செய்வதற்காக, முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ. 1,000 அல்லது ஒரு மாத ஊதியம் மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றின் மொத்தத் தொகை இவற்றில் எத்தொகை குறைவோ, அத் தொகை கருணைக் கொடையாக வழங்கப்படுகின்றது.

3. ரூ. 500 அல்லது இரண்டு மாத ஊதியம் இவற்றில் எத்தொகை குறைவோ, அத்தொகை திருவிழா முன் பணமாக வழங்கப்பட்டு, அத்தொகை 10 மாதத் தவணையில் பிடித்தம் செய்து கொள்ளப்படுகிறது.

4. புயல் அல்லது வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் வசிக்கும் திருக்கோயில் பணியாளர்களுக்கு 10 மாதத் தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ளும் வகையில் வட்டியில்லா முன்பணமாக ரூ. 400 வழங்கப்படுகின்றது.

[1990 ஏப்ரல் 11

5. சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் நிதி நிலையைப் பொறுத்து திருக்கோயில் பணியாளர்களுக்கு மாதத் தவணைகளில் வட்டியுடன் பிடித்தம் செய்யும் திருமண முன்பணம் வழங்கப்படுகின்றது.

**8. திருக்கோயில் நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் :**

அறநிறுவனங்களுக்கு விவசாய நிலங்கள் மற்றும் விவசாயத்திற்கு உட்படுத்தப்படாத நிலங்கள் உள்ளன. மேலும் 21,199 கட்டிடங்கள் அறநிலையங்களுக்குச் சொந்தமாக உள்ளன. விவசாய நிலங்கள் 1.07 இலட்சம் குத்தகைதாரர்களுக்கும், விவசாயத்திற்கு உட்படாத நிலங்கள் 73,320 குத்தகைதாரர்களுக்கும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. மேலும், மொத்தம் 4,718.04 ஏக்கர் பரப்புள்ள திருக்கோயில் நிலங்களில் 41 கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்கள் பயிரிட்டு வருகின்றன. 1,398 ஆம் பசலி வரை குத்தகைதாரர்களிடமிருந்து, அனைத்து திருக்கோயில்களுக்கும் வரவேண்டிய குத்தகை நிலுவை ரூ. 66.37 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. கூட்டுறவு வேளாண்மைச் சங்கங்களிடமிருந்து மட்டும் வசூலிக்கப்பட வேண்டிய குத்தகை நிலுவைத் தொகை ரூ. 14.96 இலட்சங்கள் ஆகும்.

**9. திருக்கோயில்கள் செப்பனிடுதலும், திருப்பணிகளும்:**

ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் நிலைபெற்ற பாசுரங்களால் போற்றப்பட்ட திருக்கோயில்கள் தமிழ்நாட்டில் பல உள்ளன. எனவே, இத்தகைய திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்வதுடன், சரித்திர, தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களைச் சரியான முறையில் செப்பனிடுதலும் அவசியம் எனக் கருதப்படுகிறது. மேலும், திருப்பணி செய்யப்பட வேண்டிய முக்கிய திருக்கோயில்களும் உள்ளன. இத்தகைய திருப்பணி மற்றும் செப்பனிடும் பணிக்கான செலவினம் (1) திருக்கோயில் நிதி மற்றும் பொது மக்களின் நன்கொடை, (2) அரசு மானியம், (3) ஆணையரின் பொதுநல நிதி மற்றும் (4) நிதி வசதியுடைய திருக்கோயில்களிலிருந்து செய்யப்படும் நிதி மாற்றம் ஆகியவற்றால் செய்யப்படுகிறது.

1989-90 ஆம் ஆண்டின்போது, திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ. 45 இலட்சங்கள் அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளன. அதே போன்று ஆணையரின் பொது நல நிதியிலிருந்து ரூ. 5.30 இலட்சங்கள் திருப்பணி மற்றும் இதர பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளன. அரசு மானியம் தவிர, ''ஐந்து கோடி திருக்கோயில் பராமரிப்பு நிதி'' மூலம் பெறும் வட்டித் தொகையிலிருந்து ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் நிலைத்த புகழுடைய பாசுரங்களால் போற்றப்பட்ட தொன்மையான திருக்கோயில்களின் திருப்பணி, செப்பனிடுதல் மற்றும்



1990 ஏப்ரல் 11]

கட்டிடப் பணிகளைச் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. 1989–90 ஆம் ஆண்டில் திருப்பணிக்காக கீழ்க்காணும் 10 திருக்கோயில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:—

| வரிசை எண். | திருக்கோயிலின் பெயர். | மொத்த மதிப்பீட்டுத் தொகை. | 1989–90 ஆண்டில் ஒதுக்கீடு செய்து வழங்கப் பட்ட தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 1 | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம். | 60.00 | 10.00 |
| 2 | அருள்மிகு வீரட்டீஸ்வரர் திருக்கோயில், திருவதிகை. | 10.00 | 7.00 |
| 3 | அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் மற்றும் சட்டநாதர் திருக்கோயில்கள், சீர்காழி. | 40.00 | 9.04 |
| 4 | அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில், மன்னார்குடி. | 20.00 | 9.00 |
| 5 | அருள்மிகு நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம். | 10.00 | 6.15 |
| 6 | அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், வேதாரண்யம். | 30.00 | 12.50 |
| 7 | அருள்மிகு ஆத்மநாதசுவாமி திருக்கோயில், ஆவுடையார்கோவில். | 35.00 | 7.00 |
| 8 | அருள்மிகு நாச்சியார் திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர். | 70.00 | 12.00 |
| 9 | அருள்மிகு சோபநாதசுவாமி திருக்கோயில், பாலயரை. | 30.00 | 5.00 |
| 10 | அருள்மிகு திருச்சோமநாதசுவாமி திருக்கோயில், திருச்சோபுரம். | 30.00 | 5.00 |

10. திருக்கோயில்களின் வருவாயைப் பெருக்கவும், அவைகளுக்குச் சொந்தமான நகர்ப்புற சொத்துக்களை சிறந்த முறையில் பயன்படுத்தவும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் அங்காடி வளாகம், குடியிருப்பு மனைகள் மற்றும் திருமண மண்டபங்கள் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டங்களுக்கான செலவுகள், சம்பந்தப்பட்ட திருக்கோயில்கள் நிதியிலிருந்தும், இதர திருக்கோயில்களிலிருந்தும் வங்கிகளிலிருந்தும் பெறும் கடன்களிலிருந்தும் செய்யப்படும். இத்திட்டங்களின் அடிப்படையில் கீழ்வரும் பணிகள் தொடங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளன.

அங்காடிகள்

| வரிசை எண். | திருக்கோயில்களின் பெயர். | செலவு மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 | அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் திருக்கோயில் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில், ராயப்பேட்டை. | 100 |
| 2 | அருள்மிகு காந்திமதியம்மன் உடனுறை நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி (தாமரைக் குளம் அங்காடி). | 50 |
| 3 | அருள்மிகு சங்கர ராமேஸ்வரர் திருக்கோயில், தூத்துக்குடி, | 25 |
| 4 | அருள்மிகு பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில், வன்னிய தேனாம்பேட்டை. | 9 |
| 5 | அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில், வடபழநி. | 15 |
| 6 | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு. | 10 |
| 7 | அருள்மிகு தாயுமானவர் திருக்கோயில், மலைக்கோட்டை, திருச்சி. | 80 |
| 8 | அருள்மிகு சந்தானநாதசுவாமி திருக்கோயில், புதுக்கோட்டை. | 10 |
| 9 | அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர். | 80 |





குடியிருப்புகள்.

| வரிசை எண். | திருக்கோயில்களின் பெயர். | செலவு மதிப்பீடு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை எல்லீஸ் நகர் குடியிருப்பு. | 150 |
| 2 | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர் (கிரீன்வேஸ் சாலை குடியிருப்பு). | 50 |
| 3 | அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி. | 25 |
| 4 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி. | 50 |
| 5 | அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர். | 75 |

கீழ்க்காணும் திருக்கோயில்களில் அங்காடி வளாகங்கள் கட்டுமான பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது:—

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை

2. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி, செங்கை-அண்ணா மாவட்டம்.

3. அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் திருக்கோயில், இராயப்பேட்டை, சென்னை.

11. விக்கிரகங்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் பாதுகாப்பு :

திருக்கோயில்களின் திரு ஆபரணங்களை ஆய்வு செய்தல், சரி பார்த்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய பணிகள் குறித்து மேம்பாடு செய்தலுக்குத் தகுந்த வழிமுறைகளை எடுத்துரைக்க நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டது. அக்குழுவானது காலமுறையில் திரு ஆபரணங்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள், அவைகள் வைக்கப்படுகின்ற திருக்கோயில்களின் பாதுகாப்பு அறைகள் முதலியவைகளை பார்வை

யிட்டு அவைகளைச் சீர் செய்ய ஆலோசனைகள் வழங்கியுள்ளது. பெரும் எண்ணிக்கையில் திரு ஆபரணங்கள், விலையுயர்ந்த பொருட்கள் மற்றும் விக்கிரகங்கள் உள்ள உயர்ந்த நிதி வருவாய் தொகுதியைச் சேர்ந்த திருக்கோயில்களில், அவைகளின் பாது காப்பிற்காக'' திருடர்கள் எச்சரிக்கைக் கருவி '' (Burglary Alarm) பொருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத் தகைய திருடர்கள் எச்சரிக்கை கருவி பொருத்த வசதியற்ற திருக் கோயில்களில் விழிப்புப் பதிவு கடிகாரங்கள் (Tell Tale Clocks) வைக்கப்பட்டு உள்ளன. சில இடங்களில் இத்தகைய பாதுகாப்பு வுசதிகள் செய்வதற்காக ஆணையரின் பொதுநல நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. திருவாரூரில் விக்கிரக பாது காப்பு மையம் ஒன்று கட்டப்பட்டு துறையின் உதவி ஆணையர் ஒருவர் கண்காணிப்பில் இருந்து வருகின்றது. பொது வழிபாடு களுக்கு அப்பாற்பட்ட 1,484 விக்கிரகங்கள், பாதுகாப்பின் பொருட்டு இந்த மையத்தில் வைக்கப்பட்டு உள்ளன. திருக் கோயில்களில், திருட்டு நடைபெறுதலை தடுக்கும் பொருட்டு, உள்ளூரின் மரியாதைக்குரிய நபர்கள், முன்னாள் ராணுவ வீரர் கள், உள்ளூர் காவல் துறை அதிகாரிகள், பிர்க்கா வருவாய் ஆய்வாளர், துறையின் ஆய்வாளர் கொண்ட விழிப்புக் குழுக்கள் கிராமங்களிலும், சிறிய நகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. விழிப்புக் குழுக்கள் இயங்குதல் குறித்து ஆய்வு செய்யும் பொறுப்பு, மாவட்ட ஆட்சியர் மற்றும் துறையின் துணை ஆணை யர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வழிபடுவதற்குரியவை அல்லாத சிற்ப நுணுக்கங்கள் கொண்ட விக்கிரகங்களை பார்வைக்கு தகுந்த நவீன வசதிகளுடனும், பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் அருங்காட்சியகம் ஒன்றை சென் னையில் உரிய இடத்தில் வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருட்டுகள் நடைபெற்றால் திருடப்பட்டவை எளிதில் கண்டுபிடிக்க வசதியாக, 1972 ஆம் ஆண்டின் பழம்பொருள் மற்றும் கலைப்பொக்கிஷங்கள் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் விக்கிரகங்களைப் பதிவு செய்யவும், அவைகள் குறித்து புகைப் படத் தொகுப்பு சம்பந்தப்பட்ட திருக்கோயில்களில் பராமரிக்கப் படவும், திருக்கோயில் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவரை 20,970 விக்கிரகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட கால அட்டவணைப்படி, இந்தப் பணி விரை வாகச் செய்து முடிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நன்கு திட்டமிட்ட, நிதி வசதிகள்கொண்ட அமைப்புக்கள் மூலம் மாநிலத்தில் உள்ள பல்வேறு திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் மற்றும் விக்கிரகங்கள் திருடப்படுவதை யும், கடத்தப்படுவதையும் தடுக்கவும், பாதுகாக்கவும் வேண்டிய அவசியம் அரசின் கவனத்தை சில காலமாக ஈர்த்து வருகிறது. அவ்வகைப்பட்ட பல்வேறு திருட்டுகள் நடந்துள்ளன என தெரிய





வருகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் இங்கிலாந்து
முதலியவற்றில் உள்ள சில தனிப்பட்ட சேகரிப்பாளர்களிடம்
சில உலோகத் திருமேனிகள் இருப்பது கண்டறியப்பட்டிருக்கின்
றது. தேர்ந்த ஆட்கள், கருவிகள் மற்றும் நிதி வசதி பெற்ற
அகில உலக கடத்தல்காரர்களின் பிடியில் இருந்து உலோகத்
திருமேனிகளையும், விக்கிரகங்களையும் கைப்பற்றத் தேவையான
நடவடிக்கைகளை எடுக்க, இவ்வரசு முடிவு செய்துள்ளது.
சிலைத் திருடர்களின் அபாயகரமான நடவடிக்கைகளின் காரண
மாக, பொது ஒழுக்கத்தின் தரம், அவ்வப்போது பாதிக்கப்படுவ
தால், நமது கலாச்சாரம் மற்றும் சமய பழம் பெருமைகொண்ட
உலோகத் திருமேனிகள் மற்றும் இதர பொருட்களை திருடு
பவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை அளிப்பது அவசிய
மாகிறது. இத்தகைய நோக்கத்திற்காக "காபிபோசா"
(Cofeposa) சட்டத்தின் அடிப்படையில் தனிச் சட்டம் ஒன்றை
இயற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்செயற்குறிப்பின் மீது
இந்திய அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

12\. பக்தர்களுக்கான வசதிகள் :

திருக்கோயில்களுக்கு தரிசனத்திற்காக வரும் பக்தர்களுக்கு
வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்ற கருத்தினை மனதில்
கொண்டு திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் திருக்கோயிலுக்கு
அருகிலேயே தங்க வசதியாக 14 திருக்கோயில்களால் 58 பயணி
கள் ஓய்வு விடுதிகள், 231 குடில்கள் மற்றும் 951 தனி நபர்
அறைகள் கட்டப்பட்டுள்ளன. பக்தர்களுக்கு பிரசாதம் வழங்
கப்படவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் ஒரு நாளைக்கு
குறைந்தது 300 பக்தர்களுக்கு திருக்கோயிலில் இலவசமாகப்
பிரசாதம் வழங்கப்படுகிறது. பக்தர்களின் வசதிக்காக திருக்
கோயிலின் நிர்வாகத்தால் பிரசாத கடைகள் நடத்தப்படுகின்
றன. முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களில் திருக்கோயி
லின் முக்கியத்துவம் மற்றும் ஸ்தல புராணங்களை எடுத்துக்கூற
வழிகாட்டிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

13\. தமிழ்நாடு திருக்கோயில் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் :

ஒரு கால பூஜை கூட நடத்த முடியாத ஆலயங்களில் ஒரு
கால பூஜையாவது நடைபெற வழிவகை செய்யும் பொருட்டு
ஆலயங்களின் உபரி நிதியைக் கொண்டு ரூ. 5 கோடிக்கு ஒரு
நிலையான வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்காணும்
நிலையான வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து
ஒரு கால பூஜை கூட நடத்த வசதியற்ற திருக்கோயில்களுக்கு
ஒரு கால பூஜை நடத்துவதற்கு ரூ. 2,500 வீதம் 3,122 திருக்
கோயில்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இது தவிர
ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடப்பெற்ற 12 திருத்

தலங்களுக்கு ஒரு கால நித்தியப்படி பூஜைக்கு உதவியாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ. 25,000-க்கு ஒரு நிலையான வைப்பு நிதி ஏற்படுத்தி அதில் கிடைக்கக்கூடிய வட்டியிலிருந்து ஒரு கால நித்தியப்படி பூஜை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

14. ஆணையர் பொது நல நிதி ;

1959ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 97ஆம் பிரிவின் கீழ் இந்து சமய அறக்கட்டளைகள் பொது நல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமய நிறுவனங்கள் தங்கள் உபரி நிதியிலிருந்து அளித்த தொகையினைக் கொண்டும், கோயில்களை செப்பனிடவும், அவைகளில் கட்டிடங்களையும், ஓவியங்களையும் பாதுகாக்கவும் வேறு எவரும் மனமுவந்து அளிக்கும் தொகையைக் கொண்டும் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டில் திருக்கோயில்களை புதுப்பிக்க மற்றும் பாதுகாக்க ரூ. 5.3 இலட்சம் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

15. திருக்கோயில்களால் நடத்தப்படும் பள்ளிகள், கல்லூரிகள், அனாதை இல்லங்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் :

தெய்வ நெறிகளைக் கடைப்பிடிக்கத் தேவையான கட்டுப்பாட்டினையும், கலாச்சார மற்றும் சமயக் கோட்பாடுகளை இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு திருக்கோயில்களால் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் நடத்தப்படுகின்றன. அவற்றின் விவரம் வருமாறு :

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகம் .. | 7 |
| 2 | மேல்நிலைப்பள்ளிகள் .. .. .. .. | 5 |
| 3 | உயர்நிலைப்பள்ளிகள் .. .. .. .. | 15 |
| 4 | நடுநிலைப்பள்ளிகள் .. .. .. .. | 5 |
| 5 | ஆரம்பப்பள்ளிகள் .. .. .. .. | 3 |
| 6 | மெட்ரிகுலேஷன் பள்ளி .. .. .. .. | 1 |
| 7 | நாதஸ்வரம் மற்றும் தவில் பள்ளிகள் .. .. | 3 |
| 8 | சித்த வைத்தியசாலை .. .. .. .. | 19 |
| 9 | அன்பு இல்லங்கள் .. .. .. .. .. | 25 |
| 10 | வேத ஆகமப் பாடசாலைகள் .. .. .. | 6 |
| 11 | தேவாரப் பாடசாலைகள் .. .. .. .. | 7 |



அ. ஆலய ஊழியர்கள் நலவாழ்வு நிதி :

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் உபரி நிதியிலிருந்து 1 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, இந்த வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து திருக்கோயில் ஊழியர்களின் சம்பள பாக்கி, திருக்கோயில் ஊழியர்களின் குழந்தைகளின் கல்வி, மருத்துவத் தேவை மற்றும் திருமணக் கடன் முதலியன வழங்கப்படுகிறது. இதுவரை 3,167 திருக்கோயில்களில் பணிபுரியும் 9,800 திருக்கோயில் ஊழியர்களின் சம்பள பாக்கி இதன் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 97.77 இலட்சம் செலவாகி உள்ளது.

16. சமயப் பணிகளை ஆற்றுவதுடன், சமுக நலப்பணிகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தொண்டு புரிதலிலும் ஆலயங்கள் தங்களை ஈடுபடுத்தி கொண்டுள்ளன. கீழே குறிப்பிடப்படும் வகையில் திருக்கோயில்கள் ''அன்பு இல்லங்களை'' நடத்துவதுடன் இந்து சமயத்தினைச் சார்ந்த ஏழை மக்களுக்கு இலவசத் திருமணங்களையும் நடத்தி வைக்கின்றன.

நிதிவசதியுடைய 25 திருக்கோயில்களால் நடத்தப்பட்டுவரும் அன்பு இல்லங்களால் 984 குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள். 5 முதல் 10 வயதுடைய குழந்தைகள் ஆதரிப்பாரின்றி அனாதைகளாக இருப்பின் அல்லது பெற்றோரில் ஒருவர் மட்டுமே உயிரோடு இருக்கும் பட்சத்திலும் '' அன்பு இல்லங்களில் '' சேர்க்கப்படுகின்றனர். அக்குழந்தைகள், பள்ளி இறுதித் தேர்வு எழுதி முடிக்கின்ற வரையில், தொடர்ந்து இருந்து வரலாம். விடுமுறை நாட்கள் மற்றும் மாலை வேலைகளில் அவர்களுக்கு தேவாரம் பயிற்றுவிக்கப்படுகிறது. அவர்களுக்கு இலவசமாக ஆடைகள், உறைவிடம், கல்வி வசதி மற்றும் மருத்துவக் கண்காணிப்பு அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்து சமயத்தைச் சார்ந்த ஏழை மக்களுக்கு இலவசத் திருமணம் :

அரசின் கொள்கைக்கேற்ப, இந்து சமயத்தைச் சார்ந்த ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இனங்களைச் சார்ந்த வசதியற்றவர்கள் திருமணத்திற்காக 24 நிதி வசதியுடைய திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து திருமணம் ஒன்றிற்கு ரூ. 750-லிருந்து ரூ. 1,000 வரை செலவிடப்படுகிறது.

சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் :

தமிழ்நாட்டில், எந்தவித சாதி வேறுபாடின்றி, இந்து சமயத்தினர் திருக்கோயில்களில் சென்று வழிபடலாம். இந்த உணர்வினை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடனும், இந்து சமய நெறிமுறைபாட்டில் ஆதிதிராவிட இனத்தினரின் ஈடுபாட்டினைப்

பெரிதும் ஊக்கப்படுத்தவும் நம் நாட்டின் சுதந்திர நாளன்று (15–8–1989) சிறப்பு வழிபாடுகளும் பொது விருந்துகளும் நடத்தப்பட்டன. பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளான 3–2–1990 அன்றும் பொது விருந்துகள் நடத்தப்பட்டன. தமிழக அரசின் அமைச்சர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள தலைவர்களும் ஆலயங்கள் நடத்திய பொது விருந்துகளில் கலந்து கொண்டனர்.

17. கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் :

இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம் என்றழைக்கப்படுகின்ற கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 திருக்கோயில்களைப் பராமரித்து வருகின்றது. இதற்கு அரசு மானியமாக ரூ. 13.71 இலட்சங்கள் வழங்கப்பட்டு வருகிறது. துணை ஆணையர் நிலையில் உள்ள ஒரு செயல் அலுவலர் பொறுப்பில் இந் நிர்வாகம் இருந்து வருகிறது. இந்த தேவஸ்வங்களில் ஆண்டு வருவாய் ரூ. 60.28 இலட்சமாகும் .

இத்திருக்கோயில்களின் பணியாளர்களைக் கீழ்க்காணும் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம் :—

| | | |
|---|---|---|
| 1. | கண்காணிப்பாளர் உட்பட அரசு கருவூலத்திலிருந்து ஊதியம் பெற்று வரும் அரசு ஊழியர்கள் .. | 90 |
| 2. | திருக்கோயில்களிலிருந்து ஊதியம் பெற்றுவரும் திருக்கோயில் பணியாளர்கள் .. .. | 14 |
| 3. | சில்லரை செலவினப் பணியாளர்கள் .. .. | 1,061 |
| | மொத்தம் | 1,165 |

18. 'திருக்கோயில்' இதழ் பிரசுரம் :

1958-ஆம் ஆண்டு முதல் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை 'திருக்கோயில்' என்று அழைக்கப்படும் மாத தமிழ் இதழ் ஒன்றை வெளியிட்டு வருகிறது. இவ்விதழுக்கு இந்தியாவிலும், வெளிநாட்டிலுமாக மொத்தம் 4,500 சந்தாதாரர்கள் உள்ளனர். சிறந்த அறிஞர் பெருமக்கள் இவ்விதழுக்காக எழுத்தோவியங்களை எழுதுகிறார்கள். இந்து சமய வேதாந்தம் மற்றும் பல்வகையிலும் பயனூட்டும் சமய நெறிகளை பரப்ப இத் 'திருக்கோயில்' பெரிதும் பாடுபடுகிறது. ஒரு தமிழறிஞர் தற்போது இவ்விதழின் ஆசிரியராக உள்ளார்.



19. இந்து சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள்
நிருவாகத்தினைச் சீரமைக்க அரசால் 11–3–1989 அன்று அமைக்
கப்பட்ட ஐவர் குழு தனது அறிக்கையினை 1–9–1989 அன்று
அரசிடம் அளித்துள்ளது. திருக்கோயில்களின் நிதி நிலையினை
மேம்படுத்தவும் குறிப்பாக திருக்கோயில்களின் நலன்களை பாது
காக்க வழிமுறைகளைத் தெரிவிக்கவுமான பரிந்துரைகள் அடங்
கிய குழுவின் அறிக்கையை 13–2–1990 அன்று நடைபெற்ற
அமைச்சரவை பரிசீலித்தது. இப்பரிந்துரைகளை பரிசீலித்து
கருத்து தெரிவிக்க இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்,
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்துறை அமைச்சர்,
போக்குவரத்துத் துறை அமைச்சர் கொண்ட துணைக் குழு
ஒன்றை, அமைச்சரவை அமைத்தது. 10–3–1990 அன்று
அமைச்சரவை துணைக் குழு கூடி அறிக்கையைப்பரிசீலித்துள்ளது.

2. திருக்கோயில்களை நிர்வகித்தல், அந்தந்த திருக்கோயிலின்
பழக்க வழக்கங்களுக்கேற்ப பூசை மற்றும் விழாக்களை
நடத்துதல், பழமையான திருக்கோயில்களின் கட்டிடக்கலை,
கலை அம்சங்கள் முதலியவற்றை தனிக்கவனம் செலுத்தி பாது
காத்தல் போன்ற புனிதமான பொறுப்பு இந்து சமய அறநிலைய
ஆட்சித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறைவனை
அறிய விழையும் மனிதப் பிறவியின் முடிவில்லா தாகத்தைத்
தீர்க்க, மனதிற்கு இதமானதும், அமைதியானதுமான தெய்வீகச்
சூழ்நிலையை திருக்கோயில்களில் அளிக்க இத்துறையின் அதிகாரி
கள் மற்றும் பணியாளர்கள் இடையறாது பாடுபட்டு வருகிறார்
கள்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் அதிகாரிகளும்,
பணியாளர்களும் இச்சந்தர்ப்பத்தில் தங்களது நேர்மையான,
திறமையானத் தொண்டினைச் செய்ய தங்களை மீண்டும் அர்ப்
பணித்துக் கொள்கிறார்கள்.

---

143805
D
V211,31N90
N90.27.2

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore. Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Son, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

-600 008